
கண்ணிலே
அன்பிருந்தால்
ஜெய்சக்தி

# கண்ணிலே அன்பிருந்தால்



## 1

'கெட்டி மேளம்! கெட்டி மேளம்!' என்று குரல் கொடுத்தார் அய்யர். கெட்டி மேளம் முழங்கியது. உறவினர்கள் அட்சதை தூவ மணிவாசகன் இலக்கியாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

தாரை வார்ப்பதும் வாங்குவதுமாகிய நிகழ்வுகளின் போதும். பெற்றோருக்குப் பாதபூஜை செய்வதுமாகிய நிகழ்வுகளின் போதும் இலக்கியாவின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் திரள அடக்கிப் பார்த்தாள். முடியவில்லை.

'இலக்கியா! ம்ஹூம்! அழக்கூடாதும்மா. அழாதே!' என்று தேற்றினாள் பூங்கனி. மணமகளின் அம்மா.

மணிவாசகன் சிந்தனையுடன் மனைவியைப் பார்த்தான். நல்ல நிறம். கொடி போன்ற உடல்வாகு. அழகிய பெரிய கண்கள். தனக்குக் கிடைக்க வேண்டிய பெண்ணே இல்லை அவள்.

திருமணத்திற்கு முன்பே அவன் சகோதரிகளிடமும் தாயாரிடமும் கேட்டிருந்தான். 'ஏம்மா! பொண்ணுக்கு என்னைப் பிடிச்சுதானே சம்மதிச்சா?' என்று.

'ஆமாங்கறேன். என்னத்துக்கு இப்படி சும்மா சந்தேகப் படறே?' என்று பெரியக்கா ஒரு கடிகடிக்கவும்தான் அமைதியானான். ஆனால் இன்றைக்கு இலக்கியாவின்

கண்களில் கண்ணீரைப் பார்த்தவுடன் அவனுக்கு சந்தேகமாகப் போய்விட்டது. மனதுக்குள் ஏதோ குறுகுறுப்பாய் இருந்தது. நெருடலாகவும் இருந்தது.

கூடவே இன்னொன்றையும் எண்ணிக் கொண்டான். 'என்ன இருந்தாலும் படித்த பெண். அப்படியெல்லாம் யாரும் வற்புறுத்தியெல்லாம் மணமேடைக்கு அழைத்து வந்து விட முடியாது' என்று.

மணிவாசகன் மனதைப் போட்டு அலட்டிக் கொண்டதற்கும் காரணம் இருந்தது. அவன் நல்ல கறுப்பு. ஆள் மற்றபடி தோற்றத்தில் நன்றாகத்தான் இருந்தான். ஆனால் படிப்பும் குறைவு.

பிளஸ் டூ தேறியிருந்தான். ஆனால், இலக்கியாவோ பெயருக்கேற்ப ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றிருந்தாள்.

நாகரீகமான இந்தப் பெண்ணுக்கு எப்படித் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள மனம் வந்தது என்ற உறுத்தல் நேற்றிலிருந்தே அவனுக்கு இருந்தது.

அதனால்தான் நேற்றே ஒரு வேலை செய்தான். வருங்கால மாமியார் பூங்கனியிடம் போனான்.

'அம்மா.. உங்க பொண்ணுகிட்டே நல்லாப் பேசித்தானே சம்மதம் வாங்கினீங்க.. ஏன்னா.. நான் கறுப்பு.. உங்க பொண்ணு நல்ல நிறம்.. நாளைக்கு ஏதும் பிரச்சினை வரக் கூடாது. பாருங்க' என்றான்.

'மாப்பிளே! அவ என்னத்தைச் சொல்லப் போறா.. அவளுக்கு என்ன நல்லது கெட்டது தெரியும். ஆள் அழகா முக்கியம்? குணம்தான் முக்கியம். அதுவுமில்லாம.. நீங்க என்ன நிறம் கொஞ்சம் மட்டு. அவ்வளவுதானே. மத்தபடி ரொம்ப லட்சணமா இருக்கீங்களே! நீங்க நம்ம



சாமியெல்லாம் பாத்ததில்லையோ கோயில்ல.. லட்சுமி சிவப்புன்னா.. நாராயணர் கறுப்பு. சிவன் செகப்புன்னா, பார்வதி கறுப்பு. கறுப்பு சிவப்புல என்ன இருக்கு? வாழற வாழ்க்கையிலதானே இருக்கு..' என்று போட்ட போட்டில் அவன் மிரண்டு போய் 'அந்த அம்மா சொல்வதும் சரி' என்று நினைக்க ஆரம்பித்தான். ஆனால் இன்றைக்கு என்ன இந்தப் பெண் தேம்பித் தேம்பி அழுகிறாளே என்ற எண்ணம் இருந்தது.

அம்மாவைப் பார்த்தான். அதில் சங்கடம் தெரிந்தது. அம்மா புன்னகையுடன் அருகில் வந்து,

'அது சரி.. போ. நீ எதுக்கு சங்கடப்படறே. எல்லாப் பொண்ணுகளும் கல்யாணத்தன்னைக்குப் புது இடத்துக்குப் போறமேன்னு பயத்துல அழறதுதான்' என்றார்.

அவன் மனம் சமாதானம் அடைந்தது.

★ ★ ★

நிறையப் பேர் காலில் விழுந்து பரிசுகளை வாங்கி சலித்துப் போனாள் இலக்கியா.

'கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கட்டும்' என்று யாரோ சொல்ல பெண்ணையும், அவள் தோழிகளையும் தனியறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

லலிதாவும், ஹேமாவும் தோழிகளாக உடனிருந்தார்கள். இலக்கியா அவர்களைப் பார்த்தாள். கண்களில் சோகம் இழையோடியது.

லலிதாவும், ஹேமாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். லலிதா சொன்னாள்.

'இலக்கியா.. நீ என்ன அந்த சௌம்யா கிறுக்கு சொன்னதையேவா நினைச்சுகிட்டிருக்கே. அவளுக்கு என்ன வேலை? அவளுக்கு உலகமகா அழகின்னு நெனப்பு?' என்றாள்.

'இல்லடி.. அவ நேரடியா மனசுல இருக்கறதை சொல்லிட்டா.. ஆனா, இன்னைக்கு நிறைய பேர் கண்லயே அந்த ஃபீலிங்கைக் காமிச்சுட்டாங்க.. தெரியுமா?' என்றாள்.

'இங்க பார்றி! வாழப் போறவ நீ. போற வர்றவங்க நினைக்கறதுக்கும், பேசறதுக்கும் கவலைப்பட்டேன்னா வாழ்க்கை ரொம்பக் கஷ்டமாயிடும்' என்றாள் ஹேமா.

நேற்றிரவு வந்த சௌம்யாதான் இத்தனை குழப்பத்துக்கும் காரணம்.

வந்த சௌம்யா பேசாமல் போயிருக்கலாம். மாப்பிள்ளை அழைப்பில் மாப்பிள்ளையைப் பார்த்து விட்டு வந்தவள்.

'என்னடி.. இலக்கியா.. மாப்பிள்ளை இப்படி.. கறுப்பா இருக்காரு. உங்கம்மா, அப்பாவுக்கும் கொஞ்சம் கூடப் புரியலையா.. என்ன? இல்லை மனசு இல்லாமப் போச்சா..?' என்றாள்.

இலக்கியா அடிபட்டாற் போன்ற பார்வையுடன் பதில் சொல்ல ஆரம்பித்தவுடனே தடுத்து லலிதா சொன்னாள்.

'பார்றி! சௌம்யா.. ரொம்ப அலட்டாதே. ஜாதகம் பொருத்தம் பார்த்து அங்க பெரியவங்க முடிவு செஞ்சிருக்காங்க.. இதில எதுக்கு நீ குட்டையைக் குழப்பறே..?' என்று லலிதா கண்டிக்கவும் அவள் தோளைக் குலுக்கினாள்.

'எனக்கென்னடி வந்தது. அவ லைஃப் அவ வாழப் போறா. மனசில பட்டதைச் சொன்னேன்' என்று நகர்ந்தாள்.

திருமணம் நிச்சயமாவதற்கு முன்பிருந்தே இலக்கியாவின் மனதில் இருந்த குழப்பம் மீண்டும் தலை தூக்கி விட்டது.

மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண் பிடித்து விட்டது எனத் தெரிந்த உடனே இலக்கியா பதறிப் போனாள்.



அம்மாவிடம் சொன்னாள்.

'அம்மா.. மாப்பிள்ளை ரொம்பக் கறுப்பு..' என்று.

'அதனால என்னடி? குணத்திலே சொக்கத் தங்கமாம். இத்தனை பெரிய குடும்பத்தையும் தூக்கி நிறுத்தினவராம். இப்பவும் குடும்பக் கண்ட்ரோல் பூராவும் அவரு கையில தானாம். எத்தனை டிபார்ட்மெண்டல் ஸ்டோர் இருக்கு தெரியுமா?'

'அம்மா.. குடும்பம் வேற ரொம்பப் பெருசு' என்றாள்.

'இத பாருடி! எத்தனை பெரிய குடும்பமா இருந்தா என்ன.. பணம் இருந்தா எல்லாம் அடிச்சுட்டுப் போயிரும்டி. உனக்கொரு கவலையும் இல்லாம மாப்பிள்ளை எல்லாத்தையும் பாத்துக்குவாரு. புரியுதா?' என்றார்.

இலக்கியா அழுது பார்த்தாள். அம்மா ஒரு பெருமூச்சு விட்டார்.

'பார்றி! என் புருஷன் கறுப்புன்னு காம்ப்ளெக்ஸ் நீ வச்சுகிட்டின்னாத்தான்.. ஆளாளுக்குப் பேசுவாங்க. எனக்கு அவரைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிப் பாரு.. யாரும் பேச மாட்டாங்க.. அப்புறம்.. இன்னொண்ணை யோசிச்சுப் பாரு.. உனக்குப் பின்னால ரெண்டு சிஸ்டர்ஸ். அடுத்தடுத்து ஒருத்தி இருபது. பத்தொன்பதுன்னு நிக்கறாளுக.. உங்கப்பா.. ரிடையர்மெண்ட் பணத்தை வச்சு கல்யாணத்தை முடிச்சாலும்.. உன் தம்பி.. வருணை கரையேத்த வேண்டாமோ? இதையெல்லாம் நீ மனசில வச்சுகிட்டு ஒரு தியாகமா நினைச்சு இதை செய்யக் கூடாதா?' என்றார். கிட்டத்தட்டக் கெஞ்சினார்.

இலக்கியா இளகிப் போனாள். ஆனால், அதெல்லாம் இன்றைக்கு மறந்து போய் அவனது நிறமே கண்ணுக்குள் நிற்கிறது.

மனம் சண்டித்தனம் செய்தது.

லலிதாவும், ஹேமாவும் கவலையாய்ப் பார்வையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

* * *

மணிவாசகனின் குடும்பம் பெரிய குடும்பம். மூன்று பையன்கள். நான்கு பெண்கள்.

மணிவாசகனுக்கு மேலே ஒரு அண்ணன். இரண்டு மூத்த சகோதரிகள். இரண்டு இளைய சகோதரிகள்.

அண்ணன் பெயர் வாகீசன். சகோதரிகள் பெயர் திலகவதி, மங்கையர்க்கரசி, மல்லிகா மற்றும் ராதிகா.

மணிவாசகன் வருவதற்கு முன்பு வாகீசனும், அவ னுடைய அப்பா ராஜப்பனும் சேர்ந்து ஒரே ஒரு மளிகைக் கடை நடத்தினார்கள்.

பிளஸ் டூ முடித்த கையோடு கடையில் வந்து அமர்ந்த மணிவாசகன் கடந்த பத்தாண்டுகளில் கடைகளின் எண்ணிக்கையைப் பெருக்கி விட்டான்.

பொள்ளாச்சியில் இரண்டு பெரிய மளிகைக் கடைகள். உடுமலைப் பேட்டையில் இரண்டு. கோயம்புத்தூரில் நான்கு என்று அவை எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டேயிருந்தன.

பெரிய அளவிலே மதிக்கப்பட்டான். முதலிலே இருந்தே பொள்ளாச்சியில் குடியிருந்தோம் என்ற காரணத்திற்காக பொள்ளாச்சிக்கு அருகிலே ஐம்பது ஏக்கர் நிலம் வாங்கி அதிலே தொட்டிக் கட்டி வீடு பாணியில் ஒரு நவீனக் கட்டிடம் கட்டியிருந்தான்.

அந்த ஐம்பது ஏக்கருக்குப் பக்கத்திலே அடுத்து இருக்கிற ஐம்பது ஏக்கரையும் விலை பேசிக் கொண்டிருந்தான்.



வீட்டுத் தேவைகளுக்கும், ஆட்களின் தேவைகளுக்கு மாக ஒரு சிறிய பால் பண்ணையே வைத்திருந்தான்.

அவனது அம்மா பொன்மணியம்மாவுக்கு மகனுக்கு அழகான பெண்ணாகக் கல்யாணம் பேச வேண்டுமென்று ஆசை. ஒரு கல்யாண வீட்டில் இலக்கியாவைப் பார்த்தவர் அவளுடைய அம்மா பூங்கனியிடம் போய்,

'உங்க பெரிய பொண்ணைக் குடுத்தீங்கன்னா அடுத்த ரெண்டு பொண்களோட கல்யாணமும் என்னோட பொறுப்பு' என்று சொன்னவுடனே பூங்கனி விழுந்தே விட்டார். ஆனால் தங்களுக்குள் நடந்த பேரத்தை யாரிடமும் சொல்லக் கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொண்டார் பொன்மணி.

இந்த விவரம் எதுவும் தெரியாத மணிவாசகன் பெண் மனப்பூர்வமாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்திருப்பதாகவே நம்பினான்.

எப்போதுமே தனது மகிழ்ச்சியையும், துக்கத்தையும் அதிகமாக வெளிப்படுத்தியவன் அல்லன். அதனால் இலக்கியா போன்ற ஒரு பெண் தனக்கு மனைவியாக வரப் போகிற மகிழ்ச்சியையும் அவன் அளவாகவே வெளிப் படுத்தினான்.

கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு கம்ப்யூட்டர் கிம்ப்யூட்டர் என்று மேலும் கோர்ஸ்கள் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்பா அரசாங்க வேலையில் இருந்தார். இன்னும் ரிடையராவதற்கு நான்கைந்து ஆண்டுகளே இருந்தன. மூன்று பெண்கள். ஒரு பையன் என்று பெற்றுத் தள்ளி விட்டார். அதற்கு அவர் வைத்திருந்த விளக்கம் அவர் வீட்டில் அவர் ஒரே பையன். அதனால் சொந்த சகோதரி சகோதரன் என்று இல்லாமல் போய் விடக் கூடாது என்று

கொள்கை வைத்துக் கொண்டார். அதே போல் பெண்ணுக்குப் பெரிய குடும்பமாக வந்தபோது மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார். அதிலும் வசதியான குடும்பம் என்பதால் பெண் மகிழ்வாக இருப்பாள் என்ற சந்தோஷம் வேறு. ஆனால், பெண்ணின் மனதில் அதிருப்தி என்ற உள் வயணம் எல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஏற்பாடுகளை உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தார்.

திருமணமும் நடந்து முடிந்த திருப்தியில் இருந்தார்.. சடங்குகள், மாப்பிள்ளை வீட்டு அழைப்பு. பெண் வீட்டு அழைப்பு என்று இரண்டு நாட்கள் ஓடின.

இந்தச் சடங்குகள் எல்லாம் முடிந்த பின் சடங்கு வைத்துக் கொள்ளலாம் என்று தெளிவாகத் தாயிடம் அறிவித்தான் மணிவாசகன்.

என்ன இருந்தாலும் நண்பர்கள் கேலி செய்யும்போது இயல்பாக எழுகிற சங்கோஜம் அவனுக்குள் ஏற்பட்டாலும் கூட மனைவியிடத்தில் அந்த மாதிரி உணர்வுகள் எதையும் காண முடியவில்லையே என்று கவலை ஏற்பட்டது.

எத்தனை நண்பர்களின் திருமணத்தில் பார்த்திருக்கிறான். எல்லாரும் கேலி செய்யும்போது பெண்கள் வெட்கம் கலந்த ஒரு சிரிப்பை வெளியிடுவார்கள். ஆனால் இங்கேயோ மனைவி அந்த மாதிரிப் பேச்சுக்கள் வரும்போது கவனமாகத் தன் முகத்தை யாரும் பார்க்காத வண்ணம் வைத்துக் கொள்கிறாள் என்று புரிந்தது.

சுற்றியிருக்கிறவர்கள் வற்புறுத்தினால் கூட அவன் அருகில் அமர்வதில்லையென்பதையும், இயல்பாக ஒரு மகிழ்வுடன் நடமாடாததையும் கண்டவுடனே அவனுக்குள் பீதி கிளம்பியது.



தன்னுடைய பர்ஸனாலிட்டிக்கு ஏற்ற மாதிரி ஒரு பெண் பார்த்துக் கல்யாணம் செய்திருக்க வேண்டுமோ? அவனுக்கு மூத்த சகோதரிகள் இரண்டு பேரில் மங்கையிடம் அவனுக்கு இணக்கம் அதிகம். அவளிடம் சொல்லி மணமகளின் மனத்தைப் பற்றி அறிந்து கொள்ள முற்படலாமா? என்று யோசித்தான்.

'ஆமா.. நல்ல வேளையாக் குழந்தை கிழந்தை பொறந்ததுக்கப்புறம் பொண்ணுக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டுச் சொல்லுக்கா..ன்னு சொல்லாமப் போனயே! என்று கேட்டால் என்ன செய்ய.'

தன் யோசனையின் அபத்தம் அவனுக்கே புரிந்தது.

தானேதான் அதைக் கண்டறிய வேண்டும். ஆனால் எப்படி. ஒருவேளை அவளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்று தெரிய வந்தால் என்ன செய்யப் போகிறோம்?

அவர்கள் வீட்டில் யாராவது 'இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கவில்லையென்றால் தற்கொலை செய்து கொள்வேன்' என்று மிரட்டியிருந்தால்..!

மிரட்டியிருந்தால்.. இப்போது கூட உள்ளதைச் சொல்ல மாட்டாள். அதற்காக மனத்தில் விருப்பம் இல்லாத பெண்ணைத் தொடுவதா? அதைவிடத் தன் ஆண்மைக்குக் கேவலம் வேறு எதுவும்.. இல்லை..

என்ன செய்வது? யோசித்தான்.. ஏதாவது செய்யத்தான் வேண்டும்.. முடிவெடுத்துக் கொண்டான்.

சடங்கு என்று முடிவு செய்த நாட்களுக்காகக் காத்திருந்தான்.

கிட்டத்தட்ட ஒரு வாரம் வரை. அந்த நாளும் வந்தது. அவன் தலையில் பெரியதொரு இடியைப் போடுவதற்கென்றே.

## 2



ஒரு வாரம் இடையிலே தொழிலை மறந்து போய்க் கல்யாண வேலைகளில் இருந்ததால் நிலுவையான வேலைகளையெல்லாம் இரண்டு நாட்களில் முடித்தான். பிறகு கொஞ்சம் ரிலாக்ஸானான்.

தங்கள் குடும்பத்தில் இன்னும் இரண்டு பெண்கள் திருமணத்திற்கு இருப்பதால் இந்த சடங்கு, கிடங்கு என்பதையெல்லாம் பெரிதாக விளம்பரப் படுத்த வேண்டாம் என்று அண்ணன் மூலமாக.. பெற்றோரிடம் தெரிவித்திருந்தான்.

ஏதோ வாரப் பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு மனைவியின் வருகைக்காகக் காத்திருந்தான்.

வந்தாள்.

அவன் எழுந்து போய் 'வா' என்று வரவேற்றான். அவள் கையில் இருந்த பால் தம்ளரை வாங்கிக் கொண்டான். ஆனால், தொடவில்லை.

'உட்கார்' என்று அமர வைத்தான்..

அமர்ந்தாள்.

'கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாமா?' என்றான்.

அவள் தலையாட்டினாள். கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டிருந்தது.

'அப்புறம்.. வீடெல்லாம் பிடிச்சுதா!' என்றான்.

அவள் மறுபடியும் அவன் முகம் பார்க்காமல் எங்கோ பார்த்துக் கொண்டு தலையசைத்தாள்..

'உன் சிஸ்டர்ஸ், பிரதர்ஸ் எல்லாத்தையும் விட்டுட்டு வந்து இங்க இருக்கறது கஷ்டமா இருக்கா? பயப்பட



வேண்டியதில்லே.. அம்மா.. ரொம்ப நல்லவங்க..' என்றான்.

அவள் அமைதியாகவே இருந்தாள். அவன் மேலும் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக,

'ஆமா.. என்னைப் பிடிச்சுத்தானே கல்யாணத்துக்கு சம்மதிச்சே..?' என்றான்.

அவ்வளவுதான்! அவள் சற்றும் எதிர்பாராத விதமாகத் தேம்பியழ ஆரம்பித்தாள்.

மணிவாசகன் திகைத்துப் போனான்.

'இலக்கியா.. என்ன.. என்ன ஆச்சு? ஏன் இப்படி அழறே!' என்றான்.

அவள் அழுதுகொண்டே அவனை வெறித்துப் பார்த்தாள். பிறகு கேட்டாள்.

'இப்பப் பிடிச்சுதான்னு கேக்கறிங்களே? கல்யாணத்துக்கு முன்னாடி அதைக் கேட்டிருக்கலாமில்லே?' என்றாள்.

'ஓ!' என்று அவன் அமைதியானான். சட்டென்று எழுந்தான். அவள் பக்கம் பார்க்காமல் வேறு பக்கம் பார்க்கிறாற்போல நின்று கொண்டிருந்தான். வேதனையை விழுங்குகிறாற் போல நின்றான். பிறகு திரும்பி.

'இலக்கியா.. எங்க வீட்டில அப்படியெல்லாம் மாப்பிள்ளை பொண்ணுகிட்ட பேசற வழக்கம் எல்லாம் இல்லே.. ஏன் நீ படிச்ச பொண்ணுதானே.. நீ ஒரு போன் பண்ணி எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லேன்னு சொல்லியிருக்கலாமில்லே..!' என்றான்.

அவள் திகைத்தாள்.

அவன் தனக்குத்தானே பேசுவது போல் பேசிக் கொண்டான்.

'அப்பவும் நான் சந்தேகப் பட்டேன்.. சரியாப் போச்சு..' என்றான்.

படுக்கையை விட்டு எழுந்து எதிரில் இருந்த சேரில் அமர்ந்தான். அவள் முகத்தையும் பார்க்கவில்லை.

'வா.. அழாதே! படுத்துத் தூங்கு!' என்றான்.

அவள் பீதியுடன் பார்த்தாள்.

'ஆமா.. தூங்கு!' என்றவன் ஏதோ நினைத்துக் கொண்டாற் போல,

'ஏன் இலக்கியா? இது பணக்கார சம்பந்தம்.. இந்தக் கல்யாணம் நடந்தா.. அடுத்த ரெண்டு பெண்களுக்கும் ஈஸியாக் கல்யாணம் பண்ணலாம்னு சொல்லி உன்னைக் கட்டாயப்படுத்தினார்களா?' என்றான்.

அவள் 'ஆமாம்' என்பது போல் தலையசைத்தாள்.

'யாரு?' என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. அவனே தொடர்ந்து,

'உங்க அம்மாதானே?' என்றான்.

அவள் மறுபடியும் எதுவும் சொல்லவில்லை.

'உங்க மதர்கிட்டே நான் பேசறேன்' என்றான்.

'வேண்டாம்..!' அவங்க ஒரு டைப். அப்புறம் ஏதாவது பண்ணிட்டாங்கன்னா?' என்றாள் குழறலாக.

'அதுக்காக.. உன்னோட வாழ்க்கையைப் பாழ் பண்ணிடலாமா?' என்றான் காட்டமாக.

அவள் அழுகை ஒய்ந்து பின் தான் செய்த காரியத்தின் விபரீதம் உணர்ந்து பயந்து போய் அமர்ந்திருந்தாள்.

அவன் மறுபடியும் அவள் முகம் பார்த்தான். 'நீ.. யாரையாவது..?' என்று நிறுத்தினான்.



'இல்லே.. இல்லே!' என்றாள் அவசரமாக.

'சே..! அப்படியிருந்தாலாவது ஏதாவது ஏற்பாடு செய்யலாம்..' என்றான்.

'அதெல்லாம்.. நடக்காது..!' என்றாள் ஈனமான குரலில்.

அவனுக்குக் கோபம் லேசாக எழுந்தது.

'என்னை.. என்ன பண்ணச் சொல்றே! உனக்கு என்னைப் பிடிக்கலேன்னு தெரிஞ்சதுக்கப்புறம்.. உன்கூட வாழச் சொல்றியா?' என்றான்.

'இங்க எத்தனையோ அரேன்ஜ்ட்மேரேஜஸ் இப்படித் தான்.. நடக்குது' என்றாள் இலக்கியா.

அவன் பெருமூச்செறிந்தான்.

'இலக்கியா.. எனக்கு நாலு சிஸ்டர்ஸ். பெரியவங்க.. ரெண்டு பேருக்கும் நானும் அண்ணனும் பாத்துப் பாத்துக் கல்யாணம் செஞ்சு வச்சோம். இன்னும் ரெண்டு சிஸ்டர்ஸ் இருக்காங்க.. அவங்க மேலே எவ்வளவு பிரியம் வச்சிருக் கேன்னு உனக்குத் தெரியாது. அப்படியிருக்கும்போது உன்னையும் ஒரு பொண்ணா நினைச்சுப் பாக்கும்போது.. எனக்கு வருத்தமாத்தான் இருக்குது..'

'உங்களுக்கு.. என் மேல கோபம் வர்லையா?'

அவன் கசப்பாகச் சிரித்தான்.

'கோபம்.. உன் மேலே வர்லே.. என் மேலதான் வருது.. நான் கறுப்பு.. படிப்பு அவ்வளவு இல்லே.. இதெல்லாம்.. உனக்கு.. ஓகேவான்னு உன்னைக் கேட்டிருக்கணும்.. ஒரு வேளை பிஸினஸ்லே கெட்டிக்காரனாயிருக்கேன்னு உனக்குப் பிடிச்சுப் போச்சுன்னு நினைச்சேன்.. ம்.. இனி.. அதையெல்லாம் பேசி.. என்ன செய்ய?' என்றான்.

'சரி.. தூங்கு..!' என்றான்.

அவள் விழித்தாள்.. அவனைக் கேள்விக் குறியாய் பார்த்தான்..

'ப்ளீஸ்.. இலக்கியா.. தூங்கு.. நான் பெரிய படிப்பு இல்லாதவனா இருக்கலாம். ஆனா.. விருப்பமில்லாத பொண்ணைத் தொடக்கூடாதுங்கற அளவுக்கு சுயமரியாதை உள்ளவன்..' என்றான்.

பக்கத்து அறைக்குப் போய்க் கட்டிலில் விழுந்தாள். அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. மௌனமாக அழுது கொண்டே படுத்திருந்தாள்.

விடிந்ததற்குப் பிறகு என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ.. என்று பயம் அடிவயிற்றில் இருந்து கிளம்பியது.

★ ★ ★

ஆறு மணிக்கு அடித்துப் பிடித்துக் கொண்டு விழித்துப் பார்த்தாள். வீட்டிலென்றால் ஏழு மணி வரை உறங்கிப் பழக்கம்.

அறையை விட்டு வெளியே வந்தாள்.. அவனது அறையில் அவனைக் காணவில்லை.

பாத்ரூமில் குளித்தாள். உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

வாகீசனின் மனைவி தேவகி. அடுக்களையில் நின்று கொண்டிருந்தாள்..

'வா.. வா.. இலக்கியா?' என்று வரவேற்றாள்.

'நல்லாத் தூங்கினியா?' என்றவள் களுக்கென்று சிரித்தாள்.

'என்ன கேள்வி கேக்கறேன்.. பாத்தியா?' என்றவள். பிறகு 'கொழுந்தன் சொன்னாரு. ரொம்பப் பயந்து



போயிருக்கா. புது சூழ்நிலை. சும்மா.. சும்மா.. அவளை அதையும், இதையும் கேக்காதிங்க..ன்னு ஜாடையா.. சொல்லிட்டாப்ல' என்று சிரித்தாள்.

இலக்கியாவின் முகம் சிவந்தது. கண்களைச் சுழற்றி சுற்று முற்றும் பார்த்தாள்.

'கொழுந்தனையா தேடறே! அவுக அங்கே பால் பண்ணைக்குப் போயிருக்காங்க.. நீ முழிச்சா.. அங்கே வரச் சொன்னாக' என்றாள்.

அவள் அமைதியாக நின்றாள்.

'போறியா? இந்தா.. இந்த காபியைக் குடிச்சுட்டுப் போ.. புதுசாக் கறந்த பால்ல போட்டது. குடிச்சுப் பாரு.''

குடித்தாள்..

நகரத்தில் வாங்குகிற பாக்கெட் பால் காபியை விட வெகு சுவையாக இருந்தது. ஆனால் மனதில் நிறைந்திருந்த பாரத்தாலோ என்னவோ அதை ருசித்துக் குடிக்க முடியவில்லை.

பண்ணையாள் ஒருவரைத் துணைக்கு அனுப்பினாள் தேவகி. அவன் மரியாதையோடு பம்மிக் கொண்டு நடந்து அவளுக்கு வழி காட்டினான்.

'சின்ன முதலாளியம்மா.. சின்ன முதலாளியம்மா..' என்று பரபரப்பாகக் கூட வந்தான்.

'ஐயா அங்கே இருக்காருங்க' என்று அழைத்துப் போனான். அங்கே கண்ட காட்சி அவளை ஒரு நிமிடம் திகைக்கச் செய்தது.

வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அமர்ந்து ஒரு பசுவின் கனமான மடியிலிருந்து பாலைக் கறந்து கொண்டிருந்தான்.. மணிவாசகன்.

அவள் வந்திருப்பதைப் பார்த்ததும் புன்னகைத்தான். 'வரேன்.. இரு..' என்றான்.

அவள் பால் பீய்ச்சியடிப்பதை ஒரு சுவாரசியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள். அவன் எழுந்து வந்தான்.

'வா.. உன்கிட்டே பேசணும். வீட்ல வச்சுப் பேச முடியாது.. நம்ம நிலத்தைச் சுத்திக் காட்டின மாதிரி ஒரு ரவுண்ட் போயிட்டு அப்படியே பேசுவோம்..' என்றான்.

அவள் காலையிலிருந்து தன்னைத் தானே நொந்து கொண்டிருந்தாள். தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொண்டு பிறகு உன்னைப் பிடிக்கவில்லை என்று எந்தப் பொண்ணாவது சொன்னால் யார்தான் ஒத்துக் கொள்வார்கள்?

கோபக்காரன் இல்லை போலும். அதனால்தான் அமைதியாக வாங்கிக் கொண்டான். வேறு யாராவதாயிருந்தால்.. எப்படி வெடித்திருப்பார்களோ என்று எண்ணிக் கொண்டாள்.

மெதுவாக நடந்தார்கள்.

'இலக்கியா.. இந்தப் பத்து வருஷத்துல இந்தப் பிஸினஸைத் தூக்கி நிறுத்தறதுல.. எத்தனையோ அனுபவப் பட்டிருக்கேன். அதனாலதான் நீ நேத்தைக்குப் போட்ட வெடியை சந்திக்க முடிஞ்சது..' என்றான்.

அவன் முகத்திலும் வருத்தம் தெரிந்தது. பம்பு செட் மோட்டார் ரூமுக்கருகில் இருந்த தண்ணித் தொட்டிக்கருகில் போய் அவன் ஒரு காலை மேலே தூக்கி மற்றொரு கால் மேல் போட்டு அமர்ந்து கொண்டான்.

'உட்கார்! எனவும் அவளும் அமர்ந்தாள்.

'சொல்லு.. நீயே சொல்லு! இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணறது? என்ன தீர்வு?' என்றான்.



'நாம.. நாம.. இப்படியே கண்டின்யூ பண்ணலாம். எனக்குக் கொஞ்சம் டைம் குடுங்க' என்றாள் இலக்கியா.. தட்டுத் தடுமாறி.

'எதுக்கு? இந்தக் கறுப்பனை சகிக்கக்கறதுக்கா? இத்தனை பேச்சுக்கப்புறம்.. உன்னைத் தொடுவேன்னு நினைச்சியா?' என்றான் இரும்புக் குரலில்.

அவள் நடுங்கிப் போனாள்.

'ஐயோ!' என்றாள் தீனமான குரலில். அவன் முகம் மென்மையாக மாறியது.

'ஓ..கே..! ஓ..கே! மறுபடியும் பேசிப் பேசிப் பிரச்சினையைப் பெரிசு பண்ண வேண்டாம்.'

'டைவர்ஸ் பண்ணிக்கலாம்..' என்றான்.

அவள் மறுப்பது போல் தலையசைத்தாள்.

'ப்ளீஸ்? இலக்கியா.. நான் சொல்றதைக் கேளு. ஆனா.. எனக்குக் கொஞ்சம் டைம் குடுக்கணும். உன் சிஸ்டர்ஸ் மேரேஜையும், என் சிஸ்டர்ஸ் மேரேஜையும் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் முடிக்கலாம். அதுக்கப்புறம்.. உன் நிறத்துக்கும்.. அழகுக்கும் படிப்புக்கும்.. ஏத்த மாதிரி ஒரு மாப்பிளை நானே பார்த்து.. செய்து வைக்கிறேன்..' என்றான்.

அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. வாய் பேச மறுக்கவும் இல்லை. ஆமோதிக்கவும் இல்லை. பேச முடியாதவள் போல் அமர்ந்திருந்தாள்.

'போகலாமா?' என்றான். எழுந்தான்.

மறுபடியும் நடக்கும்போது 'உன் பிரச்சினை முடிஞ்சது. அதனாலே எந்த விதமான பயமும் இல்லாம.. ஏதோ ஹாஸ்டல்ல இருக்கிற மாதிரி.. நிம்மதியா.. விளையாட்டா.. இருக்கலாம்' என்றான்.

அவள் நிலைமையின் விபரீதம் உணர்ந்தவளாக அமைதியாக வந்தாள்.

'ஆனா, இப்போதைக்கு.. நமக்குள்ளே எதுவும் பிரச்சினைன்னு யாருக்கும் காட்டிக்க வேண்டியதில்லே.. ஏன்னா.. கவலைப் படுவாங்க..' என்றான்.

அவள் தலையசைத்தாள். பிறகு 'நீங்க.. நீங்க எங்க அம்மாகிட்டே...!' என்று தயங்கினாள்.

'எதுவும்.. கேட்க மாட்டேன். இப்படி ஒரு வேலையைச் செஞ்ச எல்லாரையும் முட்டாள் பண்ணிட்டாங்க. இனி போய் என்னத்தைப் பேசறது..?' என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள்.

'விருப்பப் பட்டா.. வீட்ல வேலையைப் பங்கு போட்டுக்கலாம்.. மல்லிகா.. ராதிகா உனக்கு நல்ல கம்பெனி குடுப்பாங்க.. பொறுப்பையும், பிரச்சினையையும் என்கிட்டே விட்டுட்டு.. நிம்மதியா.. விளையாட்டுப் போல் இருக்கலாம்' என்றான்.

வீட்டு வரை கொண்டு வந்து விட்டு விட்டு பைக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டான்.

அவள் தனக்கு சம்பந்தமில்லாத ஒரு இடத்திற்குள் நுழைவது போல் கால்கள் பின்ன அந்தப் பெரிய வீட்டிற்குள் நுழைந்தாள்..

'இனிவரும் நாட்களை எப்படித்தான் கழிக்கப் போகிறோம்..' என்ற கவலை தோன்றியது.

உழைப்பில் முழுகித்தான் வேதனையை மறக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள். மணிவாசகனும் அதே போல் எடுத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறியாமல்.





3

'ஹேய்! இன்னைக்கு என்ன சமையல்!' என்று கலாட்டாவாக வந்தான் சுந்தர்.

'மல்லிகா.. வந்துட்டாண்டி.. ஆலால சுந்தரன்.. ம்.. இன்னைக்கு வெறும் கஞ்சிதான். தொட்டுக்க ஊறுகாய்..' என்றாள் ராதிகா.

'இத்தனை லேடீஸ் இந்த வீட்ல இருந்துகிட்டு.. கஞ்சியா ஊத்தறீங்க.. செஞ்சாலும் செய்வீங்கடி..' என்றான் சுந்தர்.

அதே நேரம் இலக்கியா அங்கே கூடமாட உதவி செய்வதைப் பார்த்து.

'ஹேய்! மதனியை எதுக்கு வேலை வாங்கறீங்க. இந்தப் பெரிய குடும்பத்துக்கு.. குடும்பமா.. இது? ஒரு கம்பெனிக்கு வேலை செய்யறதுக்கு இத்தனை பேர் பத்தாதாக்கும். அவங்களை வேற வேலை வாங்கணுமாக்கும்..' என்றான் தோரணையாக..

மல்லிகாவும், ராதிகாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

'சரி.. சரி.. உனக்கு மட்டும்தான் அவங்க மேலே ரொம்ப அக்கறைன்னு பாவ்லா பண்ணாதே.. அவங்க எங்களுக்கும் மதனிதான். அவங்களாத்தான் வந்தாங்க.. வேண்டாம்னு சொன்னாக் கேட்க மாட்டேன்கறாங்க..' என்றாள் மல்லிகா.

'ஐயய்யோ.. அண்ணன் மனசு நொறுங்கிப் போயிடுங்க மதனி. போங்க மதனி. போய் அண்ணனை கவனிங்க' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நடித்தான் சுந்தர்.

அதற்குள் பேச்சு பாட்டுக்கு ஒரு பக்கம் இருக்க ராதிகா ஒரு பெரிய டம்ளரில் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டான் சுந்தர்.

'என்ன ரொம்பச் சின்ன டம்ளரா இருக்குன்னு பாக்கறீங்களா இலக்கியா மதனி. எங்களுக்கெல்லாம் பெரிய மனசு. அண்டாவிலதான் சாப்பாடு. குண்டாவில தான் குழம்பு..' என்று மேலும் ஏதோ சொல்லப் போக தேவகி சிரித்தாள்.

'போதும். தம்பி. இலக்கியா பயந்துரப் போகுது..!

சுந்தரும் சிரித்தான். பிறகும் நிறுத்தாமல் 'ஏங்க.. தேவகி மதனி, நீங்க இருந்துமா இந்தப் பொண்ணுக ரெண்டு பேரும்.. எங்களுக்குக் கஞ்சி ஊத்தறேங்கறாங்க..' என்றான்.

'கவலையே படாதே. தம்பி. நான் இருக்கிற வரைக்கும் கஞ்சின்னாலும் அது கலர் கலரா இருக்கிற மாதிரிப் பாத்துக்குவோம்' என்றாள் தேவகி.

பெண்கள் எல்லாரும் சிரித்தார்கள்.

'சே..! என்னங்க மதனி மனுஷனுக்கு சோதனை வந்தா தெய்வத்துக்கிட்டே முறையிடலாம்.. தெய்வமே சோதனை யானா என்ன செய்வேன்!' என்று சிவாஜி பாணியில் அவன் வசனம் பேசவும் மறுபடியும் சிரித்தார்கள்.

'தம்பீ.. வேலையிருக்கு.. காலையில என்ன தம்பி.. கலாட்டா பண்ணிகிட்டிருக்கே..' என்று தேவகி செல்ல மாகக் கடிந்து கொண்டாள்.

'அது சரி.. இளவரசர் எதுக்கு மடப்பள்ளிக்கு விஜயம் செய்திருக்கேன்னு கேட்க மாட்டீங்களா!' என்றான்.

'அதான்.. வந்துட்டியில்ல.. சொல்லித் தொலை..' என்றாள் மல்லிகா.

'நான் இப்ப சரக்கெடுக்கப் போறேன். வீட்டுக்கு ஏதாவது வேணும்னா வாங்கிட்டு வந்து குடுத்துடுன்னு பேரரசர் சொன்னாரு. அதான்..' என்றான்.



தேவகி உடனே வீட்டுத் தேவைகளைச் சொன்னாள். ஒரு சின்னக் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டாள்.

பிறகு இலக்கியாவின் அருகில் வந்தவள் 'என்ன மதனி. நீங்க பேரரசருக்கு மேலே அழுத்தமா.. இருக்கீங்க.. இது ரெண்டும் பாருங்க.. என்ன வாயடிக்குதுங்க..' என்றாள்.

இலக்கியா புன்னகைத்தாள்.

'மதனி.. உங்கப்பா.. எப்படிப்பட்ட ஆளு?' என்று கேட்டான்.

இலக்கியா என்ன பேசுவதென்று தெரியாமல் விழித்தாள்.

'எப்படியெப்படி பேரு செலக்ட் பண்ணியிருக்காரு. பாத்தீங்களா? இலக்கியா.. இனியா.. இதயான்னு.. எங்க வீட்லயும் பேரு வச்சிருக்காங்க.. பாரு.. மல்லிகா.. மாங்கா.. தேங்கான்னு..' என்றான்.

'ஏன்.. உங்க பேரெல்லாமும் நல்லாத்தான் இருக்கு. எல்லாமே பெரிய.. பெரிய சிவனடியார்கள் பேரு..' என்றாள் இலக்கியா.

'அப்படிச் சொல்லு அம்மிணி!' என்றார் மாமியார்.

'போச்சு.. டெபாசிட்டே போச்சு.. இனி இங்க நின்னா மரியாதையே இல்லே..' என்றபடி நகர்ந்தான்.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள். ஆனால் ஒரு விஷயம் ஆச்சரியமாக இருந்தது. பேச்சு பாட்டுக்குப் பேச்சு இருக்க வேலை பாட்டுக்கு வேலை நடந்தது.

தேவகியின் ஐந்து வயது மகன் சரவணன் எழுந்து வந்தான். தேவகி உடனே அவனைக் கவனிக்கப் போனாள்.

இலக்கியா கணவனுக்கு காபி எடுத்துக் கொண்டு தங்கள் அறைக்குப் போனாள். அப்போதுதான் எழுந்து பல் துலக்கிக் கொண்டு நின்றிருந்தான்.

சிரித்துக் கொண்டே வருகிற மனைவியைப் பார்த்தான்.

'என்ன இலக்கியா?' என்றான்.

'இல்லே.. உங்க தம்பி.. என்ன அந்தக் கலாட்டா.. பண்றார்' என்றாள்.

'ஆமா.. வீட்டுக் காமெடியன் அவன்தான்' என்று புன்னகைத்தான்.

சமையலறையில் நடந்த பேச்சுக்களையெல்லாம் அவனிடம் இயல்பாகவும், விரிவாகவும் சொன்னாள்.

அவன் புன்னகைத்துக் கொண்டே நின்றபடி மெல்லக் காபியைப் பருகினான். அவள் முகத்தில் மாறி மாறி ஏற்படுகிற உணர்வுகளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் காபி டம்ளரை நீட்ட அவள் வாங்கிக் கொண்டாள்.

அவள் மீண்டும் சமையலறைக்குக் கிளம்பிய போது அவன் சொன்னான்.

'பரவால்லே! உனக்குப் பொழுது போயிடும்.. இங்கே எல்லாரையும் பிடிச்சுப் போச்சு..' என்றான்.

'என்னைப் பிடிக்கலேன்னாலும் பரவால்லை.. இங்க இருக்கறவங்களையாவது பிடிச்சுதே..' என்று சொல்கிறான் போலும்.. என்று எண்ணிக் கொண்டு லேசாக ஓரக் கண்ணால் அவன் முகத்தைப் பார்த்தாள்.. ஆனால், அவன் முகத்தில் இருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவள் சமையலறைக்குப் போனாள். சற்று நேரத்தில் மங்கை குடும்பத்தாரும், திலகவதி குடும்பத்தாரும் வந்து சேர்ந்தார்கள்.

மறுபடியும் சற்று நேரம் அளவளாவி விட்டு எல்லாரும் வேலையில் ஆழ்ந்தார்கள். அத்தனை சத்தமும் மணிவாச



கன் வந்து டைனிங் டேபிளில் அமரவும் அடங்கி விட்டது. ஒருவிதமான அமைதி நிலவியது.

தேவகி.. 'தம்பி.. என்ன சாப்பிடறப்பா.. டிபனா.. சாப்பாடா?' என்றாள் மெல்ல.

'டிபனே குடுங்க..' என்றான்.

தேவகி இட்லியை ஒரு தட்டில் எடுத்து இலக்கியா கையில் கொடுத்துக் கொண்டு போய் பரிமாறச் சொன்னாள்.

அவள் கொண்டு போய்ப் பரிமாற அவன் அமைதியாகச் சாப்பிட்டான். பின்னாலே கிச்சடி.. இரண்டு வேக வைத்த முட்டை என்று தட்டில் வைத்தார்கள்.

சாப்பிட்டு முடித்தவுடன் அந்த செம்பில் இருந்த தண்ணீரை முழுக்கக் குடித்து விட்டான். அம்மா தயக்கத்துடன் எதிரில் வந்து நின்றார்.

'என்னம்மா?' என்றான் வாஞ்சையாக.

'பணம் வீட்டுச் செலவுக்கு ஒரு அஞ்சு ரூபா.. வேணும்' என்றார்.

'சரி..!' என்றான்.

மல்லிகா வந்து 'அண்ணா.. காலேஜ்க்கு ஃபீஸ் கட்டணும்' என்றாள்.

'எவ்வளவு?'

'எட்டாயிரம் ரூபா..!'

அவன் இலக்கியாவை நோக்கித் திரும்பினான். 'இலக்கியா.. செக் போட்டுக் குடுத்தர்றேன்.. கார்ல போ பாங்ல எடுத்துட்டு வந்தர்றியா?' என்றான்.

அவள் 'சரி' என்றாள்.

'மல்லிகாவோ.. ராதுவோ யாரோ ஒருத்தர் கூடப் போறிங்களா?' என்றான்.

ராதிகா 'நான் போறேன்.. அண்ணா' என்றாள். எழுந்தவன் 'அம்மா.. நீ கேட்ட பணத்துக்கு மேலே அஞ்சு ரூபா.. செக் போட்டிருக்கேன்.. இவங்கள்ளாம்.. ஏதாவது செலவுக்குக் கேட்டாக் குடு..' என்றான்.

எழுந்தான். பைக்கை நோக்கிப் போனான்.

'தம்பி! மத்தியானம் சாப்பாட்டுக்கு..' என்று இழுத்தாள் தேவகி.

'வர்றேன்.. அதுக்குன்னு தடபுடல் பண்ணாதீங்க' என்றான்.

அவன் போகும்போது 'போ' போய் வழியனுப்பிட்டு.. வா..' என்று தள்ளிவிட்டாள் தேவகி.

இலக்கியா மெல்ல நடந்தாள். அவன் திரும்பி.. 'உனக்கேதாவது பணம் வேணுமா?' என்றான்.

'இருக்கு!' என்றாள். இருந்தாலும் அவன் சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டு ஒரு ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

அவள் வேண்டாம் என்றால் கோபம் வருமோ என்னவோ என்று வாங்கிக் கொண்டாள்.

புன்னகைத்தான்..

'இங்க இருக்கறதுக்குக் கஷ்டமா இருந்தா.. அம்மா.. வீட்டுக்குப் போய் ஒரு வாரம் இருந்துட்டு வர்றியா?' என்றான்.

'இல்லே.. இங்கயே எனக்குப் பிடிச்சிருக்கு..' என்றாள்.

'சரி..!' என்றான். பைக்கை உதைத்தான்.. புயலாய்ப் புறப்பட்டுப் போய் விட்டான்.



மெல்லத் திரும்பி உள்ளே வந்தபோது இலக்கியாவுக்கு ஏதேதோ எண்ணங்கள் திரண்டு வந்தன.

தேவகியிடம் கேட்டாள். 'அவரைக் கண்டால் எல்லாரும் பயப்படுவாங்களா?' என்று.

'பயம்ன்னு இல்லே. மரியாதை. இந்தக் குடும்பத்தையே தூக்கி நிறுத்தினவர்ன்னு.. இத்தனைக்கும் தம்பி.. ஒரு வார்த்தை கோபமாய் பேசாது. ஆனா.. சட்டுன்னு சிரிக்காது. எல்லாருக்கும் ஒரு மரியாதைன்னு வச்சுக்க யேன்' என்றாள் தேவகி.

'ஓ!' என்றாள்.

பொன்மணியம்மா தயிர் கடைந்து கொண்டே சொன்னார்.

'ஆமாடி.. மருமகளே! ஒன்பது குழந்தைங்கன்னு கோயமுத்தூர்ல வீடு கூடக் குடுக்க மாட்டேன்னுட்டாங்க. அதனாலதான் பொள்ளாச்சிப் பக்கம் வந்தோம். வாசுசேனும், அவங்க அப்பாவும் காய்கறி வண்டி தள்ளி வித்திருக்காங்க. அப்ப இவனும் லீவு நாள்ல கூடப் போவான்; அப்ப இருந்தே குடும்பத்தை மேலுக்குக் கொண்டு வரணும்னு ஒரு வைராக்கியம்.'

இலக்கியா ஆர்வமாய்க் கவனித்தாள்.

'அப்புறம் பெரிய மகனும், அப்பாவும் ஒரு மளிகைக் கடை வச்சாங்க.. வீட்ல எல்லாரும் புடைக்கறது. பொருட்களையெல்லாம் சுத்தம் செய்யறதுன்னு எல்லா வேலையையும் செய்வோம். சுத்தமா பாக்கெட் பண்ணிக் குடுத்தா.. வியாபாரம் நல்லா ஆகும்னு ஐடியா குடுத்தது மணியன்தான்' என்றாள்.

'அண்ணன் பிளஸ் டூவில ஆயிரத்து நூத்தைம்பது மார்க் எடுத்தாங்க. கணக்கிலே சென்டம். ஆனா, என் ஒருத்தன்

படிப்பைப் பார்த்தா.. குடும்பம் எப்ப முன்னேர்றதுன்னு படிப்பைத் தூக்கிப் போட்டுட்டு வியாபாரத்துல இறங்கினாங்க..' என்றாள் மல்லிகா.

'ஆமா.. அன்னைக்கிருந்து தன்னைப் பத்தியே அவர் நினைச்சதில்லே.. அவர் கடைக்கு வரும்போது வாசுகீ னுக்கும், எனக்கு மட்டும்தான் கல்யாணம் ஆகியிருந்தது. அப்புறம்.. தம்பி படித்து எல்லாத்தையும் தூக்கி நிறுத் திட்டான்.. இப்பக் கோயமுத்தூர்ல மட்டும் ஆறு கடை இருக்கு.. பொள்ளாச்சியில ரெண்டு, உடுமலைப் பேட்டையில ரெண்டு' என்றாள் மங்கை. எல்லாருக்கும் பெரியவள்.

'சாப்பாடு, தூக்கம்னு நேரம் பார்க்காம அலைவான்.. எப்படியெல்லாம் சிக்கனம் பண்ணினா கடைகளுக்காகிற செலவைக் கம்மி பண்ணலாம். இலாபம் பாக்கலாம்னு.. திட்டம் போடுவான்.. கெட்டிக்காரன். என் கல்யாணமே அவன்தான் முன்னால நின்னு நடத்தினான்' என்றாள் திலகம்.

'ஆமா.. மங்கை கல்யாணம் ரொம்ப ஜாம்.. ஜாம்ன்னு நடத்தாம போனமேன்னு எனக்கு வருத்தம் வரக் கூடாதேன்னு என் குழந்தை காதுகுத்தை சிறப்பாச் செஞ்சான். எனக்கும் கல்யாண செலவுக்கு பதிலா.. நிறைய நகை போட்டான்' என்றாள் மங்கை.

'இப்பவும்.. தனக்குக் கல்யாணம் ஆனாலும் நாளைக்குப் பிரச்சினை வந்தரக் கூடாதுன்னுட்டு மல்லிகாவுக்கும், ராதுவுக்கும் நகையெல்லாம் எடுத்து வச்சிட்டார். இனி அடுத்தடுத்து கல்யாணம்தான்.. எல்லாருக்கும் ஒன்று போல ஐம்பது பவுன் நகை எடுத்துக் குடுத்திட்டான். உனக்கும் எடுத்து வச்சிருக்கான்' என்றார்கள்.

இலக்கியாவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.



இத்தனை பேர் மனசிலயும் நிறைந்து நிற்கிறார் தன் கணவன் என்று பெருமையாக இருந்தது. ஆனால், அப்படிப் பட்டவரை ஏன் தனக்கு பிடிக்காமல் போனது என்று வருத்தமாகவும் இருந்தது. அன்றிரவு!

குடும்பத்தவர்கள் எல்லாரும் திட்டம் போட்டு அவளை மட்டும் விட்டு விட்டு கோயிலுக்குப் போனார்கள்.

அன்றைக்கு ஒன்பது மணிக்கே வந்தான் மணிவாசகன்.

'எங்கே.. எல்லாரையும் காணோம்!' என்றான்.

'இல்லே! எல்லாரும் கோயிலுக்குப் போயிருக்காங்க..' என்றாள் தயக்கத்துடன்.

அவன் புன்னகைத்தான். 'நாம புதுசாக் கல்யாணமான வங்கன்னு.. நம்மளுக்குப் பிரைவஸி குடுக்கறாங்களாம்..' என்றான்.

அவள் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தாள்.

'சாப்பிடறீங்களா?' என்றாள்.

'ம்..' என்று அவன் பின்கட்டுக்குப் போய் கை கால் கழுவிக் கொண்டு வந்தான்.

அவள் தட்டை எடுத்து வைத்து டிபன் பரிமாறினாள்.

'நீயும் உட்காரு!' என்றான். அவள் அமர்ந்தாள்.

இருவரும் சாப்பிட்டார்கள்.

'இங்கயெல்லாம்.. ஆம்பளைங்களோட சமமா உட்கார மாட்டாங்க.. ஆனா, நாம தனியா இருக்கும்போது அதெல்லாம் பாக்க வேண்டியதில்லே..' என்றான்.

அதற்குள் செல்போன் ஒலித்தது.

'அண்ணே! நீ வச்சிடு.. நான் அவன்கிட்டே பேசிக் கறேன்' என்றான்.

'இத பார். இந்த வேலையெல்லாம் என்கிட்டே வேண்டாம்..' பணத்தை வச்சுட்டு வேலையைப் பாரு. நான் பார்த்து உன்கிட்டே வர்ற கஸ்டமர்கிட்டே உன்னைப் பத்தித் தப்பா சொன்னேன்... உன் பிஸினஸே படுத்துடும்' என்றான்.

அந்தப் பக்கம் என்ன சொன்னாங்களோ தெரியவில்லை.

'சரி.. முதலாளிகிட்டயே குடு' என்றான்.

'ஸீ மிஸ்டர். பாண்டே! ஐ நோ லாங்கர் நீட் யுவர் பிஸினஸ். ஐ கேன் த்ரைவ் ஈவன் வித்தவுட் யுவர் பிஸினஸ். பட் யு கெனாட் சர்வைவ் வித்தவுட்.. மீ.. யு.. அண்டர்ஸ்டாண்ட்..' என்றான்.

அந்தப் பக்கம் என்ன பதில் வந்ததோ தெரியவில்லை.

'ஓ..கே.. இட்டிஸ் செட்டில்ட் தென். பட் டோண்ட் ரிபீட் திஸ்.. ஐ வோண்ட் டாலரேட்' என்றான்.

ஆஃப் செய்தான். 'என்கிட்டயே உன் வேலையைக் காட்டறியா..?' என்று முணுமுணுத்துக் கொண்டே ஆஃப் செய்தான்.

சற்று நேரம் அமைதி நிலவியது. அவன் கோப முகத்தைப் பார்த்த இலக்கியா கொஞ்சம் அரண்டுதான் போனாள். ஆனால், அவன் உடனே இயல்புக்கு வந்தான்.

'அந்தச் சட்னியை எடு!' என்றான். அவள் அவசரமாக எடுத்துப் பரிமாறினாள்.

சாப்பிட்டு முடிக்கும்போது அவள் சொன்னாள்.

'அழகா.. இங்கிலீஷ் பேசறீங்க..?' என்றாள்.

'இத பார்றா.. வைஃப் கிட்டே யிருந்து வர்ற முதல்.. காம்ப்ளிமெண்ட்...' என்றான்.



பளிச்சென்று சிரித்தான். மின்னல் ஒன்று மின்னி மறைந்தாற் போல் இருந்தது. வரிசைப் பற்கள், அவள் ஒரு நிமிடம் மலைத்துப் போய்ப் பார்த்தாள்.

'ஹலோ..!' என்று அவன் சொடுக்குப் போடவும்தான்.. அவள் மீட்டுக் கொண்டாள்.

'இலக்கியா.. இந்த விஷயம் எனக்குப் புரியவே மாட்டேங்குது. நம்ம ஊர்ல இங்கிலீஷ் கடகடன்னு பேசினாத்தான் படிச்சவன்னே ஒத்துக்கறீங்க.. இங்கிலீஷ்.. நம்ம தமிழ் மாதிரி ஒரு மொழி. மீன்ஸ் ஆஃப் கம்யூனிகேஷன். ஆனா, நாலெட்ஜ்ங்கறது மொழியிலே இல்லே. தெரிஞ்சு வச்சிருக்கிற விஷயத்திலதான் இருக்கு. இங்க என்னடான்னா.. தெர்மா மீட்டரே.. காய்ச்சல் மாதிரி நினைச்சுக்கறாங்க' என்றான்.

இலக்கியா திகைத்துப் போனாள். 'ஆமா..' என்றாள்.

'சரி.. வா..! கஷ்டப்பட்டு நமக்கு தனிமை குடுத்திருக்காங்க.. நிலா வெளிச்சம்.. நல்லா இருக்கு.. கொஞ்சம். வெளியே உலாவிட்டு வர்லாம்' என்றான். மறுபடியும் சிரித்தான்.

அவள் பணிந்தாள்.

அந்தச் சுற்றுப்புறத்தின் அழகில் மனதைப் பறி கொடுத்தாள்.

'ஐயோ! இந்த லேசான காத்துல நடக்கறது எவ்வளவு நல்லா இருக்குங்க!' என்றாள்.

அவன் அமைதியாகவே வந்தான். அவளும் சற்று நேரத்தில் அமைதியாகி விட்டாள். ஆனால் அவனோடு அப்படி அமைதியாக நடப்பது கூட நன்றாகத்தான் இருந்தது.

திரும்ப அறைக்கு வந்தபோது அவன் தன் படுக்கையறைக்குள் நுழையும் முன் அவன் சொன்னான்.

'பரவால்லே! இலக்கியா. எங்கே இங்க தங்கறதுக்குக் கஷ்டப்படுவியோன்னு நினைச்சேன். என்னைச் சுற்றியிருக்கிற விஷயங்களாவது உனக்குப் பிடிச்சிருக்கே..!' என்றான்.

அவள் திரும்பி ஏதோ பதில் சொல்லுமுன் உள்ளே போய் விட்டான்.

அவள் திகைத்துப் போய் நின்றாள்.



4

மணிவாசகன் கண்ணாடி முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்தான். அறைக் கதவுக்கருகில் இலக்கியா நிற்பதைப் பார்த்தான்.

'என்ன இலக்கியா?' என்றான். அவள் லேசான பயத்துடன் நிற்பதைப் பார்த்ததும் அவன் முகம் மென்மையாக மாறியது.

'என்ன புதுசா.. பயம்? முதல் நாளே வெடிச்ச ஆள் மாதிரித் தெரியலையே?' என்றான்.

'இங்கே.. இங்கே.. எல்லாரும் உங்களுக்குக் குடுக்கற மரியாதையைப் பார்த்து எனக்கு பயம்மா.. இருக்கு..' என்றாள்.

'ஓ..!' என்றான். ஒரு நிமிட மௌனத்திற்குப் பின் 'அப்படியெல்லாம் பயப்படத் தேவையில்லை!' என்றான்.

'சொல்லு..! என்ன விஷயம்!'

'இல்லே.. இன்னைக்கு சனிக்கிழமை.. அம்மா வீட்டுக்குப் போலாமா!'

'ம்..!' ஆமா.. போகணும் இல்லே. சரி.. போயிட்டு வாயேன்.'



அவள் மறுபடியும் நகராமல் நின்றாள். அவன் டேபிள் மேல் ஏதோ ஃபைலைக் கலைத்துக் கொண்டு பிஸியாக இருந்தவன் திரும்பினான்.

'என்ன?' என்பது போல் பார்த்தான்.

'இல்லே! நீங்களும் வர்லேன்னா தப்பா நினைப் பாங்க..!' என்றாள்.

'நானா! எனக்கு நிறைய வேலையிருக்கே?' என்றான்.

'இதுவே பிரியத்துக்குரிய மனைவியாய் இருந்தால் இப்படிச் சொல்லியிருப்பானா?' என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டவள் அவள்தானே?

'ப்ளீஸ்! எனக்காக?' என்றாள்.

அவன் அவள் முகம் பார்த்தவன். 'சரி.. சுந்தரும் நானும் வர்றோம். ஒரு அரை மணி நேரத்துல நான் கிளம்பிர்றேன். நீ வரும்போது போன் பண்ணு. கார் அனுப்பறேன்..' என்றான்.

தன்னோடு தனியாக வருவதற்கு அவனுக்கு விருப்பமில்லையென்று எண்ணிக் கொண்டாள்.

'சரி..!' என்றாள்.

சுந்தர் காரை ஓட்ட அவர்கள் இருவரும் பின் சீட்டில் அமர்ந்து கொண்டார்கள்.

கவனமாக அவள் மேல் பட்டு விடாமல் அமர்ந்து கொண்டான் மணிவாசகன்.

'மதனி! அதென்ன உங்கப்பா யோசிச்சு யோசிச்சுப் பேர் வச்சிருக்காரு. இலக்கியா, இனியா.. இதயா.. எல்லாரும் பாக்கறதுக்கு நல்லா இருக்கீங்க.. பேரும் சூப்பரா இருக்கு' என்றான் சுந்தர்.

இலக்கியா திடுக்கிட்டுப் போய்த் திரும்பிக் கணவனைப் பார்த்தாள். அவன் நியூஸ் பேப்பரில் மூழ்கியிருந்தான்.

'ஏன்.. உங்க வீட்லயும் எல்லாரோட பேரும் நல்லாத்தான் இருக்கு..' என்றான்.

'ம். மோசமில்லே. எங்கப்பா கூட எல்லா விஷயத்துலயும் கெட்டிக்காரர்தான். ஆனா, பொறுமையா பேரு செலக்ட் பண்ணி வக்கறதுக்குத்தான் அவருக்கு நேரமில்லே..' என்றான்.

இலக்கியாவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அடக்க முயன்றாள்.

'ஏன்.. இப்படி சொல்றீங்க? சுந்தர்.'

'இல்லே.. வரிசையா.. அடுத்தடுத்துக் குழந்தைங்க.. தொடர்ந்து ரொம்ப பிஸி.. அதனால..' என்று இழுக்கவும் இலக்கியா அடக்க முடியாமல் குபீரென்று சிரித்தாள்.

'டேய்! உதை வாங்குவே!' என்றான் மணிவாசகன்.

'ஐயோ.. அண்ணா, நீ எதுக்குக் கோபிச்சுக்கறே! நான் என்ன சொன்னேன்? தொடர்ந்து குழந்தை வளர்ப்புலே பிஸியா இருந்தாங்கன்னு சொன்னேன்' என்றான்.

மறுபடியும் இலக்கியா சிரித்தாள்.

'அண்ணா.. நீதான் கோபிச்சுக்கறே.. மதனி.. பாரு.. எவ்வளவு அழகா கலகலன்னு சிரிக்கறாங்க..!' என்றான்.

அவன் புன்னகையுடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

'ஐயோ பாவம். ஏமாந்துடுவியேன்னு சிரிக்கறாடா. உன் ஜோக்கை ரசிச்சுச் சிரிக்கறான்னு நினைச்சியாக்கும்' என்றான்.

'அண்ணா! உனக்கு ரெஸ்ட் கிடைக்கறதே பெரிசு. நீ பேசாம கண்ணை மூடிட்டு தூங்கு. இல்லே.. தூங்கற மாதிரி.. நடி. நானும் மதனியும் பேசணும்' என்றான்.



'பேசுடாப்பா.. பேசு..' என்றான் நிஜமாகவே கண்ணை மூடிக் கொண்டு சேட்டில் சாய்ந்து உட்கார்ந்தான்.

சுந்தர் அரட்டை அடிக்க ஆரம்பித்தான்.

'மதனி.. இந்த மளிகைக் கடை இருக்கே. ரொம்ப போரான விஷயம்.. இதுவே ஜவுளிக்கைக்கடைன்னு வைங்க.. கலர் கலரா ஏதோ தரிசனங்கள் கிடைக்கும். பேசாம தொழிலை மாத்திரலாமா? அண்ணன்கிட்டே ரெகமண்ட் பண்ணுங்களேன்..' என்றான்.

'ஐயோ! சும்மாயிருங்க.. சுந்தர். போனாப் போகுதுன்னு என்னை இந்த வீட்ல இருக்கறதுக்கு அனுமதிச்சிருக்காரு.. இதுல இந்த ரெகமன்டேஷன் வேற செய்யச் சொல்றீங்க..' என்றாள் பாதி விளையாட்டும், உண்மையுமாக.

'மதனி.. உங்களுக்கு விஷயம் தெரியலே. உங்க காலேஜ் ஃபங்ஷனுக்கு அண்ணன் வந்திருந்தாங்க தெரியுமா? அப்ப இருந்தே அந்தப் பொண்ணு யாருன்னு விசாரிச்சுட்டிருந்தாங்க..' என்றான்.

கண்ணை மூடிக் கொண்டே மணிவாசகன் கையால் 'ரீல்' என்பது போல் சுற்றிக் காட்டினான்.

இலக்கியா அதற்கும் சிரித்தாள்.

'மதனி.. இன்னைக்கு உங்க வீட்ல நான்வெஜ் சமைப்பீங்களா?' என்றான்.

'ஐயோ.. இன்னைக்கு சனிக்கிழமையாச்சே.. நாளைக்கு வந்தீங்கன்னா! நானே சமைச்சுத் தர்றேன்' என்றாள்.

'நீங்க சாப்பிடுவீங்களா?' என்றான் சுந்தர்.

'இல்லை.. சுந்தர்.. நான் சாப்பிடறதில்லே.. ஆனா. சமைப்பேன்.. அப்பா. சிஸ்டர்ஸ் எல்லாம் சாப்பிடுவாங்க. உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்?' என்றாள்.

எதிர்பாராத விதமாக மணிவாசகன் இடையில் புகுந்தான்.

'ஒன்னு பாக்கி விட மாட்டான். ஊர்வன, பறப்பன.. நீற்பன நடப்பன எல்லாம்தான்.

மறுபடியும் இலக்கியா கலகலவென்று சிரித்தாள்.

'அட.. நிஜமாத்தான்.. காடை, கௌதாரி, எல்லாத்தையும் லபக் லபக்னு சாப்பிடுவான்' என்றான் மணிவாசகன்.

சுந்தரும் சிரித்தான். 'மதனி! இவரு இரண்டே இரண்டு துண்டு எப்பயாவது கொஞ்சம் மட்டன் சாப்பிடுவாரு' என்றான்.

'உங்க அண்ணனை உங்களோட கம்பேர் பண்ணினா ரொம்ப சாமியாரா இருப்பாராட்ட இருக்கு..' என்றாள் இலக்கியா.

'மதனி! ஒரு உண்மை சொல்றேன்.. கேட்டுக்குங்க.. இந்த மாதிரி, சாமியார் வேஷம் போடறவங்களைத்தான் நம்பக் கூடாது. அது இந்நேரத்துக்கு உங்களுக்குப் புரிஞ்சிருக்கணுமே' என்றான்.

இலக்கியாவின் முகம் சிவந்து போனது. அவன் பார்வை அவள் மேல் படிந்து மீண்டது. சுந்தர் அதைக் கவனிக்காமல் தொடர்ந்தான்.

'ஆமா.. மதனி! என்னை மாதிரி ஜொள்ளுப் பார்ட்டிங்களை நம்பலாம்.. ஆனா, இவங்க மாதிரி விசுவாமித்திரருங்கள்ளாம், ஒரு ஃபீல்டுல இறங்கினாங்கன்னா எதிராளி கிளீன் போல்ட்தான்' என்றான்.

இலக்கியாவின் முகம் மேலும் சிவந்தது. மணிவாசகன் முகத்தில் மறுபடியும் புன்னகை மலர்ந்தது.



'என்னமோ.. பெருசா செலவு வைக்கப் போறடா.. அதுக்குத்தான் இந்த ஐஸ் வைக்கறே..!' என்றான்.

'இருண்ணா! மதனிகிட்டே எல்லாத்தையும் சொல்லிக்கறேன்.. ரொம்ப ஸ்டிஃப் மாதிரி வேஷம் போடுவாரு மதனி. ஆனா, ரொம்ப சாஃப்ட் ஹார்ட்டட் பயந்துக்காதீங்க. உண்மையாவே ரஃப் அண்ட் டஃப்புன்னா.. இப்படியெல்லாம் நான் பேசவேணா? இல்லே பேசத்தான் விடுவாரா?' என்றான்.

கையிலிருந்த நியூஸ் பேப்பர்ல சகோதரனின் தலையில் ஒரு தட்டுத் தட்டினான்.

'டேய்! அவ என் வைஃப்டா.. அவளுக்கு என்னைப் பத்தி என்ன தெரியணுங்கறதை நான் முடிவு பண்ணிக்கறண்டா..' என்றான்.

அந்தக் குரலில் எச்சரிக்கை தொனித்தது. அதைப் புரிந்து கொண்டவனாகவோ என்னவோ சுந்தர் பேச்சை மாற்றி விட்டான்.

அவன் கல்லூரியில் படிக்கும்போது நடந்த கலாட்டாவைப் பற்றியெல்லாம் சொல்ல ஆரம்பித்தான். இலக்கியாவுக்கு சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிப் போனது.

மணிவாசகன் கூட லேசாகச் சிரித்துக் கொண்டே வந்தான்.. கோயமுத்தூர் வந்து சேர்ந்ததே தெரியவில்லை.

அவள் இறங்குவதற்கு முன்பாக ஒரு மணி நேரமும் போனதே தெரியலை இல்லங்கத்தான்' என்றாள்.

அவன் அதற்கும் ஒரு புன்னகையையே பதிலாகத் தந்தான்.

இறங்கியதற்குப் பின்பு அவர்கள் வீட்டில் எல்லாரும் வரவேற்புக் கொடுக்கும் போதுதான் கவனித்தாள்.

அவர்கள் அம்பாசிடர் காரில் வந்திருந்தார்கள். டிக்கியில் இருந்து கூடைகளில் பழங்கள், காய்கறிகள், தேங்காய் என்று நிறைய இறங்கியது.

இலக்கியாவிற்கே இதெல்லாம் தெரிந்திருக்கவில்லை.

அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

'பரவாயில்லையே.. அங்கேயெல்லாம் ஃப்ரெஷ்ஷா காய்கறிகள்' என்றாள் இனியா.

சகோதரிகள் உள்ளே அளவளாவினார்கள்.

காலை டிபன் சாப்பிட்டுவிட்டு ஒரு மணி நேரம்தான் இருந்தார்கள் மணிவாசகனும், சுந்தரும். ஆனால், அதற்குள் மாமனாரிடம் அமர்ந்து சற்று நேரம் பேசினான். மாமியாரை நலம் விசாரித்துக் கொண்டான்.

இனியாவிடமும், இதயாவிடமும் சற்று நேரம் இனிமையாகப் பேசினான். புறப்பட்டு விட்டான்.

'ஐயோ.. அக்கா.. மாமா.. சூப்பர்க்கா.. கறுப்புத் தங்கம்.. காமராஜர்.. மாதிரி.. என்ன பர்சனாலிட்டி.. ஆளுமை!' என்று மாய்ந்து போனாள் இதயா.

இனியாவும், சுந்தரும் ஒருவருக்கொருவர் காலைவாரிக் கொண்டார்கள்.

'பாருங்க.. இனியா.. மேடம்.. எங்க மதனியை நாளைக்கு சாயங்காலமே அனுப்பிறணும்.. தெரியுதா? அண்ணன் ஏங்கிப் போயிடுவாங்க.' என்றான்.

'பத்திரமா.. அனுப்பி வைக்கறோம். சின்ன மாமா..'

'சே..! என்னங்க மதனி. நீங்கதான் நாளைக்கு சாப்பிட வான்னும் சொன்னீங்க.. இவங்க வார்த்தைக்குக் கூட கூப்பிட மாட்டேங்கறாங்க' என்று போலியாக அங்கலாய்த்தான்.



'அங்க என்னத்தைக் கூப்பிடறது.. நானே கூப்பிட்டாச் சில்ல. வந்துருங்க' என்றாள்.

அவர்கள் காரில் ஏறும்போது அவளும் உடன் வந்தாள்.

'வந்து.. நீங்களும்.. நாளைக்கு சாப்பிட வாங்களேன். அம்மாவும், அப்பாவும் ரொம்ப ஆசைப்படறாங்க..' என்றாள்.'

'ம்.. வர்றதைப் பத்தி ஒண்ணுமில்லே. இன்ஃபாக்ட் நாளைக்குக் கோயமுத்தூர்ல அந்தக் கிளப் மீட்டிங் இருக்கு. நான் உன்னைக் கூட கூப்பிடலாம்னு இருந்தேன்..' என்றான்.

'ஓ..!' என்றாள். பிறகு 'அந்த மீட்டிங் எத்தனை மணிக்கு..'

'பத்து மணிக்கு!'

'சரி.. நான் வர்றேன். அங்க மீட்டிங்ல கலந்துட்டு இங்கே வந்தர்லாமா?' என்றாள்.

'ம்' என்று யோசித்தவன். பிறகு,

'அதுவும் சரி!' என்றான்.

மறுநாள் காலையில் நேரத்தில் எழுந்து பரபரவென்று சமையல் செய்தாள். அவருக்குக் காளான் பிரியாணி செஞ்சர்லாம். ரொம்ப விரும்பி நான்வெஜ் சாப்பிடற தில்லே..'

'அக்கா.. அந்த சின்னக் கோட்டானுக்கு?' என்றாள் இனியா.

'என்னடி.. கோட்டான் கீட்டான்னுகிட்டு.. ரொம்ப நல்லவர்டி. அவங்க வீட்ல எல்லாருமே நல்லவங்க என்றாள் இலக்கியா.

'தப்பாய் சொல்றேக்கா.'

'என்னது?'

'அவங்க வீடுன்னு சொல்லாதே. உங்க வீடுன்னு சொல்லு..' என்றாள் இதயா.

'ஓ.. சரி.. எங்க வீடு!' என்றாள்.

தன் கணவனுக்கு வேண்டியதை எல்லாம் ஓரளவு தயார் செய்து விட்டு ஒன்பது மணி வாக்கில் தயாராகலாம் என்று நினைத்தாள்.

பார்த்தால் எட்டரை மணிக்கே மணிவாசகன் வந்து நின்றான்.

'மாமா அக்கா.. கிச்சன்லே! அங்கயே போய் சர்ப்ரைஸ் குடுங்க' என்று இதயா கனகாரியமாக ஐடியா கொடுத்தாள்.

அவனும் புன்னகையுடன் போனான். அங்கே இடுப்பில் தூக்கிக் கட்டிய புடவையுடன் ஒரு கையில் கரண்டியுடன். ஆள் வருகிற ஆர்வம் கேட்டுத் திரும்பினாள் இலக்கியா.

முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பியிருக்க.. கரண்டியைத் தூக்கிப் பிடித்தபடி நிற்பதை விழுங்குவது போல் பார்த்த மணிவாசகன் சட்டென்று சிரித்தான்.

'ஹேய்! நீயே வாங்க வாங்கன்னு வருந்தி வருந்திக் கூப்பிட்டுட்டு இப்படிக் கரண்டியையெல்லாம் வச்சகிட்டு மிரட்டக் கூடாது' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

'ஏய்.. ரொமான்ஸ்.. ரொமான்ஸ்.. வா.. வா.. அந்தப் பக்கம் போலாம்' என்று பின்னாலேயே வந்த இனியாவும், இதயாவும் மறுபடி ஹாலுக்குப் போனார்கள். பெற்றோர் களையும் அங்கேயே இருத்தினார்கள்.

சட்டென்று அவள் சேலையைத் திருத்திக் கொண்டாள். கரண்டியைக் கீழே இறக்கினாள்.



'நீங்க.. நீங்க.. இப்படித் திடீர்னு வருவீங்கன்னு.. தெரியலே!' என்றாள்.

வெட்கத்துடன் புன்னகைத்தாள்..

அவன் விசித்திரமாக புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பார்வை அவளை என்னவோ செய்கிற மாதிரி இருந்தது.

வழியைக் குறுக்காட்டினாற்போல் நின்றான். தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு கர்சீப்பை எடுத்து நீட்டினான்.

அவள் வெட்கத்துடன் வாங்கிக் கொண்டாள்.

'யாருக்கு.. இப்படி தடபுடல் சமையல்?' என்றான்.

'உங்களுக்குத்தான்.. காளான் பிரியாணி!' என்றாள்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாற் போல்

இருந்தது.

'போகலாமா?' என்றான்.

'இதோ, பத்து நிமிடத்துல..' என்று பறப்பட்டாள்.

போன இடத்தில் மணிவாசகனின் இன்னொரு முகப

பார்த்தாள்.

5



புகழ்பெற்ற சங்கங்களில் அதுவு ஒன்று.

'எனக்கு இந்த மாதிரி பங்ஷன்கள் எல்லாம் பெரிய ஆர்வமெல்லாம் இல்லே. ஆனா ஃபிரண்ட்ஸ் ரொம்ப வற்புறுத்தினாங் அதான்' என்றான்.

'ஆளாளுக்கு உளறுவானுங்க.. பாரு!' என்று சிரித்தா

இலக்கியாவுக்கு சற்று முன் தங்கள் வீட்டில் அவன் பார்த்த பார்வையே உள்ளே ஓடிக் கொண்டிருந்தது. அதன் பொருள் புரியவில்லை என்ற போதும் சற்று அவளைப் பாதித்தது.

மறக்கவே முடியவில்லை. ஆனால், உடனடியாக அவன் தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டதும் மறுபடியும் இயல்பாக இருந்ததும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

திருமணமாகி இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது. வீட்டில் எல்லாருடனும் இருப்பதாலோ என்னவோ தனிமை உணர்வே இருக்கவில்லை. அவளும் சளைக்காமல் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

அவனும் சற்று அதிகமாக வேலைகளைச் செய்தான் போலும். மற்றவர்களுக்காக இரவு ஒன்பது மணிக்கு வந்தாலும் கூட வெகு சீக்கிரம் உறங்கி விடுவான். அவளும் தான்!

அவளுக்கு எந்தவிதத் தொல்லையும் கொடுக்காமல் நாகரீகமான இடைவெளி கொடுத்தான். அவன் சொன்னது போலவே ஏதோ ஹாஸ்டலில் இருக்கிற மாதிரி இருக்கப் பழகிக் கொண்டாள். ஆனால், நண்பர்களைப் போல இருந்தார்கள்.

ஒன்றிரண்டு முறை அவள் மட்டும் அம்மா வீட்டுக்குப் போய் ஒரு நாள் இரண்டு நாள் என்று இருந்து விட்டு வருவாள் இன்றைக்குத்தான் அவனும் வந்தது.

தன்னை மிகவும் மதிக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அதனால் அவளும் மகிழ்ச்சியாகவே இருந்தாள்.

இன்றைக்கு கலகலப்பாகப் பேசிக் கொண்டு உடன் இருந்தான். அப்போதுதான் அந்த இளைஞன் வந்தான்.

'இவர் மிஸ்டர். சுரேஷ்..' என்று அறிமுகப்படுத்தினான்.



அவள் வணக்கம் சொன்னாள்.

அவனும் அவர்களோடு அமர்ந்தான். வழக்கமான மீட்டிங் முடிந்த பின் எல்லாரும் ஆங்காங்கே நின்றபடியும், அமர்ந்தபடியும் குழுக்களாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுரேஷ் அவர்களை நோக்கி வரும்போதே 'இவளை நல்லாப் பார்த்துக்கோ' என்றான் மணிவாசகன்.

'டேய்.. வாக!' என்றான் சுரேஷ். நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் 'வாக' என்று அவனை அழைப்பதைக் கவனித்திருந்தாள் இலக்கியா.

'எல்லாத்திலயும் கெட்டிக்காரன்டா. நீ.. எப்படிடா.. இப்படியொரு அருமையான பொண்ணைப் பிடிச்சே. பேருதான் இலக்கியான்னா ஆளும் பண்பா இலக்கியம் மாதிரி இருக்காங்க!' என்று கேட்டுக் கொண்டிருந்தான் சுரேஷ் அவள் சற்று அந்தப் புறம் போனதும்

அதுவும் அவள் காதில் விழுந்தது. ஆனால் அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. 'ஆமடா.. ரொம்ப அருமையான பெண்' என்று அவன் பதில் சொல்வதும் புரிந்தது.

'இப்படிக் கொண்டாடிக் கொள்கிற அளவுக்கு அந்த வீட்டுக்குத் தான் என்ன செய்திருக்கிறோம்' என்று அவளுக்கு வியப்பாய் இருந்தது.

பெரிய தொழிலதிபர்கள், டாக்டர்கள், லாயர்கள் என்று கோயம்புத்தூரில் பெரிய வட்டம் எல்லாரும் அங்கே இருந்தார்கள். எல்லா விதமான மனிதர்களும் இருந்தார்கள்.

தொப்பையும், தொந்தியுமாக அவர்களில் பல இருந்தாலும் அவர்களுக்கு நடுவே தன் கணவன் நல் களையுள்ளவராக இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டாள்.

சுரேஷையும், அவளையும் பேச விட்டு விட்டு அவன் மற்றவர்களிடம் கலந்து பேசிக் கொண்டிருந்தான். அவ னுடைய நண்பன்தானே என்று சுரேஷிடம் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

வரப்போகிற விபரீதம் அவளுக்கே புரியவில்லை.

* * *

'சூப்பர் சமையல்!' என்று அவன் பாராட்டியபோது அவளுக்குள் உள்ளூர மகிழ்ச்சி வெள்ளம் பொங்கியது.

வீட்டில் எல்லாரையும் லேசான தலையசைப்பில் கட்டுப் பாட்டில் கொண்டு வருபவன் தனக்காக நேரம் ஒதுக்கியதும், அவளுக்குப் பெருமையாக இருந்தது.

காரில் திரும்ப அம்மா வீட்டுக்கு வரும்போது வேறு ஒரு செய்தி சொன்னான்..

'அங்கே ஸ்டவுட்டா.. ஒரு லேடி இருந்தாங்களே.. அவர்களுக்கு அவங்க பொண்ணை தலையில கட்ட ணும்னு ஆசை' என்றான்.

'அந்தப் பெண்ணா? அழகா இருந்தாளே!' என்றாள் இலக்கியா வியப்புடன்.

'இலக்கியா.. ஆள் அழகா இருந்து என்ன செய்ய? நம்மளை மாதிரிப் பெரிய குடும்பத்துல ஒத்துப் போகணும் இல்லையா? இப்பப் பாரு.. உனக்கே பிடிக்காத கல்யாணம்னாலும்.. நீ இங்கே இருக்கறவரைக்கும் எல் லாரையும் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டுப் போகணும்னு நினைக் கறே.. இல்லையா? அது மாதிரி.. இருக்கணும்' என்றான்.

அப்போது இலக்கியா மெல்லிய குரலில் அவனிடம் சொன்னாள்.

'எனக்கு.. நம்ம ஃபேமிலியில எல்லாத்தையும் பிடிச்சது.. எல்லாரும் நல்லா உழைப்பவங்களா இருக்கிறாங்க.. நம்ம



வீட்லயே மத்தியான நேரத்துல மல்லியும், ராதுவும் சீட்டு விளையாடும்போது.. மற்ற நேரங்கள்ல அப்படி சண்டை போட்டுக்கறாங்க. ஆனா வேலைன்னு வரும்போது ஒண்ணாயிக்கறாங்க' என்றாள்.

'ஆமா.. அம்மாவோட வளர்ப்பு.. அப்படி.. அம்மா.. ஒன்பது குழந்தைங்களையும் வளர்க்கறதுக்கு ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க.. கடுமையான உழைப்பாளி' என்றான்.

'இப்பவும் துறுதுறுன்னு இருக்காங்க..' என்றாள். மேலும் தொடர்ந்து, 'எனக்கு.. எல்லாரையும் பிடிச்சுப் போச்சு..' என்றாள்.

'என்னை?' என்று கேட்கலாம் என்று நினைத்த அவன் கவனமாகப் பேச்சை மாற்றினான்.

இப்போது சாப்பாட்டுக்குப் பின் மறுபடியும் சற்று நேரம் அவர்கள் வீட்டில் கழித்தனர். பிறகு,

'சரி.. நான் கிளம்பட்டுமா?' என்றபோது, 'நானும்.. உங்களோடவே வர்றேன்' என்றாள் இலக்கியா.

மணிவாசகனும் சிரித்தபடியே தலையாட்டப் புறப் பட்டார்கள்.

அவர்கள் புறப்பட்ட சற்று நேரத்துக்குள்ளாகவே சுந்தரின் கார் உள்ளே நுழைந்தது.

* * *

ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்றைக்கு வீட்டி லேயே இருந்தான்.

'சரி.. நான் தூங்கிட்டு வர்றேன் என்று அறைக்குப் போய் படுத்து விட்டான்.

ஐந்து மணிவாக்கில் எழுந்தவன் வீடே நிசப்தமாய் இருப் பதைப் பார்த்து மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தான்.

முற்றத்தில் அமர்ந்து பெண்கள் கூட்டமாகக் குனிந்து எதையோ பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'என்ன நடக்குது இங்கே?' என்ற அவள் குரல் கேட்டு தலைகள் நிமிர்ந்தன.

மல்லிகாவின் கையில் பிளாஸ்டிக் கோனால் மெஹந்தி போட்டுக் கொண்டிருந்தாள் இலக்கியா. எல்லாரும் அதை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே ராதிகாவின் கையில் போட்டு விட்டிருந்தாள். அவள் கையைப் பாங்காக வைத்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்து அழகாகச் சிரித்தாள் இலக்கியா.

'மல்லிகாவுக்கு மெஹந்தி போடறேன்' என்றாள்.

'ஓ..!' என்றான்.

'டேய்.. மல்லி! இன்னைக்கு உங்க மதனி.. சூப்பர் சமையல் செஞ்சாப்ல' என்றான்.

'அப்படியா..' என்றார்கள். பின்ன இங்க ஏன் 'பண்ண மாட்டேங்கறே?' என்றார்கள் கோரஸாக.

'எனக்கு இங்கே எல்லாருக்கும் பிடிக்குமோ.. பிடிக்காதோ.. என்று பயம்' என்றாள்.

'அதெல்லாம்.. நீ சமைச்சா.. ஒண்ணும் சொல்ல மாட்டோம்..' என்றார்கள்.

'அதுவும்.. அங்கே.. ஃபிரெஷ்ஷா காய்கறி.. கிடைக்குது. பால் கிடைக்குது.. எவ்வளவு ஐட்டம்ஸ் செய்யலாம்.. தெரியுமா? ஹெல்ப் பண்ணினா.. நிறைய ஐட்டம்ஸ் செய்யலாம்' என்றாள்.

'இப்ப இம்மிடியட்டா.. ஏதாவது செய்யேன்' என்றாள் தேவகி.

'இப்ப இம்மிடியட்டா?' என்று யோசித்தவள் 'குலாப் ஜாமூன் செய்யறேன்!' என்றவள். உடனே மல்லிகா



சகோதரனுக்கு போன் செய்தான். வரும்போது ஆர்.கே.மிக்ஸ் கொண்டு வா..' என்று.

அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தது. செய்து முடிக்க அரை மணி நேரத்தில் காரியம் ஆகிவிட்டது.

சற்றுக் கழித்து அம்மாவின் அறைக்குள் எட்டிப் பார்த்த மணிவாசகன் சொன்னான்.

'அம்மா.. அப்பாவுக்கும், வாகீசனுக்கும் ஸ்வீட் கிடைக்கலை போல இருக்கே?' என்று.

'அதெல்லாம்.. உன் வைஃப் முதல்லயே கொஞ்சம் ஒரு சின்ன டிபன் பாக்ஸ்ல போட்டு தனியா எடுத்து வச்சிருப்பாப்ல' என்றார்.

அவன் சிரித்துக் கொண்டான்.

* * *

**அ**ன்றிரவு!

'இலக்கியா.. உன்கிட்டே பேசணும்!' என்றான். அவள் மலர்ச்சியாக சிரிப்புடன் எதிரில் அமர்ந்தாள்.

'சொல்லுங்க.. மாமா!' என்றாள்.

இன்றைக்கெல்லாம் மாமா! என்று அவள் அழைப்பதை அவன் ககப்பானதொரு சிரிப்புடன் கவனித்துக் கொண்டான்.

'இலக்கியா.. இன்னைக்கு சுரேஷ்ன்னு ஒருத்தனை அறிமுகப்படுத்தினேன் இல்லே..'

'ஆமா..!' என்றாள் இலக்கியா.

'அவரைப் பத்தி என்ன நினைக்கறே?' என்றான்.

'ஏன்? அவரைப் பத்தி என்ன நினைக்கணும்?'

'இல்லே.. ரொம்ப நல்லவன்.. ஆனா, அவனுக்கு வைஃப் நல்லா அமையலே..!' டெஸ்ட் பண்ணிட்டுப் போனாப்

பல.. அவனுக்கு உன்னை மாதிரி ஒரு பொண்ணு அமைஞ்சா.. ரொம்ப நல்லா இருக்கும்..' என்றான்.

அவளுக்கு அவன் எங்கே வருகிறான் என்பது புரிந்தது. வெறித்துப் பார்த்தாள்.

'உனக்குத்தான் என்னைப் பிடிக்கலேன்கறயே.. உன்னோட பர்சனாலிடிக்கும் அவனுக்கும் பொருத்தமா.. இருக்கும்..' என்றான்.

அவள் வெடுக்கென்று எழுந்து நின்றாள்..

'இலக்கியா.. புரிஞ்சுக்கோ.. எப்படியும்.. டைவர்ஸ்ங்கற அளவுக்குப் பேசியாச்சு.. உன்னை அப்படிப் பொறுப்பில் லாம யார்கிட்டயோ ஒப்படைக்க முடியுமா?' என்றான்.

அவள் சட்டென்று அமர்ந்து அழுதாள்..

'ப்ளீஸ்! இப்படியெல்லாம் பேசி என்னைச் சித்திரவதை செய்யாதீங்க..' என்றாள்.

அவன் ஒரு வேதனையுடன் பார்த்தான்.

'ஐயோ.. அப்படி எண்ணமெல்லாம் இல்லே!' என்றான்.

'அப்ப... இனிமே.. இப்படி மாப்பிள்ளை பார்க்கிற வேலையெல்லாம் விட்டுடுங்க..'

'இலக்கியா..?' என்று அவன் ஆரம்பித்தவுடன் அவள் வெடித்தாள்.

'பேசாதீங்க..!' என்றாள்.

அவன் மௌனமாக நின்றான். அவன் முதன் முறையாக அவள் அறை நோக்கிப் போனான்.

'நீதானே..?' என்று ஆரம்பிக்கவும் 'ப்ளீஸ் பேசாதீங்க! உங்க குடும்பத்துப் பொண்ணுன்னு நினைச்சிருந்தா.. என்னைப் பார்த்து இப்படிக் கேப்பீங்களா?' என்றாள்.



'தயவு செய்து வெளியே போங்க!' என்றாள்.

அவன் வெடுக்கென்று திரும்பி அறைக்குப் போய் விட்டான்.

அவள் வெகு நேரம் அழுதாள். மெது மெதுவாக அவளுக்கு ஒரு விஷயம் புரிந்தது.

கடந்த இரண்டு மாதங்களில் அவன் கறுப்பு என்கிற விஷயமே மறந்து போய் விட்டது என்று.

எல்லா சமயங்களிலும் கம்பீரமாக இருந்தான். இயல்பான கம்பீரம். இதெல்லாம் தான் மனதில் நிலைத்திருந்ததே ஒழிய அவன் தோற்றம் பற்றிய குறையே தனக்குத் தெரியவில்லை.

இன்னும் கொஞ்ச நாளில் தனக்கு அவனுடைய அருகாமை பிடிக்கிற சூழ்நிலை கூட ஏற்படலாம் என்று தோன்றியது. அப்படியிருக்கையில் தனக்கு மாப்பிள்ளை பார்க்கறானாமே? என்று.

அவள் இன்னொரு மனது சொன்னது.

'இத்தனை சொத்தும், ஆளுமையும் உள்ள ஒரு மனிதனிடம் உன்னைப் பிடிக்கவில்லை என்று ஒரு பெண் சொன்னால் அவன் இயல்பாக எடுத்துக் கொள்வானா.. என்ன? மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு பழி வாங்குகிறான்' என்று தோன்றியது.

தேம்பிக் கொண்டே உறங்குகிற அவளை அவன் அறை வாயிலில் நின்று பார்ப்பதை அவள் அறியவில்லை.

அன்றைக்கு இரவு!

மணிவாசகன் வெகுநேரம் உறங்கவில்லை. சிந்தனை யில் ஆழ்ந்தான்.

சில உண்மைகள் அந்த இரவில் அவனுக்குப் புரிகிறாற் போல இருந்தது.

நிலைத்துப் போய் அமர்ந்து விட்டான். அதற்குப் பிறகு டைவர்ஸ் பற்றியோ, மறு திருமணம் பற்றியோ இலக்கியாவிடம் பேச்செடுக்கவே இல்லை.

## 6



**வீ**டு பரபரப்பாக இருந்தது.

மல்லிகாவுக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தார்கள். மாப்பிள்ளை வீட்டார் இன்று வருவதாகப் பேச்சு.

அன்றைய பிரச்சினைக்குப் பிறகு ஒரே ஒரு முறை அது பற்றிப் பேசினான் மணிவாசகன்.

'அப்புறம்.. இப்படியே இருக்கறதா.. உத்தேசமா?' என்றான்.

'ஆமா.. எனக்கு இந்த பேமிலி பிடிச்சிருக்கு. நான் இங்கயே இருந்தர்றேன்.'

அவன் மெல்லச் சிரித்தான்.

'அப்ப.. என்னையும் பிடிக்கப் போறதுக்கான வாய்ப்பு இருக்கோ..?' என்றான் மணிவாசகன்.

'தெரியலே!' என்று எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னாள் இலக்கியா. பிறகு அவளே தொடர்ந்து.

'இப்பவும் நான் எதுவும் உங்களுக்கு மறுக்கலியே..' என்றாள்.

'அதாவது.. நான் விரும்பினா.. வற்புறுத்தினா.. எல்லாம் கிடைக்கும்..? என்றான் கேள்வியாக.

'ஆமா!' என்றாள் உறுதியாக.

அவன் சிரித்தான்.. 'அரைகுறை விருப்பத்தோட ஒரு வாழ்க்கை சரியாகாது இலக்கியா. நான் சொன்ன கன்டிஷன் அப்படியேதான் இருக்கு. மல்லிக்கும், ராதுவுக்கும்



மேரேஜ் முடிச்சதுன்னா அப்புறமும்.. இதே நிலைமை இருந்தா நாம சேர்ந்திருக்கிறதுல அர்த்தம் இல்லை.. புரியுதா?' என்றான்.

அவள் பதில் சொல்லுமுன் நகர்ந்து விட்டான்.

அதோடு சரி அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேச்சே எழவில்லை.

மல்லிகாவிற்கு வரன் பார்ப்பதில் எல்லாரும் ஆர்வமாக ஈடுபட்டார்கள்.

அவர்கள் வீட்டின் நடைமுறைகள் இப்போது அவளுக்கு அத்துபடியாகி விட்டது. மணிவாசகனின் அப்பா ராஜப்பன் நிலத்தைப் பார்த்துக் கொண்டார். அமைதியான சுபாவம் எதுவானாலும் 'வாசுவைக் கேளுங்க' என்று சொல்லி விட்டுப் போய்விடுவார். வாகீசனும் அப்படியே.

வீட்டில் எல்லாரும் ராஜப்பனை அய்யா என்று அழைத்தார்கள். வாகீசனைப் பெரியவன் என்றார்கள். சுந்தரை சின்னவன் என்று அழைத்தார்கள். வாசுவைத்தான் 'முதலாளி' என்று அழைத்தார்கள்.

அத்தனை கடைகளும் அவனது சொந்த உழைப்பால் தான் அமைந்தன என்பதால் குடும்பம் அவனைத்தான் முதலாளியாக ஏற்றுக் கொண்டது. சுந்தர் பட்டப் படிப்பு முடித்து விட்டு நான்கு ஆண்டுகளாகத் துணைக்கு வந்தானாம். ஆனால், யாரும் வாசுவிடம் கேட்காமல் எதுவும் செய்வதில்லை.

மணிவாசகனும் எல்லாருக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டான். சாதாரணமாக எல்லாத் தொட்டிக் கட்டு வீடுகளிலும் நான்கு மூலைகளிலும் ஒரு அறை இருக்கும். ஆனால் ஒவ்வொரு மூலையிலும் எல்லா வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் இருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டான். அதே

போல மாடியில் ஒரு தளம் அதிலும் நான்கு புறமும் அதே மாதிரி அறைகள்.

தொட்டிக் கட்டு வீடுகளில் இருக்கறதைப் போல பின் கட்டில் சமையல் மற்றும் டைனிங் ஹால்.

இப்போதைக்கு ஒவ்வொரு விங்கிலும் அவரவர்களுக்குத் தனிமை கிடைக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டான்.

ஒரு வீட்டில் அம்மா, அப்பா, ஒரு வீட்டில் தங்கைகள், ஒரு வீட்டில் அண்ணன், அண்ணி. ஒரு வீட்டில் சுந்தர் என்று நான்கு பிரிவுகளிலும் ஆட்கள் தங்கியிருக்க மேலே ஒரு பிரிவில் அவனும் இலக்கியாவும் தங்கியிருந்தார்கள்.

மங்கையும், திலகமும் தங்கள் கணவன் மார்களுடன் வந்தால் தங்கிக் கொள்ள மாடியில் அவர்களுக்கென தனி விங்குகள் இருந்தன. எல்லாவற்றையும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டான்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அவன் மேல் தனிப் பிரியம். குழந்தைகளைப் பெற்றது மட்டும்தான் நாங்க. மற்றபடி குடும்பத்தையே கட்டிக் காத்தது அவன்தான் என்று எல்லையற்ற பிரியம்.

அவளுக்குத் தெரிந்தது. அவனுடைய வாழ்க்கை மட்டும் சரியாக இல்லையென்று தெரிந்தால் குடும்பமே அலமந்து போய்விடும் என்பது.

இப்போதெல்லாம் அவனுடைய சிறப்புக்களே அவள் மனதில் பெரிதாகத் தோன்ற ஆரம்பித்திருந்தது. நிறம் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை என்பதும் புரிந்தது. மெல்ல மெல்ல உள்ளம் அவன்பால் சாயத் தொடங்கி யுள்ளது என்பதும் புரிந்தது. ஆனால் முதல் நாளே அவனைக் காயப் படுத்தியாகி விட்டது.

இப்போது எது சொன்னாலும் எடுபடப் போவதில்லை.



திருமணமாகி நான்கே மாதத்தில் எனது மனம் மாறி விட்டது என்றால் ஏற்றுக் கொள்வாரா தெரியவில்லை. கொஞ்சம் பொறுக்கலாம் என்று முடிவு செய்து கொண்டாள்.

இதற்கிடையில் மல்லிகாவின் திருமணம் பேச ஆரம் பித்தார்கள்.

மல்லிகாவுக்கு வந்த மாப்பிள்ளை தங்கவேல் ஜவுளி வியாபாரத்தில் இருந்தான். பட்டப் படிப்பு முடித்திருந் தார். ஒரே பையன். ஒரு பெண் பெண்ணுக்குத் திருமண மாகி விட்டது. அதனால் பிக்கல் பிடுங்கல் இல்லை. நல்ல பண்பானவர்கள் என்று தெரிய வந்தது.

அவர்கள் குடும்பம் மட்டும் பெண் பார்க்க வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட பேச்சு வார்த்தை முடிகிற நேரத்தில் மணிவாசகன் சொன்னான்.

'மாப்பிள்ளை பெண்ணோடு ஒரு ரெண்டு நிமிஷம் பேசிக்கட்டும். ரெண்டு பேருக்குப் பரஸ்பரம் பிடிச்சிருக் கான்னு கேட்கட்டும்' என்றான்.

அவர்கள் வீட்டில் அதுவரை அந்த வழக்கமில்லை. எல்லாரும் திடுக்கிட்டுப் போனார்கள். ஆனால் அவன் உறுதியாக நின்றான்.

'ஆமா.. பேசி முடிவு பண்ணிக்கட்டும். அப்புறம் ஒருத்தருக்கொருத்தர் பிடிக்கலேங்கற பேச்சு வரக்கூடாது' என்றான்.

இலக்கியா.. சட்டென்று உள்ளே போய் விட்டாள். முகம் வெளுத்துப் போய் விட்டது.

தங்கவேல் மல்லிகாவிடம் நேரடியாகவே கேட்டுச் சம்மதம் பெற்றுக் கொண்டான். அதற்குப் பிறகு சுந்தரின் கலாட்டாதான் பெரிய கலாட்டாவாக இருந்தது.

'யாராவது கல்யாணம் பண்ணிக்கிறியான்னு என்னைப் பாத்துக் கேக்கறீங்களா?' என்று அங்கலாய்த்தான்.

'ஆமடா.. இருபத்தைஞ்சல கல்யாணம் பண்ணிகிட்டு முப்பது வயசுக்குள்ள நாலு வரிசையா நிக்கும்' என்றான் வாகீசன்.

'ஏன் எனக்கும் வாசு அண்ணா மாதிரி ஒரு பொறுப்பான மகன் கிடைக்காமயா... போயிடும்.' என்றான்.

வாகீசனின் மகன் 'சித்தப்பா.. நீயே குழந்தையாம்.. உனக்கெதுக்குக் கல்யாணம்னு அம்மா.. சொல்றாப்ல' என்றான்.

'ஆமாடா.. குழந்தை குழந்தைன்னு சொல்லியே நம்மளுக்குத் துரோகம் பண்றாங்கடா' என்றான் சோகமாக.

மாப்பிள்ளை வீட்டில் போன பிறகு குடும்பத்தினர் எல்லாரும் அமர்ந்து அளவளாவினார்கள்.

மங்கை, திலகம் ஆகியோர் கணவர்கள், வாகீசன் என்று ஆண்கள் எல்லாரும் வட்டமாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்க பெண்கள் முற்றத்துத் திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

இலக்கியா அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அதிகம் பேசவில்லை.

அப்போதுதான் அவளுக்குக் குடும்பம் பற்றிய பல விஷயங்கள் தெரிய வந்தன.

வாகீசன் கடைகளுக்குத் தேவையான சரக்கு எடுப்பது அது தொடர்பான விஷயங்களுக்கு அலைவது என்று இருந்தான். மங்கையின் கணவன் வசதி குறைந்தவன் என்பதால் மணிவாசகன் அவருக்கு வேலை கொடுத்துத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டான்.

வாகனங்கள் மூலமாக சரக்கு சப்ளை செய்வது. அவர்களுக்கு சொந்தமாக இருந்த வாகனங்களைப் பராமரிப்பது



பொள்ளாச்சிதான் அவர்கள் மையமாக இருந்தது. அதோடு கூட பெரிய குடோன் ஒன்று வாடகைக்கு எடுத்து அதில் ஆட்களை வைத்து சரக்குகளை சுத்தம் செய்வதும் பாக்கெட்டுகளில் அடைப்பதும் அவர் பொறுப்பாக இருந்தது.

மணிவாசகன் அப்போது சொன்னான்.

'மச்சான்.. பக்கத்துல ஒரு ஐம்பது ஏக்கர் விலைக்குப் பேசிகிட்டிருக்கேன். அப்படி விலை தகைஞ்சதுன்னா. இங்கயே ஒரு கோடவுன் கட்டிரலாம். அந்தப் பக்கமா ஒரு போர்ஷன் கட்டிக் குடுத்தர்றேன். நீங்களும் வந்தர்லாம்' என்றான்.

குடும்பத்துக்குப் பார்த்துப் பார்த்துச் செய்கிற கண வனைப் பற்றி இலக்கியாவுக்கு முதன் முதலாகப் பெருமையும், பெருமிதமும் மிகுந்தது. ஆனால் ஓரத்தில் வருத்தமும் இருந்தது.

அன்று எல்லோரும் தங்கினார்கள். இலக்கியா பத் மணிவாக்கில் அறைக்குப் போய் விட்டாள்.

பனிரெண்டு மணி வாக்கில்தான் அறைக்கு மே வந்தான்.

வரும்போது அறை இருட்டாக இருப்பதைப் பார்த் விளக்கைப் போட்டான்.

அழுத கண்களோடு கட்டிலில் அமர்ந்திருந்தா இலக்கியா.

'என்ன இலக்கியா?' என்று பதைத்தான். அவள் ஒன் பேசவில்லை.

'அட... என்ன ஆச்சு? எல்லாரும் இன்னைக்கு எவ்வ சந்தோஷமாய் பேசிகிட்டிருந்தோம். நீ சிக்

அவள் அவனை உறுத்துப் பார்த்தாள்.

'என்னைக் குத்திக் காட்டறதுக்குத்தானே அப்படிச் செஞ்சீங்க?' என்றாள்.

'என்ன செஞ்சேன்?'

'பொண்ணும், மாப்பிள்ளையும் பார்த்துப் பேசிகிட்டட்டும்னு.. சொன்னீங்க..? என்றாள்.

'ஓ..!' என்றவன் ஒரு நிமிடம் இறுக்கமான மௌனம் சாதித்தான்.

பிறகு சொன்னான்.

'அது உன்னைக் குத்திக் காட்டறதுக்காக இல்லே.. நம்ம விஷயத்துல நடந்த தப்பு மத்தவங்க விஷயத்துல நடக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான்' என்றான்.

அவள் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தாள்.

அவன் பொறுமையாக.

'ப்ளீஸ்! இலக்கியா.. நான் இன்னைக்கு நல்ல மூட்ல இருக்கேன் கெடுத்துராதே..' என்றான்.

அறைக்குப் போய் விட்டான்.

சற்றுக் கழித்து அவள் அவன் அறை வாயிலில் நின்றாள்.

'என்ன.. இன்னும் கோபம் தீரலையா?' என்றான்.

'தீர்ந்துருச்சு..' என்றாள் கீழே பார்த்து.

அவன் புன்னகைத்தான். 'அசட்டுப் பெண்ணே! எல்லாத்தையும் தப்பான கோணத்துலயா பாக்கறே!' என்றான்.

அவள் தவறு செய்த சிறு குழந்தையைப் போல் நின்றாள். அவள் தொடர்ந்து,

''உங்ககிட்டே ஒன்று சொல்லணும்!'' ...



'சொல்லு!'

'இவ்வளவு பெரிய குடும்பத்தையும் நீங்கதான் தூக்கி நிறுத்தியிருக்கீங்கன்னு எல்லாரும் உங்களைப் பத்திப் பேசறதைக் கேட்டு எனக்குப் பெருமையா இருக்கு!' என்றாள்.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை போலும். அவளை சற்று நேரம் பார்த்தவன் சிரித்துவிட்டான்.

'தாங்க்ஸ்.!' என்றான்.

அவள் நகராமல் நின்றாள். அதை ஸெலிப்ரேட் பண்றதுக்கு 'ஐ வான்ட் டு கிவ் யூ.. எ.. ட்ரீட்!' என்றாள்.

அவன் அருகில் வந்தான். லேசாக வலக்கன்னத்தை ஒரு சுண்டு சுண்டினான்.

'சரி.. அன்னைக்கு உங்க வீட்ல செஞ்சயே.. அது மாதிரி காளான் பிரியாணி பிரிப்பேர் செஞ்சு.. எல்லாருக்கும் ஒரு விருந்து குடு.. நாளைக்கு' என்றான்.

'ம்..!' என்றாள்.

சற்று நேரம் குடும்பத்தவரைப் பற்றியெல்லா அவளிடம் பேசினான். மல்லிகாவின் திருமணம், இருவரு ஆலோசித்தார்கள்.

'மல்லிகாவுக்கு.. ஏதாவது முக்கியமா வேண்டியிரு க்கான்னு கேட்டு செய்றது உன் பொறுப்பு. நகை கடைக்கும் கூட்டிட்டுப் போறது துணி மணி வாங்க உன் பொறுப்பு' என்றான்.

'சரி!' என்றாள் உற்சாகமாக.

'உனக்கும் ஏதாவது வேணும்னா வாங்கிக்கலா என்றான்.

'ஆனா, உனக்கு எது வாங்கும்போதும் தேவகி மதனிக்கும் அதே அளவுக்கு வாங்கிடணும் புரிஞ்சுதா?' என்றான்.

'ம்..!' என்றாள்.

'நான் ஒரு நாளைக்கு உங்ககூட வந்து உங்க கடையெல்லாம் பாக்கலாமா?' என்றாள்.

'பை ஆல் மீன்ஸ்.. நாளைக்கே போலாமா?' என்றான் ஒரு நிமிடம் யோசித்து.

'ஓ.. நாளைக்கு.. விருந்தாச்சே! நாளன்னைக்குப் போலாம்..' என்றான்.

அவன் மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு மகிழ்ச்சியுடன் படுக்கைக்குப் போகையில் அவன் மறுபடி அழைத்தான்.

'இலக்கியா! காளான் பிரியாணி செய். ஆனா, அதுக்காக கரண்டியெல்லாம் வச்சுக்கிட்டு மிரட்டாதே.. என்ன?' என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

'இலக்கியா.. ஒண்ணு சொல்லட்டா?' என்றான்.

'சொல்லுங்க..!' என்றாள்.

'இந்த நாலு மாசத்திலே எத்தனையோ வித விதமான புடவைகள்ல உன்னை நான் பாத்திருக்கேன். ஆனா, அன்னைக்குப் புடவையைத் தூக்கி இடுப்புல செருகிட்டு, முத்து முத்தா வியர்வையோட கரண்டியைப் பிடிச்சுகிட்டு நின்னியே.. அன்னைக்குத்தான் நீ ரொம்ப அழகா இருந்த மாதிரி எனக்கு எண்ணம்' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

'தாங்க்ஸ்!' என்றாள்.

அவன் அவள் அருகில் வந்து நின்று சொன்னான்.



'இலக்கியா! உழைப்புக்கு ஒரு அழகு இருக்கு.. தெரியுமா?' என்றான்.

அவள் என்ன பேசுவதென்று தெரியாமல் நிற்கையில் மறுபடியும் அவள் கன்னத்தைத் தட்டி,

'குட்நைட்.. போ.. போய்த் தூங்கு' என்றான்.

இலக்கியா ஒரு குழப்பமான மனநிலையில் அறைக்குப் போனாள்.

முதன் முறையாகக் கணவன் தன்னைத் தொட்டுப் பேசியிருக்கிறார். கலகலப்பாகப் பேசியிருக்கிறார். ஆனாலும், தொலைவிலும் நிற்கிறார்.

மணிவாசகனும் அங்கே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்

இன்றைக்கு மனைவி இணக்கமான மனநிலையி இருந்தாள் என்பதும் புரிந்திருந்தது. ஆனாலும், தான் ஏ அவளைத் தொடவில்லை.

எந்த முடிவும் தீர்க்கமானதாக இருக்க வேண்டுமென் அவன் உள்மனம் நினைப்பது அவனுக்குப் புரிந்தது.

வியாபாரத்தில் எப்போதும் அவனது முடிவுக தீர்க்கமாகவே இருக்கும். வியாபாரத்திலேயே தீர்க்கம இருக்க வேண்டும் என்று நினைக்கிற அவனுக்கு வாழ்க் பற்றிய முடிவுகளும் தீர்க்கமானதாகத்தான் இரு வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். 'பொறுப்போ பொறுத்துப் பார்ப்போம்' என்று மு செய்து கொண்டான்.

## 7



மணிவாசகன் சுறுசுறுப்ப தயாரானான்.

'என்ன இலக்கியா.. ரெடியா?' என்றான்.

'ம்.. நான் ரெடி?' என்றாள். பிரிஸ்க்காக வந்து நின்றாள்.

அழகான காட்டன் புடவையில் மடிப்புக்கள் எடுத்துத் தோளில் போட்டு, ஏதோ தேவதை போல் நின்றாள்.

அவன் ஒரு நிமிடம் சிரிப்புடன் பார்த்தவன்.

'பரவால்லே! முதலாளியம்மா.. சூப்பரா இருக்காங்க!' என்றான்.

அவள் வழக்கம்போல் 'தாங்க்ஸ்' என்றாள்.

'எங்க போறோம்' என்றாள்.

'முதல்ல.. பொள்ளாச்சியில இருக்கிற ரெண்டு கடைக்கும், அப்புறம் கோயமுத்தூர் கடைகள்' என்றான்.

அநேகமாகப் பன்னிரண்டு மணிவாக்கில் கோயமுத்தூரின் முதல் கடைக்குப் போனார்கள்.

'இலக்கியா, இம்ப்ரூவ்மெண்டுக்கு ஏதாவது கருத்திருந்தா.. சொல்லலாம்.. குறையிருந்தாலும் சொல்லலாம்' என்றான்.

'சரிங்க!' என்றாள். தன் மனத்தில் தோன்றிய கருத்துக்களைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

கோயமுத்தூரில் ஒரு கடையில் குடோன் இருந்தது. அங்கே சரக்கு வேன் வந்து நின்றது.

எப்போதும், எங்கே போனாலும் தன்னை ஆர்வமாகக் ண்கள் தொடர்வது அவளுக்குப் பழக்கம். ஆனால் ல்லாக் கடைகளிலும் ஊழியர்கள் அவளிடம் காட்டிய ல்யம் அவளுக்குப் புதுசு.

கடைகளுக்குள் நுழைந்தவுடனேயே அவன் தோரணையே றிப் போனது.

'தம்பி! அம்மாவுக்குச் சேர் குடு' என்று ஆணையிட்டு ட்டு அவன் இருப்பதை மறந்தவன் போல் அவன்



விஷயங்களை மேற்பார்வை பார்த்ததை அவள் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

சரக்கு எப்போது வந்தது. போனது பற்றிய விவரங்களில் அவன் ஒவ்வொரு கடையின் விவரங்களையும் தெளிவாக நினைவில் வைத்துக் கொண்டிருந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்படி விஷயங்களைக் கவனித்துக் கொண்டு அவர்கள் அந்த குடோனுக்குப் போன போதுதான் அது நடந்தது.

சரக்கு வேன் வந்து நின்றது. இறக்க வேண்டியவர்களில் ஒரு ஆள் எங்கேயோ போயிருந்தான். கடை மேனேஜர் ஏதோ வேலையாக அனுப்பியிருந்தாராம்.

அவன் சட்டென்று சட்டையைக் கழற்றி ஒரு சேரின் மேல் போட்டுவிட்டு,

'கடை உள்ளேயிருந்து யாரையாவது கூப்பிடு' என்றான்.

அவனே லாரியில் ஏறினான். ஒரு கை கொடுக்க ஆரம்பித்தான். அதைப் பார்த்தவுடன் கடை உள்ளேயிருந்த ஆட்கள் ஓடி வந்தார்கள்.

அதற்காக அவன் நின்று விடவில்லை. தொடர்ந்து மூட்டைகளைத் தூக்கிக் கொடுத்தான்.

பதினைந்து நிமிடத்தில் சரக்குகள் காலியாயின. அந்தக் குடோனிலும் அவர்கள் பொருட்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

'இந்தக் கடை சுந்தரோட பொறுப்பு' என்றான், திரும்பி மேனேஜரிடம்,

'சுந்தர் எங்கே போனான்?'

'எங்கயோ ஒரு மணி நேரத்தில் வந்தர்றேன்னு போனாரு..' என்றார்.

அதே நேரம்.. சுந்தர் வந்தான்.

'எங்கடா.. போனே?' என்றான் மணிவாசகன்.

அவன் அண்ணனைப் பார்த்து ஒரு விதமாகக் கண் சிமிட்டிக் கொண்டு,

'அண்ணா.. உன்னோட அந்த விஷயமாப் போனேன்' என்றான்.

'ஓ' என்று அமைதியாகி விட்டான் மணிவாசகன்.

'அப்படியே அம்மா வீட்டுக்கும் ஒரு நடை போலாமா?' என்றாள் இலக்கியா.

போனார்கள். மறுபடியும் புறப்பட்டு மற்ற கடைகளுக்கெல்லாம் போய் விட்டுத் திரும்புகையில் இலக்கியா ஒரு விஷயம் சொன்னாள்.

'ஏங்க.. எங்க அம்மா வீட்டுக்குத் தினம் பால் பண்ணையில இருந்து பால் சப்ளை பண்ணச் சொன்னீங்களா?' என்றாள்.

'இல்லையே!' என்றான்.

'பின்னே.. சுந்தர் நீங்கதான் சொன்னீங்கன்னு சொல்லித் தினம் பால் அனுப்புறாப்லயாம்' என்றாள்.

'நம்ம வீட்டுக்கு மளிகை அனுப்பும்போது அங்கயும் ஏதாவது தேவை இருந்தா அனுப்புன்னேன். அதனால அனுப்பியிருக்கலாம்' என்று அந்த விஷயத்தை லேசாக்கி விட்டான் மணிவாசகன்.

சற்று தூரம் சென்றவுடன் சொன்னான்.

'ஒருவேளை, இந்த அண்ணியைக் காக்கா பிடிச்சாத்தான் நல்லதுன்னு.. தெரிஞ்சுருக்கு போல இருக்கு' என்றான்.

அவள் சிரித்தாள். இப்போதெல்லாம் அது வேண்டுமானாலும் கொழுந்தி, நாத்திகள் அவள் மூலமாகச்



சொல்வதும், அதற்குப் பிறகு அவன் சாங்ஷன் செய்வதும் ஆக ஒரு நாடகம் அந்த வீட்டில் நடந்து கொண்டிருந்தது. இப்படிச் செய்வதன் மூலமாக அவளுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கச் செய்கிறான் என்பது புரிந்தது.

அவள் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வருவதைக் கவனித்த அவன் கேட்டான்.

'என்னவோ கேக்கணும்னு நினைக்கறே. கேளு' என்றான்.

'நீங்களே சடார்ன்னு இறங்கி மூட்டை தூக்கணுமா என்ன?'

'நாங்களே.. என்ன.. நாங்களே! நாங்களும் மனுஷங்க தான். முதலாளி எப்பவும் எந்த வேலையும் செய்யத் தயாரா இருந்தாத்தான். தொழிலாளி சரியா இருப்பான்' என்றான்.

அவள் ஒத்துக் கொண்டாள். ஆனால் அதோடு விடவில்லை.

'அப்புறம்.. அப்புறம்..!' என்றாள்.

'ம்..' என்றான்.

'அதென்ன..? அந்த விஷயம்..னு நீங்களும்.. உங்க தம்பியும்.. பேசிகிட்டிங்களே?' என்றாள்.

அவன் சிரித்தான். 'இங்க பார்.. நான் தண்ணி போடறதில்லே.. நோ சிகரெட் அப்புறம்.. இதுவரைக்கும் எந்தப் பொண்ணையும் தொட்டதில்லே.. கட்டின பெண்ணை உள்பட.. போதுமா..?' என்றான்.

'ஐயய்யோ.. அப்படி நான் கேட்கலே!' என்றாள் பதற்றத்துடன்.

'சரி.. சரி.. பதறாதே! நானே நேரம் வரும்போது சொல்றேன்.. ஆனா.. நல்ல விஷயம்தான்!' என்றான்.

அவள் குறும்பாக சிரித்தாள். 'நானும் மல்லி, ராது மூணு பேரும் அது மாதிரி ஒரு நல்ல விஷயம் ரகசியமா வச்சிருக்கோம். தெரியுமா?' என்றாள்.

'ஹேய்! என்ன அது.. சொல்லேன்!' என்று கெஞ்ச.

'ம்ஹூம்.. இப்ப சொல்ல மாட்டேன்!' என்றாள்.

'சரி.. எப்ப பிரியமோ சொல்லு!' என்றான்.

'அப்புறம் நம்ம கடைகளைப் பத்தி என்ன நினைக்கறே?' என்றான்.

அவள் சொன்னாள். நிறைய கருத்துக்களைச் சொன்னாள். அதைக் கேட்டு அவன் கொஞ்சம் மனம் வாடிப் போனான். ஆனாலும் இலக்கியா கருத்தில் உறுதியாக நின்றாள்.

* * *

'**நா**ளைக்குக் குழந்தைகள் வர்றாங்க' என்றான் மணிவாசகன்.

'குழந்தைகள்னா.. யார்?' என்று எண்ணிக் கொண்டாள். அந்த வீட்டின் செல்லப் பிள்ளையாக வாகீசன் மற்றும் தேவகியின் குழந்தைதான் இருந்தான். 'திலகத்தின் குழந்தைகளைச் சொல்கிறாரோ. மங்கைக்கு இரண்டு வயதில் ஒரு மகன் இருந்தான்.. எல்லாருமாக வருகிறார்கள் போலும்' என்று எண்ணிக் கொண்டாள் இலக்கியா.

குழந்தைகள் வந்தார்கள். வேடிக்கை, என்னவென்றால் ஒரு வேன் நிறைய வந்தார்கள்.

இரண்டு வயதிலிருந்து பன்னிரண்டு வயது வரை இருந்தார்கள். மொழு மொழுவென்று இறங்கிய குழந்தைகளைப் பார்த்து இலக்கியாவுக்கு ஆச்சரியம்.

கணவன் முகத்தைப் பார்த்தாள்.. 'இலக்கியா.. இந்தக் குழந்தைங்க எல்லாம் பக்கத்துல ஒரு இல்லத்துல இருந்து



வந்திருக்கறாங்க. மத்த விஷயமெல்லாம் அப்புறம் சொல்றேன்' என்றான்.

குழந்தைகளுக்குக் காலை உணவு வழங்கப்பட்டது. வயல் முழுவதும் ஓடி விளையாட அனுமதிக்கப்பட்டார்கள். குடும்பத்தினர் எல்லாரும் அவர்களிடம் பிரியமாய் நடந்து கொண்டார்கள்.

குழந்தைகளோடு கூட அந்த இல்லத்தை நடத்தும் நடுத்தர வயதுக்காரர் கிருஷ்ணமூர்த்தியும் வந்திருந்தார்.

அவர் இலக்கியாவிடம் எல்லா விஷயங்களையும் சொன்னார். பொள்ளாச்சியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அரை ஏக்கர் நிலப்பரப்பில் இல்லம் அமைத்திருந்தார்.

இடம் வாங்குவதிலும், கட்டிடம் அமைப்பதிலும் மணிவாசகன் நிறைய உதவி செய்திருந்தானாம். எப்பொழுது தேவை எனக் கேட்டாலும் மளிகை காய்கறி கொடுத்து உதவுவானாம். நல்ல காய்கறி, பழங்கள் அந்தந்த சீசனில் மலிவு விலையில் கிடைக்கும்போது குழந்தை களுக்கும் அனுப்பி வைப்பானாம்.

'மாமா..!' என்று குழந்தைகள் அவன்மேல் புரண்டு விழுந்து பழகுவதை இலக்கியா ஒரு வியப்புடன் கவனித்து கொண்டாள். கிருஷ்ணமூர்த்தியும், அவனும் நண்ப களாம். கிருஷ்ணமூர்த்தி ஒரு விபத்தில் தன் மனைவி யும், குழந்தையையும் இழந்து தவித்தபோது மறு திருமண செய்து கொள்ள மற்றவர்கள் வற்புறுத்தினார்களாம். அ மறுத்து விடவே வாழ்க்கையின் பிடிப்பேற்றுவதற்காக இ ஏற்பாட்டை செய்தது மணிவாசகன்தானாம்.

இலக்கியா நெகிழ்ந்து போனாள். தன் கணவ மனத்தின் அழகு அவளுக்கு முதல் முதலாகப் புரிந்தது.

ஏதோ ஒரு மூன்று வயதுக் குழந்தையை அவன் கொஞ்சுவதைப் பார்த்தவள் அருகில் இடித்தாற் போல் நின்று கொண்டு தானும் கொஞ்சினாள்.

அவன் வியப்பாகப் பார்த்து விட்டு 'இந்தா!' என்று கையில் கொடுத்து விட்டான்.

ராஜப்பன், பொன்மணியம்மா, குடும்பத்தார் எல்லாரும் கூடத்தில் குழந்தைகளோடு கூட அமர்ந்து சாப்பிட்டார்கள். மணிவாசகனே பரிமாறுவதைப் பார்த்த வீட்டுப் பெண்மணிகள் எல்லாரும் உதவிக்கு வந்தார்கள்.

காச் மூச்சென்றிருந்த குழந்தைகளின் சத்தத்தை அவன் அனுமதித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குக் கம்பெனியும் கொடுத்தான்.. மாலை ஐந்து மணிக்கு ஸ்வீட், காரத்தோடு ஹார்லிக்ஸ் குடிக்க வைத்து இரவு டிபனும் கட்டிக் கொடுத்து அனுப்பிவிட்டு அவரவர்கள் தங்கள் இடத்துக்குப் போனார்கள்.

நன்கொடையாளர்கள் ஒவ்வொரு நாள் உணவுக்கும் பணம் கொடுத்து விடுவார்களாம். நான்கைந்து மாதங்களுக்கொரு முறையாவது தன் இடத்துக்கு அவர்களை வரவழைத்து இப்படி உபசரிப்பது அவனுக்குப் பிடித்தமான விஷயமாம்.

குழந்தைகள் வருகிற அன்றைக்கு மட்டும் ஒரு சமையற்காரரை வரவழைத்து சமையல் செய்து பரிமாறுவார்களாம்.

இலக்கியாவின் மனம் ரொம்பவும் இளகிப் போனது. குழந்தைகள் அந்தப் பக்கம் போனதில் இருந்து கணவன் கண்ணில் படவேயில்லை. தேடிக் கொண்டு போனாள்.

தோட்டத்துக்கு நடுவே ஒரு மேடையில் அமர்ந்து இருந்தான்.

'மாமா! என்ன இப்படி உட்கார்ந்துகிட்டிருக்கிங்க?' என்றாள் இலக்கியா.



அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

'இலக்கியா.. இந்தக் குழந்தைங்க.. வந்துட்டுப் போனாலே மனசு கொஞ்ச நேரம் ஹெவியாயிடும். பாவம்.. இவங்க என்ன தப்பு செஞ்சாங்க.. இப்படி அனாதைகளா வளர, கிருஷ்ணமூர்த்தி என்ன தப்பு செஞ்சாரு இப்படி மனைவியையும், குழந்தையையும் இழக்க! இதுக்கெல்லாம் வாழ்க்கை என்ன பதில் வச்சிருக்கு?' என்றான்.

அவளும் மௌனமாக அமர்ந்தாள். அதற்குப் பிறகு அவன் கோபமாகத் திரும்பிப் பார்த்தான்.

'இப்படிப்பட்ட முக்கியமான செலவுகள் இருக்கும் போது கடைகளுக்கு எதுக்கு ஆடம்பர செலவு பண்ணணும் கறே?' என்றான்.

அவள் அவன் கோபத்தை வாங்கிக் கொண்டு அமைதியாக அவனைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

'எதுக்குன்னா.. இப்ப போட்டி நிறைய வந்துட்டிருக்கு.. நாம சர்வைவ் ஆகணும்னா சில மாற்றங்கள் செஞ்சுதான் ஆகணும். ஜவுளிக்கடைகள்ல எதுக்கு அத்தனை அலங்காரம் செய்யறாங்க லைட்ஸ் போடறாங்க. அதெல்லாம் வாடிக்கையாளர்களை இழுக்கத்தான். இழுத்தாத்தான் மேற்கொண்டு வருமானத்தைப் பெருக்க முடியும். இத மாதிரி செலவுகளை மேல மேல செய்ய முடியும்'' என்றாள்

'இப்பவே.. வேணுங்கற லாபம் வருதே.'

'ஆனா.. நிலைமை இப்படியே இருக்காது' என்றாள்.

'சரி.. சொல்லு.. என்னென்ன செய்யலாம்.'

'முதல்ல இந்த பொன்மணி மளிகைக் கடைங்கற பே
பொன்மணி டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸ்னு மாத்தணு
அப்புறம் செல்ஃப் சர்வீஸ் மாதிரி தள்ளு வண்டிக
நிறுத்தணும். ஆட்கள் வேலைக்கு இருந்தாலும், ஜென்ட்

இருந்தாலும் யூனிஃபார்ம் போடணும். பில் சிஸ்டம் கம்ப்யூட்டரைஸ் பண்ணணும்' என்றாள்.

அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

'இப்ப.. நீங்க எவ்வளவுதான் கவனிச்சாலும்.. கொஞ்சமாவது திருட்டு நடந்துகிட்டுத்தான் இருக்கும். எலக்ட்ரானிக் எடை மெஷின்கள் கொண்டு வந்துட்டிங்கன்னா அதையெல்லாம் தடுத்தர்லாம்..' என்றாள்.

அதே சமயம் சுந்தரும் அங்கே வந்தான்.

'என்னடா... உங்க மதினி நிறைய ஐடியாச் சொல்றா..!' என்று ஆலோசித்தான்.

சுந்தர் இதையெல்லாம் கேட்டுவிட்டுச் சொன்னான்.

'மதினிக்கென்னா, ஐடியா குடுத்துட்டு கிட்டுருக்காங்க.. நடத்தரவங்க நடத்தணும் இல்லே.?' என்றான்.

இலக்கியாவுக்கு ரோஷம் கிளம்பியது.

'ஒரே மாசம் எனக்கு ட்ரெயினிங் குடுங்க.. நான் உங்களோட கடைக்கு வர்றேன்.

'சுந்தர்.. அப்புறம்.. ஒரேயொரு ஷோ ரூம்.. மட்டும் எங்களுக்குப் போட்டுக் குடுங்க..' என்றாள்.

அதே நேரம் அங்கே ராதுவும் அண்ணியுடன் சேர்ந்து கொண்டாள்.

'நானும் வர்றேன்.. மதினி, சேர்ந்து நடத்தலாம்' என்றாள்.

'போச்சுரா.. மகளிர் அணியா.. சரி.. யோசிப்போம்' என்றான் மணிவாசகன் சிரித்துக் கொண்டு.

கலகலவெனப் பேசிக் கொண்டு சிறிது நேரம் கழித்து விட்டு அவர்கள் அறைக்குப் போன போது.



'எல்லாத்தையும் மாடர்னாப் பண்ணிட்டே.. என்னை?' என்றான்.

'ஏன்.. உங்களையும்தான். சரின்னு சொல்லுங்க.. உங்களோட டிரஸ் செலக்ஷன் மட்டும் என்கிட்டே விடுங்க.. எப்படி மாத்திக் காட்டறேன் பாருங்க' என்றாள்.

பணிந்தான்.

ஒரே வாரத்தில் அவள் தேர்ந்தெடுத்துக் கொடுத்த ரெடிமேட் உடைகளை அணிந்து கொண்டு 'ரிச்' லுக்குடன் அவன் நடமாடுவதைப் பார்த்த சுந்தர் பிரமித்தான்.

'மதினி.. அண்ணனை எங்கயோ கொண்டு போயிட்டாங்க..' என்றான்.

'பொறுங்க.. பொறுங்க.. உங்க கடையையும் எங்கயோ கொண்டு போயிடறோம்' என்றார்கள் மதனியும் கொழுந்தியும் கோரஸாக.

## 8



இப்போதெல்லாம் வாழ்க்கை ரொம்ப வேகமாக ஓட ஆரம்பித்தது இலக்கியாவுக்கு.

காலை ஆறு மணிக்குக் கீழே இறங்கி வந்தால் எல்லாருக்கும் காலை காபி தயாரித்துக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். அதற்குள்ளாக மாமியார் கீழே இறங்கி வந்து அன்றைக்குத் தயாரிக்க வேண்டிய டிபனைத் திட்டமிடுவார்.

இலக்கியா, தேவகி மற்ற பெண்கள் எல்லாரும் சேர்ந்து டிபன் தயாரித்தால்.. அதற்குள்ளாக வாசீசன் புறப்படுவார். அவருக்கு சாப்பிடக் கொடுக்கிற வேலையை தேவகி பார்த்துக் கொள்ள இலக்கியா மாமனாருக்கு டிபன் கொண்டு போய்க் கொடுப்பாள்.

மாமனாரும், மாமியாரும் நிலம் தொடர்பான வேலைகளைப் பார்க்கவும், பால்பண்ணை மேற்பார்வை செய்யவும் கிளம்பி விடுவார்கள்.

ஏழு மணி வாக்கில் மணிவாசகன் இறங்கி வந்தால் வாகீசனிடம் சற்று நேரம் சரக்கு வாங்குதல், பகிர்ந் தளித்தல், சுத்தம் செய்தல், பாக் செய்தல் பற்றிப் பேசு வார்கள். இந்தப் பேச்சில் சுந்தரும் வந்து கலந்து கொள்வான்.

அவனும் எட்டு மணி வாக்கில் கிளம்பி விடுவான். மணிவாசகன்தான் சற்றுத் தாமதமாகக் கிளம்புவான். ஆனால், அதற்குக் கணக்கு, வழக்குகள் பார்ப்பான்.

காரில் கிளம்புவான். காரை அவன் டிரைவ் செய்வ தில்லை. பெரும்பாலும் காரில் போகிற நேரங்களில் செல்போனில் பேச வேண்டியவர்களுக்குப் பேசிவிடுவான்.

ஞாயிற்றுக் கிழமை நாட்களில் கூட அவன் பிஸியாகத் தான் இருந்தான். இடையில் ஏதாவது ஒரு நேரம் எடுத்துக் கொண்டு சில சமயங்களில் அவளையும் அழைத்துக் கொண்டு சகோதரிகள் வீட்டுக்கு ஒரு விஸிட் அடித்து விடுவான்.

எப்போது போகிறான் என்று தெரியாது. ஆனால் எப்படியும் ஒரு மாதத்துக்கு ஒரு முறையாவது நெருங்கிய வட்டங்களின் வீடுகளுக்கு அவன் விசிட் செய்து விடுகிறான் என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'போன வாரம் தம்பி.. வந்தானா? அவன்கிட்டே கேட்டனா.. வச்சு அனுப்பினான்' என்று மூத்த சகோதரிகள் சொல்வதைக் கேட்கும்போது வியப்பாக இருக்கும்.

தேவகியிடம் சுந்தரும், மணிவாசகனும் ரொம்பப் பிரியம் வைத்திருந்தார்கள் என்பது தெரிந்தது.



சாதுவான வாகீசனுடைய மனைவி தேவகியும் இயல்
பிலே சாதுவாக இருந்தாள். மிக ஏழ்மையான குடும்பத்தில்
இருந்து வந்திருந்தாள். ஆனால் பத்து வருஷங்களுக்கு
முன்னால் அம்மாவும், அப்பாவும் கடைக்குப் போய்
விடுவார்களாம். அவன்தான் இவர்கள் எல்லாரையும்
கவனிப்பானாம்.

தனக்கிருக்கிறதோ இல்லையோ வாசுவுக்கும்,
சுந்தருக்கும் 'வயசுப்பசங்க சாப்பிடணும்' என்று அள்ளிக்
கொடுத்து விட்டு பட்டினி கிடப்பானாம். வாசு கைக்கு
வந்ததற்குப் பிறகுதான் நல்ல சாப்பாடாம். அதற்குப் பிற
இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகுதான் குழந்தையே
பெற்றுக் கொண்டார்களாம்.

ஒரு நாள் தன் கணவன் தன்னிடம் அதையெல்லா
சொன்னபோது இலக்கியாவும் மனம் நெகிழ்ந்து போனா
அதோடு மட்டுமல்லாமல் தேவகியிடம் போய் 'மாப
உங்க மேலே ரொம்பப் பிரியம் வச்சிருக்காங்க' என்று வே
சொன்னாள்.

தன் பங்குக்கு வீட்டிலும் நிறைய மாற்றங்கள் செய்த
இலக்கியா.

அந்தப் பெரிய வீட்டில் இரண்டு பக்கங்கள் பின் பக்
பெரிய பெரிய பாத்ரூம்கள் இருந்தன. அதில் தண்ணியடு
போடச் செய்தாள். வெளியிலிருந்து எரிபொருட்க
உள்ளே தள்ளி விடுகிற மாதிரி ஏற்பாடு செய்து உள்
பெரிய பெரிய பாத்திரங்களைப் பதிக்கச் செய்தாள்.

தோப்பில் இருந்து வருகிற மட்டைகள், பாளைகள்
காய்ந்த விறகுகள் எல்லாவற்றையும் சேகரித்து அடு
செய்தாள். வேலையாட்களிடம் சொல்லி அதிகா
லேயே அடுப்பைப் பற்ற வைத்துக் தண்ணீர் காய வை
செய்தாள்.

பெரிய சுடுதண்ணீர் பாத்திரங்களில் குழாய் பொருத்தி இரண்டு வெளிச்சுவர்கள் வழியாகவும் குழாய்கள் மூலமாக கீழ்த்தளத்தில் எல்லா அறைகளிலும் உள்ள பாத்ரூம்களில் சுடுதண்ணீர் கிடைக்கச் செய்தாள்.

மேலே மொட்டை மாடியில் ஒளியை ஈர்க்கும் சாதனம் பொருத்தச் செய்து சோலார் ஹீட்டர் பொருத்தினாள்.

மணிவாசனுக்கு இதெல்லாம் பெருமைதான். சமைய லறைக்கு காஸ் அடுப்புக்கு சோலார் கேஸ்' பிளாண்ட் ஒன்று போட்டாள். சாண எரிவாயுக் குழாய்கள் அமைத்தாள்..

தென்னை மட்டைகளைச் சீவி துடைப்பங்கள் தயாரித்து விடுவார்கள். வீட்டுக்குத் தேவையான காய்கறிகளை வீட்டுத் தோட்டத்திலேயே தயாரித்தார்கள்.

'எதுக்கு இவ்வளவு சிக்கனம் பண்றே?' 'என்று மணிவாசகன் கேட்டபோது கூட 'சிக்கனமா இருக்க வாங்க.. கஞ்சத்தனமா இருக்கக் கூடாது' என்றாள்.

பால் நிறையக் கிடைக்கிறது என்பதால் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஏதாவது பலகாரம் செய்து வைப்பாள்.

பால் பொருட்களாக பால் அல்வா, பால்கோவா.. குலாப் ஜாமுன் மைசூர்பா என்று எளிதாகத் தயாரித்து வைத்து விடுவாள். மற்றபடி மிக்சர், முறுக்கு என்று கார வகையறாக்கள் மட்டும் கடையில் வாங்குவாள்.

'ஏன்.. அதையும் நீயே செய்துர வேண்டியதுதானே?' என்றான்.

'அதுக்கு நிறைய நேரம் பிடிக்குங்க.. நிறைய ஆட்கள்ங்கறதுனால நிறைய வேற செய்யணும். இப்பல்லாம் சுத்தமா கடையில கிடைக்குதில்லே' என்பாள்.



அவன் நின்று அவளைத் தீர்க்கமாகப் பார்ப்பான். அப்படி அவன் நிற்கும்போது அவன் பார்வையில் என்னென்னவோ செய்திகள் இருக்கிற மாதிரித் தோனும். ஆனால் குடைந்து கேட்டால்,

'அப்படியெல்லாம் ஒன்னும் இல்லையே என்று சொல்லி விட்டால் என்ன செய்வது?' என்ற பயத்திலேயே மேற்கொண்டு கேட்க மாட்டாள். நகர்ந்து விடுவாள்.

இந்த ஆறு மாதத்திற்குள்ளாகவே தங்களுக்குள் ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடைபெறுவது இருவருக்குமே தெரிந்தது. ஆனால், இருவருக்குமே அதைப் போட்டு உடைக்கத் தைரியம் வரவில்லை.

* * *

அன்றைக்குப் பிற்பகல்!

மணிவாசகனுக்குச் சற்று ஓய்வெடுத்தால் தேவலை போல் இருந்தது.

வீட்டுக்குப் போனான்.

வீடு அமைதியாக இருந்தது. தேவகி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள்.

மல்லிகா, ராதிகா, இலக்கியா ஒருவரையும் காணவில்லை. தேவகி அவன் வருகையைப் பார்த்து எழுந்து வந்தாள்.

பெரும்பாலும் பகல் உணவுக்கு அவன் வீட்டுக்கு வருவதில்லை. காலையில் புறப்படும் போதே ஹாட் பாக்கில் வைத்துக் காரில் அனுப்பி விடுவார்கள். அவன் எந்தக் கடையில் வசதியோ அங்கே வைத்து சாப்பிட்டு விடுவான்.

அவன் வருகையை வீட்டில் எதிர்பார்ப்பதில்லை. இப்போதெல்லாம் இரவு நேரத்தில் அவன் வருகைக்காக

இலக்கியா காத்திருக்க ஆரம்பித்தாள். அவன் வந்ததுக்குப் பிறகு அவனுக்குப் பரிமாறி சாப்பிட வைத்து விட்டுத்தான் அவள் சாப்பிட்டாள். அதற்காகவே அவன் ஒன்பது மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுவான்.

இங்கிதம் அறிந்து மற்றவர்கள் அவர்களுக்குத் தனிமை கொடுப்பார்கள். ஒரு விஷயத்தில் மணிவாசகனுக்கு மனைவியை குறித்துப் பெருமை.

நேரத்தைத் திட்டமிடுதலில் அவள் தன்னைக் காட்டிலும் கெட்டிக்காரியாக இருந்ததுதான். பிற்பகல் நேரத்தில் கூடத் தங்கைகளுக்குக் கோலம் போடக் கற்றுக் கொடுப்பது டிராயிங் போடக் கற்றுக் கொடுப்பது என்று நேரம் செலவழிக்கிறாள். இல்லாவிட்டால் சற்று நேரம் சீட்டு விளையாடுவது, தாயம் விளையாடுவது ஆடு புலி ஆட்டம் என்று சற்று நேரம் கழிப்பார்களாம். கேள்விப்பட்டான்.

'மதினி.. எங்கே மங்கையர் படையைக் காணோம்' என்றான்.

'ஐயய்யோ.. வந்துட்டீங்களே! உங்களுக்குத் தெரியாம சர்ப்ரைஸா வக்கச் சொன்னாங்களே!' என்றாள் தேவகி.

'அடடா! என்னத்தைப் பெரிய சஸ்பென்ஸ். அவளும் என்னவோ சஸ்பென்ஸ்ங்கறா.. நீங்களும் இப்படிச் சொல்றீங்க..!' என்றான் மணிவாசகன்.

'கொஞ்ச நேரத்தில் வருவாங்க பாருங்க தெரிஞ்சுக்குங்க..' என்றவள், சாப்பிட்டீங்களா' என்றாள்.

'இல்லை, இனிமேத்தான்!' என்றான்.

உடனே தேவகி பரபரப்பாக எல்லாவற்றையும் சூடு செய்து கூட அப்பளம் வைத்துப் பரிமாறினாள்.

சாப்பிட்டு விட்டு உடனே தூங்க வேண்டாம் என்று எண்ணிக் கொண்டு போர்ட்டிகோவில் நியூஸ் பேப்பரை விரித்துக் கொண்டு அமர்ந்தான் மணிவாசகன்.



'என்ன அந்த சஸ்பென்ஸ்!' என்று அறிந்து கொள்ள.

கொஞ்ச நேரத்தில் அது உடைந்தே போனது.

* * *

ஒரு மணி நேரம் போயிருக்கும் மூன்றரை மணி வாக்கில் கார் ஒன்று உள்ளே வந்தது.

ஏதோ 'டிரைவிங் ஸ்கூல்' போர்டு இருந்தது. அவன் பார்க்கையிலேயே தெரிந்தது. காரை இலக்கியா ஓட்டிக் கொண்டு வந்தாள்.

'ஓஹோ! இதைத்தான் சஸ்பென்ஸ் என்றார்களா!' என்று எண்ணிக் கொள்கையிலேயே இலக்கியா காரை நிறுத்த மல்லிகா, ராதிகா பின் சீட்டிலிருந்து இறங்கினார்கள்.

'ஐயய்யோ.. போச்சு.. அண்ணனுக்குத் தெரிஞ்சுடுச்சு..' என்று இருவரும் சிரிக்க,

'இதைத்தான்.. பெரிய சஸ்பென்ஸ்ன்னு சொன்னயாக்கும்..' என்று சிரித்தான் மணிவாசகன்.

'ஆமா.. ண்ணே எதுக்கெடுத்தாலும் அங்கே போகணும். இங்கே போகணும் கார் அனுப்புங்கன்னு போன் பண்றதுக்கு.. இப்ப நாங்களே கார் ஓட்டிக்குவமில்லே.. செல்ஃப் டிப்பண்டன்ஸ்' என்றார்கள்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசிவிட்டு மனைவியுடன் மேலே வந்தான்.

அவள் கவலையுடன் பார்த்தாள். 'என்னங்க.. ஆச்சு.. சீக்கிரம் வந்துட்டீங்க?' என்றாள்.

'ஒன்றும் இல்லடா. ஒவ்வொரு நாளைக்குக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தாத் தேவலைன்னு தோணும்.. அதான் வந்துட்டேன்!' என்றான் மணிவாசகன்.

'ஓ..! அப்பக் கொஞ்சம் தூங்குங்க' என்றாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது கணவனைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் அன்றைக்கு சொன்னது சரிதான். 'உழைப்புக்கு என்று ஒரு அழகு இருக்கிறது' என்றெண்ணிக் கொண்டாள்.

கோடவுனில் சட்டென்று சட்டையைக் கழற்றி வீசி விட்டு மூட்டையைத் தூக்க அவன் இறங்கியதை எண்ணி இப்போதும் அவளுக்கு ஆச்சரியம்தான்.

அன்றைக்குத்தான் அவனை வெறும் பனியனோடு பார்த்தது. உறுதியான உடம்பு வாகு. பலம் வாய்ந்த தோள்கள் என்று பார்த்தும் பாராமலும் நின்றாள்.

இப்போதெல்லாம் அடிக்கடி அவன் பெருமைகளை நினைத்துக் கொள்கிறோம் என்று தோன்றியது.

அவளும் தன்னறையில் போய் சற்று நேரம் படுத்தாள். கீழே ஏதோ பரபரப்பாக சத்தம் கேட்கும் வரை அவளும் உறங்கினாள்.

* * *

**எ**ல்லாரும் தேவகியைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

தேவகி சேரில் சாய்ந்தாற் போல் அமர்ந்து இருந்தாள்.

'என்னமோ தலை சுத்தற மாதிரி இருந்துச்சு' என்றாள்.

உடனே 'ஜூஸ் குடுங்க! மோர் குடுங்க! முதல்ல தண்ணி குடுங்க' என்று ஆளாளுக்கு உபசரித்தார்கள்.

பொன்மணியம்மாவுக்கு மனதில் ஏதோ சந்தேகம் தோன்ற நாடி பிடித்துப் பார்த்தார். உடனே முகம் மலர்ந்தது.



வாசீசனின் மகன் சரவணனைக் கையில் ஏந்திக் கொண்டு சொன்னார்.

'டேய்.. உனக்குத் தம்பியோ தங்கச்சியோ வரப் போறாங்க! என்று.

'வீடே குதூகலத்தில் ஆழ்ந்தது. சத்தம் கேட்டு மணிவாசகன் இறங்கி வந்தான்.

'வா.. நல்ல செய்திப்பா..' என்று பொன்மணியம்மா மகிழ்ச்சியாகச் சொன்னார்.

மணிவாசகன் மகிழ்ச்சி போலக் காட்டிக் கொண்டாலும் அவனது முகத்தில் ஏதோ கவலை மேகம் சூழ்ந்தாற் போல் தெரிந்தது.

ராஜப்பனும், அவனும் போர்ட்டிகோவுக்குப் போவதைப் பார்த்த இலக்கியா பின்னாலேயே போனாள்.

'இதுக்குத்தாம்ப்பா.. அப்பவே உள்ளதைச் சொல்லீரலாம்னு சொன்னேன். நீதான் நேரடியாய் சொல்ல வேண்டாம். ஜோசியம்னு சொல்லிடுவோம் அப்படீன்னே' என்றான் மணிவாசகன் கோபமாக.

'நான் என்னத்தைடா கண்டேன்.. ஜாடை மாடையாச் சொன்னா புரிஞ்சுக்குவாங்கன்னு நினைச்சேன்.'

இலக்கியா மெதுவாக அருகில் போனாள். 'என்னங்க விஷயம்?' என்றாள்.

'இல்ல இலக்கியா. இவரு பொறந்தப்பவே டாக்டர்ஸ் ரொம்ப எச்சரிக்கை பண்ணினாங்க. மதனிக்கு யூட்டரஸ் ரொம்ப வீக்கா இருக்கு. அடுத்த குழந்தை உண்டாகாம இருக்கறது நல்லதுன்னு. நான் அப்பவே விஷயத்தை சொல்லிடலாம்னு சொன்னேன். அப்பாதான் வேண்டாம்டா.. மனசு வருத்தப்படுவாங்க.. இனியொரு சொல்லுவோம்னார். நானும் அப்படியே சொன்னேன்.. ஆனா.. இப்ப.. என்ன

செய்யறதுன்னு தெரியலியே..' என்றான் மணிவாசகன் கவலையாக.

இலக்கியாவும் கவலையடைந்தாள்.

'வீட்ல ஒருத்தருக்கும் தெரியாதா?' என்றாள்.

'ம்ஹூம்.. ஒருத்தருக்கும் தெரியாது' என்றான் மணிவாசகன்.

'ஓ..!' என்று யோசித்தவள் 'எதுக்கும் செக் அப் அழைச்சுட்டுப் போவோம். அங்க வச்சு டாக்டரை அட்வைஸ் செய்ய வைப்போம்..' என்றாள் இலக்கியா.

அப்போதே டாக்டர் மிகவும் கடுமையாகவே எச்சரித்தார் 'ரொம்ப சிக்கலான விஷயம்' என்றார்.

இலக்கியா மாமியாரிடம் விஷயத்தைச் சொன்னாள். அவரும் டாக்டரிடம் ஆலோசனை கேட்டார். பிறகு தேவகியிடம்,

'கண்டிப்பா.. ரெஸ்ட்ல இருக்கணுமாம். மனதை அலட்டிக் கொள்ளக் கூடாதாம்' என்று மட்டும் சொன்னார்கள்.

தனியாக அமர்ந்திருக்கும்போது மிகவும் கவலையுடன் காணப்பட்ட கணவனிடம் சொன்னாள்.

'வொரி பண்ணிக்காதிங்க.. மாமா.. நானோ.. யாராவது ஒருத்தரோ.. கூட எப்பவும் இருக்கற மாதிரிப் பாத்துக்கறேன்' என்றாள்.

'கல்யாண வேலைகளையெல்லாம் வேற இருக்கே?' என்றான் மறுபடியும் கவலையுடன்.

'நான்தான் சொன்னேனே.. சமாளிப்போம்னு. கண்டிப்பா.. நான் பாத்துக்கறேன்' என்றாள்.

அவன் முகம் தெளிவானது கண்டு மகிழ்ச்சியடைந்தாள்.



அவனது உணர்வுகளில் ஏற்படும் சின்ன மாற்றங்கள் கூடத் தன்னை வெகுவாகப் பாதிப்பதை உணர்ந்தாள்.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.



## 9

'மல்லிகாவின் திருமணத்திற்குப் புடவை எடுக்கக் காஞ்சிபுரமே போய் விடலாம்' என்றார் மாமியார்.

இலக்கியாவுக்கும் அது சரியென்றே பட்டது. 'கொண்டான், கொடுத்தான் வீடுகளில் சம்பந்திகள் சகோதர சகோதரிகள் எல்லாருக்கும் துணிமணிகள் எடுக்க வேண்டுமாம். அது அவர்கள் வழக்கமாம்.

இலக்கியா அதற்குள் கணவனிடம் சொன்னாள். எதற்கும் தேவகியக்காகிட்டே உண்மையைச் சொல்லிர லாம்ங்க..' என்றாள்.

வெகுவான தயக்கத்திற்குப் பின் சொன்னார்கள் அவளே சொன்னாள்.

'அக்கா' யூட்ரஸ் ரொம்ப வீக்கா இருக்காம். ரொம்பக் கேர்ஃபுல்லா இருக்கணுமாம்' என்று.

'தேவகியோ' கல்யாணம் வேற இருக்கே' என்று கவலையில் ஆழ்ந்தார்.

'அக்கா.. கவலைப்படாதீங்க.. நீங்க இங்க இருந்துகிட்டே எதெது எப்படி செய்யணும்னு சொல்லுங்க.. நான் நடத்திடறேன்' என்றாள். ஆனால் வேறொரு பிரச்சினை முளைத்தது.

'நாம அங்கயும், இங்கயும் அலையும் போது எதுக்கும் யாராவது கூட இருக்கணுமே' என்று.

இலக்கியா தேவகியின் அம்மாவை அழைத்து வந்து விடலாம் என்றாள்.

தேவகிக்குத் தந்தை இல்லை. தாய் மட்டும்தான். தேவகியின் தாத்தா பெரிய குடும்பமாம். வசதியாக இருந்தார்கள். ஆனால், அவரது காலத்திலேயே எல்லாம் தொலைத்து விட்டாராம். தேவகியின் அப்பா காலத்தில் சராசரிக் குடும்பம்தான். ஆனாலும் பெரிதாக கௌரவம் பார்ப்பார்களாம்.

இலக்கியாவே தேவகியின் கிராமத்துக்குப் போனாள். சுந்தரையும் அழைத்துக் கொண்டு, தேவகியின் சகோதரனிடம் பேசி தேவகியின் அம்மாவை, தங்கம்மா என்று பெயர் அழைத்து வந்தாள்.

சுந்தர் வந்து அண்ணனிடம் கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

'அண்ணா, மதினி எங்க போனாலும் டைரக்ட் அட்டாக்தான். நேரா சமையலறை போய் தேவகி மதினியோட தம்பி வைஃப்க்கு ஐஸ் வச்சாச்சு. எவ்வளவு படிப்பு ஆனா எவ்வளவு யதார்த்தம்னு அந்த அம்மா விழுந்தாச்சு. அப்புறம் என்ன மேலிடமே சம்மதம் குடுத்தா.. அந்த ஆள் என்னத்தை செய்ய முடியும்? தங்கம்மா அத்தையை பேக் பண்ணிகிட்டே வந்தாச்சு' என்றான்.

மணிவாசகன் அமர்த்தலாகச் சிரித்தபடி மனைவியைப் பார்த்தான்.

'ஆமா, உங்க தம்பிக்கு என்ன வேலை?' என்று அவளும் சிரித்துக் கொண்டாள்.

காஞ்சிபுரம் செல்வதையே ஒரு பிக்னிக் போல ஆக்கிக் கொண்டார்கள்.

ஒரு ஸ்வராஜ் மஸ்டா பிடித்தார்கள். முப்பத்தைந்து பேருக்கு மேல் போனார்கள். இனியாவையும், இத



யாவையும் கூடக் கூப்பிட்டுக் கொண்டார்கள். மல்லிகாவும் வந்தாள். ராதிகாவும், இதயாவும் நெருங்கிய தோழிகளாகி விட்டார்கள்.

இளம்பெண்கள் எல்லாரும் பின்பக்கம் அமர்ந்து கொண்டு கிளுகிளுவென்று சிரித்துக் கொண்டு வந்தார்கள்.

பெரியவர்கள் முன்னாலே இதைக் கண்டு கொள்ளாதவர்கள் போல் அமர்ந்து கொண்டார்கள்.

மணிவாசகன் சென்னை போயிருந்தான் அங்கிருந்தே வந்து சேர்ந்து கொள்வதாக ஏற்பாடு.

அவர்கள் கடைக்குப் போவதற்குப் பிறகுதான் தெரிந்தது மாப்பிள்ளை வீட்டாரும் வந்திருக்கிறார்கள் என்று.

மாப்பிள்ளை, பெற்றோர், சகோதரி என்று அவர்கள் அளவாக வந்திருந்தார்கள்.

'ஆமா.. அவங்க சின்னக் குடும்பம்.. அளவா வந்தாங்க.. நம்ம வீட்டுல எல்லாருக்கும் கல்யாணம்னா நாம பஸ்ல இல்லல்லே.. ஸ்பெஷல் ரயில் பிடிச்சுத்தான் வரணும். அண்ணே! எதுக்கும் ரயில்வே மந்திரி யாருன்னு அப்பப்பத் தெரிஞ்சு காக்கா பிடிச்சுக்க.. இந்தக் கூட்டத்துக்கு கன்செஷன்ல வந்தாத்தான் கட்டுப் படியாகும்' என்று கலாட்டா செய்தான் சுந்தர்.

எல்லாம் சிரித்துக் கொண்டார்கள்.

'பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் முகூர்த்தப் புடவை நிச்சயப்புடவை எடுத்தார்கள். பிறகு வீட்டுப் பெண்களுக்கெல்லாம் ஒரே கறை பார்டரில் ஆனால் நிறங்கள் மட்டும் வேறாய் எடுத்தார்கள்.

'அண்ணா! கஷ்டப்பட்டு சிரி.. உப்புல பருப்புன்னு நீ சம்பாதிச்ச லாபமெல்லாம் பாரு இப்படிப் பெரிய பெரிய பார்டர்ல கரையுது' என்று சோகம் போல் நடித்தான் சுந்தர்.

'டேய்! சம்மந்தார் இருக்காங்க சீரியஸா எடுத்துக்கப் போறாங்க' என்று எச்சரித்த பிறகுதான் அடக்கி வாசிக்க ஆரம்பித்தான்.

'அத்தான்.. இதென்ன சின்னத்தான் இப்படிப் பஞ்சப் பாட்டுப் பாடறாரு..' என்று வம்பிழுத்தாள் இனியா.

அதே சமயம் 'கலர் பிடிச்சிருக்கா.. பாருங்க' என்று வந்தாள் இலக்கியா.

மணிவாசகன் வியப்பாய் மனைவியைப் பார்த்தான். 'உனக்குப் பிடிச்சா.. சரிம்மா!' என்றான்.

'இல்லே! நானும் தேவகியக்காவும், ஒரே மாதிரிக் கட்டப் போறோம்.. ரெண்டு பேர் நிறத்துக்கும் பொருத்தின மாதிரி இருக்கா.. பாருங்க!' என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'மாம்பழக் கலர்தானே! எல்லாருக்குமே சூட் ஆகும்.. எடு' என்றான்.

அதே நேரம் இன்னொன்றையும் கவனித்தான். 'ஒரு புடவையை செலக்ட் செய்து வைத்த இனியா மற்றவர்கள் அறியாமல் சுந்தரைப் பார்த்து 'நல்லா இருக்கா?' என்று கண்ணால் கேட்பதையும், அவன் 'நன்றாக இருக்கிறது' என்று கண்ணால் சம்மதம் அளிப்பதையும் கவனித்தான். ஆனால் அப்போதைக்கு அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

* * *

மல்லிகாவின் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பொள்ளாச்சியில் நடத்தினார்கள். தேவகியை முகூர்த்த சமயம் மட்டும் காரில் அழைத்து வந்து பிறகு கொண்டு போய் வீட்டில் விட்டார்கள்.

இலக்கியாதான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டாள்.



'வாங்க!' என்று முக மலர்ச்சியாக எல்லாரையும் வாய் நிறைய அழைத்து ஒவ்வொரு உறவினர் குடும்பத்திலும் வராதவர்களைக் குறிப்பிட்டு 'அவங்க வர்லியா?' என்று விசாரித்து மாப்பிள்ளை வீட்டாரை நன்கு உபசரித்து தனது அம்மாவின் மற்றும் மாமியாரின் ஆலோசனைகளுடன் சடங்குகளைச் சரியாக செய்து.. என்று எல்லாரையும் அசத்தி விட்டாள்.

'யாரு! மணிவாசகன் பொண்டாட்டியா? வாக மாதிரியே எல்லாத்தையும் இழுத்துப் போட்டுக்கிட்டு செய்யறாப்பா.. அருமையான பொண்ணு' என்று எல்லாரும் பாராட்டுவதைப் பெருமையுடன் கேட்டுக் கொண்டான் மணிவாசகன்.

பொன்மணியம்மா கூட 'விஷயம் எதுவாக இருந்தாலும் இலக்கியாவைக் கேளுங்க' என்கிற மாதிரி நடந்து கொண்டாள்.

'என்னங்க.. மாமா! இது என்ன செய்யலாம் அது செய்யலாமா?' என்று அவ்வப்போது ஆலோசனை வேறு.

சுந்தரே கூட அசந்து போனான்.

'அண்ணா! மதினிதான் இந்தக் கல்யாணத்துல ஹீரோயின்' என்றான்.

மணிவாசகன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான்.

வழக்கம் போல் சுந்தரும், இனியாவும் எதிர்க் கட்சிக் காரர்கள் என்று கலாட்டா வேறு செய்தார்கள்.

'எங்க பொண்ணை என்னன்னு நினைச்சீங்க?' என்று சுந்தரும்.

'எங்கண்ணனை என்னன்னு நினைச்சீங்க?' என்று இனியாவும் செய்த கலாட்டாவில் இளைஞர் வட்டம் சிரித்து மகிழ்ந்தது.

திருமணம் முடிந்த பின் மாப்பிள்ளை அறைக்கு அழைத்துச் சென்று பால் பழம் கொடுத்தார்கள்.

'நீங்க வேண்ணா மாலையைக் கழற்றி வச்சுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க' என்றாள் இலக்கியா.

மல்லிகா மாலையைக் கழற்றி ஒரு ஸ்டாண்டில் மாட்டுகிற அதே வேளையில் தங்கவேலும் தன் மாலையை கழற்றி மல்லிகாவை உரசினாற் போல் நின்றபடி மாட்டினான்.

உடனே இலக்கியா 'சரி.. நான் அப்புறம் வர்றேன்' என்று முன்னால் போக.. அதே நேரம் மணிவாசகன் ஏதோ கேட்க வந்தான்.

இலக்கியா அவன் கைபிடித்துத் தடுத்தாள். முகம் சிவந்து போனது. அவன் கேள்விக் குறியாய்ப் பார்க்க.

'அங்கே! மாப்பிள்ள ஏதோ ஃப்ரீயாப் பேசிட்டிருக்காரு' என்றாள்.

அவன் அவளைப் பார்த்தான். ஒரு நிமிட இடைவெளி விட்டு இருவரும் சத்தமெழாமல் சிரித்தார்கள். அதே நேரம்!

மல்லிகாவிடம் தங்கவேல் இழைந்து கொண்டு நின்றான். அவன் கைகள் வளைக்க மல்லிகா,

'என்ன இது கல்யாண மண்டபத்துல..' என்று தவிக்க..

'சரி.. அப்புறம்.. தனியா இருக்கும் போதுங்கறியா!' என்று சிரித்தான்.

அதே நேரம் மணிவாசகன் 'முக்கியமான.. விஷயம்.. பேசணும் இலக்கியா?' என்றான். தொண்டையைச் செருமி எச்சரிக்கை செய்து ஒரு நிமிடம் இடைவெளி கொடுத்து உள்ளே நுழைந்தான்.

* * *



பிற்பகலில் மாப்பிள்ளை வீட்டுப் பெண்ணை அனுப்பி விட்டு எல்லாரும் விச்ராந்தியாக அமர்ந்திருக்கையில் ராசப்பன் மனைவியிடம் சொன்னார்.

'பரவால்லே.. நம்ம இலக்கியாப் பொண்ணு.. மணிவாசகன் மாதிரியே பொறுப்பு..' என்றார்.

'ஆமாங்கறேன்.. அதுலயும்.. ரொம்பக் கெட்டிக்காரியா இருக்கறா. நான் கூட எல்லாத்தையும் முன்னாடி நின்று செய்யறாளே.. எங்கே ரொம்ப அதிகாரம் பண்ணு வாளோன்னு நினைச்சேன். ஆனா.. திலகத்துகிட்டயும், மங்கைகிட்டயும் ஏங்க்கா.. அடுத்து என்ன செய்ய ணுங்க'ன்னு கேட்டுக்கறா. அவங்களையும் முன்னாடி நிக்க வச்சு செய்ய வேண்டியதைச் செய்யறா..' என்றார் பெருமையாக.

எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்து விட்டோம் என்பதை அறியாதவளாகவே இலக்கியா நடமாடிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கும் இந்தத் திருமணத்திற்கு முன் ஒரு மகிழ்ச்சி கரமாக அதிர்ச்சி கொடுத்திருந்தான் மணிவாசகன்.

பத்திரிகையில் மணிவாசகன் 'எம்.காம்.' என்று போட்டிருந்தது.

இலக்கியா ஆச்சரியமாக அவனிடம் போய்க் கேட்டாள்.

'நம்ம.. கல்யாணத்தப்பவே நான் எக்ஸாம் எழுதி முடிச்சுட்டேன். ஆனா, சஸ்பென்ஸா வச்சிருந்தேன்' என்றான்.

அவள் மலைப்பில் என்ன பேசுவதென்று தெரியாம நின்றாள்.

'உட்காரு!' என்று எதிர்சோபாவில் அமரச் செய்தான்

'என்னால மாத்த முடிந்த ஒரு விஷயம்.. குவாலிஃபி கேஷனை அதிகம் பண்ணிக்கறது செஞ்சேன்' என்றான்.

'என்னால் மாத்த முடியாதது என் நிறம்' என்று அவன் சொல்லாமல் சொல்வது போல் இருந்தது.

'நம்ம கல்யாணப் பேச்சப்பவே சொல்லியிருக்கலா மில்லே!' என்றான்.

'ரிசல்ட் வராம எப்படிச் சொல்றது? இப்பக் கூட போட வேண்டாம்டான்னுதான் சுந்தர்கிட்டே சொன்னேன். ஆனா, வீட்ல யாரும் ஒத்துக்கலை. உனக்காகத்தான் ஒத்துகிட்டேன்' என்றான்.

இலக்கியா தலை குனிந்து கொண்டாள்.

'தான் அவனை அவமானப்படுத்தியதற்காக அவன் வார்த்தைகளால் அல்லாமல் செயல்களாலேயே பழி வாங்குகிறாற் போல் உணர்ந்தாள். 'ஆனால் அந்தப் பாயிண்டில் கூட.

'உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது' என்று சொல்லத் துணிவு வரவில்லை. ஆனால் அவள் மனம் வேறு விதமாத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விழைந்தது போலும்.

'இது என் குடும்பம் என்று நினைக்கிறேன் பார்' என்பது போல் எல்லாவற்றையும் அலைந்தலைந்து செய்தாள்.

அந்த 'மெசேஜை' அவன் புரிந்து கொண்டானோ இல்லையோ காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவன் குடும்பம் புரிந்து கொண்டது.

மடங்காக அவர்கள் அவளுக்குத் திருப்பிக் கொடுக்கத் தயாரானார்கள்.

* * *



'இலக்கியா!' என்று வந்து நின்றான் மணிவாசகன்.

'என்னங்க.. மாமா!' என்றாள்.

'இன்னைக்கு நாம எங்காவது வெளியே போலாம்.. வா!' என்றான்.

போனார்கள்.

மல்லிகாவின் திருமணம் முடிந்து பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது.

தேவகி ஓய்வில் இருப்பதால் இலக்கியாவுக்கு வீட்டில் மேற்பார்வை வேலை கூடுதலாகவே இருந்தது.

'எங்கே.. போகலாம்?' என்று அவன் கேட்டபோது அவள் சொன்ன இடம் ஆச்சரியமாகவே இருந்தது.

'ஒரு இலக்கிய விழா.. பொள்ளாச்சில நடக்குது.. போலாமா?' என்றாள்.

போர்னார்கள். பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என்றும் நாள் முழுதும் நடந்தது. இடைவெளியில் பக்கத்தில் ஒரு ஹோட்டலில் பகலுணவு உண்டார்கள்.

ஒரு தொழிலதிபராக அவனைப் பலர் அறிந்திருந்தார்கள்.

'நீங்க.. எங்கே.. சார், இங்க எங்க வந்தீங்க?' என்றார்கள்.

'என் வைஃப்க்கு இதெல்லாம் ரொம்ப இன்ட்ரஸ்ட்' என்றான். அவள் அந்த இலக்கியப் பேச்சுக்களை ரசிப்பதைப் பார்த்து அவனும் ரசித்துக் கொண்டிருந்தான்.

அரட்டை கூட அடித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். அப்போது சொன்னான்.

'இலக்கியா.. மல்லிகா மேரேஜ்ல பொளந்து கட் டிட்டே... அதுக்கு.. உனக்கு நான் பரிசு குடுத்தே ஆகணும் எனக்கு ஆசை. என்ன வேணும் சொல்லு' என்றான்.

'அப்படி நான் என்ன செஞ்சேன்? தேவகிக்கா ரொம்ப ஃபீல் பண்ணினாங்க. நான் அக்காகிட்டே நான் எல்லாத்தையும் பாத்துக்கறேன். கவலைப்படாதீங்கன்னு.'

'அவ்வளவுதானே' என்பது போல் பார்த்தாள்.

'அப்புறம்.. நீங்க.. என்ன சந்தோஷப்படுத்தறதுக்காக குவாலிஃபிகேஷன் இம்ப்ரூவ் பண்ணிக்கலையா? அது மாதிரி.. நானும்.. ஒரு குடும்பத் தலைவியா இம்ப்ரூவ் பண்ணிக்க முயற்சி செஞ்சேன்' என்றாள்.

அவன் சிரித்தான்.

'சரி.. விடு.. இப்ப உனக்கு ஒரு செட் நகை வாங்கிக் குடுக்கறதாம். அம்மா.. அப்பாவோட ஆர்டர்' என்றான்.

அவள் வேறெங்கோ பார்த்தாள். 'பிறகு' நகை வேண்டாம். பத்துப் பதினைஞ்சு பவுன் நகை வாங்கறதுக்கு பதிலா.. ஒரு செகண்ட் ஹாண்ட் கார் வாங்கிக் குடுங்க.. ஃபாமிலிக்கும் யூஸ் ஆகும்.. நகையை வாங்கி என்ன செய்ய..' என்றாள்.

'புதுக்காரே வாங்கித் தர்றேன்.'

'வேண்டாம்.. நல்லா ஓட்டிப் பழகினதுக்கப்புறம்.. புதுசு வாங்கிக்கலாம்.'

'வர வர.. ரொம்ப சென்சிபிள் ஆயிட்டே' என்றான். சிரித்தான்.

அடுத்த வாரத்திலேயே வாங்கிக் கொடுத்தான்.

குடும்பம் முழுதும் அவர்கள் ஒற்றுமையாக இருப்பதாக நம்பும் வகையிலே மிகவும் நட்புடன் இருந்தார்கள்.

அடுத்த பிரச்சினை எழும் வரை.



## 10



'ஹல்லோ! வீட்ல யாருமில்லையா?' என்று எட்டிப் பார்த்தான் சுந்தர். இனியா குரல் கேட்டு வெளியே வந்தாள்.

'வாங்க.. மாமா.. வாங்க' என்று வரவேற்றாள்.

சுற்று முற்றும் பார்த்து விட்டு 'ஒருத்தரும் இல்லையோ?' என்றான்.

'இல்லை!' என்றாள். 'உட்காருங்க..' என்றாள்.

'அமர்ந்தான்.'

அன்றைக்கு வேறு ஏதோ வீட்டு விசேஷம் இதயா, அப்பா, அம்மா எல்லாரும் அங்கே போயிருந்தார்கள். சுந்தரும் அந்தத் திருமணத்திற்குப் போயிருந்தான். அங்கே இனியா வரவில்லையென்பதைக் கவனித்து விட்டுத்தான் சுந்தர் வந்திருந்தான்.

'என்ன, இனியா? கல்யாணத்துல உங்களைக் காணலை' என்றான்.

'குடும்பத்துல அத்தனை பேரும் வர்லைன்னா என்னங்க.. மாமா. அதான் அப்பா, அம்மா இதயா எல்லாரும் வந்திருந்தார்களே' என்றாள்.

'அது கரெக்ட்டுத்தான்.. நீ வர்லேன்னவுடனே.. எங்க உடம்பு இடம்பு சரியில்லயோன்னு நினைச்சேன்' என்றான்.

'அக்கா இந்தக் கல்யாணத்துக்கு வர்லையோ?' என்றாள் இனியா.

'மதனி.. வர்லே. அப்பா.. அம்மா எல்லாரும் வந்திருக்காங்க. மண்டபத்துல இருக்காங்க. தேவகி மதனி கூட

இருக்கணும்னு சின்ன மதனி வர்ல இருந்துட்டாங்க' என்றான்.

'ஓ..!' என்றாள்.

'அக்கா.. வந்தே ஒரு மாசமாச்சு. ஆனாலும்.. உங்க ஃபேமிலியோட இப்படி ஐக்கியமாயிரக்கூடாதுப்பா..' என்று சிரித்தாள் இனியா.

'அதான்.. இலக்கியா மதனியை எல்லாருக்கும் ரொம்பப் பிடிக்குது. அண்ணனுக்கேத்த மதனின்னு எல்லாரும் மாத்தி மாத்தி மதனியை புகழ்றாங்கப்பா' என்றான்.

இனியாவும் பெருமையாகச் சிரித்தாள்.

'ஏன்.. இனியா.. உங்களுக்கு மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டாங்களா.. எப்படி மாப்பிள்ளை பாக்கப் போறாங்க' என்றான்.

இனியா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

'அதைப் பத்தி இப்ப யோசனையே இல்லையே மாமா.. எப்படியும் ஒரு வருஷமாவது இல்லாம.. அடுத்த கல்யாணம் பண்றதுக்கு அப்பா.. அம்மா.. ரெடியாகணும்.. இல்லே!' என்றாள்.

'பெரிய அளவுல.. செலவு வைக்காம பொண்ணு மட்டும் வந்தா போதும்னு மாப்பிள்ளை வந்தா வேண்டாம்னு சொல்லுவீங்களா?' என்றான்.

அவள் விசித்திரமாக அவனைப் பார்த்தாள்.

'ஏன்.. இனியா, மாப்பிள்ளை கறுப்பா.. இருந்தா.. ஒத்துக்குவியில்லயா?' என்றான்.

அவள் சிரித்தாள். 'மாமா.. நிறத்துல என்ன இருக்கு? மனசுலதான் இருக்கு.. இப்பப் பாருங்க. உங்க வீட்ல நீங்களாகட்டும். மாமாவாகட்டும் எந்த விதத்துல குறைஞ்சு



போனீங்க! இன்ஃபாக்ட் பொறுப்பாக் குடும்பத்தையே தூக்கி நிறுத்தலையா?' என்றாள்.

தான் மறைமுகமாகக் கேட்ட கேள்விக்கு அவளும் மறைமுகமாகவே பதில் சொல்லி விட்டதை உணர்ந்த சுந்தருக்கு மேலும் துணிச்சல் கூடியது.

'அப்ப சரி.. விஷயத்துக்கு வர்லாம்னு நினைக்கறேன் பெரியவங்க கிட்டே போனா, ஜாதகம் பார்க்கணும் பாங்க.. அதனாலே நானே ஜாதகம் பார்த்துகிட்டேன். எட்டுப் பொருத்தமாம்' என்றான்.

'யாரோட ஜாதகம்?' என்றாள் இனியா பாதி புரிந்தும் புரியாதவளாக.

'உன்னோட ஜாதகமும், என்னோட ஜாதகமும்தான்' என்றான்.

இனியா திணறிப் போனாள்.

'ஒரு வேளை, கறுப்பு.. பிடிக்கலே, கிடிக்கலேன்னா.. இப்பவே.. நாகரீகமா ஒரே வார்த்தையிலே 'இதோட இந்தப் பேச்சை விட்ருங்க. மாமா'ன்னு சொல்லிடு. அதுக்கப்புறம், யாருகிட்டயும்.. இதைப் பத்திப் பேச மாட்டேன் இப்படி ஒரு பேச்சு நடந்துதுங்கறதையே மறந்துடலாம்..' என்றான் சுந்தர்.

'அப்புறம்.. தாடி வளர்த்துக்கிட்டுக் கவிதை எழுதிகிட்டு 'உலகே மாயம்ன்னு அலைவீங்களாக்கும்?' என்றாள் கிண்டலாக.

சுந்தர் திரும்பி சீரியஸாக அவளைப் பார்த்தான்.

'கொஞ்சம் ஜீரணிக்கறது கஷ்டம்தான். ஆனா, அதுக்காக இவ்வளவு பெரிய குடும்பத்தை வச்சுகிட்டு சோகமாவெல்லாம் திரிய மாட்டேன்' என்றான்.

'தட்ஸ்.. குட்!' என்றாள் இனியா.

'இனியா, நீ என் கேள்விக்கு பதில் சொல்லலை!' என்றான் சுந்தர்.

அவள் தலையிலடித்துக் கொண்டாள். 'இப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கீங்க.. முதல்லே.. போங்க வெளியேன்னு கோபிச்சுக்காம.. முகம் குடுத்துப் பேசறன்கறது லயே.. புரிஞ்சுக்க வேண்டாம்.' என்றாள் இனியா.

சுந்தர் ஒரு நிமிடம் வியப்பாய்ப் பார்த்தான்.. பிறகு கலகலவென சிரித்தான்.

'ஓ..! ஓ! தேங்க்ஸ்' என்றான்.

பிறகு ஒரு நிமிடம் கனத்த மௌனம் நிலவியது. இருவருக்கும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. உணர்வுகளால் தாக்கப்பட்டு அமர்ந்திருந்தார்கள். அவன் மெதுவாக எழுந்து நின்றான் அவள் அருகில் வந்தான்.

அவள் அச்சமுற்றதைப் போல் அவனைப் பார்க்க அவன் இறக்கமாகப் புன்னகைத்தான்.

'ம்ஹூம்.. தொட மாட்டேன்.. பயப்படாதே. ஆனா, எப்படியும் ராதிகா மேரேஜ் முடியணும். அதுக்கப்புறம்தான் நம்ம மேரேஜ் இருக்கும்' என்றான்.

'ரொம்ப ஈஸியா சொல்றீங்க? பெரியவங்க சம்மதம் வேண்டாமா?' என்றாள்.

'முதல்ல உன் சம்மதம்.. தெரிஞ்சாப் போதும்னிருந் தேன். உன் சம்மதம் கிடைச்சிருச்சு.. இல்லே; மத்ததெல்லாம்.. நான் பாத்துக்கறேன்' என்றான்.

'இனியா.. இப்படி ஒரு நல்ல விஷயம் பேசியிருக் கோம். ஒரு ஸ்வீட்.. க்வீட்ன்னு ஒண்ணும் கிடையாதா' என்றான்.



'உட்காருங்க.. மாமா! கொண்டு வரேன்..' என்று உள்ளே போனாள். ஸ்வீட்டும், காரமும் கொண்டு வந்து ஒரு சின்ன தட்டில் கொடுத்தாள்.

'நீ சாப்பிடலையா?' என்றான்.

'நான் இப்பத்தான்.. டிபன் சாப்பிட்டேன்.'

'பரவால்லை.. நீயும் எடுத்துட்டு வா..' என்றான்.

எதிரில் அமர்ந்தாள். இரண்டு பேரும் சற்று வழிந்து விட்டு சட்டென்று சிரித்தார்கள்.

'இனியா.. கொஞ்ச நாளாகவே உன்னைப் பத்தி நினைச்சா.. ஒரு சந்தோஷம்.. பார்த்தா.. ஜிவ்வுன்னு பறக்கற மாதிரி ஒரு ஃபீலிங்' என்று சிரித்தான்.

'நானும் சந்தேகப் பட்டேன்.. மாமா..' என்று முணுமுணுத்தாள்.

'எப்படி?' என்றான்.

'எங்க வீட்டுக்கு மட்டும் ஸ்பெஷலா பால் அனுப்பி னீங்க! ஏதாவது ஒரு காரணம் சொல்லிகிட்டு அடிக்கடி வந்தீங்க.. என்கிட்டே மட்டும் ஏதாவது கலாட்டாவா பேசுவீங்க' என்றாள்.

'இனியா..!' என்று சற்று நேரம் உருகினாற் போல் பார்த்தான். பிறகு சொன்னான்.

'இனியா.. எப்படியும் ஒரு வருஷம் ரெண்டு வருஷம்.. ஆகும்.' என்றான்.

அவள் கீழே பார்த்துக் கொண்டு 'பரவால்லை.. மாமா!' என்றாள்.

வெகு நாகரிகமாகப் பொதுப்படையாகப் பேசி விட்டுப் புறப்பட்டுப் போனான் சுந்தர்.

எல்லாம் எளிதாக நடந்து விடும் என்றே இருவரும் நம்பினார்கள். வரப் போகிற பிரளயத்தை இருவரும் அறியவில்லை.

* * *

'அக்கா.. நா கொஞ்ச நேரம்.. ரெஸ்ட்.. எடுக்கறேன்.. ஏதாவது தேவைன்னா.. எழுப்புங்க' என்றாள் இலக்கியா.

'சரிம்மா.. நீ போய் ரெஸ்ட் எடு' என்றாள் தேவகி.

தேவகியின் அம்மாவும் அன்றைக்குத் திருமணத்திற்குப் போயிருந்தார்.

இலக்கியாதான் தேவகியுடன் இருந்தாள். வீட்டில் வேலையாட்கள் இருந்தார்கள். அதில் நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவரும் இருந்தார்.

அவரை தேவகிக்குத் துணையாக அமர வைத்து விட்டு அவள் சற்று நேரம் உறங்கப் போனாள்.

கல்யாணத்துக்கு அவளும் வர வேண்டும் என்றுதான் எல்லாரும் விரும்பினார்கள். ஆனால், இதயா வருகிறான் என்று கேள்விப்பட்டவுடன் ராதிகாவும் போக விரும்பினாள். அதோடு மாமியாரும் போவதால் தேவகியைத் தனியாக விட இலக்கியாவும் விரும்பவில்லை.

முதல் நாளிரவு பேச்சு வார்த்தை அந்த சடங்கு இந்த சடங்கு என்று முடித்து விட்டு எல்லாரும் வந்து சேரவே மணி பன்னிரண்டாகி விட்டது.

மாமனார் பெரும்பாலும் வெளியே தங்குவதை விரும்புவதில்லை. இரவு என்னேரமானாலும் வீட்டுக்கு வந்து விட வேண்டும் என நினைப்பார்.

மறுபடியும் காலையில் ஐந்து மணிக்கே கிளம்பினார்கள். இலக்கியாவும் ராதிகாவும் எல்லாருக்கும் காபி போட்டுக் கொடுத்து புறப்படுவதற்கு உதவியாக வேலை செய்தார்கள்.



உறக்கம் கெட்டதனாலோ என்னவோ இப்போது களைப்பாக இருந்தது- இலக்கியா பிற்பகலில் கண்ணயர்ந்து விட்டாள்.

அந்த நேரம் தேவகிக்கு லேசாக வலி கண்டது. சீரகக் கஷாயம் போட்டு குடித்தால் சரியாகி விடும் என்றெண்ணிக் கொண்டு அவளே சீரகக் கஷாயம் தயாரித்துக் குடித்தாள் அப்போதும் சரியாகவில்லை.

திடீரென்று விழித்தாள் இலக்கியா. எழுந்து வந்து பார்த்தாள்.

தேவகி வயிற்றைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'அக்கா.. என்ன செய்யுது?' என்றாள்.

'தெரியலை.. என்னமோ.. வயித்தை வலிக்குது' என்றாள்.

உடனே தேவகியின் அம்மாவை எழுப்பினாள். ஃப்ளாஸ்கில் சுடுதண்ணீர், துணிமணிகள் என்று எடுத்துக் கொள்ளச் சொன்னாள்.

ஒன்றிரண்டு முறை தனியாக ஓட்டியிருக்கிறோம் என்ற துணிவில் காரை எடுத்தாள்.

பொள்ளாச்சிக்குக் காரைச் செலுத்தினாள். தேவகிக்கு வழக்கமாகப் பார்க்கிற அந்த நர்ஸிங் ஹோமில் கொண்டு போய்ச் சேர்த்தாள்.

* * *

எல்லாரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். தேவகியைச் சேர்த்தவுடனே வாகீசனுக்குத் தகவல் கொடுத்தாள்.

நல்ல வேளையாக வாகீசன் பொள்ளாச்சி ஏரியாவிலே இருந்ததால் உடனே பைக்கில் வந்து விட்டார்.

லேடி டாக்டர் வந்து 'பேஷன்டின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்றால் உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றார்.'

இலக்கியா உடனே தன் கணவனிடம் பேசினாள்.

'வாசீச மாமா பயந்து போய்க் கிடக்காரு என்ன செய்யலாம்னு சொல்லுங்க..' என்றாள்.

'எப்படியாவது மதினி உயிரைக் காப்பாத்துங்கன்னு சொல்லு.. அட் எனி காஸ்ட்' புரியுதா?' என்றான்.

'சரிங்க..! நீங்க எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வாங்க' என்றாள்.

வந்தார்கள்.

கருப்பையை எடுத்து விட வேண்டுமென்றார்கள்.

வேறு வழியிருக்கவில்லை.

ஒத்துக் கொண்டார்கள்.

வாசீசன் 'தேவகி! ஒரு பெண் குழந்தை வேணும்னு ரொம்ப ஆசைப்பட்டா.. தம்பி..' என்று வெகு வருத்தத்தோடு சொன்னபோது மணிவாசகன் வெகுவாக வருத்தப்பட்டான்.

மூன்று நாட்கள் கழித்துத்தான் பேச அனுமதித்தார்கள்.

கணவனிடம் கண் கலங்கினாள் தேவகி. ஆனால் மணிவாசகன் வந்தவுடன் அவன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு தேம்பி அழுதாள்.

'ஐயோ.. வாசு! எல்லாப் பொண்ணுகளும் கல்யாண மாகிப் போனதுக்கப்புறம் வீடு வெறிச்சோடிப் போகுமே... ஒரு பொண்ணு வேணும்னு ரொம்ப ஆசைப்பட்டேன்' என்றார்.

'போகட்டும் மதனி! பெரியவன் பொறந்தப்பவே நாங்க உங்ககிட்டே விஷயம் சொல்லியிருக்கணும். தப்புப் பண்ணிட்டோம். நீங்க பொழச்சதே போதும் மதனி' என்று தேற்றினான்.



'சரவணனை நல்லா வளர்த்திரலாம்.. மதனி!' என்றான்.

'ஆனா நீ எனக்கு ஒரு உறுதிமொழி தரணும் தம்பி!' என்றாள் தேவகி.

'நீயும் இலக்கியாவும் எனக்கு அழகா ஒரு பொண் குழந்தை பெத்துத் தரேன்னு சொல்லுங்க.. மனசைத் தேத்திக்கறேன்' என்றாள் கண்ணீருடன் சிரித்துக் கொண்டே.

அவன் சிரித்தான். 'மதனி என்ன பேசறீங்க.. என் குழந்தை கறுப்பா இல்லே.. பொறக்கும்?' என்றான்.

'கறுப்பு அழகில்லேன்னு யார் சொன்னா? உன்னை மாதிரி மனசு கிடைக்கணுமே அதைச் சொல்லு..' என்றாள் தேவகி.

எப்படியும் அவள் கேட்ட கேள்விக்கு எந்த உறுதி மொழியும் தராமலே கணவன் பேச்சை மாற்றி விட்டதை உணர்ந்த இலக்கியா மனம் வாடி நின்றாள்.

'தான் அவரை மிகவும் காயப்படுத்தி விட்டோம் போலும்;' இனி எத்தனை முயற்சி செய்தாலும் அந்த ரணம் மாறாது போல் இருக்கிறது. அதனால்தான் பிரியத்துக்குரிய மதனி சிக்கலான சூழ்நிலையில் உறுதி மொழி கேட்கும் போது கூட நழுவிக் கொள்கிறார்..' என்றெண்ணியபோது அவள் மனதில் கலக்கம் ஏற்பட்டது.

எவ்வளவு பெரிய பொக்கிஷம் தனக்குக் கிடைத்தும் தான் கை நழுவ விடுகிறோம் என்ற வருத்தம் அவள் உணர்வுக்குள் பந்தாகச் சுருண்டது.

## 11



எல்லாரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள்.

இதுவரையிலும் குரலில் எழுப்பியே பேசாத வாசீசன் குரலை உயர்த்திப் பேசியதுதான் எல்லாருக்கும் வியப்பாய்ப் போனது.

'இப்ப என்ன ஆகிப் போச்சன்னு எல்லாரும் இப்படி நடமாடறீங்க.. பெரிய உசுரு பொழச்சதே அதிசயம். அப்படியே அந்தக் குழந்தை இருந்திருந்தாலும் அது ஊனமாத்தான் இருந்திருக்கும். எல்லாம் ஏதோ நல்லதுக்குத் தான்னு டாக்டரம்மாவே சொல்றாங்க.. அப்புறம் எதுக்கு இப்படியெல்லாம் மூஞ்சியைத் தூக்கிட்டு நடமாடறீங்க..' என்றான்.

பத்து நாட்களாகியும் முழுவதுமாக சோகம் அந்த வீட்டில் சூழ்ந்திருந்ததைக் காணப் பொறுக்காமல்தான் வாசீசன் அப்படிக் குரலெடுத்துக் கத்தியது.

தேவகி அழுதாள். இலக்கியா அருகில் சென்று அணைத்துக் கொண்டாள்.

வாசீசன் அதிசயமாய் அத்தனை பேர் முன்னிலையிலும் போய் தேவகியின் அருகில் அமர்ந்தான்.

'இத பாரு புள்ளே! உனக்குப் பொண் குழந்தை வேணுங்கற.. சரி.. நமக்கு ரெண்டு தம்பிங்க இருக்காங்க. அவங்களுக்குப் பொண் குழந்தை பொறந்தா.. நாம எடுத்து வளத்துக்கலாம்.. என்ன?' என்றான்.

வெகு நேரம் எல்லாரும் சுற்றி அமர்ந்து தேற்றியதற்குப் பிறகுதான் தேவகி ஒருவாறு தேறினாள்.

மீண்டும் இயல்புநிலை திரும்ப ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டது. அந்த நாட்களில் எல்லாம் இலக்கியாதான் பொறுப்பேற்றுக் கொண்டாள்.

வீட்டு வேலைகளை முடித்து விட்டுத் தேவகியோடும் நேரம் செலவழித்தாள்.



உழைத்துக் களைத்து உறங்குபவளைக் கவனித்துக் கொண்டே இருந்த மணிவாசகன் ஒரு நாள் இரவு அவள் மேலே வரும் வரை விழித்திருந்தான். முன்னால் அமர்ந் திருந்தான்.

'இலக்கியா.. ரொம்பக் கடுமையா உழைக்கறே. கஷ்டப்படுத்திக்கறியேம்மா..' என்றான் அக்கறையாக.

அவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'ஒன்றும் கஷ்டமில்லே. எல்லாத்துக்கும் ஆள் இருக் காங்க. நான் கவனமாக கோ-ஆர்டினேட் பண்ணினாப் போதும்' என்றாள்.

'எதுக்கும் ரொம்ப ஸ்ட்ரெய்ன் ஆயிடாமப் பாத்துக்கோ..' என்றான் மறுபடியும்.

'இல்லே.. இதுதான் புடிச்சிருக்கு. தினமும் செய்யறதுக்கு ஏதாவது இருக்குங்கறதே லைஃபை 'மீனிங்ஃபுல்லா ஆக்குதில்லே..' என்றாள் இலக்கியா.

அவன் மௌனமாக இருந்தான்.

'இப்ப நீங்க எதுக்கு இத்தனை கடைகளையும் மேனேஜ் பண்றீங்க! ஒரு ஆத்ம திருப்திதானே' என்றாள்.

அவன் ஒத்துக் கொண்டான். ஆனால் சிந்தனையில் ஆழ்ந்தான். தன் மனைவி எதிலிருந்தோ தப்பிப்பதற்காக இப்படி ஓடுகிறாளோ என்று தோன்றியது.

'இலக்கியா.. ஒரு விஷயத்துக்காக நான் உனக்குத் தேங்க்ஸ் சொல்லணும். உடனே தைரியமாக காரை எடுத்துக்கிட்டுப் போய் மதனியை அட்மிட் செய்து.. டாக்டர். ரொம்ப அப்ரிஷியேட் பண்ணினாங்க' என்றான்.

'தாங்க்ஸ்..' என்றாள் இலக்கியா. 'தேவகியக்கா.. ரொம்ப நல்ல டைப். நீங்க எல்லாரும் ஒரு கூட்டுக் குடும்பமா

ஒத்துமையா இருக்கறதுக்கு அவர்களும் ஒரு காரணம்' என்றாள் இலக்கியா.

'ஆமா.. அவங்க. எங்களையெல்லாம் தன்னோட சொந்தத் தங்கை தம்பிகளாத்தான் நினைச்சாங்க.. வாசேன் அண்ணாத்தைக்குக் கல்யாணம் ஆகறப்ப நாங்க சாதாரணக் குடும்பம்தான். பெரிய குடும்பம் வேற. ஒரு நேரம் இருக்கும். ஒரு நேரம் இருக்காது. ஒரு நாளும் எங்க வயிறு வாடாம எதுவாவது செஞ்சிடுவாங்க. வெறும் பருப்பு சாதம். ஊறுகாய்ன்னா கூட டேஸ்ட்டா செஞ்சிடுவாங்க..' என்றான் அவன் குரல் நெகிழ்ந்திருந்தது.

'அப்பாவும், அண்ணனும் கடைக்குப் போயிடுவாங்க. ஆள் போட்டுக் கடை நடத்த வசதியில்லே. அப்பத்தான் நான் வந்து கடையில உட்கார்ந்தேன். கிளீன் பண்ணி பேக் பண்ணி வந்தா நல்லாப் போகும்னு ஐடியா குடுத்தேன்.. பக்குன்னு புடிச்சுகிட்டாங்க.. பொள்ளாச்சியில அப்ப நாங்க வாடகைக்குத்தான் இருந்தோம். கொஞ்சம் பெரிய வீடா ஒரு தம்பி நாமளே உழைக்கலாம்ன்ணாங்க.'

'எடுத்தேன். அப்பல்லாம் வாடகை கம்மி இரண்டாயிரம் ரூபாய்க்கு பெரிய வீடு சரக்கு மூட்டை மூட்டையா இறக்கும். அம்மா, மதனி சிஸ்டர்ஸ் எல்லாரும் கிளீனிங் பாக்கிங்கின்னு செய்வாங்க. சுத்தமான சரக்கு, டோர் டெலிவரின்னு ஆரம்பிச்சோம். ரெகுலர் கஸ்டமர் வந்தாங்க. அப்புறம் இரண்டாவது கடை அப்பத்தான் சுந்தர் ஐடியா குடுத்தான். 'அண்ணா கோயமுத்தூர் மாதிரி பெரிய ஊருக்குப் போண்ணா' என்று. நான் கோயமுத்தூர்ல கடை போட்டேன். நாலாவது கடைன்னவுடனே இங்க இருபது ஏக்கர் நிலம் வாங்கிப் போட்டேன். அதுலயும் இந்த வீடோட கிடைச்சது. அப்புறம் ரெண்டு வருஷத்துல மறுபடியும் முப்பது ஏக்கர் வாங்கினேன்



அவள் கதை கேட்பது போல் கேட்க ஆரம்பித்தாள். சுவாரசியமாய் ஆழ்ந்தாள். கொஞ்சம் வருவாய் வர ஆரம்பித்தவுடனே வீட்டு மனுஷங்களையெல்லாம் வொர்க்ல இருந்து விடுவிக்க ஆரம்பிச்சேன். அப்பவும்.. மதனி சும்மாயிருக்கலே. ரெண்டு மாடு வாங்கிக் குடுங்க தம்பி. வீட்டுக்கும் பாலு நெய்ன்னு வெளிய வாங்க வேண்டாமில்லே. அப்படீன்னாங்க.. வாங்கிக் குடுத்தேன். அது இப்ப இருபது முப்பது பசு மாட்ல வந்து நிக்குது. உழைப்புக்கு அஞ்சவே மாட்டாங்க.

அப்புறம் வீட்டு நிர்வாகம் நீங்க. குடோன் நிர்வாகம் அம்மா, பால் பண்ணை நிர்வாகமும் சரக்கு அனுப்பறது கொள்றது அண்ணன்னு பிரிச்சு விட்டுட்டேன். எல்லாக் கடைக்கும் இப்ப கணக்கு செக்கிங் சுந்தர். நிர்வாகம் நான்னு பிரிச்சுகிட்டோம்..'

'அப்புறம்.. எப்ப உடுமலைப் பேட்டையில கடை ஆரம்பிச்சீங்க' என்று கேட்டாள் இலக்கியா.

'அது மதனிக்காக ஆரம்பிச்சது. மதனியை எங்க வீட்டுக்குப் பொண் கொடுக்கறப்ப அவங்க உறவுக்காரங்க.. சில பேரு வேற வழியில்லாம.. இத்தனாம் பெரிய குடும்பத்தில தர்றாங்கன்னு பேசிகிட்டாங்களாம். அதனால அந்தக் குடும்பத்துல இருந்து எப்படி ஜெயிச்சுக் காட்டினாங்கன்னு காட்றதுக்காக அங்கே ரெண்டு கடை அங்க மட்டும் கடைகளுக்கு மதனியோட பேருதான்.. தேவகி ஸ்டோர்ஸ்' என்றான்.

'ஓ.. அத்தை கோபிச்சுக்கலையோ?'

'ம்ஹூம்.. ஐடியா குடுத்ததே அம்மாதான். அப்புறம் ஸ்பீடு எடுத்துகிச்சு. இப்ப நீ வேற புது ஐடியா.. குடுக்கறே?' என்றான்.

'ஆமாங்க.. மாமா.. எல்லாத்தையும் நீங்க இனி மாத்தித்தான் ஆகணும். நான் சாலஞ்ஜ் விட்டது நிஜம்தான். கோயமுத்தூர்ல ஒரே ஒரு கடை நான் கேட்ட மாதிரி செஞ்சு குடுங்க.. அப்புறம் நீங்களே ஆச்சரியப் படுவிங்க.'

'சரி.. நான் செஞ்சு தரேன். இந்த ரெண்டு மாசமும் மதனியைக் கவனி. அதுக்குள்ளே ஏற்பாடு பண்றேன்' என்றான்.

'சரிங்க மாமா!' என்றாள். உற்சாகமாக. சொன்ன மாதிரியே செய்தாள்.

* * *

'சும்மாயிரு.. இலக்கியா. படுத்துக் கிடந்தா நோயாளி யாவே ஆயிடுவோம்.. எழுந்திருச்சு கூடமாட உதவியா இருக்கேன்' என்றாள் தேவகி.

யாரும் தடை சொல்லவில்லை. அவள் போக்கில் விட்டு விட்டார்கள்.

அன்றைக்கு!

'இலக்கியா.. புறப்படு!' என்றான்.

உடனடியாகப் புறப்பட்டாள் இலக்கியா. கோயம் புத்தூரில் சுந்தர் பெரும்பாலும் இருக்கும் கடைக்குப் போனார்கள்.

'இங்க.. பக்கத்துல ஒரு இடம் வந்திருக்கு வந்து பாரு..!' என்றான்.

போனார்கள்.

ஒரு பெரிய ஹால். உள்ளே இரண்டு பெரிய அறைகள்.

'போதும்.. ஐடியல்' என்றாள் இலக்கியா.

தனக்கு என்ன வேண்டுமென்று சொன்னாள்.



'ஸெல்ஃப் சர்வீஸுக்கு வசதியா சரக்கு வைக்கறதுக்கு ஷெல்ப்புகள், தள்ளு வண்டிகள் முன்னாலே கண்ணாடித் தடுப்புகள், கம்ப்யூட்டர் பில்லிங் சிஸ்டம் எல்லாம் வேணும்' என்றாள்.

'ஓ.. கே.. கிராண்டட். அப்புறம், சுந்தர் உங்களோட ஒரு மாசம் இருந்து வியாபாரம் கத்துக் குடுப்பான்' என்றான்.

'சரி..!' என்றாள்.

'ஏங்க.. இப்படி செஞ்சா.. என்ன?'

'எப்படி?'

'முதல்ல.. நான் அந்தக் கடையில சுந்தர் கூட இருந்து தொழில் கத்துக்கறேன். அப்புறம் நாங்க ஹோல்சேல் மட்டுமே இங்கே இருந்து வியாபாரம் செய்யறோம்' என்றாள்.

மணிவாசகன் கலகலவென்று சிரித்தான்.

'அட்றா.. சக்கை.. விமன்ஸ் லிபரேஷன்!' என்றான்.

'மாமா! எனக்கு இந்த லிபரேஷன்கற வார்த்தையில நம்பிக்கையில்லை. ஆணும், பெண்ணும் யாரும் யாரையும் நசுக்கவும் வேண்டாம்.. விடுதலையும் வேண்டாம் ரெண்டு பேரும் இணைஞ்சு எது செஞ்சாலும் வெற்றி கரமாக் கொண்டு வந்தா அதுவே போதும்' என்றாள்.

'அப்புறம்.. ஏன் பர்ஸனாலிட்டிக்கு முக்கியத்துவ குடுக்கறீங்க..?' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

அப்படிக் கேட்கும் போது அதில் கோபமோ, வ தமோ.. இருக்கவில்லை. மாறாக விஷயத்தை அலசு மனப்பான்மை தெரிந்தது.

அவளும் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

'எது பர்ஸனாலிட்டிங்கறது வயசைப் பொறுத்து, அநுபவத்தைப் பொறுத்து மாறவும் வாய்ப்பிருக்கு..!' என்றாள் தனக்குள் சொல்லிக் கொள்வது போலே.

'ம்ஹூம்.. அப்படியா?' என்றான் கேலி போல.

அவன் எதுவும் சொல்ல வழியில்லாமல் நிற்கையிலே சுந்தர் புயலாக வந்தவன்.

'ஓஹோ அண்ணியின் கோரிக்கை நிறைவேறப் போகுதோ?' என்றான்.

'ஆமடா.. அவளும் கல்யாணமானதிலே இருந்து எதுவும் வேணும்னு கேட்கலே. இதைக் கேக்கறா. செஞ்சு குடுப் பமே?' என்றான். பிறகு திடீரென்று நினைவு வந்தவன் போல.

'டேய்! இப்பப் புதுசா வேற ஒரு ஐடியா.. சொல்றா..!' என்றான்.

'என்னவாம்?' என்றான் சுந்தர் ஆர்வமாக.

'மகளிர் அணியே உருவாகுதுடா.. இந்தக் கடையை ரெடி பண்ணி ட்ரெயினிங் குடுத்துட்டா கடையையே அவங்க நடத்தறாங்களாம்' என்றான்.

'அப்படிப் போடு..' என்றான் சுந்தர்.

'முன்னாடி செக்யூரிட்டி மட்டும் போட்டுக் குடுத் துடுங்க' என்றாள் இலக்கியா அவசரமாக.

சுந்தரும் மணிவாசகனும் சிரித்தார்கள். சுந்தர் 'நல்லவேளை, நீங்களே வந்து செக்யூரிட்டியா வந்து நில்லுங்கன்னு சொல் லாமப் போனாங்களே' என்று மேலும் சிரித்தான் சுந்தர்.

மணிவாசகன் குபீரென்று சிரித்தான்.

'டேய்! சுந்தரு, விஷயம் புரியாமப் பேசறயா? இப்ப நான் உங்க மதனிக்கு என்னன்னு நினைச்சே? செக்யூரிட்டிதான்.. பாதுகாவலன்..' என்றான்.



இலக்கியா சிணுங்கினாள். 'நீங்க ரெண்டு பேரா இருக் கீங்கன்னு.. என்னை கேலி செய்யறீங்க!' என்றாள்.

இருவரும் சிரித்தார்கள். அதே நேரம் அங்கே இன்டீரியர் டெக்ரேட்டர் வந்தார்.

மணிவாசகன் தனது கேலிப் பேச்சை நிறுத்திவிட்டு அவருடன் அமர்ந்து சீரியஸாக டிஸ்கஸ் செய்தான்.

இலக்கியாவுக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது.

அவன் தன் கருத்தை விளையாட்டாய்க் கருதவில்லை. மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஏற்றுக் கொண்டிருக் கிறான் என்று.

மிகச் சிறிய நுணுக்கமான விஷயங்களையும் அவன் கவனிப்பதைக் கண்டு ஆச்சரியமானாள். சரக்குக் கடைக்கு வரும்போது அதன் விலை. வெளியே போகும்போது அதன் விலை, இடப்பட்ட செலவுகள், கடை நடத்துவதற் கான செலவுகள் என்ற அவன் துல்லியமாகத் தம்பியுடன் அமர்ந்து அலசுவதை அவள் ஆழ்ந்த அமைதியுடன் அருகில் அமர்ந்து கவனித்தாள்.. இடையில் குறுக்கிடவேயில்லை.

கடைசியாகத் திரும்பி அவளிடம் சொன்னான்.

'இலக்கியா, முதற்கட்ட செலவு கொஞ்சம் அதிகமாகத் தான் இருக்கும் போல இருக்கு. ஆனா, நான் வெளி விசாரிச்ச வரைக்கும் இப்ப எல்லா ஃபீல்டுலயும் கொஞ்ச நவீனமாக்கினாத்தான் வியாபாரம் எடுபடும்கறது வந்துட்டுத்தான் இருக்கு' என்றான்.

'மேலும் தொடர்ந்தான்.'

'ஆனா, இந்த முதலீட்டோட சம்பேர் பண்ணும்போ புதுசா.. எவ்வளவு கஸ்டமர்களை நீங்க உள்ளே கொண் வர்றீங்கன்னு பார்க்கணும்' என்றான் யோசனையோடு

அப்போது இலக்கியா சொன்னாள். 'மாமா, நீங்களும், நானும் அடிப்படையிலயே வேறுபடறோம்' என்றாள்.

மணிவாசகன் நெற்றியில் முடிச்சுக்கள் விழ அவளைப் பார்த்தான்.

'எப்படி?' என்றான்.

'மாமா! நீங்க புது கஸ்டமர்ளை இழுக்கறதைப் பத்தி யோசிக்கறீங்க.. அதுக்கு முன்னாடி இருக்கற கஸ்டமர் களைத் தக்க வைக்கறதைப் பத்தி நான் யோசிக்கறேன்' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் மலைத்துப் போனான். பிறகு 'குட் திங்கிங்' என்றான். லேசாக நாக்கால் உதடுகளைத் தடவிக் கொண்டான்.

'நான் எனக்கு ஸ்டாண்டர்ட் கஸ்டமர்ஸ் இருக்கறதா டமா நம்பிகிட்டிருக்கேன்' என்றான்.

இலக்கியா தயாராய் பதில் வைத்திருந்தாள்.

'முன்னேயெல்லாம்.. கஸ்டமர்ஸ் ஒரு கடையில சரக்கு ரமா இருந்தா.. அங்கயே வாங்கிட்டாங்க. ஆனா, இப்ப ந்தக் கடை கொஞ்சம் அட்ராக்ஷனா இருக்கணும்னும் திர்பார்க்கறாங்க.. இது ஒரு விதமான சைக்கலாஜிகல் ஷயம். பாருங்களேன்..

'இப்பல்லாம்.. ரொம்ப நாளா வித்துட்டிருக்கிற பாருட்களுக்கும் கூட பாக்கட் மாத்தறாப்ல. 'புதிய டிவில்... புதிய சுவையில்'னு புது விளம்பரம் தர்றாங்க ல்லே?' என்றாள்.

அவன் நிஜமாகவே சிலாகித்தான்.

'ஐயோ.. அண்ணே! மதனி உங்களை முழுங்கிடுவாங்க ால இருக்கு' என்று சிரித்து விட்டுக் கிளம்பினான் சுந்தர். ன்றிரவு!



பேச்சு வாக்கில் கேட்டது போல் கேட்டான் மணிவாசகன்.

'என்ன.. இலக்கியா? எம்.ஏ. இலக்கியம் படிச்சுட்டு.. அக்கு வேறு ஆணிவேறா வியாபாரத்தை அலசறே' என்றான்.

'இலக்கியம் படிச்சா.. என்ன? இப்ப வியாபாரியோட வைஃப் ஆயிட்டேனே?' என்று சிரித்தாள் இலக்கியா.

இயற்கையான அந்த சிரிப்பை அவன் நின்று ஒரு நிமிடம் பார்த்தான்.

'வைஃப் ஆயிட்டேங்கறே?' என்றான் கேள்விக் குறி யாக. ஒரு கேலிப்புன்னகை இதழ்களில் படிந்திருந்தது.

அவள் பதில் சொல்லாமல் விழிக்கும்போதே விருட் டென்று தன் அறைக்குப் போய் விட்டான் மணிவாசகன்.

12



இலக்கியாவுக்கு உறக்கமே வர வில்லை. கணவனின் கேள்வி அவளைக் கொஞ்சம் உலுக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

மல்லிகாவின் திருமணத்தின் போது நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன.

'உன் ஃபிரண்ட்ஸையும் கூப்பிடு' என்று வற்புறுத்தி சில பத்திரிகைகள் கொடுத்தான் மணிவாசகன்.

இலக்கியா லலிதா, ஹேமா, சௌம்யா என்று இவர் களை மட்டும் அழைத்திருந்தாள்.

லலிதாவும், ஹேமாவும் அந்தத் திருமணம் நடந்த விதம் பார்த்து அதிசயித்துப் போனார்கள். திருமணம் முடிந்து மாப்பிள்ளையும், பொண்ணும் அழைப்புக்காகக் கிளம்பிப் பத்து மணிக்குப் போனதற்குப் பிறகு விச்ராந்தியாகச் சேரில் அமர்ந்தார்கள். அதிலும் லலிதாவுக்கு ரொம்ப ஆச்சரியம்.

'ஊ.. இலக்ஸ்.. என்னடி. உங்காத்துல இவ்வளவு அமைதியாக் கல்யாணம் நடக்கறது. எங்காத்துல எல்லாம்.. ஒவ்வொரு கல்யாணத்தப்பவும் எங்க ரெண்டு அத்திம் பேரையும் சமாளிக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ? என்னைக் கவனிக்கலே. எங்காத்து மனுஷாளை மதிக்கலே. அந்தச் சீர் சரியில்லே. அந்த மாங்கா சரியில்லே, இந்த மட்டை சரியில்லேன்னு படுத்தி எடுத்துடுவா.. தெரியுமோ?' என்றாள்.

ஹேமா கூட ஒத்துக் கொண்டாள். 'ஆமாடி, இலக்கியா, உங்க ஃபாமிலி செட் அப் ரொம்ப சூப்பரா இருக்கு தெரியுமா? என்னடி ரகசியம்?' என்றாள்.

'ஃபாமிலி முழுக்கக் கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடி உட்கார்ந்து டைம் டேபிள் மாதிரிப் போட்டுட்டாங்க தெரியுமா! சின்னச் சின்ன இவன்ட்ஸ் உட்பட.. அடுத்து இப்படி. அடுத்து இப்படின்னு.. பொறுப்பைப் பிரிச்சுக் குடுத்துட்டாங்க.. பாரேன்.. முகூர்த்தம் முடிந்தவுடனே இப்ப மாப்பிள்ளை வீட்டுக்குப் போறதுக்குக் கார் தயாரா இருக்கறதைப் பார்க்க வேண்டியது சுந்தர் பொறுப்பு. கூடப் போறது ங்கைக்காவும், திலகாக்காவும்னு.. எல்லாமே திட்டம் போட்டாச்சு' என்றாள்.

'ஓ.. ஐடியா.. நல்லாருக்கே?' என்றாள் சௌம்யா.

இலக்கியா மேலும் தொடர்ந்தாள். 'எங்க மாமனார்ல ருந்து என் தம்பி வருண் வரைக்கும் பொறுப்புகளை ரிச்சுக் குடுத்தாச்சுன்னா பாத்துக்கயேன்.'

அவர்கள் சிரித்தார்கள். 'எல்லாத்துக்கும்.. ஹெட் யாரு? ங்காத்துக்காரரா?' என்றாள் லலிதா.

'ம்..!' என்று பெருமையாகச் சிரித்தாள் இலக்கியா.



'ஆமா.. ஃபைனல் டெஸிஷன் அவருதான்.. அவரும்.. இந்தச் சடங்கு. சம்பிரதாயம்னு வரும்போது அவங்க அம்மா பொறுப்பில் விட்டுடுவாரு. மற்ற விஷயங்கள்ல தன்னோட முடிவுதான்னு உறுதியா நிற்பாரு. அது மட்டுமில்லே.. வருஷம் இவ்வளவு குடும்பத்துல விசேஷங் களுக்கு, நகைகளுக்கும்னு ஒதுக்கிடறாரு. அதனால, கல்யாண சமயத்துல சிரமப்படறதுங்கறது இல்லை' என்றாள்.

'பரவால்லையே! உங்க வீட்டுக்காரர்கிட்டே நிறையக் கத்துக்கணும் போல இருக்கே' என்று சிரித்தாள் சௌம்யா.

'ஆமா.. நோக்கு என்னென்ன கத்துத் தர்றாருன்னு கொஞ்சம் சொல்லேன்டி..' என்று சிரித்தாள் லலிதா.

'போடி, அதெல்லாம் உன்கிட்டே சொல்வாளாக்கும்' என்று சிரித்தார்கள்.

சௌம்யா கூட அவர்கள் குடும்ப அமைப்பைப் பாராட்டினாள். ஆனால் கடைசியாக,

'என்ன சொல்லுடி, இலக்கியா? உன்னோட பர்ஸனா லிட்டிக்கு உங்க வீட்டுக்காரர் கம்மிதான்' என்றாள்.

இலக்கியா கோபமடையாமல் பதில் சொன்னாள்.

'சௌம்யா.. வாழ்க்கையைப் பத்தி உன்னோட அவுட் லுக் வேற.. என்னோடது வேற. இப்பப் பாரேன்.. அவரு கறுப்பு, நான் சிவப்புங்கற நினைப்பே எனக்கு வர்றதில்லை. அவரோட குணம் எனக்கும் பிடிச்சிருக்கு. என்னை அவருக்குப் பிடிச்சிருக்கு. பெரிய குடும்பம். ஆனாலும் பிரச்சினையில்லாமல் கொண்டு போறாங்க.. ஏன் தெரியுமா? யாருமே சோம்பேறியா இருக்கறதில்லை. எல் லாரும் அவங்கவங்க பங்குக்கு உழைக்கறாங்க.. சந்தோஷமா இருக்காங்க' நானும் நிம்மதியா இருக்கேன்' என்றாள்.

சௌம்யா சிந்தனையில் ஆழ்ந்தாள். 'ஆமா.. நீ சொல்றது சரி. எல்லாத்தையும் நாம எப்படி எடுத்துக்கறோம் கறதுலதான்.. வாழ்க்கையே இருக்கு. ஆனா, இலக்கியா நீ என்ன சொன்னாலும் சரி.. கொஞ்சமாவது தோற்றம் பொருத்தம்கறது வேணும் தெரியுமா?' என்றாள்.

ஹேமா சிரித்தாள். 'இலக்ஸ்.. இவ ஏன் தெரியுமா சும்மா இதையே சொல்றா.. இவளுக்குக் கல்யாணம் அமைஞ் சிருக்கு. மாப்பிளை இவளை மாதிரியே.. ரொம்ப அழகு. அதுதான் அம்மிணி அலட்டிக்கறாப்பல' என்றாள்.

இலக்கியா உடனே மகிழ்ச்சியடைந்தாள். 'ரொம்ப சந்தோஷம் ரொம்ப சந்தோஷம்' என்றாள். 'நீ நினைச்ச மாதிரியே நல்ல வாழ்க்கை அமைஞ்சா.. சரி' என்றாள்.

'ஆனா, பாலு உங்க வீட்டுக்காரர் மாதிரி பணக்காரர் இல்லே. ஆனா, சீக்கிரமே பணக்காரர் ஆயிடணும்னு எண்ணம் இருக்கு' என்றாள் சௌம்யா பெருமையுடன்.

'இங்க பார் பத்து வருஷத்துக்கு முன்னாடி என் கணவர் கடையிலே உட்கார்றதுக்கு முன்னாலே ஒரே ஒரு மளிகைக் கடைதானாம். இவரு பாத்து இத்தனையும் வளர்த்திருக்காரு. அதெல்லாம் மனசு வச்சு உழைச்சா எல்லாம்.. நடக்கும்' என்றாள்.

இப்போது தோன்றியது எல்லாரிடமும் கணவனை விட்டுக் கொடுக்காமல்தான் பேசுகிறோம். ஏன்? நாளைக்கு ஒருவேளை பிரிய நேர்ந்தால் என்ன விளக்கம் சொல்லப் போகிறோம்?

வாயிருக்காமல் பிடிக்கவில்லை என்று வெடித்துவிட்டு, இப்போது பிடிக்கிறது என்றால் அவன்தான் எப்படி ஏற்றுக் கொள்வான்?

முதல் முதலாகப் பிடிக்கவில்லை என்று வெடித்து அழுததுதானே நினைவுக்கு வரும். நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டுப் படுக்கைக்குப் போனாள்.

* * *



'என்ன சௌம்யா? என்ன யோசனை?' என்று கேட்டான் பாலு.

'எனக்கென்ன யோசனை? நடுத்தரக் குடும்பத்துல சர்வீஸ் பூராவும் சேத்த பணத்தை வச்சுப் பொண்ணுக்கோ, பையனுக்கோ கல்யாணம் பண்ணிடறாப்ல... அதுலயும் ரெண்டு, மூணு குழந்தைங்க இருந்தா... நிலைமை சுத்தமா மாறிடாது. அப்புறம் பேரண்ட்ஸ் பாடு திண்டாட்டம் தான்' என்றாள்.

பாலு அழகாகச் சிரித்தான். 'இப்ப என்னங்கறே! கல்யாணச் செலவைக் குறைக்கணும்கறே, அவ்வளவு தானே. சிம்பிளா செஞ்சுடலாம். ஆனா, அதுக்காக அந்தப் பணத்தை விட்டுக் கொடுக்க மாட்டேன்' என்றான்.

அவள் விழித்தாள். அவன் மறுபடியும் சிரித்தான்.

'அந்தப் பணத்துக்கு நமக்கு ஒரு வீடு கட்டிக் குடுக்கச் சொல்லு. இடம் வாங்கிப் போட்டிருக்கேன்' என்றான்.

சௌம்யா உண்மையாகவே மகிழ்ந்து போனாள்.

'நல்லதுதானே! ஒரு நாள் கூத்துக்கு மீசை வச்சுக்கற கதையா அத்தனையும் செலவு செய்யறதுக்கு பதிலா... வீடு கட்டிரலாமே' என்றாள்.

அவள் அப்பா அரைமனதாக ஒத்துக் கொண்டார்.

திருமணத்தை பதிவுத் திருமணமாக வைத்துக் கொண் டார்கள். சின்னதாக ஒரு ரிசப்ஷன்.

அன்றைக்கு மணிவாசகனுக்கு நிறைய வேலை இருந்தது. இருந்தாலும் அவளுக்காக ஒரு அரைமணி நேரம் வந்து விட்டுப் போனான்.

இலக்கியாவுக்கென்று காரைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

சௌம்யாவின் அம்மா அன்புடன் வரவேற்றார். 'வா.. இலக்கியா.. லஷ்மிகரமா இருக்கேடி' என்றார் இலக்கியா சிரித்துக் கொண்டாள்.

திருமணத்தில் ரிசப்ஷனில் முக்கிய செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், பிஸினஸ் புள்ளிகள் என்று வந்ததைப் பார்த்து லலிதாவுக்கும், ஹேமாவுக்கும் ஒரே ஆச்சரியம்.

அதே போல ஆறே மாதத்தில் சௌம்யாவின் வீட்டுக் கிரகப் பிரவேசத்துக்குப் போய் வந்தார்கள். சௌம்யா தன் அழகுக்கேற்ற கணவன் கிடைத்து விட்டார் என்ற மகிழ்ச்சியில் உலக உருண்டையையே தன் கையில் வைத்துக் கொண்டு உருட்டிக் கொண்டிருக்கிறாற்போல் எண்ணிக் கொண்டாள். மெது மெதுவாகக் கணவனின் சுயரூபம் தெரியும் வரை.

★ ★ ★

இனியா மும்முரமாக சமையல் செய்து கொண்டிருந்தாள்.

இதயா மெல்ல எட்டிப் பார்த்தாள். 'அக்கா... எனக்கு காலேஜ்க்கு கொண்டு போறதுக்கு ஏதானும் டிபனை பண்ணிக் குடு' என்றாள்.

'சரி.. உனக்குப் பிடிச்ச.. ஸ்நூடுல்ஸ் பண்ணித் தரேன்' என்றாள்.

இதயா நின்று வியப்பாய்ப் பார்த்தாள்.

'இனியா, உனக்கு என்ன ஆச்சு? ஏதாவது கேட்டா.. உனக்கு நான் என்னடி வேலைக்காரியா? நீயே போய் செஞ்சுக்கோ' அப்படீம்பியே!' என்றாள்.

இனியா லேசான வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

'இலக்கியா.. கூடத்தான் இங்கே விளையாட்டுப் பிள்ளையாட்டமாதான்.. இருந்தா.. இப்பப் போய் அங்க



எல்லாம் செய்யலையா.. அவளை மாதிரி நானும் பொறுப்புக் கத்துக்கறேன்' என்றாள்.

அதே நேரம் அங்கே வந்த வருண் எதையே போட்டுக் கீழே உடைத்துவிட்ட மாதிரி அலறினான்.

'அப்பா... அம்மா.. இங்கே.. வாங்க!' என்றான்.

'என்னடா..!' என்று பதறிக் கொண்டு வந்தார்கள்.

'அம்மா.. எதுக்கும் வெளியே எட்டிப் பாருங்க. உலகம் தலை கீழ மாறிப் போயிடலையே?' என்றான்.

'அட... சொல்லித் தொலைடா!' என்றார் பூங்கனி.

'அம்மா.. அரசல்.. புரசலாக் காதில் விழுந்த விஷயம் அப்படி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிடுச்சு' என்றான்.

'டேய்! பூரிக் கட்டையிலயே போடுவேன். ஒழுங்கா.. சொல்லிடு...' என்றாள் இதயா.

'அம்மா..!' என்று நிதானமாக இழுத்தான். அம்மாவும், அப்பாவும் கடுப்பாக அவனைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

'இல்லப்பா.. இனியா சிஸ்டர்.. இல்லே... நம்ம இனியா சிஸ்டர்.. பொறுப்புக் கத்துக்கறதுன்னு முடிவு செஞ்சுட் டாங்களாம்.'

'சே.. இவனோட பெரிய தொல்லையாப் போச்சு ஆபீஸ் நேரத்துல' என்று மேலுக்குக் கடிந்து கொண் ஆனால், உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு அலுவலக புறப்பட்டார்.

'என்னடி நடக்குது இங்கே?' என்றார் பூங்கனி.

'அம்மா... ஒண்ணும் இல்லம்மா.. இனியாக்கா இப் லாம் வேலையை எல்லாம் இழுத்துப் போட்டுகிட் செய்யறாளே... அது கொஞ்சம் எனக்கு ஆச்சரிய

இருந்துச்சு... நான் கலாட்டா செஞ்சுகிட்டிருந்தேன். அப்ப... இனியாக்கா.. ஆமா.. இலக்கியா.. மாதிரி நல்ல பேர் எடுக்கணுமில்லே.. அதுதான்.. பொறுப்பா இருக்கப் பழகிக்கிறேன்னு சொல்லிகிட்டிருந்தாளா? அதைக் கேட்டுட்டு இப்படி கலாட்டா செய்றாப்ல..' என்று சிரித்தாள் இதயா.

'சரி.. சரி.. நீ ஸ்கூலுக்குக் கிளம்புடா' என்று அம்மா மிரட்டி விட்டு அந்தப் பக்கம் போனார். ஆனால், அன்றிரவு கணவனிடம் பேச முடிவெடுத்தார்.

இன்று பகலுணவுக்கு திடீரென்று வந்தார்கள் இலக்கியாவும், மணிவாசகனும்.

'அக்காவும், வாசு மாமாவும் வந்திருக்காங்க' என்று பரபரப்பாக உணவு தயாரிக்க ஆரம்பித்தாள் இனியா. சட்டென்று அப்பளம் பொரித்தாள். வெள்ளரிக்காயை நறுக்கிப் போட்டு தயிர்ப்பச்சடி செய்தாள்.

மணிவாசகனும் இரசித்து சாப்பிட்டான். 'அத்தே.. உங்க வீட்ல எல்லாரும் சமையல் நல்லாச் செய்யறீங்க...' என்று பாராட்டினான்.

அப்போது எதிர்பாராத விதமாக சுந்தர் வந்தான்.

'அண்ணா, என்ன செல்போன்ல கிடைக்கவே மாட்டேங்கறே.. உங்கிட்டே பேச ஒரு விஷயம் இருக்கு' என்றான்.

சகோதரர்கள் இருவரும் சற்றுத் தனியாகப் போய்ப் பேசி விட்டு வந்தார்கள்.

'சரி.. புறப்படறேன்' என்று அவன் புறப்படும் போது இனியா,

'சாப்பிட்டுப் போங்க.. மாமா!' என்றாள்.

இலக்கியாவும் வற்புறுத்தவே ஏதோ வேறு வழியில்லாமல் சாப்பிடுகிறவன் போல் அமர்ந்தான்.



'வருண்.. எப்படிப் படிக்கிறான்? இதயா எப்படிப் படிக்கிறா?' என்றெல்லாம் விசாரித்தான் மணிவாசகன்.

'அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினையில்லே.. மாப்பிளே.. இனிமே மெதுவா இனியாவுக்குத்தான் மாப்பிள்ளை பாக்கணும்' என்றார்.

இனியா முகம் சிவக்க ஓரக்கண்ணால் பார்த்தபடி சுந்தருக்குப் பரிமாறினாள்.

அதே சமயம் மணிவாசகன் புன்னகைத்தான்.

'ஆமாங்கத்தே! நானும் அதேதான் சொல்லணும்னு நினைச்சேன்' என்றான்.

'ஆமா.. இலக்கியா.. இதைக் கேளு; உன்னை மாதிரியே.. புகுந்த வீட்ல நல்ல பேர் எடுக்கணுமாம். அதனால, இப்பல்லாம்.. பொறுப்பாக் காரியம் செய்யறாப்பலே.. நான் இப்ப ரொம்ப ஃப்ரீயா இருக்கேன்' என்று சிரித்தாள்.

'அப்படியா..!' என்று இலக்கியாவும் மகிழ்ச்சியாகச் சிரித்தாள்.

அதே கேள்வியை சுந்தரும் கண்ணால் கேட்டு. இனியா ஆமாம் என்று கண்ணாலேயே பதில் சொன்னாள்.

அதே சமயம் சுந்தரின் செல்போனுக்கு ஏதோ கால் வந்தது.

'இனியவளே என்று பாடி வந்தேன்.. இனியவள்தான் என்று ஆகிவிட்டேன்' என்ற பாடலை தன் செல்போனுக்கு 'ரிங் டோனாக' வைத்திருந்தான் சுந்தர்.

இனியா அதன் பொருள் புரிந்தவளாக முகம் சிவக்க நிற்கையிலே முன்னறையில் அம்மா இனியாவுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேண்டும் என்று தனது ஆசைகளை சொல்லிக் கொண்டிருந்தார்.

அதில் ஒன்று கூட சுந்தருக்குப் பொருந்தி வரவில்லை யென்பதை அவர்கள் அறியவில்லை.

## 13



'அக்கா.. இங்க பாருங்க! இலக்கியா மதனி என்கிட்டே பெரிய சபதம் செஞ்சிருக்காப்பல' என்றான் சுந்தர்.

'என்னவாம்?' என்றாள் மங்கை.

'மங்கை. இவனுக்குத் தலையில ஒரு கொண்டையும், கையில் தம்பூராவும் தான் பாக்கி. உனக்குத் தெரியாதா? சரியான கலகக்காரன்' என்று சிரித்தாள் திலகவதி.

'சே.. எவ்வளவு பெரிய இன்ஸல்ட்? இங்கே ஆண் வர்க்கமே இப்படிப் பாத்துகிட்டு உட்கார்ந்திருக்கிங்களே.. உங்களுக்கே நியாயமா உங்கள்ல ஒருத்தனை, இப்படிப் பெண்கள் எல்லாரும் சேந்துகிட்டுக் கடுப்படிக்கறத பாத்திங்களா? என்று நாடகம்னு' செய்தான் சுந்தர்.

எல்லாரும் சிரித்தார்கள்.

மணிவாசகன் மென்மையான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பெண்கள் எல்லாரும் பிறந்த வீட்டுக்கு வந்திருந்தார்கள். மல்லிகாவும் கணவனுடன் வந்திருந்தாள். எல்லாரும் விச்ராந்தியாகப் பிற்பகலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் சுந்தர் அந்தக் கொள்ளுப் பட்டாசைத் தூக்கிப் போட்டான்.

'டேய்! சும்மா டிராமா பண்ணாம விஷயத்தைச் சொல்லு.' என்றாள் மங்கை.

'இல்லே.. மகளிர் பிரிவு ஒண்ணு ஆரம்பிக்கப் போறாங்களாம். டிபார்ட்மென்டல் ஸ்டோர். இந்தக் குடும்பத்துப் பெண்களே மட்டும் நடத்தப் போறாங்களாம்' என்றான்.



'வாங்கறதுக்காவது ஆம்பளைங்களை உள்ளே விடுவாங்களா?' என்றான் மல்லிகாவின் கணவன்.

'பின்னே? அந்த உரிமையை நாம விட்டுக் கொடுக்கக் கூடாதில்லே!' என்றான் சுந்தர்.

இலக்கியா அமைதியாக அமர்ந்திருந்தாள். 'பார்க்கலாம்... எல்லாரும் எப்படி டிஸைட் செய்யறாப்லேன்னு' என்பது போல் அமர்ந்திருந்தாள்.

'வாசு.. அண்ணா! கியூரியாசிட்டி மௌண்ட் ஆயிட்டே போயிட்டிருக்கு... விஷயத்தை சொல்லண்ணா' என்றாள்.

அவனும் மெதுவாக வாய் திறந்தான்.

'இல்லக்கா! கடையெல்லாம் கொஞ்சம் மாடர்னைஸ் பண்ணனும்னு இலக்கியா சொல்றாப்பல. சரி.. ஒரு கடை மட்டும் மாடர்னைஸ் செஞ்சு நடத்திக் காட்டுங்க.. அதுல எப்படி லாபம் வருதுன்னு பாத்துட்டு மத்த கடைகளையும் மாடர்னைஸ் பண்ணலாம்னேன். மதனியும் கொழுந்தனும் வாக்குவாதம் பண்ணி அந்தக் கடையை பெண்களே நடத்தறதுன்னு முடிவாயிருக்கு... என்றான்.

'அப்ப விடவே கூடாது.. மதனி! நாம நடத்தியே காட்டணும்' என்றாள் ராதிகா.

திலகாவதியும் மங்கையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'அது சரி' நாங்க எங்கே இங்கேயிருந்து அங்கே வர்றது' என்றார்கள்.

'சரி.. அதனாலென்ன? ஃப்ரியா இருக்கறப்ப டைட குடுங்க. முடிஞ்சவங்கள்ளாம் சேர்ந்து நடத்தட்டும்' என்றா மணிவாசகன்.

தேவகி இடையில் புகுந்து 'இலக்கியா, இந்த சான்ஸை விடாதே! நடத்திக் காட்டு' எனவும் ஆச்சரியமானார்கள்

'ஆஹா! பூ ஒன்று புயலானது!' என்று ராகம் போட்டான் சுந்தர்.

'மதனி.. நான் வர்றேன்!' என்றாள் ராதிகா.

'அப்புறம்.. என்ன? ஒரு நாள் ராதிகா போகட்டும். ஒரு நாள் நான் போறேன். இனியாவும், இதயாவையும் கூப்பிட்டுக்கலாம் மல்லிகா வர்றியா?' என்றார்கள்.

அவள் கணவனைப் பார்த்தாள். அவன் பெண்களுக்கு அருகில் கீழே இருகாலையும் ஊன்றி, இரண்டு கைகளை யும் பின்பக்கம் நீட்டி ஊன்றியபடி அமர்ந்திருந்தான்.

'இங்கே பெரிய சபையே கூடியிருக்கு. இதுல நாம போயி ஓபீனியன் சொன்னா எடுபடாது போல இருக்கே?' என்று சிரித்தான். பிறகு சற்று யோசிப்பவன் போல் நடந்துவிட்டு,

'சரி.. உனக்கும் தொழில் கத்துகிட்ட மாதிரி இருக்கு மில்ல.. நீயும் போ..' என்றான்.

'ஆமா.. இனி ராதிகாவுக்கு, இனியாவும் இதயாவுக்கும் காலேஜ் லீவுதானே, அதுலயும் இனியாவும், ராதிகாவும் காலேஜ் ஸ்டடீஸ் முடிக்கறாங்க.. இல்லே. அவர்களுக்கும் நல்லா பொழுது போகும்' என்றார் வாகீசன்.

ஒரு வழியாக யார் யார் அந்தக் கடைக்குச் செல்வது என்று முடிவானது.

அடுத்ததாக ஒரு கேள்வி வைத்தான். 'சரி.. கடைக்குப் பேர் என்ன?' என்றான்.

'ஏன், பொன்மணி டிபார்ட்மென்டல்' ஸ்டோர்ஸ்தான்' என்றான்.

'ம்ஹூம்.. எங்க குட்வில் நாங்க விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்றான் சுந்தர்.



'குட் வில்லா! இது என்ன புதுசா ஜொப்பறாப்ல..' என்று முறைத்தாள் ராதிகா.

'அவன் கிடக்கறாம்மா... உங்களுக்கு எது வசதியோ அதுவே செய்ங்க' என்றான் மணிவாசகன்.

இப்போதும் தேவகி இடையில் புகுந்தாள். 'எப்ப.. சுந்தர் இப்படி சொல்லுச்சோ.. அப்ப வேற பேரே வைக்கலாம்' என்றாள். ஆனால் சிரித்துக் கொண்டேதான் சொன்னாள்

இலக்கியா மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவகி ஒரு கருத்து சொன்னால் பெரும்பாலும் அதற் மணிவாசகன் மறுப்பு சொல்வதில்லை என்பது புரிந் கொண்டிருந்தாள்.

'வாசு அண்ணா! சென்ட்ரல் கவர்ன்மென்ட்டே அதுவ பிரதமரே சொல்லியாச்சுன்னா' என்று சிரித்தான் சுந்தர்.

'ஐயோ! சுந்தரு.. கலகம் பண்ணாதே; அத்தை மா பெரியவர்கள்ளாம் இருக்கும்போது என்னைய எது அப்படியெல்லாம் சொல்றீங்க' என்றார் தேவகி பத போய்.

'அத்தை ஜனாதிபதி..' என்றான் சுந்தர்.

'ஆமா.. ரப்பர் ஸ்டாம்ப்பு' என்று சிரித்தாள் ராதி 'யம்மோவ்' 'உனக்குப் பவரே இல்லைங்கறாப்ல சின்னன்

'ஆமா.. நமக்குப் பவர் இருந்து இனிமே என்ன போகுது. சொன்னாலும், சொல்லாட்டியும் தேவகி பிரதமரு' என்றார் பொன்மணி.

தங்கவேல் புஸ்ஸென்று சோகமானான்.

'என்ன மச்சான்! பெரிய பிரளயமே வெடிக்கப் துன்னு பாத்தேன். இப்படி புஸ்வாணமாய் பே என்றான். பிறகு சீரியஸான குரலில் சொன்னான்.

'உங்க குடும்பத்துல எப்படி இவ்வளவு ஒத்துமையா இருக்கீங்கன்னு இப்பத்தான் புரியுது! மரியாதை குடுக்கற மருமக. விட்டுக் கொடுக்கற மாமியார், நிர்வாகம் பண்ற மகன்கள்.. ரொம்ப அருமையா இருக்கு.. பாக்கறதுக்கே' என்றார்.

மல்லிகாவைப் பார்த்து சிரித்தான்.

'இலக்கியா.. மதனி.. இது நியாயமில்லே... எல்லாரும் சேர்ந்து விஷயத்தையே டைவர்ட் செய்யறீங்க..!' என்றான் சுந்தர்.

'சுந்தர் இந்த விளையாட்டுக்கு நான் வர்லே.. நான் கடை நடத்தத் தயார். ஆனா பேரு எல்லாருமா செலக்ட் செய்ங்க' என்றாள்.

எல்லாரும் சற்று நேரம் யோசித்தார்கள். அப்போது இலக்கியாவே சொன்னாள்.

'நான் ஒரு யோசனை சொல்றேன். எல்லாருக்கும் பிடிச்சிருந்தா.. ஏத்துக்கலாம்' என்றாள்.

'சொல்லு..! சொல்லுங்க' என்ற குரல்கள் கோரஸாக ஒலித்தன.

'மங்கை டிபார்ட்மென்டல் ஸ்டோர்' என்று வைக்கலாம் என்றாள்.

'ஏன்... அப்படி?' என்றான் சுந்தர்.

'மங்கைன்னா நம்ம அக்கா.. பேரு.. அதோட பெண் ணுன்னும் அர்த்தம் வருதில்லே.. பொருத்தம்தானே' என்றாள் இலக்கியா.

'அதையே வைக்கலாம்' என்றாள் தேவகி.

'பெரிய இடம் வீடோ பவரைப் பயன்படுத்தியாச்சு. இனி யாரும் எதுவும் பேசவே முடியாது' என்றான் சுந்தர்.



எல்லாரும் ஏற்றுக் கொண்டார்கள். மறுபடியும் கொஞ்ச நேரம் பேசினார்கள்.

இரவு உணவுக்குப் பிறகு மங்கை, திலகவதி, ராதிகா எல்லாரும் கூடத்திலேயே படுத்துக் கொண்டார்கள். இலக்கியாவும் வெகு நேரம் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

'மல்லி.. நீ போய் உன் வீட்டுக்காரரைக் கவனி' என்று அனுப்பி வைத்து விட்டார்கள். இலக்கியாவிடமும் 'நீயும் போம்மா!' என்றார்கள். அவள் தயக்கத்துடனே எழுந்து வந்தாள்.

மேலே மாடிக்கு வருவதற்கு முன் வழக்கம் போல் சமையல் கட்டுக்குப் போய் எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று சரிபார்த்து விட்டு வந்தாள்.

மெல்லத் திரும்புகிற நேரம் கண்கள் ஜன்னலைத் தாண்டிப் பார்த்தன.

மல்லிகாவும், தங்கவேலுவும் சிரித்துக் கொண்டே மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

நிலவொளியை அனுபவித்தபடி சற்றுத் தொலைவு வரை போய்விட்டு வந்தார்கள் போலும். அந்த நேரம், தங்கவேல் சுற்று முற்றும் பார்த்துவிட்டு மல்லிகாவைத் தன்னருகில் இழுப்பதையும், மல்லிகாவும் புன்னகையுடன் இடம் கொடுப்பதையும் பார்த்து லேசாக நடுங்கிப் போனவளாய் சமையலறையைச் சாத்தி விட்டு வெளியே வந்தாள்.

அதே நேரம்!

மணிவாசகன் மங்கையின் கணவரிடம் தனியாக சற்று நேரம் பேசிவிட்டு மேலே வந்தான்.

'என்ன இலக்கியா?' என்றவன் அவள் முகம் பார்த்து.

அவன் ஒரு நிமிடம் விழித்தான். அவள் முகம் சிவந்தது.

'அட.. என்னன்னு சொல்லு?' என்றான். அவள் அவன் முகம் பார்க்காமல்.

'இல்லே! மல்லிகாவும், அவங்க... ஹஸ்பெண்டும்..' என்று நிறுத்தினாள்.

'ஓ!' என்று புரிந்து கொண்டு புன்னகைத்தான்.

'இருக்கறதுதான்.. கண்டுக்காதே!' என்றான்.

'உட்காரு.. கொஞ்ச நேரம் பேசணும்!' என்றான். அமர்ந்தாள்.

'மங்கையோட மாப்பிள்ளை கொஞ்சம் கவலையாய்ப் பேசறாரு' என்றான்.

'ஏனாம்?'

'அது ஒண்ணுமில்லே! மங்கையோட சிஸ்டர் இன் லாஸ் அதாவது மாப்பிள்ளையோட சிஸ்டர்ஸ் ரெண்டு பேரும் மளிகைக் கடையில இருந்து மளிகை எடுத்துக்கு வாங்களாம். என்கிட்டே வந்து சொன்னாரு. சரி.. விடுங்க.. உங்களுக்கும் செய்ய வேண்டிய கடமையிருக்கில்லேன்னு சொல்லிட்டேன். ஆனா இப்ப சமீபமா அவங்க தேவைக்கு மேலயே எடுக்கறதாத் தோணிச்சாம்.. என்னன்னு செக் பண்ணிப் பார்த்தாராம். நம்ம கடைப் பொருளை எடுத்து அவங்க வியாபாரம் செய்றாப்படி. இது எப்படி நியாயம்னு வருத்தப்படறாரு' என்றான்.

இலக்கியா.. ஆச்சரியமானாள். 'ரொம்ப நேர்மையான வரா இருப்பாரு போல இருக்கு' என்றாள்.

'ஆமா.. அவரு நேர்மையைக் கேள்விப் பட்டுத்தான் மங்கையைக் குடுத்து ரெண்டு கடையையும் பார்த்துக்கச் சொல்லுச்சு' என்றான்.

'சரி.. இதை எப்படிச் சரி செய்யறது சொல்லு!' என்றான்.



அவள் ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு சொன்னாள்.

'பேசாம.. வாசே மாமாவையும், தேவகி அக்காவையும் அங்க பாத்துக்கச் சொல்லுங்க.. அக்காவும் அப்பப்ப போயிட்டு வரட்டும். மனசு மாறும்' என்றாள்.

'அப்ப மங்கையும், மச்சானும்!' என்றான்.

'அவங்களை இங்கே வந்து குடோன் நிர்வாகமும், பால்பண்ணை நிர்வாகமும் பாக்கச் சொல்லுங்க.. பெரிய மாமா நிலத்தை மட்டும் பாக்கட்டும்.. போதும்.. அவரும் கொஞ்சம் ரிலாக்ஸாகட்டும்' என்றாள்.

'தட்ஸ் குட்!' என்றான்.

'ஏங்க.. எல்லாத்துக்கும் சம்பளம்தான்.. எனக்கு உள்பட, மத்ததெல்லாம் பொதுப்படையாக செலவு..' என்றாள்.

'முதல்ல.. ஒரு பி.சி.யை கொண்டு வந்து வீட்ல வைங்க.. எல்லாத்தையும் கம்ப்யூட்டர் ஏத்துங்க.. அப்பத்தான் சரியாகும்' என்றாள்.

'ஆமா.. செய்யணும்!' என்றான் யோசனையுடன் 'நீ ஹெல்ப் செய்யறியா?' என்றான்.

'ஓ.. தாராளமா! எனக்கும் கொஞ்சம் பொழுது போகும்.'

'உனக்கு இங்கயே வேலை யிருக்குமே?'

'ஆமா.. என்னத்தை வேலை? ஆட்ட, அரைக்க எல்லாத்துக்கும் ஆளு. இந்தக் கலக்கி வைக்கறது டேஸ்ட் பாக்கறது ஒரு வேலையாக்கும்' என்றாள்.

அவன் சிரித்தான். பிறகு.

'ஏன்.. இலக்கியா.. கடைக்கு உன் பேரு வைக்கச் சொல்வேன்னு பார்த்தேன்' என்றான்.

'வேண்டாங்க.. அவங்களுக்கெல்லாம்.. மனசு சங்கடம் வருமில்லே.. இந்தப் பேர்தான் எல்லா வகையிலும் பொருத்தம்' என்றாள்.

'ஏன்.. உன் பேரு வச்சா.. நாளைக்குப் பிரியறப்ப கஷ்டமா இருக்கும்னு நினைக்கறியோ' என்றான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

'ஏன்.. இப்படி நான் நினைக்காததெல்லாம்.. பேசறீங்க!' என்றாள்.

'நீ கூடத்தான்.. நான் நினைக்காததெல்லாம் பேசினே..?' என்றான்.

உள்ளே போய்விட்டான்.

'எவ்வளவு சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தோம். இப்படி சண்டையில் முடிந்ததே' என்ற வேதனையோடு அவள் படுக்கைக்குப் போனாள்.

இருவருமே சற்று வெகு நேரம் உறங்கவில்லை.

## 14



'ஹலோ! சௌமி. இன்னைக்கு நாம ஒரு பார்ட்டிக்குப் போறோம்' என்றான் பாலு.

'ம்.. இதோ பத்து நிமிஷத்துல நான் ரெடியாயிடறேன்' என்று தயாரானாள் சௌம்யா.

பார்ட்டியில் பொழுது கலகலப்பாகக் கழிந்தது. ரொம்பவும் இயல்பாக இருந்தார்களா, இல்லை ஒரு மாதிரி



செயற்கைத் தனம் தெரிந்ததா என்ற சௌம்யாவுக்குப் புரியவில்லை. ஆனால், பெரும்பாலும் அவரவர் இணையுடன் அமராமல் மற்றவர்களோடுதான் பெரும்பாலோர் கழித்தார்கள்.

சௌம்யாவிடம் முப்பதுகளில் இருந்த ஒரு இளைஞனை அறிமுகப்படுத்தி வைத்தான் பாலு.

தொப்பையும், சரீரமுமாக இருந்தார் அந்தப் பணக்காரர்.

'சௌமீ! மூணு மில்லு. நாலு காலேஜ். ஏகப்பட்ட வீடுகள்னு.. பெரிய பணக்காரரு' என்றான்.

'ஓ!' என்று ஆச்சரியமானாள். 'ஆஹா! இப்படி ஆட்களை எல்லாம் தன் கணவருக்குத் தெரிந்திருக்கே..' என்ற பெருமையானாள் சௌம்யா.

பொதுப்படையாக அரசியல் பேசினார்கள். அவள் விஷயங்களை அலசுவதைப் பார்த்ததும், அழகான ஆங்கிலம் பேசுவதைப் பார்த்ததும் அந்தப் பணக்காரர் - பாண்டியன் என்று பெயராம் - ரொம்பவே ரசித்தார்.

'பாலு! உன் வைஃப் ரொம்ப இன்டலிஜென்ட்டா இருக்காங்களே' என்று பெரிதும் பாராட்டினார்.

'ஆமா.. சார்! ஒரு ரேர் காம்பினேஷன் சுறுசுறுப்பு வித் ப்ரெயின்' என்று பெருமையடித்துக் கொண்டான் பாலு.

அன்றைக்கு பார்ட்டியில் சௌம்யாவுக்கு எல்லாரும் கொடுத்த முக்கியத்துவத்தில் நிஜமாகவே தேனில் விழுந்த எறும்பைப் போல் திகைத்துத்தான் போனாள் சௌம்யா.

சற்று நேரம் கழித்துக் கணவனைத் தேடினாள். அவன் சற்றுத் தொலைவில் ஒரு அழகான இளம் பெண்ணுடன் பேசிக் கொண்டு நிற்பதைக் கண்டாள் அவனை நோக்கிப் போனாள்.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

'வா! சௌமி! இவங்க மிஸஸ். பாஸ்கர். அவரு தெரியுமில்லே! பெரிய பிஸினஸ் மாக்னெட்' என்றான்.

அந்தப் பெண் இளப்பமாகச் சிரித்தாற்போல் இருந்தது. பானுவே தொடர்ந்தான்.

'ஆனா.. என்ன. எப்பவும் பறந்துட்டே இருப்பாரு. அதான் வர முடியலே. அதனாலதான் நான் மேடத்துக்குக் கம்பெனி குடுக்கறேன்..' என்றான் பிறகு.

'அத பாரு! பாண்டியன் சார், உன்னைத் தேட்றாரு போல இருக்கே!' என்றான்.

அவள் விழித்தாள். ஒரு நிமிடம் தனியாக அவனை அழைத்தாள்.

'என்னங்க.. இது! மிஸஸ். பாஸ்கரும், பாண்டியனும் பேசிகிட்டிருக்கட்டுமே.. நீங்க என்னைத் த்னியா விட்டுட்டு' என்றாள்.

அவன் கோபப்படாமல் பொறுமையாகச் சொன்னான்.

'இங்க பாரு! நாமதான் எப்பவும் வீட்ல தனியாத்தானே இருக்கோம். இந்த மாதிரி இடங்கள்ல வரும்போது கம்பெனி குடுக்க வேண்டியது நம்ம கடமை' என்றான். மறுபடியும் அவளிடம் வாஞ்சையாக புன்னகைத்தான்.

'அது மட்டுமில்லே! மிஸஸ். பாஸ்கர். நாளைக்கு அவங்க வீட்டுக்கு என்னை வரச் சொல்லியிருக்காங்க. முன்னாலே ஒரு ரூமுக்கு இன்டீரியர் டெக்ரேஷன்ல ஆலோசனை வேணுமாம்' என்றான்.

'ஓ.. சரி!' என்று சமாதானமானாள். பாண்டியனின் போரடிக்கிற கம்பெனியைத் தாங்கிக் கொள்ளத் தயாரானாள்.

திரும்பக் காரில் வரும்போது யோசிக்கலானாள்.

'இது மாதிரிப் பார்ட்டிகளைத் தானே தாம் விரும்பினோம். ஆனால், ஒரே நாளில் ஏன் சலித்துப் போனது' என்று.



அவளுக்குப் புரிந்தது.

'அங்கே எல்லாருமே அவரவர்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே வருகிறார்கள். ஆத்மார்த்தமான நட்பு இருக்கவில்லை. மாறாக ஒரு செயற்கைத்தனம் இழையோடியது.

திடீரென்று இலக்கியா வீட்டுக் கல்யாணம் நினைவுக்கு வந்தது: எல்லாரும் ஒன்று கலந்து வேலைகளைச் செய்தது. சின்னச் சின்ன வாக்கு வாதங்கள் கூட வந்தது. ஆனால், அதோடு விட்டு அடுத்த வேலையைப் பார்த்தார்கள். அந்தக் குடும்ப அமைப்பு பானுவின் வீட்டில் இருக்கவில்லை என்பது புரிந்தது.

சற்றே ஏமாற்றமாக இருந்தது.

* * *

'ஹலோ!' இலக்கியா.. எப்படீடி.. இருக்கே?' என்ற குரல் கேட்டு உற்சாகமானாள் இலக்கியா.

'ஹாய்.. சௌம்யா!' - நான் நல்லா இருக்கேன்.. நீ எப்படி இருக்கே?'

'நான் ரொம்ப ஜாலியா இருக்கேன். நாங்க ரெண்டே பேர்தான். சொந்த பிஸினஸ். நினைச்சாத் தூங்கி.. நினைச்சா.. வெளிய போய்.. பாரேன்.. நேத்துக்கூட ஒரு பார்ட்டிக்குப் போனோம். பெரிய பெரிய மில்லினர்ஸ் எல்லாம் வந்திருந்தாங்க.. எல்லாருக்கும் என்னை ரொம்பப் பிடிச்சிருந்தது. ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்குன்னு எல்லாரும் ஒரே பாராட்டுத்தான் போ...' என்றாள்.

இலக்கியாவுக்கு சுற்றி வளைத்துத் தன்னைத் தாக்குகிறாற் போல் இருந்தது. ஆனால், விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

'வெரிகுட்! உனக்குப் பிடிச்ச மாதிரி.. வாழ்க்கை.. கேரி ஆன்..! ஆனா, எனக்கு இப்ப இந்த வீட்ல பழகிட்டு.. ரெண்டு பேர் மட்டும் இருந்தா ரொம்ப போர் அடிக்கும்னு தோணுது. ஓ.கே..! உனக்குப் பிடிச்ச வாழ்க்கை.. உனக்கு.. எனக்குப் பிடிச்சது எனக்கு' என்றாள்.

மேலும் சற்று நேரம் வேறு விஷயங்கள் பேசி விட்டு போனை வைத்தாள்.

இவள் எதற்குத் தன்னை அழைத்தாள் இப்போது? இவளுக்குப் பிடித்த மாதிரிக் கணவன் கிடைத்தால் மகிழ்ச்சியடைய வேண்டியதுதானே. எதற்காக எனக்கு போன் செய்து குத்திக் காட்ட வேண்டும் என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. சற்று நேரம் முகம் வாடி இருந்தது.

நேத்து கணவன் குத்திக் காட்டி விட்டு போனது வேறு ஒரு பக்கம் வலித்தது. இந்தப் பிரச்சினை எப்படிச் சரியாகுமோ? அல்லது சரியாகாமலே போகுமோ? ஆனால், அப்படித் தன் மேல் கோபம் என்றால் எதற்காக மங்கையின் பிரச்சினையைக் கொண்டு வந்து தன்னிடம் ஆலோசனை கேட்க வேண்டும்?

'இவரைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒரு நேரம் முக்கியத்துவம் கொடுத்து ஆலோசனை கேட்கிறார். அடுத்த நிமிடம்.. இவளிடம் ஏண்டா கேட்டோம் என்பது போல் நடந்து கொள்கிறார். 'யாரால் கெட்டது? நோரால் கெட்டது' என்று ஒரு பழமொழி உண்டே அது போல் தான் தன் வாயால் கெட்டோம்' என்று எண்ணிக் கொண்டாள். தன்னையே நொந்து கொண்டாள். ஆனால் இத்தனைக்கும் ஒரு புறம் எந்தக் கேள்வியில் தங்கள் வாழ்க்கை ஊசலாடிக் கொண்டிருக்கிறதோ அந்தக் கேள்வியைக் கையிலெடுத்துக் கொண்டு ஆராயத் துவங்குவதற்கு மட்டும் துணிவு வரவில்லை.



அவளுக்கு ஒன்று தெரியும். சௌம்யாவைப் போன்ற வாழ்க்கை அவளுக்கு பிடித்திருக்கவில்லை. அந்த வாழ்க்கையில் ஒரு போலித்தனம் இருக்கிறாற் போல் பட்டது. இந்தக் குடும்பம் இதிலுள்ள மனிதர்கள் இதெல்லாம் அவளுக்குப் பிடித்திருந்தது. அதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று எண்ணிக் கொண்டாள்.

'இலக்கியா.. யார் வந்திருக்காங்க.. பாரு..' என்ற குரல் கேட்டு இறங்கினாள்.

திலகவதியின் மாமனார், மாமியார் வந்திருந்தார்கள்.

'சம்மந்தார் வந்திருக்காங்க.. பாரு. ஸ்வீட்.. காரம்னு.. எதையாவது எடுத்துப் பரிமாறு' என்று மாமியார் முணுமுணுக்க அவள் பரபரப்பானாள்.

* * *

மணிவாசகனுக்கும், இலக்கியாவுக்கும் இப்போதெல்லாம் ஒன்றாகக் கழிப்பதற்கே நேரம் கிடைப்பதில்லை.

காலையிலேயே மணிவாசகன் அந்தப் பக்கம் போனால் ராதிகாவும், இலக்கியாவும் கோயம்புத்தூர்க் கடைக்கு கிளம்பி விடுவார்கள். சில சமயங்களில் வாசீசனும், சந்தரும் கூட வருவார்கள்.

காரில் போகும் போதே ராதிகாவும் அன்றைக்குக் கடையில் நடக்க வேண்டிய வேலைகளைத் திட்டமிட்டுக் கொள்வார்கள்.

அங்குலம் அங்குலமாகத் திட்டமிட்டு இலக்கியா அந்தக் கடையை வடிவமைத்தாள்.

சரக்குகள் எல்லாம் அடுக்கப்பட்டு, திறப்பு விழாவுக்காக கடை தயாரான போது மணிவாசகனுக்கே அந்தக் கடை பிடித்துத்தான் இருந்தது.

நல்ல கார்னரில் விளக்குகள் மின்ன மங்கை டிபார்ட்மென்டல் ஸ்டோர் பெயர்ப்பலகையுடன் கடை அமைந்திருந்தது.

திறப்பு விழாவுக்கு அவன் கோயமுத்தூரில் பெரிய வியாபாரப் புள்ளி ஒருவரின் மனைவியை அழைத்திருந்தான். ஸ்வீட்ஸ் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறக்கிறார்கள் அவர்கள். அவரது கணவர் உடன் நிற்க அவர் கடையைத் திறந்தார்.

உள்ளூர் பத்திரிகையில் அதற்காக ஒரு ஸ்பெஷல் எடிஷன் வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தான் மணிவாசகன் ரேடியோ விளம்பரம் வேறு.

'மங்கையர்களே நடத்தும் மங்கை டிபார்ட்மென்டல் ஸ்டோர்' என்று விளம்பரம்.

கடையைத் திறந்த பெண்மணி ஐயாயிரம் ரூபாய்க்குப் பொருட்கள் வாங்கினார். இலக்கியாவே தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு வந்து உதவினாள்.

அது மட்டுமல்லாமல் சற்றும் தயக்கமில்லாமல் இலக்கியா, இனியா, இதயா, மங்கை, ராதிகா எல்லாரும் சந்தன நிறத்தில் புடவைக்கு மேலே கோட் மாதிரி அணிந்து கொண்டு 'நேம் போர்டு' குத்திக் கொண்டு வந்தார்கள். தேவையான பொருட்கள் எடுத்துக் கொடுப்பதை மணிவாசகன் நெஞ்சம் நிறைந்த பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆறு இளம்பெண்களை வேலைக்கு அமர்த்தியிருந்தார்கள். எலக்ட்ரானிக்ஸ் பில்லிங் மெஷினில் பொருட்கள் எடை போடப்பட்டு பில் உடனே கொடுக்கப்பட்டது.

அரிசி மூட்டைகள் 10 கிலோ, ஐந்து கிலோ, இருபது கிலோ என்று ரகம் அரிசியாக அடுக்கப்பட்டிருந்தது. தள்ளு



கதவைத் திறந்து வெளியே வந்து செக்யூரிட்டியிடம் சொன்னால் அவர்கள் வாடிக்கையாளர்களின் காரிலோ, ஆட்டோவிலோ ஏற்றி உதவினார்கள். அவர்களிடம் டியூப்ளிகேட் பில்லைக் கொடுக்க வேண்டியிருந்தது. இப்படி உள்ளே நுழைவதிலிருந்து வெளியே வரும்வரை திட்டமிட்டு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதல் நாளே வியாபாரம் சூடு பிடித்துக் கொண்டது. உதவிக்காக சுந்தரும், மணிவாசகனும் நிற்க வேண்டியிருந்தது. அதிலும் பெரிய மனிதர்கள் நிறைய பேர் வருகை தந்தார்கள்.

'வாசு! இதைச் செய்ன்னு எத்தன நாளா சொன்னேன்பா.. இப்பப் பாரு.. வைஃப் வந்து சொன்னவுடனே எல்லாம் செய்யறே.. இல்லே' என்று கேலி செய்தான் சுரேஷ்.

'இங்க பாரு! எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' தெரியுமா? என் வொய்ஃப் எனக்குப் புரியற மாதிரி விளக்கமாச் சொன்னாங்க.. ஏத்துகிட்டேன்' என்று சிரித்தான்.

'ஆமா.. உனக்கு அருமையான வைஃப்' என்று பாராட்டிக் கொண்டான்.

சௌம்யாவும், பாலுவும் கூட வந்திருந்தார்கள். ரொம்பவும் யோசனைக்குப் பிறகு ஒரு ஐநூறு ரூபாய்க்கு ஏதோ பொருள் வாங்கிக் கொண்டான் பாலு.

சௌம்யாவுடன் நின்று பேசுவதற்கு நேரமிருக்கவில்லை. ஆனாலும் இலக்கியாவிடம் மெல்லிய குரலில்.

'எப்படியோ.. சொந்தமா.. ஒரு தொழில் பண்ணிகிட்டே இருந்தாலும் என்ன அழகாக கோட் போட்டுகிட்டாலும் சேல்ஸ் கேள்ஸ்தானே..' என்றாள்.

நல்ல கார்னரில் விளக்குகள் மின்ன மங்கை டிபார்ட் மென்டல் ஸ்டோர் பெயர்ப்பலகையுடன் கடை அமைந்திருந்தது.

திறப்பு விழாவுக்கு அவன் கோயமுத்தூரில் பெரிய வியாபாரப் புள்ளி ஒருவரின் மனைவியை அழைத்திருந் தான். ஸ்வீட்ஸ் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறக் கிறார்கள் அவர்கள். அவரது கணவர் உடன் நிற்க அவர் கடையைத் திறந்தார்.

உள்ளூர் பத்திரிகையில் அதற்காக ஒரு ஸ்பெஷல் எடிஷன் வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தான் மணிவாசகன் ரேடியோ விளம்பரம் வேறு.

'மங்கையர்களே நடத்தும் மங்கை டிபார்ட்மென்டல் ஸ்டோர்' என்று விளம்பரம்.

கடையைத் திறந்த பெண்மணி ஐயாயிரம் ரூபாய்க்குப் பொருட்கள் வாங்கினார். இலக்கியாவே தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு வந்து உதவினாள்.

அது மட்டுமல்லாமல் சற்றும் தயக்கமில்லாமல் இலக்கியா, இனியா, இதயா, மங்கை, ராதிகா எல்லாரும் சந்தன நிறத்தில் புடவைக்கு மேலே கோட் மாதிரி அணிந்து கொண்டு 'நேம் போர்டு' குத்திக் கொண்டு வந்தார்கள். தேவையான பொருட்கள் எடுத்துக் கொடுப்பதை மணிவாசகன் நெஞ்சம் நிறைந்த பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆறு இளம்பெண்களை வேலைக்கு அமர்த்தியிருந் தார்கள். எலக்ட்ரானிக்ஸ் பில்லிங் மெஷினில் பொருட்கள் எடை போடப்பட்டு பில் உடனே கொடுக்கப்பட்டது.

அரிசி மூட்டைகள் 10 கிலோ, ஐந்து கிலோ, இருபது கிலோ என்று ரகம் அரிசியாக அடுக்கப்பட்டிருந்தது. தள்ளு



கதவைத் திறந்து வெளியே வந்து செக்யூரிட்டியிடம் சொன்னால் அவர்கள் வாடிக்கையாளர்களின் காரிலோ, ஆட்டோவிலோ ஏற்றி உதவினார்கள். அவர்களிடம் டியூப்ளிகேட் பில்லைக் கொடுக்க வேண்டியிருந்தது. இப்படி உள்ளே நுழைவதிலிருந்து வெளியே வரும்வரை திட்டமிட்டு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முதல் நாளே வியாபாரம் சூடு பிடித்துக் கொண்டது. உதவிக்காக சுந்தரும், மணிவாசகனும் நிற்க வேண்டி யிருந்தது. அதிலும் பெரிய மனிதர்கள் நிறைய பேர் வருகை தந்தார்கள்.

'வாசு! இதைச் செய்ன்னு எத்தன நாளா சொன் னேன்பா.. இப்பப் பாரு.. வைஃப் வந்து சொன்னவுடனே எல்லாம் செய்யறே.. இல்லே' என்று கேலி செய்தான் சுரேஷ்.

'இங்க பாரு! எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' தெரியுமா? என் வொய்ஃப் எனக்குப் புரியற மாதிரி விளக்கமாச் சொன்னாங்க.. ஏத்துகிட்டேன்' என்று சிரித்தான்.

'ஆமா.. உனக்கு அருமையான வைஃப்' என்று பாராட்டிக் கொண்டான்.

சௌம்யாவும், பாலுவும் கூட வந்திருந்தார்கள் ரொம்பவும் யோசனைக்குப் பிறகு ஒரு ஐநூறு ரூபாய்க் ஏதோ பொருள் வாங்கிக் கொண்டான் பாலு.

சௌம்யாவுடன் நின்று பேசுவதற்கு நேரமிருக்கவில்லை ஆனாலும் இலக்கியாவிடம் மெல்லிய குரலில்.

'எப்படியோ.. சொந்தமா.. ஒரு தொழில் பண்ணிகிட் இருந்தாலும் என்ன அழகாக கோட் போட்டுகிட்டா சேல்ஸ் கேள்ஸ்தானே..' என்றாள்.

இலக்கியா சிரித்தாள். 'நம்ம சொந்தக் கடையில சேல்ஸ் கேர்ளா இருக்கறதுல எனக்குப் பெருமைதான்' என்றாள்.

'ஹேய் சும்மா.. நான் தமாஷுக்கு சொன்னேன்.. ரொம்ப சீரியஸா எடுத்துக்காதே' என்றாள் சௌம்யா.

சிரித்துக் கொண்டே நகர்ந்தாள்.

அன்றிரவு!

குடும்பமே அமர்ந்து அளவளாவினார்கள். எல்லாருக்கும் பேசுவதற்கு நிறைய இருந்தது.

மணிவாசகன் அவள் மேலே வரும்போது அவளுக்காகக் காத்திருந்தான்.

'இலக்கியா.. வாழ்த்துக்கள்! யு ஹேவ் டன் இட்' என்று கை பிடித்துக் குலுக்கினான்.

'தேங்க்ஸ்' என்றாள்.

'நீ சொன்னது சரிதான்.. கடைக்கு ஒரு லுக் இருக்கும் போது சேல்ஸ் நல்லா ஆகுது' என்றான்.

இலக்கியா உற்சாகமானாள். 'ஆமாங்க.. இனிமேல் எல்லாம்.. வாங்குபவர்கள் உலகம்தான். வாங்கறவங்களை எவ்வளவுக்கெவ்வளவு அட்ராக்ட் பண்றமோ.. அவ் வளவுக்கவ்வளவு வியாபாரம். ஆனா, ஏமாத்தக் கூடாது' என்றான்.

'ஆமா.. நீ சொன்னது சரிதான்.. மாறிகிட்டிருக்கிற உலகத்துக்கேற்ப நாமளும் மாறணும். நானும் காலையில இருந்து கவனிச்சேன். டிஸ்ப்ளேயிலிருக்கிற பாக்கெட்டைப் பாத்துட்டு கூட ரெண்டு பொருட்களை வாங்கிட்டுப் போறாங்க.. இது கூட நல்ல விற்பனை உத்திதான்..' என்றான்.

அவள் மௌனமாக ஆமோதித்தாள்.



'நீ சொல்றதை நான் ஒத்துக்கறேன்.. இலக்கியா. படிப்படியா.. மத்த கடைகளையும் மாத்துவோம்..' என்றான்.

'தாங்க்ஸ்' என்றாள்.

'சரி.. ஆனா. இன்னொரு விஷயம் சொல்றேன் கேட்டுக்க.. முதல் நாள்ங்கறதுனால சும்மா பாக்கறதுக்காகக் கூட வருவாங்க.. வியாபாரம் எவ்வளவுங்கறது மாதக் கடைசியிலதான் தெரிய வரும். பொறுமையாப் பார்ப்போம்' என்ன?' என்றான்.

'சரி..!' என்றாள். அது மட்டுமில்லீங்க.. எனக்கு வியாபார சம்பந்தமா என்ன டவுட்ன்னாலும் நீங்கதான் கைட் பண்ணணும்' என்றாள்.

'கண்டிப்பா..! எப்பவும் என்னோட சப்போர்ட் உண்டு. கவலைப்படாதே!' என்றான். மேலும் தொடர்ந்து.

'அப்புறம்.. இலக்கியா.. உனக்கு ஏதாவது கிஃப்ட் குடுக்கணும்னு ஆசைப்படறேன்' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அப்பொழுது தோன்றியது.

'இனிமேல் டைவர்ஸ்ன்னு பேச மாட்டேன்னு சொல்லுங்க' என்று கேட்கலாமா என்று நினைத்தாள்.

கேட்டிருக்கலாம். தயக்கத்தின் பேரில் விட்டு விட்டாள்.

'எப்பவும்.. நம்ம குடும்பம் இப்படி ஒத்துமையா இருந்தா போதும்' என்றாள்.

அவன் முகம் மலர்ந்தது. கலகலவென்று சிரித்தான் அவன் மனம் நிறையப் பார்த்துக் கொண்டு அமர்ந்திரு தான்.

## 15



'ஏங்க இந்தப் பாண்டியன் சாருக்கு வேற வேலையே.. இல்லையா?' என்றாள் செளம்யா சற்றே எரிச்சலுடன்.

ஒரு ஆப்பிளை எடுத்துக் கழுவித் துண்டுகள் போட்டபடி அமர்ந்திருந்த பாலு கேட்டான்.

'ஏன் கேக்கிறே!' என்றான்.

'இல்லே! போக வர இங்கே வந்தர்றாரு' என்றாள்.

'அந்த ஆளுக்கு எவ்வளவு பிஸினஸ் இருக்கு தெரியுமா? அதையெல்லாம் விட்டுட்டு உன்கிட்டே கொஞ்ச நேரம் பேசிகிட்டிருக்கலாம்னு வர்றாரு. கொஞ்ச நேரம் பேசேன்.. அதில் என்ன தப்பு?' என்றான்.

செளம்யா மௌனமாக அமர்ந்திருந்தாள்.

'செளம்யா.. அந்த ஆள் கிட்டே எனக்கு ஒரு பெரிய ஆர்டர் கிடைக்க வேண்டி.. இருக்கு.. கொஞ்சம் கோ-ஆபரேட் பண்ணேன்' என்றான்.

'அது சரி! நீங்க இல்லாத நேரம் பாத்து கையைக் கிய்யைப் பிடிச்சா.. என்ன செய்ய?' என்றாள்.

'சேச்சே! அப்படியெல்லாம் நடந்துக்க மாட்டாரு..!' என்றான்.

செளம்யா சற்றே சமாதானமானாள். அடுத்த வாரத்தில் ஒரு நாள் பாலு மகிழ்ச்சியாக வந்தான்.

'செளமி! அந்தப் பெரிய ஹோட்டலோட இன்டீரியர் டெக்ரேஷன் ஆர்டர் நமக்குக் கிடைச்சிருச்சு..' என்றான்.

'வெரிகுட்.. நைஸ்!' என்றாள். 'அப்ப ஏங்க நாம ஒரு பெரிய ஆபீஸ் போட்டு ஸ்டாஃப் போட்டர்லாமா?' என்றாள்.



அவன் சிரித்தான்.

'அதெல்லாம்.. ரொம்ப ரிஸ்க்.. அந்த மாதிரி எதுவும் நாம செய்யத் தேவையில்லே. என் ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேர் அந்த மாதிரிக் கன்ஸர்ன் வச்சு நடத்தறாங்க. அவங்களுக்கு சப் காண்டிராக்ட் விட்டுடுவேன்; மொத்தமா ஒரு தொகை வாங்கிட்டு ஒதுக்கிடுவேன்' என்றான்.

'ஓ! அதுக்கு நாமளே எடுத்து செஞ்சா.. உழைப்புக்கேத்த பலன் கிடைக்குமில்லே..'

'அதுதான் பாயிண்ட்..! உழைப்புக் கேத்தன்னு சொன்னியே.. உழைக்கணுமில்லே.. அது நமக்குத் தேவையில்லை. நம்ம சோர்ஸஸ் எதுன்னு பாத்துக்கணும்..' என்றான்.

முதன் முறையாக அவளும் அவனும் தங்கள் கருத்தில் அடிப்படையிலேயே வேறுபட்டவர்கள் என்பது புரிந்தது.

யோசனையுடன் நின்றாள்.

'ஹேய்! என்ன யோசனை! ரொம்ப யோசிக்காதே! உன்னை ரொம்ப யோசிக்க விடறதாவும் ஐடியா.. இல்லை..' என்றான்.

சொன்னதை செயல்படுத்தவும் செய்தான்.

* * *

'ராதா அந்த ராக்கில பருப்பு ஐட்டம் குறையுது.. பாரு எடுத்து வைங்க' என்று ஆணையிட்டுக் கொண்டிருந்தா இலக்கியா.

திடீரென்று உள்ளே நுழைந்தான் மணிவாசகன். இ இயா அந்தப் பிற்பகல் நேரத்தில் அவனை எதிர்பார் வில்லை.

'வாங்க நல்ல நேரத்திலே வந்தீங்க.. எல்லாரும் பிடப் போயிருக்காங்க.. கொஞ்சம் பில்லிங்ல உட்காரு என்று உட்கார வைத்தாள்.

பிற்பகலிலும் பெண்கள் வருகை இருந்தது. 'என்ன திவ்யா.. மேடம்! உங்க பொண்ணு நல்ல மார்க் வாங்கிட்டாளா? என்றும்.

'அப்புறம்.. உங்களவர் எப்ப ஊர்ல இருந்து வர்றார்' என்றும் அவர்கள் குடும்பம் பற்றிக் கூட அவன் விசாரிப்பதைப் பார்த்து அவனுக்கு சற்றே ஆச்சரியம்.

'ஒரு மாசத்துல ரெண்டு மூணு தடவை வந்து வாங்கறாங்க. பழகிட்டாங்க' என்று கணவனைப் பார்த்துச் சிரித்தாள் இலக்கியா.

'ஐயோ! அசத்தற! இலக்கியா' என்று அவனும் சிரித்தான்.

இலக்கியாவுக்குப் பெருமையாக இருந்தது.

'எங்கே உன் சிஸ்டர்ஸ்?' என்றான்.

'இன்னைக்கு இதயா.. வர்லை. இனியாதான் வந்தா.. நாங்க எப்படியும் காலை எட்டு மணிக்குள்ள பேசி.. யார் யார் கடைக்கு வர்றதுன்னு தீர்மானம் பண்ணிக்குவோம்' என்றாள்.

'கடை திறந்து மூன்று மாதமாகி இருந்தது. நன்றாகவே வியாபாரம் ஆகியது. இந்தக் கடையிலிருந்து லாபத்தை வைத்து மற்ற கடைகளையும் நவீனப் படுத்தலாம்' என்று மணிவாசகன் எண்ணியிருந்தான்.

அது பற்றிப் பேசலாம் என்றுதான் வந்திருந்தான். இப்போதெல்லாம் இரவு நேரங்களில் இலக்கியா விரைவில் களைத்து உறங்கி விடுகிறாள். அவள் களைத்து உறங்குகிற விதம் பார்த்து அவனும் அவளை டிஸ்டர்ப் செய்ய விரும்புவதில்லை. உறவு நிலை அதே புள்ளியில்தான் நின்றது.

'பூனைக்கு யார் மணி கட்டுவது!' என்ற ரீதியிலேயே ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடந்து கொண்டிருந்தது.



'இலக்கியா.. உட்காரு. கொஞ்சம் பேசணும்' என்றான்.

கேபினுக்குப் போனார்கள்.

'இலக்கியா.. அடுத்ததா.. ரெண்டு கடைகளை மாடர்னைஸ் பண்ணிரலாம்னு இருக்கேன். எந்த ரெண்டு கடைன்னு சொல்லு' என்றான்.

'முதல்லே.. கோயமுத்தூர் கடைங்களை செய்யலாம். அப்புறம் மத்த ஊருக்கு போயிரலாம்' என்றாள்.

'ஏன்.. அப்படி?'

'இங்கதான் காம்படிஷன் நாளுக்கு நாள் வளர்ந்துட்டே போகுது..' என்றாள்.

அது பற்றிப் பேசினார்கள். விவாதித்தார்கள். ஒரு மணி நேரம் ஓடி விட்டது.

'ஏங்க.. டோர் டெலிவரி.. கேக்கறாங்க' என்றாள்.

'செய்யலாம்!' என்றான். 'ஏற்கனவே மற்ற கடைகள்ல செய்யறோம். இங்கயும் ஆள் போட்டர்லாம். ஆனா, இலக்கியா பெரும்பாலும் உன் கடைக்கு கொஞ்சம் மேல்தட்டு மக்கள்தானே வர்றாங்க..' என்றான் கேலி போல.

'என் கடையா? நம்ம கடைன்னு சொல்லுங்க' என்றாள் இலக்கியா.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து அழகாய் சிரித்துக் கொண்டார்கள்.

வரிசைப் பற்கள் மின்ன அவன் சிரிப்பதை அவள் சற்று நேரம் கண்சிமிட்டாமல் பார்த்தாள். பிறகு கண்ணைத் திருப்பிக் கொண்டாள்.

அதற்குள் வாடிக்கையாளர்கள் வரவே 'இலக்கியா நீ அவர்களைக் கவனி' என்றான்.

கடையை அங்குலம் அங்குலமாக அளக்கிறாற் போல் ஒரு சுற்று வந்தான். விட்டால் 'அம்மா, அப்பாவைக் கூட விற்று விடுவாள் போலிருக்கிறதே' என்கிற அளவுக்கு அங்கே எல்லாப் பொருட்களுமே கிடைக்கிற மாதிரி இருந்ததைக் கவனித்துக் கொண்டான்.

கம்ப்யூட்டரில் அமர்ந்து கணக்கு வழக்குகளைப் பார்த்தான். திருப்திகரமாக இருந்தது.

அதே சமயம் அவன் ஒரு ஷெல்ஃப்புக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கையில் சுந்தர் உள்ளே நுழைந்ததை அவன் கவனிக்கவில்லை. அண்ணன் நிற்பதை சுந்தரும் கவனிக்க வில்லை.

ஒரு வியாபாரியின் கோணத்தில் கடையின் நிறை குறைகளை அலசியபடியே அந்தச் சின்ன அறையின் முன்புறம் வந்தான். காதுகளில் மெல்லிய குரலில் இருவர் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது.

நின்று உற்றுக் கவனிக்க ஆரம்பித்தான் முகம் இறுகியது.

அதே வேகத்தோடு வந்து இலக்கியாவிடம் இரண்டு வாக்கியங்கள் சொன்னான். வேகமாகப் போய்க் காரை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

இலக்கியா சற்று நேரத்தில் மனத்திற்குள் பொங்கிய மகிழ்ச்சியெல்லாம் வடிந்தாற் போல் உணர்ந்தாள். வெறித்துப் பார்த்தபடி நின்றாள்.

* * *

'ஹேய்! இனியா என்ன சாப்பிடக் கொண்டு வந்திருக்கே?' என்றபடி வந்தான் சுந்தர்.

'என்ன மாமா? எப்படித்தான் உங்களுக்கு வாசம் தெரியுதோ? வந்தர்றீங்க?' என்றாள்.



அவன் சிரித்தான்.

'ஐம்புலன்களும் நீங்கன்னு வரும்போது ரொம்ப ஷார்ப்பா.. வேலை செய்யுது' என்றான்.

'ஐயோ.. போதுமே! இன்றைக்கு உங்களுக்குப் பிடிச்ச புளியோதரை!' என்று நீட்டினாள்.

அவன் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு சுவைத்து சாப்பிட்டான்.

'ம்.. பரவால்லே! ரெண்டு மதனிமார்களும் நல்லா சமைப்பாங்க.. நீ எங்கே, நம்ம பேரை ரிப்பேர் பண்ணிடுவி யோன்னு பாத்தேன்' என்றான்.

அவள் முறைத்தாள்.

'உங்களுக்கென்ன தெரியும்? நா இது நாள் வரைக்கும் ஜாலியா இருந்தேன். ஆனா, இப்பல்லாம் உங்க வீட்டுக்கு வரணுமேங்கறதுக்காக சமையல் வீட்டு வேலைன்னு எல்லாத்துலயும் கஷ்டப்பட்டு ட்ரெயினிங் எடுத்துக்கறேன் தெரியுமா?' என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த போதுதான் மணிவாசகன் அங்கே வந்து நின்றான்.

சுந்தர் சிரிக்கும் குரல் கேட்டுக் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

சுந்தர் எழுந்து இனியாவின் அருகில் நின்றான்.

'ஹேய்! எல்லாத்துக்கும் ட்ரெயினிங் எடுத்துக்கலாம். ஆனா, ஒரு விஷயத்துக்கு ட்ரெயினிங் எடுத்துக்க முடியாது.. கூடவும் கூடாது.. தெரியுமா?' என்றான்.

அவள் முகம் சிவந்தது. 'சும்மாயிருங்க மாமா!' என்றாள்.

'அபாண்டமாக குற்றம் சாட்டாதே! நான் இப்ப என்ன செஞ்சேன்? பாரு, இரண்டடி தள்ளித்தான் நிக்கறேன்' என்றான்.

'ஐயோ! உங்ககிட்டே பேசி ஜெயிக்க முடியாது' என்றாள் இனியா.

'இந்த அநியாயத்தைப் பாருங்க! நம்மளையே ஜெயிச்சுப் போட்டே! இனிப் பேச்சில ஜெயிக்காட்டி என்ன?' என்றான்.

அந்தப் புள்ளியில்தான் மணிவாசகன் வேகமாக இடத்தை விட்டு நகர்ந்தான். வேகமாக மட்டுமல்லாமல் கோபமாகவும் நகர்ந்தவன் நேராக இலக்கியாவிடம் போனான்.

'இலக்கியா.. உன் சிஸ்டர் இனியாவை நாளையி லேருந்து கடைக்கு வரவேண்டாம்னு சொல்லு' என்றான்.

'ஏன்? என்ன?' என்று இலக்கியா கேட்டதற்கு முன் பாகவே அவன் விடுவிடுவென்று கடையை விட்டு வெளியேறினான்.

இலக்கியா யோசனையுடன் இனியாவைத் தேடிப் போகையில் சுந்தர் வேறு பக்கம் போயிருந்தான்.

சற்று நேரத்தில் போய்விட்டான். இலக்கியாவுக்கு ஏன் தன் கணவன் அப்படிச் சொல்லிவிட்டுப் போகிறார் என்பதே புரியவில்லை.

அன்றைக்கெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தாள். அதற்குள் வேறு ஒரு பிரச்சினை வந்துவிட்டது.

★ ★ ★

சுந்தர் பெரும்பாலும் இருக்கும் அந்தக் கடையில் போய் கல்லாவில் அமர்ந்து கொண்டான் மணிவாசகன்.

சுந்தர் விசிலடித்துக் கொண்டு வந்தான். அண்ணனைப் பார்த்தவுடன் கப்பென்று வாயை மூடிக் கொண்டான்.

'எங்கடா... போயிட்டு வர்றே?'



'அதுவா! 'மகளிர் மட்டும்' கடையைப் பார்வையிட்டு வர்றேன்.

'வியாபாரத்தை ஒழுங்காக கவனி' என்று மட்டும் சொன்னான். பிறகு மங்கை டிபார்ட்மென்டல் ஸ்டோர்சுக்கு போன் செய்து,

'ஏழு மணிக்கு இந்தக் கடைக்கே வந்துரு. இலக்கியா... நான் பிக்கப் பண்ணிக்கறேன்' என்றான்.

அதே போல் அவளும் வந்தாள்.

'போகலாமா?' என்று பேசிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

அப்பொழுது!

படபடப்பாக சௌம்யா வந்து நின்றாள்.

'என்ன சௌம்யா?' என்று அன்பாக விசாரித்தாள் இலக்கியா.

'நான் உன்கிட்டயும், அண்ணாகிட்டயும் பேசணும்' என்றாள்.

இரண்டு கண்களிலும் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது.

இலக்கியா கணவனைப் பார்த்தாள்.

'உள்ளே போகலாம்' என்று கண்ணசைவில் தெரிவித் தான்.

உள்ளே போனார்கள். அவர்களது எல்லாக் கடையி லேயும் உள்ளே ஒன்றிரண்டு அறைகள் இருக்கும். ஒன்று அலுவலகமாகவும் இன்னொன்று ஓய்வறையாகவும் இருக்கும்.

வாகீசன், சுந்தர், மணிவாசகன் என்று மாற்றி மாற்றி வந்து போய்க் கொண்டிருந்தார்கள். தங்கள் பணிகளைப் பொறுத்து ஓய்வும் எடுத்துக் கொள்வார்கள்.

இப்போது ஒய்வறைக்கு அழைத்துப் போனார்கள்.

சௌம்யா இலக்கியாவைப் பார்த்தாள். பிறகு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'என்ன சௌம்யா.. ஆச்சு! அழாம சொல்லுடி' என்றாள்.

அந்த இடைவெளியில் லலிதாவும், ஹேமாவும் வந்தார்கள். அவர்கள் எப்படி சரியாக வந்தார்கள் என்று யோசிக்கையிலேயே சௌம்யா சொன்னாள் 'நான்தான் அவர்களை வரச் சொன்னேன் என்றாள்.

மணிவாசகன் எழுந்தான். 'நீங்க பேசுங்க!' என்றபடி.

'இல்லே.. நீங்க இருங்க.. நாங்க உங்களோட சப்போட்டுக்காகத்தான் உங்ககிட்டே வந்தோம்' என்றார்கள் ஹேமாவும், லலிதாவும்.

மணிவாசகன் குழப்பத்தோடயே அமர்ந்தான். சௌம்யா பேசினாள்.

பேசப் பேச ஒவ்வொருவரின் முகபாவமும் ஒவ்வொரு விதமாக மாறிக் கொண்டே போனது.

## 16



'ஹேய்! சௌமி! பாண்டியன் வர்றாரு. இங்க ரொம்ப நேரம் இருப்பாரு. தண்ணி, கிண்ணி போடுவோம். நீ கண்டுக்காதே!' என்றான் பாலு.

'ஏங்க' நீங்க இதையெல்லாம் வீட்ல வச்சுக்காம வேற எங்கயாவது வச்சுக்கக் கூடாதா?' என்றாள்.

மேல்மட்டக் கலாச்சாரம் என்ற பெயரில் மது அருந்துவது ஏதோ சாதாரண சடங்காக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை சௌம்யா இந்தத் திருமணத்திற்குப் பிறகு புரிந்து கொண்டிருந்தாள். ஆனால், கணவனை கய



நினைவோடு மட்டும்தான் அருகில் அனுமதிப்பாள். அதுவும் எத்தனை நாளைக்கோ! என்ற எண்ணம் இப்போதெல்லாம் அவள் மனத்தில் கசிய ஆரம்பித்திருந்தது.

இப்போது இந்தத் தடியனை வேறு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். அவள் கடுப்பாக அமர்ந்து கொள்வதைப் பார்த்து அவனே வறுவல் மாதிரி ஏதோ தயாரித்துக் கொண்டான்.

அவளுக்குக் கொஞ்சம் கோபம் தணிந்தது.

'ஹேய்! இங்க பாரு! நான் பேச்சலரா இருந்தப்ப இந்த மாதிரி மாசம் ரெண்டு தடவை நடக்கும். என்னோட வருவாய்க்கெல்லாம் இந்த விஷயத்துக்காக நிறைய செலவு செய்ய முடியாதில்லே. அதனால நானும் சரின்னு விட்டுர்றதுதான். இப்பக் குடும்பஸ்தனாயிட்டேன்னு புரியலை. கொஞ்சம் கொஞ்சமாய் புரிய வைப்போம்' என்றான்.

'ஏன்... இதெல்லாம்.. அவங்க வீட்ல வச்சுக்க வேண்டியதுதானே?' என்றாள்.

'போச்சு.. அவ்வளவுதான் இதெல்லாம் வீட்டுக்குத் தெரியாது. அவரோட வைஃப் காலைல சுப்ரபாதம் பாடி பஞ்ச பாத்திரம் கழுவி பூஜைக்கு உட்கார்ந்தா பதினோரு மணிதான். சாயங்காலமானா கோயில் பூஜைதான். இப்ப எந்தக் கோயில்ல இவரு பேருக்கு அர்ச்சனை நடக்குதோ?' என்றான் பாலு. இடிஇடியென்று சிரித்தான்.

அவள் முகத்திலும் புன்னகை மலர்ந்தது. 'ஆமா.. இந்தக் கருமாண்டிக்கு அப்படியொரு அழகான வைஃப்' என்று முணுமுணுத்தாள்.

அவன் உடனே அவள் தலையைப் பிடித்துக் கொஞ்ச ஆரம்பித்தான். 'எல்லாருக்கும் இப்படி அழகா வெண்டர்ன் கல்ச்சர் புரிஞ்சுக்கிற வைஃபாக் கிடைப்பாங்களா?' என்றான்.

'வெஸ்டர்ன் கல்ச்சர்' என்ற வார்த்தையின் மேல் அவளுக்கு ஒரு மயக்கம் இருந்ததை அவன் வகையாகப் பயன்படுத்திக் கொண்டதை அவள் அறியவில்லை.

கல்யாணமான இரண்டாம் மாதத்தில் வாரம் இரண்டு முறை பாண்டியன் வரவே அவளுக்குக் கவலையேற் பட்டது.

ஒரு நாள் அவசரமாக வந்தான்.

'இத பாரு சௌமியா! இன்னைக்குப் பாண்டியன் வர்றாராம். ஆனா நான் கொஞ்சம் வெளியே போக வேண்டியிருக்கு. நீ கொஞ்சம் என்டர்டெயின் பண் ணிடறியா!' என்றான்.

அவள் முகம் கோபத்தில் சிவந்தது.

'இத பாருங்க! அப்படிக் இப்படி கண்ட பயலுங்களும் நீங்க இல்லாதப்ப வந்தா கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடுவேன்' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் வெறித்துப் பார்த்தான். பிறகு சிரித்துச் சமாளித்தான்.

'ஐயோ! பத்ரகாளி! நீ செஞ்சாலும் செய்வே!' என்றான்.

அதற்குப் பிறகு இரண்டு முறை அவனும் கூட இருந் தான். இப்போதெல்லாம் ஆண்கள் அப்படி அமர்ந்தால் அவள் உள்ளே ஏதோ வேலையிருக்கிறாற்போல் போய் விடுவாள்.

அவனும் எதுவும் கேட்டதில்லை. அவள் போக்கில் விட்டு விடுவான். போன வாரத்தில் ஒரு நாள் அவன் மொட்டை மாடியில் போனில் பேசிக் கொண்டிருந்தான்.

'சார்! கொஞ்சம் டைம் குடுங்க.. மிடில் கிளாஸ் ஃபாமிலி பாருங்க பயப்படறாங்க. கொஞ்சம் கொஞ்ச



மாத்தானே வழிக்குக் கொண்டு வரணும்' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

'யாரு.. போன்லே?' என்றாள்.

'இல்லே! ஒரு காண்ட்ராக்டர். மிடில் கிளாஸ் ஃபாமி லிக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்கறாரு. இன்டீரியர் டெக்கரேஷன் வேணுங்கறாரு. ஆனா, செலவுக்கும் யோசிக்கறாரு. நீயே சொல்லு.. ஒண்ணு வேணும்னா இன்னொண்ணை விட்டுக் கொடுத்துத்தானே ஆகணும்?' என்றான்.

'ஒண்ணை விட்டுட்டு இன்னொண்ணை வாங்கறதுக்கு இருக்கற ஒண்ணையே சந்தோஷமா வச்சுக்கறது' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் திகைத்தான். பிறகு சிரித்தான்.

'ஹேய்.. சில நேரத்துல எதிர்பாராத மாதிரி போட்டுத் தாக்கிடறே தெரியுமா?' என்றான்.

'எதுக்கு.. இப்ப.. இந்த ஐஸ்!' என்று அவள் சிரித்தாள்.

'இதுக்குத்தான்' என்று நெருங்கினான்... சிரித்தார்கள்.

அன்றைக்கு வாழ்க்கை இப்படியே இலகுவாகப் போய்விடும் என்றுதான் நினைத்தாள். ஆனால் அப்படிப் போகவில்லை.

★ ★ ★

'ஆஹா! கோபி மஞ்சூரியன், சில்லி சிக்கன்... பாண்டியன் சாரை வாங்கன்னு சொல்லீர வேண்டியது தான்' என்றான் பாலு.

சௌமியா திரும்பி பாலுவை முறைத்தாள்.

'ஹேய்.. ஹேய்! கண்டுக்காதே! அந்த ஆளு இன்னும் ஆறு மாசத்துல ஃபாரின் போறாரு. அது வரைக்கும்தான் தொல்லை' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

அன்றைக்கு பாண்டியன் வந்து ஒரு அரைமணி நேரத்தில் பாலுவுக்கு போன் வந்தது.

அவன் உள்ளே வந்தான். அவள் அப்போது சமைய லறையில் வேலையாக இருந்தாள்.

'ஹேய்.. குட்லி.. தங்கம்ஸ்' அரை மணி நேரம் இவரை டாலரேட் பண்ணிக்கோ.. காயத்ரி மேடம் கூப்பிடறாங்க.. நான் போயிட்டு வந்தர்றேன்' என்றான்.

அவள் பாவமாகப் பார்த்தாள். அவள் கன்னத்தில் தட்டி விட்டு வெளியே வந்தான்.

'சார்' என் வைஃப் ரொம்ப டெலிகேட்டா ஃபீல் பண் றாப்ல. பாத்துக்கங்க. இப்ப வந்தர்றேன்' என்று போனான்.

அவளுக்கே ஆச்சரியம் என்னவென்றால் அன்றைக்கு பாண்டியன் வெகு நாகரீகமாக நடந்து கொண்டதுதான்.

மாறாக புறப்படும்போது 'வர்றீங்களா மேடம், காயத்ரி மேடம் பங்களாவில விட்டுட்டுப் போறேன்' என்று இறக்கிவிட்டு விட்டுப் போனான்.

கணவனுடைய அனுமதி இல்லாமல் வந்திருக்கிறோமே என்ற தயக்கத்துடன் உள்ளே கூர்க்காவிடம் சொல்லி விட்டு நுழைந்தாள்.

போர்ட்டிகோவில் தயக்கத்துடன் நுழைந்தாள். இரண்டு வேலைக்காரப் பெண்கள் அவள் நிற்பதையறியாமல் பக்கவாட்டில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ஏய்.. ராக்கம்மா! இந்த ஆளு இப்பல்லாம் அடிக்கடி வந்தர்றாரே!' என்றாள்.

'யாரு.. அந்த பாலுவையா சொல்றே?'

'ஆமா...!'.



'அம்மாவுக்கு இந்த ஆளை ரொம்ப பிடிச்சுப் போச்சு போல இருக்கு. அது சரி... அம்மாவுக்கும் இள வயசு.. ஐயா எப்பப் பாரு பணம், பிஸினஸ்ன்னு பறக்கறாரு.. அந்த அம்மாதான் என்ன செய்யும்!' என்றாள்.

இருவரும் கிளுகிளுவென்று சிரித்தார்கள். இன் னொருத்தி சொன்னாள்.

'பெரிய இடத்து விவகாரம் நாமளும் நாலு வருஷமாப் பாத்துட்டுத்தானே இருக்கோம். ஐயாவுக்கு அரசல் புரசலாத் தெரியாமயா இருக்கும். கண்டுக்க மாட்டாரா யிருக்கும். அப்படி மீறிப் பேசினா, அம்மா விவாகரத் துன்னு ஆரம்பிப்பாங்க 'நமக்கெதுக்கு விடு.. இதெல்லாம்..' என்றாள்.

சௌமியாவுக்கு பொத்துக் கொண்டு வந்தது. அடுத்த நாள் பாண்டியன் வந்தபோது அவள் கண்கலங்கத் தான் கேட்டதைச் சொன்னாள்.

அவர் ஒரு பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

'எனக்கும் தெரியும்மா. பெரிய பணக்கார இடங்கள்ல இதெல்லாம்.. சகஜம்தான். நீ எதுவும் பாலுகிட்ட கேட் ராதே. ஏதோ தெரியாத மாதிரி இருக்கற வரைக்கும்தான் பயமிருக்கும். நேரடியாக் கேட்டீன்னா.. குளிர் விட்டுப் போகும்' என்றார்.

சௌமியாவுக்கும் அது சரியென்றே தோன்றியது. பல வழிகளிலும் விசாரித்தாள். பாலு அடிக்கடி காயத்ரி மேடத்தைப் பார்க்கப் போவதும் அவர்கள் தனிமையில் நேரம் கழிப்பதும் தெரிய வந்தது.

யோசித்தாள். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று ஒரு நாள் காயத்ரி மேடத்தின் வீட்டுக்கே போனாள்.

* * *

விசித்திரமான பார்வையுடன் இறங்கி வந்தாள் காயத்ரி. அழகாக இருந்தாள்.

'யார் நீங்க! என்ன வேணும்?'

'மேடம்.. நான் உங்ககிட்டே தனியாப் பேசணும்'

'பேசலாம்.. உட்காருங்க!' என்றாள் காயத்திரி. அமர்ந்திருந்தார்கள். ஏற்கனவே சிவந்த முகத்தில் தீட்டப்பட்டிருந்த லிப்ஸ்டிக் இன்னும் சிவப்பாகக் காட்டியது.

'சொல்லுங்க!'

'மேடம்.. நான் மிஸஸ்.. பாலு!'

'ஓ! சரி! என்ன வேணும்!'

'மேடம்.. இது ரொம்ப டெலிகேட்டான விஷயம்.. எப்படிப் பேசறதுன்னு தெரியலே.. ஆனா.. பேசித்தான் ஆகணும். என் ஹஸ்பெண்ட் இங்க வர்றதைப் பத்தி எல்லாரும் தப்பாய் பேசறாங்க.. அவருகிட்டே பேச எனக்கு பயமாயிருந்துச்சு. அதான்.. உங்ககிட்டே' என்றாள்.

'ஓ..! பாலு எங்கிட்டே சொன்னது வேறமாதிரியிருக்கே. சௌமிக்கு எல்லாம் தெரியும்னு சொன்னாரே!' என்றாள்.

சௌமியா திகைத்தாள். வெகுவான தயக்கத்துடன்.. 'டு யு மீன் டுசே.. தட் திஸ் அன் அஃபேர்!' என்றாள்.

காயத்ரி சிரித்தாள். 'அஃபேர்! நாட் அட் ஆல் ஜஸ்ட் எ டெம்பரரி ரிலேஷன் ஷிப்' என்றாள்.

சௌமியா திகைத்துப் போனாள்.

'கொஞ்ச நாளானா இந்த மாதிரி உலகத்தை நீங்க புரிஞ்சுக்குவீங்க.. யு.ஸீ! ரெண்டு பேருக்கும் யூத் இருக்கு- எங்க வீட்டுக்காரர் நிறைய சம்பாதிச்சுக் கொட்டறாரு- எனக்கே சொந்த வருமானம் இருக்கு. வி ஹேவ் அவர் ஓன் ப்ளஷர்ஸ். இதில என்ன தப்பு இருக்கு?' என்றாள்.



சௌம்யா திகைத்தாள். 'மேடம், என்னைக்கு இருந்தாலும் இது உங்களுக்குத் தெரியத்தான் போகுது. அதனாலதான் இப்படி ஓபனாய்ப் பேசறேன். யு அண்டர்ஸ்டாண்ட் உங்க வீட்ல பாலுகிட்டே கேட்டீங்கன்னா.. இல்லவே இல்லைம்பாரு.. இங்க இல்லேன்னா.. வேற எங்காவது சந்திக்க.. எங்களால முடியாதா? கண்டுக்காம இருங்க.. கொஞ்ச நாள்ல பெரிய பணக்காரரா ஆயிடுவீங்க!' என்றாள்.

'யு..மீன்! யு ஆர் ஹெல்பிங் ஹிம்!' என்று விழிகள் தெறிக்கிறாற் போல் பார்த்தபடி கேட்டாள்.

'மை காட்! உங்களுக்கு எல்லாம் விலாவாரியாகச் சொல்லணுமா! நான் மட்டுமில்லே.. அவருக்கு நிறைய என்னை மாதிரி ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க' என்றாள் காயத்திரி.

சௌம்யா நடைபிணம்போல் வீடு வந்து சேர்ந்தாள்.

அவளிடத்தில் மாற்றம் தெரிந்தது போலும் பாலு பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

'ரெஸ்ட் எடுத்துக்க' என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

நாளாக நாளாக அந்த வீட்டில் இருப்பது ஏதோ நரகத்தில் இருக்கிறாற் போல் இருந்தது. அதனால் பாண்டியன் சாரைக் கூட அவள் இப்போதெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

பாண்டியனிடம் தன் மனபாரத்தை சொல்லிக் கொட்டி அழுதாள்.

'காயத்ரி.. மேடம் கிட்டே அப்பாயின்மெண்ட்' என்று கணவன் அடிக்கடி போய் வருவதை அவள் வெறுமையாகப் பார்ப்பாள்.

அன்றைக்குப் பாண்டியன் சொன்னார்.

'சரிம்மா! விடு! திருந்தி வருவார். நீ கவலைப் படாம சந்தோஷமா இரு. உனக்கு எது வேணும்னாலும் நான் தரேன்' என்றார்.

அது சம்பிரதாயமான ஆறுதல் என்றுதான் நினைத்தாள்.

அம்மாவிடம் பேசலாமா என்று யோசித்தாள். 'ஐயோ.. வேண்டாம்! நொறுங்கிப் போய் விடுவார்கள்.'

'சரி.. ஆம்பளைங்கன்னா, அப்படித்தான் முன்னே.. பின்னே.. இருப்பாங்க' என்று எண்ணிக் கொண்டாள்.

இப்போதெல்லாம் பாண்டியன் வந்து அமர்ந்து விட்டுப் போவதைக் கூட அவள் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை.

அந்த சம்பவம் நடந்து பெரிய அதிர்ச்சி அவளைத் தாக்கி அடி வயிற்றையே கலக்கும் வரை.

★ ★ ★

அன்றைக்கும் பாண்டியன் வந்தான்.

'உட்காருங்க சார்..!' என்று உட்கார வைத்துவிட்டு அவருக்கு 'சைட்டிஷ்' எடுத்து வரப் போனாள்.

'ஏம்மா.. கொஞ்சம் காபி கிடைக்குமா?' என்று உள்ளே வந்தார்.

அவள் மௌனமாக காபி கலந்து கொடுத்தாள்.

அவர் நகராமல் அங்கேயே நின்றார்.

'ஏம்மா.. கடவுள் இப்படி சோதிக்கறாரு. எனக்கு சாமியார் மாதிரி ஒரு வைஃப். உனக்கு பாலு மாதிரி ஒரு ஹஸ்பெண்ட், என்று உளறிக் கொண்டே முன்னால் வந்து சோபாவில் அமர்ந்தார்.

அவளும் ஒரு கப் காபி எடுத்துக் கொண்டு எதிர் சோபாவில் அமர்ந்தாள்.



'பேசாம.. நான் சொல்றதைக் கேளும்மா!' என்றார்.

'சொல்லுங்க..!' என்றாள். எதார்த்தமாக.

சொன்னார்.

நூறு இடிகள் தலையில் ஒன்றாக இறங்கினாற் போல அவள் அவரை வெறித்துப் பார்த்தாள். உறைந்து நின்றாள்.



17

இரவெல்லாம் உறக்கமே வரவில்லை. இந்தத் திருமணத்தின் மூலமாக எவ்வளவு பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டோம் என்பது புரிந்தது.

என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்படி பாண்டியன் என்ன சொன்னார்.

'அம்மா! பாலு நீ நினைக்கிற அளவுக்கு ஒண்ணும் நல்லவன் இல்லே. உனக்கு இப்போதைக்குத் தெரிந்தது காயத்ரி மேடம்தான். ஆனா, அவனுக்கு நிறைய பெரிய இடங்கள்ல தொடர்பு இருக்கு. இன்டீரியன் டெக்ரேஷன் கறது சும்மா ஒரு பாவ்லா.. நிறைய பெரிய இடத்துப் பெண்கள் வாழ்க்கையில திருப்தி இல்லாம இருக்காங்க.. அவங்களுக்குப் பணம் இருக்கு. அவங்களைப் புரிஞ்சுக்காத கணவன்மார்கள். அதுல புழுங்கிப் புழுங்கி சாகறாங்க நிறையப் பேரு. ஆனா, சொத்து பணம்னு இருக்கிற பெண்கள் தப்பியோட வழியைப் பாத்துக்கறாங்க.. இவங்களையெல்லாம் பாலு மாதிரி ஆண்கள் யூஸ் பண்ணிக்கறாங்க' என்றார்.

அவள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள். 'சார்! எங்க வீட்டுக்காரர் கொஞ்சம் அப்படி இப்படிதான். ஆனா, அதுக்காக அபாண்டமாக் குத்தம் சொல்லாதீங்க.. சார்; எங்கயும் வெளியில தங்கற வேலையே கிடையாது' என்றாள்.

பாண்டியன் விகாரமாகச் சிரித்தார்.

'ஐயோ! நீ ரொம்ப வெகுளிம்மா.. இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் நைட்லயா வச்சுக்குவாங்க' என்று மறுபடியும் சிரித்தார்.

இதற்குள் சௌம்யாவின் அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது.

'இதையெல்லாம் எதற்காக இந்த ஆள் நம்மகிட்டே சொல்லிகிட்டிருக்காப்ல.. இது அனுதாபமா? முதலைக் கண்ணீரா?' என்று கேள்வி எழுப்ப ஆரம்பித்தது.

'ஓ!' என்றாள்.

'ஆமாம்மா! இப்பப் பாரேன். இந்த வீடு நான் வாங்கிக் குடுத்தது. அதனால்தான் இவ்வளவு உரிமையா உள்ளே வர்றேன்' என்றார்.

அவளுக்கு இதயமே நின்று விடும் போலாகிவிட்டது.

'அது மட்டுமல்ல.. எங்களுக்குள்ள ஒரு அக்ரீமென்ட் இந்த வீட்டை நான் எதுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறேன் தெரியுமா? உனக்கும் எனக்கும் ஃப்ரெண்ட்ஷிப் டெவலப் பானா அவன் கண்டுக்கக் கூடாது. சரின்னு ஒத்துகிட்டிருக்கான்' என்றார்.

'பொய்! சுத்தப் பொய்!' என்றாள் காட்டமாக.

'சத்தியம்! இது உண்மை!' என்றார் பாண்டியன் அதே அழுத்தத்துடன்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

'ஆனா, எனக்கு ஒரு பாலிஸி! விருப்பப்படாத எந்தப் பொண்ணையும் வலுக்கட்டாயமாத் தொடறதில்லே; ஆனா, உனக்குப் புரியறதுக்காக இதையெல்லாம் பேசறேன். இப்படிப்பட்ட ஹஸ்பெண்டுக்காக நீ எதுக்கு ஏங்கணும்? கவலைப்படணும்?' என்றார்.



அவள் மௌனமாகத் தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அதையே சம்மதம் என்று எடுத்துக் கொண்டு அவர் தொடர்ந்து பேசினார்.

'பாரும்மா! இங்க நிறையக் குடும்பங்கள்ல இப்படித்தான் நடக்குது. இப்ப நீயே டைவர்ஸுக்குப் போனேன்னா, எப்படியிருந்தாலும் உன் கௌரவம் கெட்டுப் போகும். பெத்தவங்களும், வருத்தப்படுவாங்க.. அதுக்காகத்தான் நடுத்தரக் குடும்பமாப் பாத்துப் பொண்ணெடுத்திருக்கான். இந்த விஷயத்துக்கு ஒத்து வர்லேன்னா.. உனக்குத் தொல்லை குடுப்பான். என்னைப் பகைச்சுகிட்டு உங்க குடும்பம் இந்த ஊர்ல பொழைக்க முடியுமா? சொல்லு! அதுக்குத்தான் வகையாக் கொண்டு வந்து உன்னை சிக்க வச்சிருக்கான்' என்றார்.

சௌம்யா கசப்பாகச் சிரித்தாள். 'எல்லாத்துல இருந்தும் தப்பிக்கறதுக்கு ஒரு வழி இருக்கு தெரியுமா? சத்தமில்லாம தூக்க மருந்து சாப்பிட்டு செத்துப் போயிடுவேன்' என்றாள்.

பாண்டியன் இதை எதிர்பார்க்கவில்லை. சற்றே மௌனமாகிவிட்டார். அதற்குப் பிறகு சொன்னார்.

'அம்மா.. நீ ஏம்மா.. கவலைப்படறே! நான் உன்னை ராணி மாதிரி வச்சுக்குவேன். அப்படி உனக்கு மனசு ஒத்து வர்லைன்னா.. இவன்கிட்டேயிருந்து டைவர்ஸ் வாங்கிரலாம்.. நானே உன்னை ரெண்டாம்தாரமாய் கல்யாணம் செஞ்சுக்கறேன்' என்றார்.

அவள் வெகுநேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள். 'யோசிச்சுச் சொல்றேன்.. சார்' என்றாள்.

ஆர்ப்பாட்டம் செய்வாள், அழுவாள் என்றெல்லாம் பாண்டியன் எதிர்பார்த்திருக்க அவள் அமைதியாகப் பதில் சொன்னது கண்டு பாண்டியனே கொஞ்சம் ஆச்சரிய

மானார். அவள் அதற்குப் பிறகு வேறு பொதுப்படையான விஷயங்களைப் பேசி அனுப்பி வைத்தாள்.

கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

* * *

'ஓஹோ! பாண்டியனே சொல்லிட்டாரா? நல்லதாய் போச்சு.. நான் எப்படிடா சொல்றதுன்னு நினைச்சுட்டிருந்தேன்' என்றான் பாலு.

சௌம்யா பாலுவைப் பற்றி பாண்டியன் சொன்னதையெல்லாம் சொல்லாமல் தன்னிடம் மட்டும் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புவதாகச் சொன்ன மாதிரிச் சொன்னாள்.

'போகலாம்.. இவர்கள் வழியில் போவது போல் பேசி எவ்வளவு தூரம் போகிறார்கள்' என்று பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அவன் பாணியிலேயே பேசினாள்.

'ஆமா.. சௌமி, நானே உன்கிட்டே இதைப் பத்திப் பேசணும்னு இருந்தேன். மனுஷன்னு இருந்தா ஒண்ணு பணபலம் இருக்கணும். இல்லே. ஆள் பலம் இருக்கணும். ரெண்டும் இல்லேன்னு வச்சுக்க.. வாழ்க்கையே நரகம் தான். உனக்கும் எனக்கும் பெரிய அளவுல என்ன சப்போர்ட் இருக்கு? நம்ம மூலதனமே பர்ஸனாலிட்டி தான். அத வச்சுத்தான் நாம முன்னேறிக்கணும்' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

'ம்.. அப்படியா.. சொல்லுங்க?' என்று ஆர்வமானவள் போல் நடித்தாள் சௌம்யா. ஒன்றும் தெரியாதவள் போல் 'லேடீஸ் வேண்ணா அப்படி எனக்குத் தப்பா இருக்கலாம் ஜென்ட்ஸ் கூடவா.. அப்படி இருப்பாங்க?' என்றாள்.

'வொய்.. நாட்? எனக்கே பெரிய பெரிய இடத்தில் தொடர்பு இருக்கு. எத்தனை இடம் வாங்கிப் போட்



டிருக்கேன் தெரியுமா? இனிமே பணமாத் தேத்திரலாம்னு இருக்கேன்' என்றான் சாவதானமாக.

சௌம்யாவுக்கு கேட்கவே குமட்டிக் கொண்டு வந்தது.

'நீ உன் வழியைப் பாத்துக்க. நான் என் வழியைப் பாத்துக்கறேன். ஒழுக்கம், கிழுக்கம்னு எதுவும் தேவையில்லே. பணம் மட்டும் போதும். இல்லே..' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

'குட்.. கரெக்டாப் புரிஞ்சுகிட்டே..' என்று சிரித்தான்.

மெதுவாக அவளை நெருங்கினான். ஆனால் சௌம்யாவுக்கு அவனைத் தொடவே பிடிக்கலை. மெதுவாக விலகிக் கொண்டாள்.

'ப்ளீஸ்! இன்னைக்கு வேண்டாமே!' என்றாள்.

அவனும் பெரிதாக வற்புறுத்தவில்லை. அவளுக்குள்ளே பற்றிக் கொண்டு எரிகிற மாதிரி இருந்தது.

'சே! எப்படிப்பட்ட இடத்தில் வந்து மாட்டிக் கொண்டோம்' என்று மறுகிப் போனாள்.

சரியாகக் கணக்குப் போட்டுத்தான் பெண் எடுத்திருக்கிறான். தனது அம்மா, அப்பாவுக்குப் பெரிதும் செல்வாக்கு இல்லை. இந்தப் பாண்டியன் மாதிரி ஆள் பிரச்சினை செய்தால் தாங்குகிற சக்தியும் இல்லை. பேசாமல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்கிற அளவுக்குப் போனாள். ஆனால் அப்போது கல்லூரி நாட்களில் நடந்த ஒரு நிகழ்வு அவளுக்கு நினைவு வந்தது.

சௌம்யா, இலக்கியா, ஹேமா, லலிதா நான்கு பேரும் எப்போதும் ஒன்றாக இருப்பார்கள். பேசுவார்கள். வருவார்கள். அவர்கள் படித்த கல்லூரியில் அதே இரண்டாமாண்டு மாணவி ஒருத்தி ஏதோ காதல் விவகாரத்தில்

தற்கொலை செய்து கொண்டாள். அப்போது இலக்கியா சொன்னது நினைவுக்கு வந்தது.

'என்ன இப்போ? காதல் தோல்வியானா வாழ்க்கையே முடிஞ்சு போச்சா? கல்யாணம் வேண்டாம்னு வச்சுகிட்டு வேற ஏதாவது சோஷியல் சர்வீஸ் அது இதுன்னு வச்சுகிட்டு வாழ்க்கையை நடத்திர வேண்டியதுதானே. வேற ஒரு நல்லவன் கிடைக்காமலா போயிடுவான்?' என்றாள். சில நேரங்களில் தன்னைக் காட்டிலும் வாழ்க்கையைப் பற்றித் தெளிவான முடிவுகள் அவளுக்கிருக்கிற மாதிரித் தோன்றியது. அவளிடம் ஆலோசனை கேட்கலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

கூடவே இன்னொரு சந்தேகமும் தோன்றியது. 'அப்படி இவர்கள் வழிக்கு ஒத்து வராமல் முரண்டு பிடித்தால் இவர்கள் என்ன செய்வார்கள் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று நினைத்தாள்.

ஒன்று மட்டும் முடிவு செய்து கொண்டாள்.

தன் உள்ளக் கருத்தை மட்டும் வெளிப்படையாகக் காட்டி விடக் கூடாது என்பதுதான் அது. அதனால் பாலு சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்கிற மாதிரியே நடித்தாள்.

'ஏங்க... அது எப்படிங்க.. கரெக்டா நான் இந்த வாழ்க்கைக்கு ஒத்து வருவேன்னு நினைச்சு என்னை செலக்ட் பண்ணினீங்க.. சப்போஸ் நான் இதுக்கெல்லாம் ஒத்து வராத ஆளா.. இருந்தா?' என்றாள்.

'ஒத்து வரலேன்னா என்ன செய்வே? கேஸ் போடு வியா? நான் கோர்ட்ல என்ன சொல்வேன் தெரியுமா? என் மனைவிதான் கேரக்டர் இல்லாதவ. என் ஃபிரண்ட் பாண்டியன் எங்க வீட்டுக்கே அடிக்கடி வந்து ரொம்ப நேரம் இருந்துட்டுப் போவாரு. நான் இல்லாதப்ப எல்லாம்



வந்துட்டுப் போனாரா இல்லையான்னு அக்கம் பக்கத்தில விசாரிங்க' அப்படீம்பேன்.'

உண்மையாகவே சௌம்யா அரண்டு போனாள். இரண்டு பேரும் திட்டம் போட்டு அக்கம் பக்கத்தில் தன் பெயரைக் கெடுத்திருக்கிறார்கள் என்று புரிந்தது. தான் அதிகமாகப் போய் வெளியில் அக்கம் பக்கத்தில் பழகாததும் எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது புரிந்தது?

அன்றைக்குப் பிற்பகல்!

பாலுவிடம் நான் என் ஃபிரெண்ட் இலக்கியாவைப் பாத்துட்டு வரேன் என்று யதார்த்தம் போல் சொல்லிவிட்டு வெளியே வந்து ஹேமாவுக்கும், லலிதாவுக்கும் போன் செய்து விட்டு இங்கே வந்திருந்தாள்.

இடையிலையே அழுகை வெடிக்க உதடுகள் துடிக்க 'என்னுடைய கேவலத்தை நானே சொல்லிக்க வேண்டி யிருக்கே' என்று வேதனைப் பட்டுக் கொண்டே சொல்லி முடித்தாள்.

'சொல்லி முடித்து விட்டு விக்கி விக்கி அழுதாள். இலக்கியாவும், மற்ற இரண்டு பெண்களும் தேற்ற முயன்றார்கள்.

மணிவாசகன் இடையிலே புகுந்து 'விட்டுரு.. இலக்கியா.. அழுது தீர்க்கட்டும்' என்று வெளியே வந்து நின்று கொண்டான்.

'ஐயோ! இலக்கியா! அழகு.. அழகுன்னு ஆட்டம் போட்டேனே.. எனக்கு ஆண்டவன் எப்படி ஆப்பு வச்சுட்டான் பாத்தியா' என்று வெடித்துக் கதறினாள்.

மற்ற மூவரும் ஒருவிதக் கையாலாகாத் தனமான அமைதியுடன் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார்கள்.

அழுது ஓய்ந்தாள்.

அந்த இடைவெளியில் வெளியில் நின்ற மணிவாசகன் சுந்தருக்கு போன் செய்து வரவழைத்தான்.

தங்களது சொந்தப் பிரச்சினைத் தூக்கி ஒரு புறம் வைத்துவிட்டு இந்தப் பெண்ணுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று நினைத்தான்.

'டேய், சுந்தரு, இலக்கியாவோட ஃபிரண்டு சௌம்யா ஏதோ பிராப்ளத்துல வந்திருக்காப்பல.. யாரோ பாண்டியன், பாண்டியன்கறாப்ல யாருன்னு விசாரி' என்றான்.

லேசாகக் கோடி காட்டினான். சுந்தர் டக் கென்று புரிந்து கொண்டான்.

லேசு பாசாக விசாரித்து சௌமியாவிடம் விவரங்களை வரவழைத்தான். அண்ணனிடம் சொன்னான்.

'அண்ணா! அதாண்ணா, அந்த ரியல் எஸ்டேட் ஃபிராடு. ஒரே நிலத்தை நாலு பேருக்கு வித்து பிராப்ளமாயி, நீயும், சுரேஷ் சாரும் உங்க ஃபிரண்டுக்கு பிராப்ளம் சால்வ் பண்ணிக் குடுத்தீங்களே. அந்த ஆளு!' என்றான்.

மணிவாசகன் ஒரு கணம் துணுக்குற்றான்.

'அவனா..! அவன் உலக மகா ஃபிராடு ஆச்சே! எல்லா மட்டத்துலயும் ஆள் பிடிச்சு வச்சிருப்பானே!' என்றான்.

சுந்தர் உடனே 'அண்ணா! சுரேஷ் அண்ணாவைக் கூப்பிடுங்க.. ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசுங்க' என்றான்.

சுரேஷ் வந்தான்.

மளமளவென்று திட்டம் போட்டார்கள். அதற்கேற்ப இலக்கியாவே பாலுவுக்குப் போன் செய்தாள்.

'என்ன பாலு சார்! உங்க வைஃபை எங்களுக்கும் கொஞ்சம் விட்டுக் குடுங்க.. ஒரு ரெண்டு நாள் எங்க வீட்ல இருந்துட்டு வரட்டுமே, உங்களைக் கேக்கணும். நீங்க சம்மதிச்சாத்தான் இருக்க முடியுங்கறா' என்றாள்.



'ஓ! தாராளமா இருந்துட்டு வரட்டுமே!' என்றான்.

'அப்பாடா! ரெண்டு நாள் அவகாசம் கிடைச்சது' என்றாள் இலக்கியா.

நாடகத்தை மேலும் உண்மையாக்க இலக்கியாவும், சௌமியாவுமே அவர்கள் வீட்டுக்குப் போனார்கள்.

பாலு அந்த நேரம் வெளியே போயிருந்தான். சாவியிருக்கும் இடத்திலிருந்து எடுத்து முக்கியமான நகைகள், பட்டுப்புடவைகள் என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.

புறப்பட்டார்கள்!

பாலுவுக்கும் சந்தேகம் வராத வண்ணம் தினமும் இரண்டு முறை போனில் பேசினாள் சௌம்யா.

தங்கள் வீட்டுக்குப் போனவுடனே சுரேஷை அங்கேயே வரவழைத்தான் மணிவாசகன்.

சுரேஷ் தெளிவாகத் திட்டம் போட்டான். இலக்கியாவும் தன்னுடைய மனதைத் தெளிவு படுத்திக் காட்ட இதை ஒரு சார்பாகப் பயன்படுத்திக் கொண்டு

'வாங்க சுரேஷ் அண்ணா!' என்று வாய்க்கு வாய் அண்ணா போட்டாள். ஒரு நிமிடம் கண்கள் கருங்க அவளைப் பார்த்த கணவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

சுரேஷ் அப்போதுதான் சொன்னான். 'மணி,! அந்தப் பாண்டியனோட மாமனார் யாரு தெரியுமா! தெய்வ நாயகம் சார்! உனக்கு வேண்டியவராச்சே...!' என்றான்.

'ஓ.. அவரா!' என்று யோசித்தான். பிறகு உறுதியாக எழுந்தான்.

'அங்க ஆரம்பிப்பம்டா.. ஆட்டத்தை!' என்று எழுந்தான்.

அடுத்து வந்த இரண்டு நாள்களிலும் வேறு மணி வாசகனைப் பார்த்தாள் என்பதால் கொஞ்சம் மிரண்டு தான் போனாள்.



## 18

'ஹலோ நான் மணிவாசகன் பேசறேன். தெய்வநாயகம் அய்யா இருக்காங்களா!' என்று கேட்டான்.

தெய்வநாயகம் உடனே லைனில் வந்தார். நலம் விசாரித்தார் போலும்.

'ஐயா.. நான் நல்லாயிருக்கேன். நீங்க நல்லாயிருக் கிங்களா? உங்ககிட்டே தனியா ஒரு பத்துப் பதினைந்து நிமிஷம் பேசணும்.. இல்லைங்கய்யா.. நான் நேர்ல வரமுடியாதுங்கய்யா. நான் வரத் தயார். ஆனா, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரை நான் நேர்ல வராமலேயே எங்கிருந்து விஷயங்கள் உங்களுக்குத் தெரிஞ்சுதுன்னு காட்டாமலேயே பிரச்சினைய முடிக்கணும்' என்றான்.

அந்தப் பக்கம் பதில் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனான்.

'நீங்களா? பொள்ளாச்சிக்கு நம்ம வீட்டுக்கே வர்றீங் களா? வாங்க.. வாங்க..! காலையிலயா? ஏழு மணிக்கா? ரொம்ப சந்தோஷம். நான் ரொம்ப நாளா கூப்பிட்டுக் கிட்டிருக்கேன். இப்படி வாய்ச்சிருக்கு.. என கலகலவெனச் சிரித்தான்.

அன்றிரவு!

இலக்கியா அவன் அறைக்கு வந்த போது 'இலக்கியா, சௌம்யா ரொம்ப பேட் மூட்ல இருக்காங்க.. எதுக்கும் நீ கூடவே இரு..!' என்று அனுப்பி வைத்தான்.



சுரேஷும் கூட அதிகாலையிலேயே வந்து விட்டான். ஆனால் மணிவாசகனுடன் கூட அவன் ஒரு மௌன சாட்சியாய் அமர்ந்து கொண்டானே தவிர தலையிட வில்லை.

தெய்வநாயகம் பிள்ளையிடம் சௌம்யாவை பேசச் செய்தார்கள். எல்லாவற்றையும் சொல்லி முடித்தவுடன் அவள் கலங்கிப் போன குரலில் சொன்னாள்.

'ஐயா! இப்பக் கூட நான் தற்கொலை பண்ணிக் கலாம்னுதான் நினைச்சனுங்க. ஆனா, எங்க அம்மா, அப்பாவுக்கு என்னை விட்டா யாரும் இல்லைங்க.. நான் செத்துப் போனதுக்கு அப்புறம் அவள் படப்போற வேதனையை நினைச்சுத்தான்.. உயிரோட இருக்கறனுங்க' என்று அழுதாள்.

'ஐயய்ய! என்ன தாயி பேசற நீ? இந்த மாதிரி அயோக் கியப் பயலுங்களை சாகடிக்கறதை விட்டுப் போட்டு நீ எதுக்கு அம்மிணி சாகோணும்? நீ தைரியமா இரு.. அம்மிணி!...' என்றார். பின்னர் திரும்பி.

'சுரேஷு.. நீ சொல்லு.. என்ன பண்ணலாம்னு..' என்று ஆலோசித்தார். பிறகு எல்லாரையும் பொதுப்படையாகப் பார்த்து. 'சரி.. பிரச்சினையை என்கிட்ட விடுங்க.. என்ன? நிம்மதியா.. இருங்க..' என்றார்.

இடையில் ஒரே ஒரு முறை வெடித்தார்.

'இந்தப் பய பாண்டியன்.. அன்னைக்காவடியா சுத்திகிட்டு இருந்த பய. இவனைக் கொண்டு வந்து.. பெரிய மனுஷன் பண்ணினேன் பாரு.. அது என் தப்பு!' என்றவர் 'என்னம்மா.. சொன்னான். பெரிய பிளான் பண்றானாமா! பண்ணி அஞ்சாறாச்சு. பிஸினஸா பண்றான்.. ஃபிராடு தனம் பண்றான்.' என்று பொரிந்தவர் என்ன நினைத் தாரோ அவரைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

பெண்கள் அந்தப் பக்கம் போனதுக்கப்புறம் மணி வாசகனிடம் சொன்னார்.

'வாசு! அந்தப் பொண்ணு பாவம்.. ரொம்பச் சின்னப் பொண்ணு. என்னமோ அன்றலர்ந்த பூவும்பாங்களே, அது மாதிரி யதார்த்தமா.. இருக்கு. அதைப் போய் இந்த இரண்டு காலிப் பயலும் இப்படித் தொல்லைப் படுத்தியிருக் கானுங்களே. இந்தப் பாண்டியனை பேசாம உள்ளே வச்சரலாமா?' என்றவர் பெருமூச்சுவிட்டார். பிறகு சொன்னார்.

'செஞ்சுடுவேன்.. ஆனா.. மக தாங்க மாட்டாப்பா!' என்றார்.

'ஐயா.. அதெல்லாம் வேண்டாம்!' என்றவன் மறுபடியும் பெண்களை அழைத்தான்.

'நான் ஒரு ஆலோசனை சொல்றேன். பிடிச்சிருக்கா என்று பாருங்க.. எப்படி இருந்தாலும் பாலு கூட இனி சௌம்யா நிம்மதியா வாழ முடியாது. இந்தப் பாண்டியன் இல்லேன்னா இன்னொரு சோழனைக் கொண்டு வந்து நிறுத்துவான். பெட்டர் டைவர்ஸ்தான். அதுக்கப்புறம் நாமளே ஒரு நல்ல மாப்பிள்ளையா பார்த்து..' என்று இழுக்க.

'ஐயோ எனக்கு இனிக் கல்யாணமே வேண்டாம்' என்றாள் சௌம்யா.

'ஓ.கே..! அதை அப்புறம் பார்க்கலாம்' என்றான்.

'இப்போதைக்கு டைவர்ஸ் வாங்கிடலாம். மேற் கொண்டு அவனோட தொல்லை இல்லாம சௌம்யா வோட அப்பாவுக்கு பொள்ளாச்சிக்கே டிரான்ஸ்ஃபர் வாங்கிக்கலாம்' என்றான்.

'பாலுவை மிரட்டற வேலையை என்கிட்ட விட்டு டுங்க' என்றான் சுரேஷ்.



'ஆமாங்கய்யா.. நீங்க பாண்டியனை மட்டும் ஆஃப் செஞ்சிட்டீங்கன்னா போதும்' என்றான் வேண்டுதலாக.

'கவலைப்படாதப்பா!' என்று சிரித்தார். பிறகு விஷயம் மறந்தாற் போல் வேறு விஷயம் பேசிக் கலகலப்பாகப் புறப்பட்டுப் போனார்.

மறுநாளிரவு!

மணிவாசகனுக்கு போன் வந்தது? அந்தப் புறம் பாலு!

'சார்! வேண்டாம்.. என் குடும்ப விஷயத்தில தலை யிடாதீங்க' என்றான்.

அன்றைக்குத்தான் மணிவாசகனின் கோப முகத்தை முதன் முதலாகப் பார்த்தாள் இலக்கியா.

'டேய்.. நிறுத்துடா! நீ குடும்பமா நடத்தறே.. குடும்பப் பொண்ணை பிளாக்மெயில் பண்றே! மரியாதையா டைவர்ஸ் குடுக்கப் பாரு! இல்லேன்னா நடக்கறதே வேற. நானும் நீ எந்தெந்தக் குடும்பத்துல நுழைஞ்சு.. கோல்மால் பண்ணிகிட்டிருக்கறேன்னு ரெண்டு நாளாக் கணக் கெடுத்துக்கிட்டுத்தான் இருக்கேன். அதுல ஒன்று ரெண்டு பேர் எனக்கும் ஃபிரண்ட்ஸ்தான். லேசாக் காதில போட்டேன்னு வையி. அப்புறம் ஏதாவது ஆக்ஸிடெண்டில் ஆளே அடையாளம் தெரியாம முடிச்சுப் போடுவானுங்க. செய்யட்டுமா?' என்றான்.

உடனே பாலு அரண்டு போனான்.

'இல்ல.. சார்! சௌம்யா என்னைத் தப்பாய் புரிஞ்சுரு காப்பல!' என்று இறங்கிப் பேச ஆரம்பித்தான்.

'அதெல்லாம்.. ஒண்ணும் இல்லை. உன்னை கரெக்டாத் துல்லியமாய் புரிஞ்சுருக்கு. கெட்டிக்கார தனமாய் தப்பிச்சு வந்திருக்கு. இனியும் ஏதாவது தொல்லை பண்ணினே.. சரி வராது ஆமா..!' என்றான்.

அவன் ஏதோ ஆரம்பிக்க

'வைடா.. போனை! ஸ்கௌண்டரல்!' என்று ஆஃப் செய்து விட்டான்.

கோபமாகத் திரும்பியவன் இலக்கியாவின் பயந்த முகம் பார்த்து மெதுவாக இயல்புக்குத் திரும்பினான். புன்னகைத்தான்.

'உண்மையாவே இலக்கியா, உன் ஃபிரண்டு பெரிய இக்கட்டில் இருந்து தப்பிச்சு வந்திருக்காங்க..' என்றான் கவலையுடன்.

'ஆமாங்க! நினைச்சாலே எனக்குக் கலக்கமாத்தான் இருக்கு..!' என்றாள் இலக்கியா.

'சரி.. சரி இதெல்லாம் அவங்ககிட்டே சொல்லாதே'! என்றான்.

அவள் தலையாட்டினாள்.

'கவலைப்படாதே! பாத்துக்கலாம்' என்றான்.

கணவனின் அந்த ஒரு வார்த்தையில் தன் மனம் எல்லையற்ற நிம்மதி அடைகிறதே ஏன்?

யோசிக்க ஆரம்பித்தாள்.

* * *

நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கே பத்துப் பதினைந்து நாட்களாகி விட்டது.

நேரடியாக சுரேஷும், மணிவாசகனும் இறங்கினார்கள் என்றவுடனேயே பாலு பயந்து போனான்.

பாண்டியனே ஒரு நாள் போனில் வந்தார்.

'என்ன தம்பி! நாமளே நேரடியாய் பேசியிருக்கலாம். நீங்க எதுக்கு மாமனார் லெவலுக்குப் போனீங்க..?' என்று வழிந்தார்.



'நானே அந்தப் பொண்ணுகிட்ட மன்னிப்பு கேட்கறேன்.. தம்பி!' என்றார்.

'பாருங்க, மிஸ்டர். பாண்டியன். நீங்க இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் சௌம்யாகிட்டே பேச வேண்டாம். அதுவும் எனக்கு ஒரு சிஸ்டர்தான். ஒன்னு சொல்றேன்.. கேட்டுக்குங்க.. இஷ்டப்படாத பொண்ணை அது வைஃபாவே இருந்தாக் கூட வற்புறுத்தக் கூடாதுன்னு நினைக்கிறவன் நான். தானே விரும்பி வர்றவங்களாச்சு, நீங்களாச்சு.. ஆனா.. இந்த மாதிரி ஆதரவில்லாதவங்கன்னு நெனச்சுகிட்டு பிளாக் மெயில் பண்றது பேடிங்க செய்யற வேலை.. தெரியுதா?' என்றான்.

அந்த நேரம் இலக்கியா அருகில்தான் நின்றாள். பேச வாயெழாமல் கேட்டுக் கொண்டு நின்றாள். மணிவாசகன் அதோடு நிறுத்தவில்லை.

'உங்க மிஸஸ். கோயில் கோயிலாப் போயி உங்க பேருக்கு அர்ச்சனை செய்யறாங்க. உங்க மாமனார் ஊருக்குள்ள பெரிய மனுஷன். அப்படிக் குடும்பத்துல நுழைஞ்சுட்டு ஏன் பேரைக் கெடுத்துக்கறீங்க?' என்றான்.

அதற்குப் பாண்டியன் என்ன சொன்னானோ தெரியவில்லை. 'வணக்கம்!' என்று செல்போனை ஆஃப் செய்தான்.

இலக்கியாவுக்கு தன் கணவனை நினைக்கப் பெருமையாக இருந்தது. ஆனால், ஒரு பக்கம் அச்சமாகவும் இருந்தது.

'ஏங்க.. இந்த ஆளுங்க.. ஒரு டைப்பா இருப்பாங்க.. போல இருக்கே! இவங்களால நாளைக்கு உங்களுக்கு ஏதாவது பிரச்சினையானா..'

'ஒண்ணும் ஆகாது. பயப்படாதே! அதுக்குத்தான் அவங்க மாமனார் மூலமாப் பேசினது. அவர் ரொம்ப அருமையான மனுஷன்' என்றான்.

அப்போதுதான் இலக்கியா சொன்னாள். 'ஏங்க.. நான் ஒரு யோசனை சொல்லட்டா' என்றாள்.

'சொல்லு!' என்றான்.

'இல்லே! சுரேஷ் அண்ணா ரொம்ப நல்ல டைப்பா இருக்காரு.. போல இருக்கே.. பேசாம.. சௌம்யாவுக்கும், அவருக்கும் மேரேஜ் பண்ணி வச்சுடலாமா?' என்றாள்.

மணிவாசகன் யோசனையில் ஆழ்ந்தான்.

'செய்யலாம்.. ஆனா, எந்தப் பேச்சையும் ஆரம்பிக்கறதுக்கு.. இது நேரமில்லே.. சௌம்யா முதல்ல இந்த அதிர்ச்சியில இருந்து மீளட்டும்; அப்புறம் அது பற்றிப் பேசலாம்.. என்ன?' என்றான்.

'சரி..!' என்றாள். பிறகும் ஏதோ சொல்ல விரும்புகிறாற் போல் அவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

'அவுட்.. வித் இட்... மேடம்!' என்றான்.

'ரொம்பத் தாங்க்ஸ்!' என்றாள் இலக்கியா.

'எதுக்குத் தாங்க்ஸ்?' என்றான் ஒரு விதமான குறுகுறுப் பார்வையுடன்.

'இல்லே! என் ஃபிரண்டுங்கறதுனாலதானே இவ்வளவு தூரம் முயற்சி எடுத்தீங்க..' என்றாள்.

'ஆமா.. அதிலென்ன சந்தேகம்! இல்லாட்டியும் இப்படி யார் வந்தாலும் ஹெல்ப் பண்ணியிருப்பேன். அது வேற விஷயம். ஆனாலும், உன் ஃபிரண்டுங்கறதுனால உரிமை எடுத்துகிட்டு செஞ்சேன்' என்றான்.

'அதுக்குத்தான் தாங்க்ஸ்!' என்றாள்.

அவன் கண்களில் குறும்பு கூத்தாட சற்று நேரம்



'அதுக்கு இப்படி வெறும் வார்த்தையிலயே தேங்க்ஸ் சொல்லி முடிச்சிடுவியா?' என்றான்.

இலக்கியாவும் முகம் சிவந்தது. நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

பார்வைகள் ஒன்றையொன்று கவ்வி நிற்க சற்று நேரம் மௌனமாக நின்றார்கள்.

சட்டென அவன் மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும் என்று தன் மனமும், உடலும் எண்ணியதை அவள் வெகுவாகக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அவனும் உள்ளுக்குள்ளே நடந்த போராட்டத்தை வெகு முயற்சி செய்துதான் கட்டுக்குள் கொண்டு வந்தான் என்று சொல்ல வேண்டும்.

'வேற.. வேற.. என்ன சொல்லணும்' என்றாள் இலக்கியா குரலே எழும்பாத குரலில்.

அவன் உல்லாசமாகச் சிரித்தான். 'இதுவே உனக்கு என்னைப் பிடிச்சிருந்ததுன்னு வச்சுக்க. அதுக்கு ஒரு விதமா பதில் சொல்லலாம். இல்லேன்னா. அட்லீஸ்ட் ஏதோ ஸ்வீட் காரம்னு வாங்கிக் குடுத்துச் சொல்லலாம்' என்றான்.

மறுபடியும் ஒரு ஐந்து நிமிடங்களுக்குக் கனமான மௌனம் நிலவியது.

இலக்கியா மெதுவாக அவனை நோக்கி எட்டு எடுத்து வைத்தாள்.

'வேண்டாம்.. இலக்கியா!' என்றான் அடிக்குரலில் அவள் திகைத்துப் போய் நின்றாள்.

அவன் சட்டென்று அறையை விட்டு வெளியேறி விட்டான்.

இலக்கியா மின்னலால் தாக்குண்டவள் போல் ஓடிப் போய் படுக்கையில் விழுந்தாள்.

கண்களில் கண்ணீர் கரகரவென்று ஓடியது. தன்னிடம் மிகவும் பிரியமாக நெருங்கிய கணவனிடம் தான் வெடித்த போது அவனுக்கும் இப்படித்தானே உணர்வுகள் தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

படுக்கையில் எழுந்து கால்களை கட்டிக் கொண்டு அமர்ந்தாள்.

அவன் வரும்வரை காத்திருந்தாள்!

மணிவாசகனும் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்துத்தான் வந்தான்.

அவள் விழித்திருப்பதைப் பார்த்து எதுவுமே நடக்காதது போல்,

'என்ன இலக்கியா? தூங்கலையா?' என்றான்.

அவள் எழுந்தாள். கேவிக் கொண்டே போய் மணிவாசகனின் மார்பில் சாய்ந்தாள்.

அப்படி ஒரு செய்கையை எதிர்பார்க்காத அவன் மெல்ல இரு கைகளால் லேசாக அணைத்துக் கொண்டான்.

'உள்ளுக்குள் என் மேலே கோபம் இல்லே?' என்றாள் தழுதழுத்த குரலில்.

அவன் மெல்ல புன்னகைத்தான்.

'எனக்கு உன்மேலே கோபம் இல்லே. என் மேல தான் கோபம். உன்னைக் கொண்டு வந்து சிறைப்படுத்தின மாதிரி?' என்றான்.

'இல்லே! அப்படியெல்லாம்.. இல்லே' என்றது அவள் ஏதோ சொல்ல வருகையில் அவன் தடுத்தான்.

'வேண்டாம்.. நான் இப்ப உன் ஃபிரண்டுக்கு ஹெல்ப் பண்ணிட்டேங்கற மூட்ல நீ இருக்கே. இந்த விஷயமெல்லாம்.. தெளிவா யோசிச்சு சொந்தமா முடிவெடுக்



கணும். சூழ்நிலைகளினால எடுக்கறது முடிவே இல்லே.. புரியுதா?' என்றான்.

மெல்ல அவள் தலையைத் தடவிக் கொடுத்தவன்.. 'போ.. போய்த் தூங்கு!' என்றான்.

அவளுக்குக் கோபம் வந்தது. சற்றும் அவனே எதிர்பாராத விதமாக

'வெவ்வெவ்வே!' என்று அழகு காட்டினாள். மணிவாசகன் கலகலவென்று சிரித்து விட்டான்.

'ஹேய்! அது ரொம்ப நல்லா இருந்தது. எங்கே இன்னொரு தடவை?' என்று கேலி செய்தான்.

அவள் 'மாட்டேன்' என்று சிணுங்கி விட்டு அறைக்குப் போனாள்.

இருவருமே தங்கள் படுக்கையில் படுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டார்கள். இலக்கியா மெல்ல நிலைமை மாறும் என்று கூட நினைக்க ஆரம்பித்தாள்.

ஆனால், அடுத்த நாள் நிலைமை தலை கீழாக மாறிப் போனது.

கடுகடுவென்று முகத்தோடு வந்தான்.

19



மங்கை டிபார்ட்மென்ட ஸ்டோருக்கு கடந்த வாரத்தி தொடர்ந்து வர முடியவில்லை இலக்கியாவுக்கு.

இன்றைக்கு சனிக்கிழமை வந் ஆக வேண்டும் என்று வந்து விட்டாள். அந்த வார கொடுக்கல், வாங்கல்களில் கணக்கை ஒரு முறை பார்ப்பாள்.

வந்தவுடனேதான் தோன்றியது சென்ற வாரம் முழுதும் இந்த சௌம்யாவின் பிரச்சினை வந்து மனதை அழுத்தி விட்டது. தன் பிறந்த வீட்டுக்குக் கூட அதிகம் பேச முடியவில்லை என்று.

ஹேமாவும், லலிதாவும் இலக்கியாவின் கணவனை வெகுவாகப் பாராட்டினார்கள். அந்தப் பெருமையில் வேறு திளைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரி இருக்கிறாரே என்று பயமாகவும் இருந்தது.

வந்தவுடனே தங்கைகளைத் தேடினாள். இதயா மட்டும்தான் இருந்தாள்.

'ஏண்டி.. இனியா வர்லை?' என்றாள் கேள்விக்குறியாக.

இதயா ஒரு விதமாக சகோதரியைப் பார்த்தாள். 'ஏன். உனக்குத் தெரியாதா?' என்றாள்.

'என்ன தெரியணும்?' என்றாள் இலக்கியா வியப்பாக.

'என்னன்னு தெரியலை. இனியாவை வரவேண்டாம்னு வாசு மாமா சொல்லிட்டாராம்' என்றாள்.

'ஏன்?'

'அதான் சொல்றேன் இல்லே! தெரியலை.. அம்மா கிட்டே ஏதோ பேசியிருப்பாரு போல இருக்கு' என்றாள்.

இலக்கியா சற்றும் நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

'நிஜமா.. உன்க்குத் தெரியாதா? வாசு மாமா உன்கிட்டே சொல்லலையா' என்றாள்.

'சொல்லலைடி.. இதயா தெரிஞ்சா நான் எதுக்கு உன்கிட்டக் கேக்கறேன். என்னத்தை மனசுல வச்சுகிட்டு இப்படி நடக்கறாரோ தெரியலையே?' என்று தனக்குள் பேசுவது போல் பேசிக் கொண்டாள்.



அன்று மாலை விடை தெரிந்தது. அம்மா வீட்டுக்குப் போயே பத்து நாட்களுக்கு மேல் ஆகி விட்டது என்று எண்ணியபடி போனாள்.

அப்போதுதான் இனியா தன் மனத்தைத் திறந்து காட்டினாள்.

அம்மா சமையலறைக்குப் போனதும் இனியா சகோதரியிடம் வந்தாள்.

'அக்கா.. நான் உன்கிட்டே பேசணும்' என்றாள்.

'சொல்லுடி!' என்றாள் உற்சாகமாக.

ஆனால், சகோதரி மேற்கொண்டு பேசியதைக் கேட்கக் கேட்க அவளுக்கு பயம் தோன்றியது.

'அக்கா! சின்ன மாமா.. சுந்தர்..' என்று நிறுத்தினாள். முகம் சிவந்து போனது.

'ம்..!'

'அவங்களுக்கு, அவங்களுக்கு.. என் மேல ஒரு இன்ட்ரஸ்ட்!' என்றாள்.

'.....!'

'எப்பவும் விளையாட்டாப் பேசற மாதிரிதான் என்கிட்டயும் பேசறார்ன்னு நினைச்சேன். ஆனா... கடைசில.. பாத்தா என்கிட்டே கொஞ்சம் கூடுதலா.. உரிமை எடுத்துக்கறார்ன்னு.. தெரிஞ்சது.. அப்புறம்.. ஒரு நாள்.. அவரே.. என்கிட்டே சொன்னாரு' என்றாள்.

இலக்கியாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மெதுவான குரலில் சொன்னாள்.

'எங்க மாமா அதுக்கு ஒத்துக்குவாரான்னு தெரியலியே..' என்றாள்.

'அதான்.. இப்பப் பிரச்சினையே.. சுந்தர் மாமா சொன்னாங்க.. அதெல்லாம் அண்ணன் புரிஞ்சுக்குவாரு. எங்க வீட்லயும் ஒத்துக்குவாங்கன்னு.. ஆனா இப்ப.. என்னடான்னா, வாசு மாமாதான் எதிர்ப்புத் தெரிவிக்கிற மாதிரித் தெரியுது' என்றாள்.

மணிவாசகனுக்கு எழுந்திருக்கக்கூடிய அதே சந்தேகம் அவளுக்கும் தோன்றியது.

'இனியா.. கேக்கறேன்னு தப்பா நினைக்காதே. நீ நல்ல நிறம். ஆனா, சுந்தர் நல்ல கறுப்பு. எப்படிடி.. பிடிச்சது?' என்றாள் தயக்கத்துடன்.

'ஏன்? இப்ப நீயும் மாமாவும் சந்தோஷமா இருக்கலையா?' என்றாள் இனியா யதார்த்தமாக.

'இல்லையே!..' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் இலக்கியா. ஆனால் சொல்லவில்லை.

'இல்லடி.. இனியா.. அது அரேன்ஜ்ட் மேரேஜ்.. இது.'

'அக்கா! என்ன பேசறே! வாசு மாமா மாதிரி, சுந்தர் மாமா மாதிரி மனுஷங்க கிடைக்கணுமே.. எவ்வளவு பொறுப்பு. ரெண்டு பேரும் எவ்வளவு கடுமையா உழைக்கறாங்க.. பொதுவாச் சொல்வாங்க ஆம்பளைக்கு அழகு தேவையில்லேன்னு. நான் அப்படிச் சொல்ல வர்லே. எனக்கு சுந்தர் மாமாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவங்க எந்த விதத்திலே குறைச்சல் சொல்லு? கம்பீரம், ஆளுமை, நேர்மை இதுக்கு மேலே என்ன வேணும்?' என்றாள்.

இலக்கியா கொஞ்சம் மலைத்துத்தான் போனாள். தன் தங்கை எவ்வளவு தெளிவாக யோசிக்கிறாள். தான் ஏன் இப்படி யோசிக்கவில்லை. முதல் குழந்தையாக இருந்ததால் 'நீதாண்டி மூத்த பொண்ணு பொறுப்பா இருக்கணும்' என்று அடிக்கடி சொல்லி சொல்லி வளர்த்தாலோ என்னவோ



மறுப்பைக் கூட அவளுக்குத் தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை.

கல்லூரி நாட்களில் பெரும்பாலும் பெண்கள் 'அந்த ஆளைப் பாரேன்.. சூப்பர் பர்சனாலிடி. இந்த ஆளைப் பாரேன்.. சூப்பர் பர்ஸனாலிட்டி' என்று பேசுவார்கள். அதைக் கேட்டுக் கேட்டுப் புறத் தோற்றம் மட்டுமே முக்கியமான விஷயம் என்று மனதில் பதிந்து போனது.

கல்லூரியிலிருந்து வெளிவந்த பிறகும் கல்லூரிப் பருவத்து மனப்பாங்கே தனக்கும் இருந்து விட்டது என்று எண்ணிக் கொண்டாள். இப்போது தங்கை கேட்கிற கேள்வியின் நியாயம் அவளுக்குப் புரிந்தது. தயக்கத்துடன் சொன்னாள்.

'இனியா எங்க வீட்டைப் பொறுத்தவரை வாசு மாமா என்ன சொல்றார்களோ அதுதான் எடுபடும். அவர்களே எதிர்த்தாங்கன்னா எப்படி நடக்கும்? அதிலயும் சுந்தர் என்னதான் அரட்டை அடிக்கிற டைப்பா இருந்தாக்கூட சரிதான் சொன்னதை செய்டான்னு ஓங்கி அதட்டினாப் போதும் ஒடுங்கிடுவாப்ல. எதுக்கும் யோசிக்கக்க' என்றாள்.

இனியா அக்காவை வெறித்துப் பார்த்தாள். 'அக்கா.. என்ன பேசறே நீ! இதெல்லாம் நினைச்சாப்பல மாத்திக்கற விஷயமா? கண்டிப்பா.. இல்லே... அக்கா.. சுந்தர் மாமாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருச்சு.. அக்கா.. நீ தான் எப்படி யாவது' என்றாள் கெஞ்சும் குரலில்.

'இனியா என்னை என்ன பண்ணச் சொல்றே?' என்றாள்.

இனியா அழுது விட்டாள். 'அக்கா அப்படியெல்லாம் ஒரு ஆளை நினைச்சுட்டு சட்டையை மாத்திக்கிற மாதிரி மாத்திக்க முடியுமா?' என்றாள்.

அக்காவின் மடியில் முகம் புதைத்துக் கொண்டு வெடித்து அழுதாள்.

இலக்கியாவின் மனம் ஓலமிட்டு அழுதது. 'நான் எந்த முகத்தோடு போய் என் தங்கைக்கும் உங்கள் தம்பிக்கும் கல்யாணம் செய்து வையுங்கள்' என்று கேட்க முடியும்? தவறு முழுக்கவும் தன்னுடையதுதானே? சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்துப் போனாள். ஆனால், கணவனிடம் எதற்கும் பேசிப் பார்ப்பது என்று முடிவு செய்தாள். வரப்போகிற விளைவுகளை அறியாமல்.

* * *

**'வே**ண்டாம்.. அது நடக்காது.. அந்தப் பேச்சை விட்டு' என்றான் மணிவாசகன் ஒரே பிடியாய்.

'ஏன்? இதில் உங்களுக்கு என்ன நஷ்டம்? தகுதியில்லாத குடும்பம்னா என்னைப் பெண் எடுத்திருக்க மாட்டீங்க தானே? அவங்களுக்கும் ஒருத்தரையொருத்தர் பிடிச்சிருக்கு. அப்புறம்.. என்ன?' என்றாள்.

'வேண்டாம்னா.. வேண்டாம்தான்' என்றான் பிடிவாதமாக.

அவள் ஆங்காரத்துடன் உறுத்துப் பார்த்தாள். எனக்குத் தெரிஞ்சருச்சு' என்றாள்.

அவன் நின்று அவளைப் பார்த்தான். கண்களில் எந்த உணர்வும் இருக்கவில்லை.

'என்ன தெரிஞ்சிருச்சு' என்றான்.

'நீங்க என் மேல இருக்கிற கோபத்தை அவங்க மேலே காட்டறீங்க.. என்னைப் பழி வாங்கறதா நினைச்சுகிட்டு அவங்களைப் பாவம் வறுத்தெடுக்கறீங்க!' என்றாள்.

'என்னைப் பற்றி இவ்வளவு நல்ல கருத்து வச்சிருக்கிறது ரொம்ப சந்தோஷமா இருக்கு.. என்றான் கிண்டலான குரலில்.

'ரொம்ப தெ...



'சரி.. பேசலே.. விடு..' என்றான். அழுத்தமாக அமர்ந்திருந்தான்.

அவள் செய்வதறியாது அவனைப் பார்த்தாள்.

'ஏங்க.. ஏங்க.. இப்படிச் செய்யறீங்க?' உங்க குடும்பத்துக்குத் தாணா தின்னு எல்லாம் செய்யறீங்க.. இந்த விஷயத்துக்கு மட்டும் ஏன் இப்படிப் பிடிவாதமா இருக்கீங்க!'

'இத பார்! காலைல இதைப் பேசறதுக்கு நேரம் இல்லே. எனக்கு வேலையிருக்கு. இப்ப.. என்ன என்கூட நீ கடைக்கு வர்றியா இல்லையா?' என்றான்.

'நா இன்னைக்கு வர்லே! இன்னைக்கு லீவு' என்றாள் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

அவன் கண்களில் அவள் முறுக்கிக் கொள்கிற விதம் பார்த்து சிரிக்கத் தோன்றியது.

'சரி.. விடு.. உன்னிஷ்டம்' என்றான் கீழே இறங்கிப் போய் விட்டான்.

* * *

**இ**லக்கியாவுக்கு அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள முடியவேயில்லை.

கீழே இறங்கிப் போகும் போது தன் கணவன் பார்த்த பார்வையில் ஒரு விதமான கிண்டல் தொனித்த மாதிரி இருந்தது.

'பாத்தியா உன்னைப் பழி வாங்கிட்டேன்.. பார்' என்ற கொக்கரிப்பு அதிலே தோன்றியதோ அவளுக்குத் தெரியவில்லை.

யோசித்து யோசித்து தலையே வெடித்து விடும் போல் ஆகிவிட்டது.

'விட்டேனா.. பார்!' என்று அன்றிரவு கணவன் வரும் வரை அமர்ந்திருந்தாள்.

கண்களில் கண்ணீர் பொங்கிக் கொண்டே இருந்தது. போதாதற்கு இன்றைக்குக் காலையில் கீழே இறங்கிப் போனவன் வேறு விதமான ஒரு கூத்துப் பண்ணி விட்டுப் போயிருந்தான்.

எப்போதும் அவன் இறங்கிப் போவதற்கு முன்பாக அவன் இறங்கிப் போய் சாப்பிடுவதற்காக எல்லாமும் தயாராக வைத்திருப்பாள். அவள் ஏதாவது அம்மா வீட்டுக்குப் போயிருந்தால் மட்டும்தான் தனியாய் இறங்கி வருவான்.

இன்னைக்கு அதிசயமாய் அவன் மட்டும் இறங்கி வந்ததைப் பார்த்து, 'இலக்கியா எங்கே?' என்றாள் தேவகி.

அவன் அண்ணியைப் பார்த்து சிரித்தான். 'அம்மை யாருக்கு மூட் அவுட்' என்று கிசுகிசுத்தான்.

'ஓ!' என்ற தேவகி இங்கிதமறிந்து மேலே எதுவும் கேட்கவில்லை. ஆனால் மாமியார் விசாரிக்கவும்.

'என்னவோ.. இலக்கியாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம்' என்றான்.

உடனே மாமியார் பதைத்துப் போய் 'தேவகி நீ போய் மேலே பாத்துட்டு வா' என்றார்.

மணிவாசகன் அண்ணியைப் பார்த்து 'வேண்டாம்' என்று கண்ணசைத்தான். சாப்பிட்டு முடித்து விட்டு மேலே வந்தவன் 'கீழே எல்லார் கிட்டயும் உனக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்லியிருக்கேன். அதையே மெயின் டெய்ன் பண்ணிக்க' என்று சொல்லி விட்டுப் போனான்.

அவள் குப்புறப்படுத்துக் கொண்டிருந்தவள் திரும்பியும்



மறுபடியும் ஒரு புன்னகை மட்டும். ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான்.

தேவகியும், மாமியாரும், ராதிகாவும் உபசரித்துத் தள்ளி விட்டார்கள்.

'ஐயோ.. போதுங்க்கா.. நான் நல்லாத்தான் இருக்கேன். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தா சரியாய்ப் போயிடும்' என்று சொன்னதற்குப் பிறகுதான் மனமில்லாமல் இறங்கிப் போனார்கள்.

இவ்வளவு நல்ல வீட்டில் தங்கை வாழக் கொடுத்து வைக்க வில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டாள்.

மணிவாசகன் அன்றிரவு வரும்போதே பத்து மணியாகி விட்டது. அப்போதும் மனைவி அதே சண்டை போடும் மூடில் இருப்பதைப் பார்த்து அவனுக்கு உள்ளூர சிரிப்பு வந்தது.

அவனும் தயாரானான்.

சட்டையைக் கழற்றி ஹாங்கரில் மாட்டியபடி.

'சாப்பிட்டாச்சா? மூடு மாறிடுச்சா!' என்றான்.

அவள் பேசவில்லை. முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்து கொண்டிருக்கிற மனைவியை ஒரு பார்வை பார்த்தான்.

'இப்ப என்ன செய்யணுங்கறே?' என்றான்.

'கல்யாணத்துக்கு ஒத்துக்குங்க..!' என்றாள் இலக்கியா.

'அதைத் தவிர வேற என்ன வேணும்னாலும்.. சொல்லு..' என்றான் அதே கருத்தில்.

'ஏன்.. வேண்டாம்ங்கறீங்க? காரணம் சொல்லுங்க!' என்றாள்.

அவன் அதே அழுத்தத்துடன் அமர்ந்திருந்தான். அவள் டென்ஷனாகி வெடித்தாள்.

'ரெண்டு பேருக்கும் ஒருத்தரையொருத்தர் பிடிச்சிருக்கு.. அப்புறம் என்ன வேணும்?'

எழுந்தான். முகம் கடுமையாக மாறியது.

'காரணம் தெரியணுமா? கேட்டுக்க.. அவுங்க ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்கறதைப் பத்தி எனக்கு ஒண்ணும் பெருசா ஆட்சேபணையில்லே.. ஆனா, அவங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. ரெண்டு குடும்பமும் ரொம்ப நெருங்கிடும். அப்புறம் நீ எந்தக் காரணத்தை வச்சுகிட்டு என்கிட்டே டைவர்ஸ் கேப்பே?'' என்றான்.

அவள் திகைத்து நின்றாள். சற்றுக் கழித்துத் தேறிக் கொண்டாள். தரையைப் பார்த்தபடி சொன்னாள்.

'நான் டைவர்ஸ் கேக்கறதாயில்லை' என்றாள்.

அவன் மறுபடியும் இரும்பு போல் பார்த்தாள். 'அந்தப் பார்வையில் உன் சுயநலத்திற்காக என்ன வேணா செய்வே இல்லே!' என்ற கேள்வி தொனித்தது.

'ராங் டைமிங் மேடம்! ரொம்ப ரொம்ப ராங் டைமிங்..!' என்றான்.

தனது அறைக்குள் போனவன் அவள் முகத்தில் அறைந்தாற் போல் கதவை அறைந்து சாத்தினான்.

அவள் செய்வதறியாது மூடப்பட்ட கதவைப் பார்த்துக் கொண்டு அவமான உணர்வுடன் நின்றாள்.

20



'சார்! எனக்குக் கல்யாணங்கறதுலயே இன்ட்'ரஸ்ட்' போயிடுச்சு!'



வேண்டாம். விடுங்க.. அதைப் பத்தி ஏன் நினைக்கணும்? கொஞ்ச நாளைக்கு எதைப் பத்தியும் கவலைப்படாம நிம்மதியா இருங்க!' என்றான் சுரேஷ்.

'ஆமாங்க.. சார். எப்பவும் நான் வாழ்க்கையில அழகுதான் முக்கியம்னு நினைச்சேன். இலக்கியாவை ஜாடை மாடையாக கிண்டல் செய்வேன். ஆனா, அவளும் அவ ஹஸ்பென்டும் எதையுமே மனசுல வச்சுக்காம வந்து எனக்கு எல்லா உதவியும் செஞ்சாங்க..' என்றாள் ஆத்மார்த்தமான நன்றி உணர்வுடன்.

சுரேஷ் சௌம்யாவின் பெற்றோரிடம் ஆறுதல் சொன்னான்.

'கவலைப்படாதீங்க.. சார்! உங்க பொண்ணு அருமையான பொண்ணு. என்னோட வாழ்க்கையில் நடந்ததையே சொல்றேன் கேளுங்க.. நானும் ஒரு அழகான பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணினேன். அவளுக்கு ஆடம்பரங்கள்ல, இந்த கிளப், ஆட்டம், பாட்டம் இதிலெல்லாம் ரொம்ப லைக்கிங் விழுந்துடுச்சு. நான் கண்டிச்சேன். அது அவளுக்குப் பிடிக்கலை. 'பட்டாம் பூச்சி மாதிரி சுதந்திரமா இருக்கணும்' அப்படீம்பா. பட்டாம் பூச்சிகள் சுதந்திரமா இருக்கலாம். ஆனா, மனிதர்கள் தேவையான இடத்துல கட்டுப்பட்டுதான் இருந்து ஆகணும்னு நான் சொல்லுவேன். அடிப்படைக் கருத்தே மாறிப் போச்சு அப்புறம்.. டைவர்ஸ் குடுன்னு வற்புறுத்தி வாங்கிட்டா. நானும் எப்படியும் சேர்ந்திருந்தா ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கப் போறதில்லே. அவளாவது சந்தோஷமா இருக்கட்டும்னு குடுத்தேன்' என்று நிறுத்தினான்.

முகத்தில் சொல்ல வொண்ணாத வருத்தம் தெரிந்தது. பிறகு தொடர்ந்தான்.

''போன மாசம் ஒரு இடத்துல பார்த்தேன். என் தலையில நானே மண்ணை வாரிப் போட்டுகிட்டேன். உங்க நிழல் எவ்வளவு சுகம்னு இப்பப் புரியுதுன்னு அழுதாள்.

இப்பக் கூட ஒண்ணும் பிரச்சினையில்லே, வந்து டேன்னேன். வேண்டாம்.. வர முடியாது. வர விட மாட்டார்ன்னு அழுதாள். அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்னேன். 'வேண்டாங்க.. நீங்களாவது நிம்மதியாயிருங்க. உங்களுக்கு நான் எந்த விதத்துலயும் தகுதியேயில்லேன்னு அழுதா.. சம்மதிக்க வைக்க முடியலே' என்றான்.

அவன் கண்கள் கலங்கியது. சௌம்யா கூட மனம் நெகிழ்ந்தாள்.

'இப்பக்கூட அப்பப்ப போன் செஞ்சு பேசறா. போன் நம்பர் குடு அப்படீன்னேன். வேண்டாம். 'நானே உங்களைக் காண்டாக்ட் பண்றேங்கறா.' இல்லே..! வேண்டாம்.. அநேகமா நான் நெக்ஸ்ட் மன்த் ஃபாரின் போயிடுவேன். போனா.. அங்கே செட்டிலாயிடுவேன்கறா' என்றான்.

நானும் அவள் போக்கில விட்டுட்டேன். 'ஆனா எப்ப எந்த உதவி வேண்ணாலும் கேளுன்னு.. சொல்லியிருக் கேன்' என்றான்.

ஏதோ கதை கேட்பது போல இருந்தது சௌம்யாவுக்கு. 'ஏன் தன்னோட வாழ்க்கையே ஒரு கதை மாதிரித்தானே ஆகிப் போனது' என்று எண்ணிக் கொண்டாள். பெருமூச்சு விட்டாள்.

சுரேஷ் மணிவாசகன் குடும்பத்தாரின் நட்பும் கிடைத் ததைப் பெருமையாய்ப் போற்றிக் கொண்டாள்.

ஒரு முறை இலக்கியாவிடம் போனில் பேசும்போது சொன்னாள்.

'இலக்கியா.. வாசு அண்ணன் மாதிரி ஆண்கள் கிடைக்கறது அபூர்வம். அவரைத் தங்கமாய் பாத்துக்க.



போன வாரம் ரெண்டு தடவை என்னை வந்து பாத்துட்டுப் போனாரு. அப்பல்லாம் உன்னைப் பத்திப் பேசினால அவரு முகத்தில பூரிப்பு. நீ செஞ்ச குறும்பெல்லாம் சொன்னா ரசிச்சுச் சிரிப்பாரு. அப்புறம் மெதுவா சொல்வாரு இப்ப.. ரொம்பப் பொறுப்பாக் குடும்பத் தலைவி ஆயிட்டாங்க' அப்படீன்னு.

இப்போதுதான் சொன்னதைத்தான் அங்கே இலக்கியா எண்ணிப் பார்த்தபடி கவலையுடன் படுத்திருக்கிறாள் என்பதை அவள் அறியவில்லை.

* * *

**'அ**க்கா.. விடு.. நீ எதுக்கு அழுகறே இப்படி?' என்று தேற்றினாள் இனியா.

'நான் என்ன பேசினாலும் வாசு மாமா ஒத்துக்க மாட்டேங்கறார்டி' என்றாள் இலக்கியா.

'போனாப் போகுது.. விடு. நான் மனசைத் தேத்திக் கறேன்' என்றாள் இனியா, மிகவும் மனத்தாங்கலுடன்.

'எல்லாத்துக்கும் காரணம் நான்தாண்டி..! காரணம் நானேதான்' என்று தலையில அறைந்து கொண்டு அழுகிற அக்காவை வெறித்துப் பார்த்தாள்.

'அக்கா.. நீ என்ன சொல்றே?' என்றாள்.

இலக்கியா சொன்னாள். விரிவாகச் சொன்னாள் இப்போதும் இலக்கியா கடைக்கு வந்து கொண்டிருந்தாள் ஆனால், இந்த விஷயத்தைப் பற்றி மணிவாசகனிட மறுபடியும் பேசவில்லை. அது மட்டுமல்லாமல் அவ அவனிடம் சரியாகப் பேசுவதேயில்லை.

மணிவாசகனுக்கு வேண்டிய எல்லாமும் சரியா கரெக்டாக நடந்து கொண்டிருந்தது. ஆனால் பேச்ச மட்டும் குறைத்துக் கொண்டாள். அவன் கேட்

கேள்விகளுக்குப் பதில் வீட்டு விஷயம். கடை சம்பந்த மான பேச்சுக்கள் பேசிக் கொள்வார்கள்.

அவன் முதலில் ஒன்றிரண்டு நாட்கள் கண்கள் சுருங்கப் பார்த்தான். பிறகு கண்டு கொள்ளவில்லை.

இலக்கியா சொன்னது முழுவதையும் கேட்ட இனியா திகைத்துப் போனாள்.

உடனே ஒரு காரியம் செய்தாள். சுந்தருக்கு போன் செய்தாள்.

இலக்கியா முன்பே இனியாவிடம் சொல்லியிருந்தாள்.

'இனியா, அம்மா அப்பா இதயா எல்லாரும் இல்லாதப்ப சொல்லு. நான் வர்றேன். உன் விஷயமாப் பேசணும்' என்று. அதனால் சுந்தர் வருவது பற்றி எந்த விதத்திலும் ஆட்சேபணை இருக்கவில்லை. ஆனால் தேவையில்லாமல் தங்கள் விஷயம் எதற்காக அவனுக்குத் தெரிய வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் இனியாவைத் தடுக்க முடியவில்லை. 'சுந்தர் மாமாவுக்குத் தெரிஞ்சே ஆகணும்' என்றாள்.

சுந்தர் வந்தான்.

இனியா அவனிடம் எல்லா விஷயங்களையும் கொட்டித் தீர்த்து விட்டாள்.

சுந்தர் நிச்சயமாக இதை எதிர்பார்க்கவில்லை. அவன் முகம் போன போக்கைப் பார்த்து இலக்கியா பயந்து விட்டாள்.

'சுந்தர்.. அப்ப எனக்கு உங்கண்ணன்கிட்டே இருக்கிற நல்ல விஷயமெல்லாம் புரியலே. ஆனா.. இப்ப.. இப்ப..!' என்று நிறுத்தினாள்.

சுந்தர் சில சமயங்களில் மணிவாசகன் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொள்வானே அது போல் வைத்துக்



கொண்டு அண்ணியைப் பார்த்தான். பிறகு பிறகு சொன்னான். ஒரு நிமிடத்திற்குப் பிறகு தேறிக் கொண்டவன் போல்,

'மதனி! அப்பத்த நிலைமையை விடுங்க. இப்ப உங்களுக்குக் கல்யாணமாகி ஏழெட்டு மாசம் ஆயிடுச்சு. இப்பவும் அண்ணன் விலகியே நிக்கறாங்கண்ணா.. கொஞ்சம் யோசிக்கணும். இப்ப.. எனக்கு உண்மையைச் சொல்லுங்க.. இப்ப.. இப்ப.. நிலைமைக்கு உங்களுக்கு அண்ணனைப் பிடிக்குதா.. இல்லையா?' என்றான்.

இலக்கியா வெகு சங்கடமாக மௌனத்தில் தரையைப் பார்த்தாள். பிறகு முகம் சிவக்கச் சொன்னாள்.

'எனக்கு.. அவரை ரொம்பப் பிடிக்குது. அவரில்லாம.. தனியா.. ஒரு வாழ்க்கையை நினைச்சே பார்க்க முடியாது..' என்றாள். தன்னை மீறித் தேம்பியழ ஆரம்பித்தாள்..

இனியா தேற்ற முயற்சிக்கையில் சுந்தர் 'விடு.. அழட்டும்' என்பது போல் கண்ணைக் காட்ட இனியா அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

இலக்கியா தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

'இப்ப.. அவரு.. நிறமே.. எனக்கு மறந்து போச்சு.. அழகா சிரிக்கறது, குறும்பாச் சிரிக்கறது குடும்பத்துக்காக உழைக்கறது. ஆனா எல்லாரையும் கட்டுப்பாட்ல வக்கறது.. இதெல்லாம்.. ரொம்பப் பிடிக்குது. இப்பப் போய்.. அவரு.. டைவர்ஸ் பத்திப் பேசறாரு' என்று மறுபடியும் அழுதாள்.

சற்று நேரம் அழவிட்ட சுந்தர் சொன்னான். 'மதனி' பிரச்சினையை என்கிட்ட விடுங்க. நான் பாத்துக்கறேன். இந்தப் பிரச்சினையை சால்வ் பண்றதுக்கு.. அருமையான ஒரு ஆள் இருக்காங்க. அவங்களை நான் கூட்டு சேத்துக்கறேன்' என்றான்.

இலக்கியா லேசான அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

'சுந்தர்.. அவரை எதிர்த்தோ.. அவமானப் படுத்தியோ எதுவும் செஞ்சுடாதீங்க..' என்றாள்.

சுந்தர் சிரித்தான். 'இனியா, உங்க அக்காவுக்கு எங்கண்ணன் பத்திக் கவலை பாரு..!' என்றான்.

இலக்கியாவின் முகம் சிவந்தது. சுந்தர் மேலும் புன்சிரிப்புடன் சொன்னான்.

'மதனி! அண்ணன் கேட்டா, நீங்க சொன்னதை நான் இனியாகிட்ட சொல்லியாச்சு. மேற்கொண்டு நீங்களாச்சு, அவங்களாச்சுன்னு சொல்லிடுங்க' என்றான்.

அன்றைக்கு வீட்டுக்குப் போகும் போது இலக்கியா சற்றே மனம் தெளிந்திருந்தாள். ஆனால் வீட்டுக்குப் போனவுடன் மேலும் கவலையாகிவிட்டது.

'சுந்தர் யாரைக் கூட்டு சேர்த்துக் கொள்ளப் போகிறானோ?' என்று ஒரு கவலை.

'சுந்தரிடம் எல்லாவற்றையும் சொன்னது சரியா?' அவன் பாட்டுக்கு விளையாட்டாய் ஏதாவது செய்து வைத்தால் கணவருக்கு இன்னும் கோபம் அதிகமாகுமே என்ற பயம் வேறு. ஆனால் கூடவே இன்னொன்றும் தோன்றியது. கடந்த மூன்று ஆண்டுகளாக சுந்தர் சகோதரனுடன் இணைந்து தொழில் பார்க்கிறார். அண்ணனின் மனப் போக்கைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப காரியங்கள் செய்து கொடுக்கிறான்.

யாருக்காவது மணிவாசகனின் மனப்பாங்கை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியுமென்றால் அது சுந்தருக்கு மட்டும்தான் என்று புரிந்தது.

'என்னவோ.. நடக்கட்டும். ஆனது ஆகட்டும்' என்று விட்டு விட்டாள். சுந்தரும் இனியாவும் தங்கள் தலையில் அடுத்த இடியைப் போடும் வரை.

* * *



'நான் எங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டு வரேன்..' என்று வந்து நின்றாள் இலக்கியா.

'போயிட்டு.. வா.. எப்ப வரே?' என்றான் குரலில் எந்த உணர்வையும் காட்டாமல்.

'எப்ப வரணும்னு தோணுதோ அப்ப' என்றாள். அவன் சட்டையை மாட்டியபடி திரும்பியவன் நின்று ஒரு நிமிடம் பார்த்தான்.

'ஓ.. கே..! ஆஸ் யு விஷ்' என்றான். போய் விட்டாள்.

அவன் இரண்டு எட்டு வைப்பதற்குள்ளாக அவள் பின்னாலிருந்து அழகு காட்டினாள். அது எதிரில் இருந்த கண்ணாடியில் பிரதிபலித்து விட்டது என்பதை அறியாமல் நின்றாள் இலக்கியா.

மணிவாசகன் திரும்பி 'ஏதாவது சொன்னயா என்ன?' என்றான்.

'இல்லயே!' என்றாள் அவசரமாக. மணிவாசகன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

'நான் இனிமே இங்கேதான் பத்து நாளைக்காவது இருக்கப் போறேன்' என்று வந்து நின்ற இலக்கியாவோ இனியா கவலையுடன் தனியாகக் கேட்டாள்.

'ஏக்கா.. ஏதாவது பிரச்சினையா?'

'ம்ஹூம்! அதெல்லாம்.. ஒண்ணுமில்லே. கொஞ்ச நாள் பிரிஞ்சிருந்தாத்தானே பிரிவுன்னா என்னன்னு அவருக்குப் புரியும்?' என்றாள்.

'அக்கா.. பாத்து.. ஆன்டி கிளைமாக்ஸாயிடப் போகுது' என்றாள் இனியா.

'அதெல்லாம்.. கவலைப்படாதே.. அப்படியெல்லாம் ஆக உங்க ஆளு விடமாட்டாரு!' என்று சிரித்தாள் இலக்கியா.

* * *

'என்ன.. தம்பி! இலக்கியாவும் இல்லே.. நீயும் பத்து மணிக்கு வர்றே! வீடே களையில்லாம இருக்குது!' என்றாள் தேவகி.

'என்ன செய்யறது மதனி! உங்க தங்கைக்கு அம்மா வீட்டுக்குப் போய்க் கொஞ்ச நாளாவது இருந்துட்டு வரணும்னு தோணிடுச்சு' என்றான் புன்னகையுடன்.

'ஏன்.. தம்பி! இனியாவுக்கும் நம்ம ராதிகாவுக்கும் மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சரலாம்.. இல்லே!' என்றாள் தேவகி.

'ஆமா.. பாக்கணும்!' என்றான் மணிவாசகன்.

சமையல் அறையிலிருந்து அவசரமாக வெளியே ந்தாள்.

'அண்ணா! நான் இப்போதைக்குக் கல்யாணம் ண்ணிக்கப் போறதாயில்லை.'

'ஏன்?'

'ஏன்னா, நான் மேல படிக்கப் போறேன். எம்.சி.ஏ.' றாள் ராதிகா.

மணிவாசகன் தேவகியைப் பார்த்தான். 'படிக்கற னா படிக்கட்டுமே.. தம்பி!' என்றார் தேவகி.

சரி.. படி!' என்றான். ராதிகாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

ஐயோ! தேங்க்ஸ்.. நீ இவ்வளவு சீக்கிரம் க்குவேன்னு நான் நினைக்கலை' என்றாள். குதித்தாள் பாட்டம் செய்தாள்.

ால் சோபாவில் அமர்ந்திருந்த மணிவாசகன் னகையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ா உள்ளேயிருந்து வெளியே வந்து.

துக்குப்பா படிப்பு? கல்யாணத்தைப் பண்ணி



மணிவாசகன் அம்மாவைப் பார்த்தான். 'அம்மா! நம்ம வீட்டுல எந்தப் பொண்ணும் இதுவரைக்கும் மேல் படிப்பு படிக்கறேன்னு கேட்கலை' அவ கேட்கறா.. படிக்கட்டுமே?' என்றான்.

'அம்மா.. சும்மாயிரு! எனக்குப் பர்மிஷன் கிடைச்சிருக்கறது பெரிய விஷயம். வேட்டு வைக்காதே' என்று செல்லமாய் மிரட்டி விட்டு உள்ளே போனாள் ராதிகா.

அம்மா அவன் எதிரில் அமர்ந்தார். 'தம்பி!' நான் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். இலக்கியாவோட அம்மாகிட்டே நான் ஒரு வாக்குக் குடுத்திருக்கேன். இலக்கியாவை மட்டும் உனக்குக் குடுத்தா மத்த ரெண்டு பொண்ணுங்க கல்யாணமும் நம்ம பொறுப்புன்னு. அதனாலே நம்ம பொண்ணுங்களுக்கு மாதிரியே அந்த ரெண்டு பொண்ணுங்களுக்கும் கல்யாணம் பண்ணி வச்சிரணும்' என்றார்.

பதிலை எதிர்பாராமல் வேறு ஏதோ வேலையாக எழுந்து போய் விட்டார்.

மணிவாசகனின் முகத்தில் வேதனை படிந்தது. 'எவ்வளவு பெரிய தப்பு செஞ்சுட்டீங்க.. அம்மா!' என்று எண்ணிக் கொண்டான்.

தேவகி அவன் முகம் பார்த்துக் கேட்டாள். 'என்ன.. தம்பி!'

'ஏன்.. அண்ணி! நம்ம நாட்ல சில கல்யாணங்கள்ல பொண்ணுங்க சம்மதம் கேட்காமல் கல்யாணம் பண்ணிவச்சர்றாங்கன்னு. அது எவ்வளவு தப்பு தெரியுமா?' என்றான் மணிவாசகன்.

தேவகி அடுத்து வந்து பத்துப் பதினைந்து நிமிஷங்களில்

குழம்பிப் போனான் என்றால் மேலே தன்னறைக்கு வந்தவுடன் இலக்கியா இல்லாமல் அறையே வெறிச்சோடிக் கிடக்கிறாற் போல் உணர்ந்தான்.

அவன் அம்மா வீட்டுக்குப் போனதற்குப் பிறகு முதன் முறையாக போனில் அழைத்தான்.

## 21



பூங்கனி அம்மா வெகுவாக யோசனையில் ஆழ்ந்தார்.

மருமகன் வந்து அன்றைக்குப் பேசிவிட்டுப் போனதில் இருந்து அவரது மனம் கவலையில் ஆழ்ந்திருந்தது. அந்த நாள் நினைவுக்கு வந்தது.

'ஒரு நாள்! மாலை!

மணிவாசகன் அந்த நேரம் வந்தான். பூங்கனி அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. விழுந்து விழுந்து உபசரித்தார்.

சற்று நேர அளவளாவலுக்குப் பின் மணிவாசகன் கேட்டான்.

'ஏங்கத்தே! இலக்கியாவை எனக்குக் கல்யாணம் செய்து குடுத்தா மத்த ரெண்டு பொண்ணுக கல்யாணச் செலவையும் ஒத்துக்கறேன்னு எங்கம்மா உங்ககிட்ட சொன்னாங்களா?' என்றான்.

பூங்கனி ஒரு நிமிடம் திகைத்துப் போனார். பிறகு சொன்னார்.

'ஆமா! சொன்னாங்க.. ஆனா, அதை எதிர்பார்த்துப் பொண்ணை நான் உங்களுக்குக் குடுக்கலே' என்றார்.

'ஓஹ்! அதுசரி! கல்யாணத்துக்கு முன்னயே நா உங்ககிட்டே ஒரு கேள்வி கேட்டேன். அதுக்கு அப்ப நீங்க



மழுப்பலா பதில் சொன்னீங்க.. இப்பவாவது உண்மையைச் சொல்லுங்க.. இலக்கியாவுக்கு சம்மதம் இருந்துச்சா.. இல்லையா?' என்றான் இறுக்கமான குரலில்.

'ஐயோ.. என்னங்க மாப்பிளே.. இப்பப் போய் இப்படிக் கேக்கறீங்க?' என்றார் மழுப்பலாக.

'அத்தை! கரெக்டா பதில் சொல்லுங்க!' என்றான் அதே பிடியாய்.

பூங்கனி மென்று விழுங்கினார். பிறகு சொன்னார். பிறகு.

'ஆமாங்க.. மாப்பிளே! அவளுக்குப் பெரிசா சம்மதம் இருக்கலே!' என்றார் தயக்கத்துடன்.

மணிவாசகன் சற்று நேரம் அடிவாங்கினாற் போல் அமர்ந்து விட்டான்.

பிறகு மெல்லிய குரல்.

'எவ்வளவு பெரிய தப்பு செஞ்சுட்டீங்க?' என்றான்.

பூங்கனி கலங்கிப் போய் விட்டார்.

'மாப்பிளே!' என்றார் கலங்கிய குரலில்.

'அத்தே! பொண்ணுங்கன்னா என்ன நினைச்சீங்க! கிள்ளுக்கீரைகளா? வாழ்க்கை முடிவுகள் எடுக்கும் போது அவங்களை ஆலோசிக்க வேண்டாமா?' என்றான் கடுப்பாக.

'ஐயோ! என்ன இப்படிப் பேசறீங்க? எனக்குப் பயமாயிருக்கே!' என்றார் பூங்கனி.

'பேசித்தானே ஆகணும். பெரிய தப்புப் பண்ணிட்டீங்க. அத்தே.. இனிமே எது நடந்தாலும் அதுக்குப் பொறுப்பு நீங்கதான்' என்றான்.

'இல்லல்லே..! இலக்கியா.. நல்ல பொண்ணு அப்படி யெல்லாம்.. எந்தத் தப்பான முடிவுக்கும் போக மாட்டா?'

'அதாவது வேற வழியில்லாம வாழ்க்கை நடத்துவா? குடும்ப கௌரவத்துக்காக.. உங்களுக்கு அது பரவாயில்லை, இல்லே!' என்றான் கோபமாக.

பூங்கனி தயக்கத்துடன் சொன்னார். 'மாப்பிளே! நம்ம ஊர்ல பொட்டப் புள்ளைங்க பெரிசா விருப்பங்கள் வச்சுக்கறதில்லே..!' என்றார்.

'அதுக்காக? புடிக்காத கல்யாணங்களைத் திணிக்கக் கூடாதில்லே?' என்றான்.

பூங்கனி வாயடைத்துப் போய் நின்றார். மணிவாசகன் ஒரு விதமான பரிதாபப் பார்வையுடன் அவர் நின்ற விதம் பார்த்து சற்றே இளகினான்.

'நீங்க சொன்ன மாதிரி இலக்கியா நல்ல பொண்ணு. அதனால ஒருவேளை நல்ல விதமாகவும் விஷயங்கள் நடக்கலாம். ஆனா, எதுக்கும் தயாராயிருங்க.. ஆனா இதைப் பத்தி எதுக்காகவும் இலக்கியாகிட்டே என்னைக் கேக்காம பேசாதீங்க' என்றான்.

பூங்கனியம்மாள் தலையை ஆட்டினார். அவன் காபி கூடக் குடிக்காமல் கிளம்பிப் போய் விட்டான்.

இப்போது கவலை மண்டியது.

'என்ன நடக்கிறது? மாப்பிள்ளை வந்து எது வேண்டு மானாலும் நடக்கலாம் என்று சொல்லிவிட்டுப் போகிறார். இவள் வேறு வந்து வாரமாகிறது. புருஷன் வீட்டுக்குப் போவதைப் பற்றியே பேசாமல் இருக்கிறாள். அவருக்கு உள்ளூர இன்னொரு பயமும் இருந்தது. திருமணத்தின் போது கணவன் பொண்ணுக்கு விருப்பமா என்று கேட்ட போது 'அதெல்லாம் அவளுக்கு இஷ்டம்தான்' என்று



அடித்துச் சொல்லிவிட்டார். இப்போது விஷயம் தெரிந்தால் அவர் வேறு ருத்ர தாண்டவம் ஆடி விடுவார்.

இப்போது புரிகிறது. பெண்களாயிருந்தாலும் அவர் களுக்கும் சொந்த விருப்புக்கள் வெறுப்புக்கள் இருக்கும். அவர்களிடம் பேசிப் புரிய வைக்கலாம். ஆனால், வற்புறுத்தக் கூடாது என்று.

போன வாரத்தில் ஒரு கல்யாணத்தில் ஒரு பெண்ணைக் காட்டினார்கள்.

'பொண்ணும் பெரிய பணக்கார வீடு. பையனும் பெரிய பணக்கார வீடு. என்ன நடந்துச்சோ.. தெரியலை. கல்யாணமாகி நாலே நாள்ல பிரிஞ்சுட்டாங்க' என்று.

இப்போது அதை நினைக்கும்போது கவலையாக இருந்தது. 'இலக்கியாவும் வந்து இப்படி நிப்பாளோ! அப்படி நின்றால் அடுத்த ரெண்டு பொண்களுக்கும் எப்படிக் கல்யாணம் நடக்கும். ஆண்டவா! என் குடும் பத்தைக் காப்பாத்து' என்று வேண்டாத தெய்வங்களை வேண்டிக் கொள்ள ஆரம்பித்தார்.

* * *

'ஹலோ! சொல்லுங்க மாமா!' என்றாள் இனியா.

'இனியா நான் சொல்றதைக் கேட்டுக்க... நாம ரெண்டு பேரும் வர்ற வெள்ளிக்கிழமை ஒரு இடத்துக்குப் போறோம்' என்றான் சுந்தர்.

'எங்கேன்னு சொல்லுங்க!' என்றாள் இனியா.

சொன்னான்.

'ஐயோ! பயமாயிருக்கு! பிரச்சினைகள் வரும்' என்றாள் இனியா.

'வரும்... கண்டிப்பா... வரும்... ஆனா, விஷயத்தை மாத்த முடியாதில்லே... எது வந்தாலும் நான்

பாத்துக்கறேன்... பயப்படாதே... என்றான். மேலும் சற்று நேரம் விளக்கமாகப் பேசினான்.

இனியா ஒரு வழியாகச் சமாதானமானாள். இரண்டு பேருமா அடுத்து வரப்போகிற பிரளயங்களுக்குத் தயாரானார்கள்.

* * *

'என்ன இலக்கியா? இப்படி வந்து உட்காந்துட்டே. வீட்டுக்கு வர்றதா ஐடியா இல்லையா?' என்றான் மணிவாசகன்.

இலக்கியா மௌனமாகப் பார்த்தாள். ஒரு நிமிடம் அமைதி காத்தாள். பிறகு சொன்னாள்.

'எல்லாம் காரணமாத்தான்.'

'என்ன அப்படிக் காரணமோ?' என்றான் மணிவாசகன் கேலி போல.

'உங்களுக்குத்தான் மனுஷர்களைப் பிரிச்சு வக்கறதுன்னா பிடிக்குமே. மணிவாசகன் அலட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தான்.

'ம்... அப்படியா? எதையும் சும்மா சொல்லக் கூடாதில்லே?'

'ஏன்! சௌம்யாவையும், அவ ஹஸ்பென்டையும் ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லா பிரிச்சு வச்சீங்க. இனியாவையும், சுந்தரையும் பிரிச்சு வச்சிங்க... இனிமே அடுத்தது... நாம ரெண்டு பேரும் பிரியணுமில்லே. அதுக்கு ஒத்திகை பாத்துக்கறேன்' என்றாள் கடுப்பாக.

அவன் கண்கள் மின்னின.

'இங்க... பாரு' குற்றம் சாட்டினா அதுல ஒரு வாஜிக் இருக்கணுமில்லே... சௌம்யாவோட பிரிவு நடக்க



லேன்னா சௌம்யாவை உசிரோடவே பாத்திருக்க முடியாது. இனியா, சுந்தர் பிரச்சினைக்கு நீதான் காரணம். ஒரு கல்யாணமும், ஒரு பிரிவும் ஒரே சமயத்துல ரெண்டு குடும்பங்களுக்குள்ளே நடக்க முடியுமா?' என்றான்.

அவள் கோபமாக உறுத்துப் பார்த்தாள்.

'நீ சும்மா கோபப் படறதுல பிரயோஜனம் இல்லே... ரெண்டு பேருக்கும் கொஞ்ச நாள் வருத்தம் இருக்கும். அப்புறம் சரியாய்ப் போயிடும்' என்றான்.

இலக்கியா கோபமாகச் சிரித்தாள்.

'இப்பத்திக்கு சாட்டை உங்க கையில இருக்குன்னு சொடுக்கி, சொடுக்கி வீசறீங்க... இல்லே' என்றாள்.

மணிவாசகன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'இலக்கியா... நீ என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறே. நான் உன்னைக் காயப்படுத்தணுங்கறதுக்காகப் பேசலே. உண்மையைச் சொன்னேன். நிதர்சனத்தைச் சொன்னேன்.

அந்தக் கணத்தில் இலக்கியா வெடித்து அழுதாள். அவன் முகத்தில் கனிவு ஏற்பட்டது. குரல் குழைய,

'இலக்கியா... ப்ளீஸ் அழாதே...! உனக்குப் பிடிக்காத கல்யாணத்தில் இருந்து விடுதலை குடுக்கறதுக்காகத்தானே நான் இத்தனையும் பண்றேன்!' என்றான்.

'நான்தான் எனக்கு டைவர்ஸ் வேண்டாம்கறனே!' என்றாள் மறுபடியும் கலங்கலான குரலில்.

அவன் ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அவளே தொடர்ந்தாள்.

'நான் ஒண்ணும் இனி வேற வீட்டில் வாழப் போறதாயில்லை. அப்புறம் எதுக்கு டைவர்ஸ். ஒருவேளை

உங்களுக்கு என்னைக்கு வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணனும்னு தோணுதோ அன்னைக்குச் சொல்லுங்க... டைவர்ஸ் பண்ணிக்கலாம்...' என்றாள்.

அவன் சட்டென்று சிரித்தான். 'ஓ...கே... ஒப்பந்தம் முடிவாயிடுச்சு... அப்ப புறப்பட்டு நம்ம வீட்டுக்குப் போலாமா?' என்றான்.

இலக்கியா மௌனமாகப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தாள். அவன் எதுவுமே நடக்காதது போல் கலகலப்பாகப் பேச ஆரம்பித்தான்.

'இலக்கியா... ஆக்சுவலா நான் உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசறதுக்காக வந்தேன்' என்றான்.

'சொல்லுங்க...!' என்றாள்.

'அடுத்த மாசத்திலே சௌம்யாவோட கேஸில தீர்ப்பு வந்திடும் போல இருக்கு. நம்ம சுரேஷுக்கு சௌம்யாவை ரொம்பப் பிடிச்சிருச்சு... ரொம்ப நல்ல பொண்ணு ஒத்துகிட்டா. நானே கல்யாணம் பண்ணிக்கறேன்னு கேக்கறான்' என்றான்.

இலக்கியா ஆர்வமானாள்.

'நிஜம்மாவா?' என்றாள்.

'நிஜமாத்தான். ஆனா அவசரப்பட வேண்டாம். இப்ப அவங்க அதுக்கு மெண்டலாத் தயாராயிருக்கமாட்டாங்க. கொஞ்ச நாளாகும் சரி... நான் காத்திருக்கேன் 'அப்படீக் கறான்' என்றான்.

இலக்கியா உடனே உற்சாகமானாள். 'ரொம்ப நல்ல விஷயம்... மாமா! நானாச்சு. சௌம்யா மனசை மாத்தி ஒத்துக்க வைக்கறதுக்கு. ஆனா, சுரேஷ் அண்ணா கொஞ்ச



'பொறுப்பான்... அதெல்லாம் பொறுத்திருப்பான்' என்றான்.

காரில் போகும்போது அவள் எண்ணிக் கொண்டாள்.

'இலக்கியா நீயில்லாம 'வீடே நல்லா இல்லை. நீ உடனே புறப்பட்டு வா!' என்று தன்னை அழைத்துப் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று.

அப்படியெல்லாம் அவன் தன் உணர்வுகளை சீக்கிரம் வெளியிடுவதில்லை என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாள். நிர்வாகத்துக்கும், குடும்பத்து தலைவனுக்கும் அத்தகைய அழுத்தம் அவசியம்தான். ஆனால், மனைவியிடமும் கூடவா இப்படி அழுத்தமாக இருக்க வேண்டும்?' என்று ஒரு மனம் வாதாடியது.

'மனைவியா? அது யார்? நீயா? நீ எப்போதிருந்து அவருக்கு மனைவியானாய்?' என்று இன்னொரு மனது கொக்கரித்தது.

இரண்டு மனங்களும் செய்து கொள்கிற வாதப் பிரதிவாதங்களை அவளாலேயே தாங்க முடியாமல் போனவுடனே திசை மாற்றுவதற்காக...

'ஏங்க மாமா! சௌம்யாகிட்டே எப்படி ஆரம்பிக்கறதுன்னு ஐடியா குடுங்களேன்?' என்றாள்.

'ஏன்? இப்படி ஆரம்பியேன்! சௌம்யா, சுரேஷ் ரொம்ப நல்லவரில்லே. உன்னோட பிரச்சினைக்காக எவ்வளவு சீரியஸாய் அலைஞ்சார் தெரியுமா!' என்றான்.

'இது நல்லாருக்கே! ஆமா மெது மெதுவா இப்படித்தான் பேச்சை ஆரம்பிக்கணும்' என்றாள் இலக்கியா.

'இலக்கியா, சுரேஷ் ஆக்சுவலா ஸ்கூல் டேஸ்ல ரொம்பக் குறும்புக்காரன். கல்யாணம் ஆகி அவன் வைஃப் படுத்தின பாட்டில ரொம்ப சீரியஸ் டைப் ஆயிட்டான்...' என்றான்

'ஓ!'

'ஆமா... அவன் இருக்கிற இடமே கலகலன்னு இருக்கும். ஆனா, அத்தனைக்கும் இப்ப ரொம்ப அமைதியாயிட்டான். இப்படித் தன்னோட எக்ஸ் வைஃப் எப்படியிருக்காளோன்னு கொஞ்சம் கவலைதான்'.

... ... ....!

'அப்புறம் நான்தான். ஃபிரண்ட்ஸை விட்டு விசாரிச்சேன். கொஞ்சம் மிடில் ஏஜிடா ஒரு பணக்கார இடத்தில கல்யாணம் பண்ணிகிட்டு நல்லாத்தான் இருக்கான்னு சொன்னதுக்கப்புறம்தான் மனசு அமைதியானான்.'

'ஏங்க... கடவுள் எப்பப் பாரு நல்லவங்களையே சோதிக்கறாரு?' என்றாள் இலக்கியா.

அவன் கிண்டலாகச் சிரித்தான். 'அதுசரி... உன்னோட கணக்குப்படி நான் நல்லவனா... கெட்டவனா... சொல்லு' என்றான்.

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு அழுத்தமான குரலில் சொன்னாள்.

'நீங்க... ரொம்ப... ரொம்ப நல்லவர்' என்றாள்.

அவளது குரலில் தெரிந்த உண்மைத் தன்மையை உணர்ந்ததாலோ என்னவோ அவனும் சற்றே நெகிழ்ந்தான்.

'தேங்க்ஸ்' என்றான்.

வீட்டில் நுழைந்ததும் எல்லாரும் வந்து அவளை மொலு மொலுவென்று சூழ்ந்து கொண்டார்கள். சற்று நேரம் கழித்து விட்டு மேலே வந்தார்கள்.

'பாரப்பா! உனக்கு என்ன வரவேற்பு!' என்று சிரித்தான்.

அவளும் நிறைவாகப் புன்னகைத்தாள் 'நானும் உங்க எல்லாத்தையும் மிஸ் பண்ணினேன்' என்றாள்.



அவன் குபீரென்று சிரித்தான். 'அதென்ன இலக்கியா... நீ ஒரு ஆள்தானே வந்திருக்க' திடீர்னு வீடே நிறைஞ்ச மாதிரி ஆயிடுச்சு' என்றான்.

'ஆமா... நான் அத்தனை குண்டாக்கும்!' என்றாள் கேலி போல.

'நீ... நீ...' என்று ஆரம்பித்தவன்' வேண்டாம்... அப்புறம் அதுக்கும் சண்டை போடுவியோ என்னமோ!' என்றான். சிரித்துக் கொண்டே 'குட்நைட்' சொல்லி அறைக்குப் போய்விட்டான்.

22



'மாமா எனக்கு பயமாயிருக்கு... சீக்கிரம் முடிங்க...' என்றாள் இனியா.

'எதுக்கு பயம்? நாம எந்தத் தப்பும் செஞ்சிடலே... புரியுதா' என்றான் சுந்தர்.

'யாருக்காக வெயிட் பண்றீங்க...!' என்றாள்.

'இரு... இனியா... முக்கியமான ஆள் ஒருத்தர் வரணும்' என்றான்.

நண்பர்களுடன் சுந்தர் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் வந்திருந்தான். இனியாவைத் திருமணம் செய்து கொள்வதற்காக.

இனியா பயந்து கொண்டே நின்றிருந்தாள்.

'மாமா! இலக்கியா அக்காவை வரச் சொல்லியிருக்கீங்க. வேண்டாம் மாமா... அவளை இதிலே சம்பந்தப்படுத்தாதீங்க.'

'நீ நல்ல ஆள் போ! இலக்கியா மதனியை இந்த விஷயத்துல இழுக்கறதுக்குப் பதிலா நானே தாரை தப்பட்டை முழங்க அண்ணன்கிட்டே போய் விஷயத்தைச் சொல்லிரலாம்' என்றான்.

'மாமா! பெரிய மாமா ரொம்பக் கோபிச்சுகிட்டாங்கன்னா?'

'அட.... என்னடா... இவ! இப்படியெல்லாம் பயந்தா வேலையாகாது அம்மிணி. அப்படியே திட்டினாலும் அண்ணன் என்னைத்தான் திட்டுவாங்க போதுமா?' என்றான்.

அவள் மௌனமாகி விட்டாள். அந்த நேரம் கார் ஒன்று வந்து நிற்க சாட்சிக் கையெழுத்து போடுவதற்காக வந்த ஆளைப் பார்த்து இனியா மயக்கம் போடாத குறையாக நின்றாள்.

'எப்படி நம்ம ஐடியா?' என்று கண்சிமிட்டிச் சிரித்தான் சுந்தர்.

★ ★ ★

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் ஒரு நாள்...

'ஏப்பா... இருபத்தஞ்சு சென்ட் போதுமா? என்றான் மணிவாசகன்.

'தாராளமாய் போதும்ப்பா...!' என்றார் ராஜப்பன். அவருக்கு ஒரே மகிழ்ச்சி.

தங்கள் நிலத்திற்கு அருகிலேயே விலைக்கு வந்த அடுத்த ஐம்பது ஏக்கரையும் வாங்கி விட்டான் மணிவாசகன்.

இரண்டு நிலங்களுக்கும் நடுவில் ஒரு இடத்தில் ஒரு சின்ன விநாயகர் மேடை மேல் அமர்ந்திருந்தார். அரச மரமும், வேப்ப மரமும் அந்த மேடைக்கு மேல் நன்றாக வளர்ந்திருந்தது. அந்த இடத்தை கோவிலுக்கென்று ஒதுக்கி ஒரு சிறிய விநாயகர் கோவில் கட்ட வேண்டுமென்று அவருக்கு ஆசை கிளம்பிவிட்டது.

'முதலில் ஐந்து சென்ட் போதும்' என்றார். மகன் ஒத்துக் கொண்டவுடனே 'கூடக் கொஞ்சம் இடம் கொடேன்ப்பா...' என்றார்.

மணிவாசகனுக்கு சிரிப்பு, அப்போதுதான் அந்தக் கேள்வியைக்



இப்போது சின்னதாக ஒரு ஓரத்தில் விநாயகராம். அப்புறம் சின்னதாக ஒரு அம்மாவும் சிவலிங்கமாம். அந்தப் புறம் முருகனாம் ஒரு ஓரத்தில் நவக்கிரகமாம்.

மணிவாசகனும் 'ஓ.கே.ப்பா!' என்று சொல்லிவிட்டான்.

அவருடைய நம்பிக்கையையும், ஆசையையும் மதிக்கத் தானே வேண்டும் என்று தோன்றியது.

இப்போது விநாயகர் கோவில் மட்டும் கட்டியாகி விட்டது.

அடுத்த வாரத்தில் கும்பாபிஷேகம் ஏற்பாடு செய்திருந்தார்.

வீட்டில் வைத்து இலக்கியாவிடம் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான் மணிவாசகன்.

இப்போதெல்லாம் இலக்கியாவிடம் சற்று இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தான்.

'அப்பாவுக்கு ஒரே குஷி! இலக்கியா வாயேன்; போய்ப் பாத்துட்டு வரலாம்' என்று அழைத்துப் போனான்.

திருமுருகன் பூண்டியில் சிலைக்கு ஆர்டர் செஞ்சதிலேயிருந்து எல்லாத்தையும் ஒரே குறியாச் செய்துட்டான்னாப் பாத்துக்கயேன்' என்றார்.

'ஆமா! இனிமே என்ன? மாமா காலையிலயும் சாயங் காலமும் கோயிலுக்குப் போகாம இருக்க மாட்டாரு' என்று சிரித்தாள் இலக்கியா.

'இலக்கியா! நான் ஒன்று சொல்லட்டா... நம்ம பெரியவங்க நிறைய விஷயங்கள் தீர்க்கமா யோசிச்சுத்தான் வச்சிருக்காங்க... மலைகள்ல ஏறி சாமி கும்பிடறது மாசத்திற்கு ஒரு தடவையாவது மலையேறது ஒன்று அப்புறம் பெரிய பெரிய கோயில்கள்ல காலையில வெறும் வயித்தோட சுற்றுப் பிரகாரத்துல நடந்து வர்றது இதெல்லாம் ரொம்ப நல்ல பழக்கங்கள்' என்றான்.

'ஆமா... எங்கப்பா கூட சொல்வாரு. நம்ம ஊர்ல இந்த கோயில்ல குடுக்கறாங்களே சுண்டல், தேங்காய், பழ

ஏழை பாளைங்களுக்கு வினியோகம் செய்தால் அவர்களுக்கு சத்துக் கிடைக்கும்னு.

'ஆனா... இப்பல்லாம் சடங்குகளோட சாரத்தைப் புரிஞ்சுக்காம, அது வெறும் சடங்கா நினைத்து அரை குறையாய் பண்ணிடறோம்' என்றான்.

போய் சுற்றிப் பார்த்து விட்டு வந்தார்கள். கும்பாபி ஷேகம் முடிஞ்சவுடனே மண்டல பூஜை நடக்கும். கும்பாபிஷேகம் சமயத்துல ஒரு வாரமாவது பெரிய புராணம் பிரசங்கம் வைக்கணும்கறார்' என்றான் மணி வாசகன்.

'ஐயோ அப்படின்னா எங்கப்பாவையும் வரச் சொல் வாம். அவருக்கு இதெல்லாம் கேக்கறதுன்னா ரொம்ப இஷ்டம்' என்றாள் இலக்கியா.

அடுத்த மாதம் முழுவதும் விழாவுக்கான ஏற்பாடுகள், பூஜைக்காக வருவோர் போவோர் பிரசங்கத்துக்காக வருவோர் போவோர் என்று அந்தப் பகுதியே 'ஜே ஜே' ன்றிருந்தது.

சுரேஷ், சௌம்யா, சௌம்யாவின் பெற்றோர் எல் லாரும் வந்து வெகு ஆர்வமாக உதவி செய்தார்கள்.

பத்துப் பதினைந்து நாட்களும் வீடே நிறைந்திருந்தது. வீட்டிலேயே தினம் நூறு பேருக்கு மேல் உணவு தயாரிக்க வேண்டியிருந்தது...

கும்பாபிஷேகத்திற்கு முதல் மூன்று நாட்கள் வரை மணிவாசகன் குடும்பம் அன்னதானத்திற்குப் பொறுப் பேற்றுக் கொண்டார்கள்.

அவர்களே எதிர்பாராத விதமாக ஊர்ப் பெரியவர்கள், பக்கம் பக்கத்து ஊர்க்காரர்கள் ஒவ்வொரு நாள் கட்டளை ஏற்றுக் கொள்ள நாற்பத்தெட்டு நாளும் அன்னதானத்திற்கு கட்டளைதாரர்கள் சேர்த்து விட் டார்கள்.

அருமையான ஒரு வளர்பிறை நாளில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்தது.

அதற்கும் ஒரு வாரம் கழித்து இலக்கியாவும் மணிவாச கனும் மேலே இருந்த கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டில் எல்லாரும் கோவிலுக்குப் போயிருந்தார்கள்.

சுந்தர் வழக்கமில்லாத வழக்கமாக மேலே வந்தான்.

'அண்ணா, உன்கிட்டப் பேசணும்!' என்றான்.

'சொல்லுப்பா!' என்றான் மணிவாசகன்.

சுந்தர் தங்களது திருமணப் பதிவுச் சான்றிதழை எடுத்து நீட்டினான்.

மணிவாசகன் வாங்கிப் படித்து முகத்தில் எதையும் காட் டாமல் இறுக்கமாக வைத்துக் கொண்டு மனைவியிடம் நீட்டினான்.

இலக்கியா படிக்கும் போது அவள் முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூர்ந்து கவனித்தான்.

இலக்கியாவின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியையும், கலக்கத்தையும் மனதில் குறித்துக் கொண்டான். அதற்குள் சுந்தரும் அவசரமாக...

'இல்லண்ணே! இலக்கியா மதனிக்கு எதுவும் தெரியாது. இது எங்க ஏற்பாடுதான்' என்றான்.

மணிவாசகன் தலையை அழுந்தக் கோதிக் கொண் டான். எதுவும் பேசவில்லை.

கனமான மௌனம் நிலவியது.

'அண்ணா! நீ ஒத்துக்கலைன்னவுடனே எனக்கு வேற வழியில்லாமப் போச்சு. ஆனா நீ ஒத்துக்கற வரைக்கும்

இனியா அங்கதான் இருப்பா. நான் இங்கதான். எத்தனை நாளானாலும் காத்திருப்போம்' என்றான்.

இலக்கியா எதுவுமே பேசத் தோன்றாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மணிவாசகன் மறுபடியும் இரும்புக் குரலில் சொன்னான்.

'பெரியவர்களே வேண்டாம்னு போய் கல்யாணம் பண்ணிகிட்டு வந்துட்டே! இப்ப எதுக்கு என் பர்மிஷன் கேட்கறே' என்று.

சுந்தர் சற்றும் அசைந்து கொடுக்காமல் சொன்னான்.

'அண்ணா! நான் உன் நிழல்ல வளர்ந்த ஆளு... அப்படி யெல்லாம் செய்ய மாட்டேன். பெரியவர்களைத் துணைக்கு வச்சகிட்டுத்தான் செய்வேன்' என்றான்.

மணிவாசகன் கேள்விக்குறியாகப் பார்த்தான். 'அது யாருடா? நமக்குத் தெரியாத பெரியவங்க' என்றான்.

சுந்தர் சொன்னான்.

மணிவாசகன் சற்றும் இதை எதிர்பார்க்கவில்லை.

நம்பவே முடியாமல் பார்த்தான்.

'ஆமா! அவங்களே இப்ப வருவாங்க!' என்றான்.

அதே நேரம்!

தேவகி மேலே ஏறி வந்தார்.

'மதனி!' என்று பதறிக் கொண்டு எழுந்தான் மணிவாசகன்.

'உட்காரு... தம்பி!' என்றார் தேவகி. முகம் திரும்பி சுந்தரைப் பார்த்தார்.

'நீ போ சின்னத்தம்பி! நான் அண்ணன்கிட்டே பேசிட்டு அப்புறமாக் கூப்பிடறேன்' என்றாள்.

மணிவாசகன் குழப்பம் நிறைந்த பார்வையுடன் இறங்கிய குரலில் கேட்டான்.



'என்ன, மதனி, இப்படி செஞ்சுட்டீங்க' என்றான் வருத்தமான குரலில்.

தேவகி அமர்ந்தார். ஆனால் அழுத்தமான குரலில் சொன்னாள்.

'தம்பி! நான் எந்தத் தப்பும் செய்யலே. நல்லதுதான் செஞ்சேன்' என்றாள்.

'மதனி! நீங்க செஞ்ச காரியம் தப்பா ரைட்டான்னு பேச வர்லே' நீங்க இப்படி செய்வீங்கன்னு நான் நினைக்கலே!' என்றான் மணிவாசகன்.

'தம்பி! நான் சொல்றதை நல்லா யோசிச்சுப் பாரு! ரெண்டு பேரும் பிரியப்பட்டுட்டாங்க... நீதான் ஒத்துக்கலை யாம். கேட்டா ரெண்டு பொண்ணும் ஒரே வீட்ல இருந்து எடுக்கக் கூடாதுன்னு சொன்னயாம்' என்றாள் தேவகி.

மணிவாசகன் மதனியின் பார்வையைச் சந்திக்க வில்லை. மாறாக வேறு எங்கோ பார்த்தான்.

'இந்த மாதிரிக் காரணமெல்லாம் நீ சொல்வேன்னு நா நினைக்கலே. காலம் மாறிகிட்டிருக்கு. பிரியப்பட்டுக் கல்யாணம் பண்ணிக் குடுங்கன்னு கேக்கறவங்களுக்கு நாம செய்து வைக்கலேன்னா அவங்களே போய்ப் பண்ணிக்கப் போறாங்க! அவ்வளவுதானே! அதுதான், மதனி. நம்ம குடும்பத்துல ஒருத்தராவது இல்லாம நான் கல்யாணம் பண்ணிக்க விரும்பலே. நீங்க வந்து நடத்திக் குடுங்கன்னு கேட்டான்.' நானும் போனேன்' என்றாள் மதனி.

மணிவாசகன் ஒன்றும் பேசவில்லை.

'இப்பவும் தம்பி என்ன சொல்றான்னா... இந்த விஷயம் பெரியவங்களுக்குத் தெரியவே வேண்டாம். புதுசாக் கல்யாணம் நீங்களே பேசற மாதிரிப் பேசி எங்களுக்கு ஊரறியக் கல்யாணம் செஞ்சு வைங்க. அதுவரைக்கும் நாங்க தனியா சந்திக்கமாட்டோம். ஏன்... பேசிக்கறது கூட

இல்லேன்னு முடிவு செஞ்சு வச்சிருக்கோம்கறான் என்ன செய்யலாம் சொல்லு...!' என்றாள் தேவகி.

மணிவாசகன் எழுந்து நின்றான். இரண்டு பேர்களுக்கும் முதுகைக் காட்டினாற் போல் நின்று கொண்டு,

'இந்த வீட்ல யாருமே என்னை சரியாப் புரிஞ்சுக்கற தில்லே. நீங்க மட்டும்தான் என்னை சரியாப் புரிஞ்சுக்கற ஆள்ன்னு நான் நினைச்சகிட்டிருந்தேன்' என்றான். குரல் ரொம்ப இறங்கிப் போய்விட்டது.

'தம்பி திரும்பி என் முகத்தைப் பார்த்துப் பேசு!' என்றாள் தேவகி ஆணையிடுவது போல்.

மணிவாசகன் சங்கடமான முக பாவத்துடன் திரும்பி தேவகியின் முகத்தை பார்த்தான்.

தேவகி குபீரென்று சிரித்தாள்.

'தம்பி! இப்பவும் கூட உனக்கே உன்னைப் புரியல. ஆனா, எனக்கு உன்னைப் புரியறது. இதா... இப்படி முழிச்சுட்டு நிக்கறாளே இந்தப் பொண்ணு இவளுக்கும் தான் தன்னையே புரிஞ்சுக்க முடியலை. ஆனா நான் உங்க ரெண்டு பேரையும் புரிஞ்சுகிட்டேன் தம்பி! அதனாலதான் இந்தக் கல்யாணத்தையே செஞ்சு வச்சேன்' என்றாள். பிறகு ஏதோ அவசர வேலையைப் போல்,

'யோசி... தம்பி! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு...' என்று அவசரமாகக் கீழே இறங்கப் போனாள்.

இலக்கியாவும் அவசரமாகப் பின் தொடர்ந்தாள். தேவகி நின்றாள்.

'நீ எதுக்கும்மா பின்னாடி வரே? நீ இருந்து அவர்கிட்டே பேசு. பேசி ஒரு முடிவுக்கு வா' என்று போனாள்.

இலக்கியா திரும்பி வருவதற்குள்ளாக மணிவாசகன் தன் அறைக்குப் போய்விட்டான்.



சோபாவில் சாய்ந்து அமர்ந்துவிட்டான். சற்றுக் கழித்து இலக்கியா அவனருகில் போனாள்.

'சத்தியமா... மாமா! எனக்கு இது எதுவும் தெரியாது. எப்படியாவது உங்ககிட்டே ஃபைட் பண்ணியாவது சம்மதிக்க வக்கணும்னுதான் நான் நினைச்சனே ஒழிய இந்த மாதிரி ஐடியா எல்லாம் எனக்குத் தோணவே இல்லை. இன்ஃபாக்ட்... இது எனக்குப் பிடிக்கலே' என்றாள்.

அவன் மௌனமாகவே அமர்ந்திருந்தான்.

'மாமா! இந்த அவமானம் உங்களுக்கு மட்டுமில்லே! எனக்கும்தான். உங்களுக்கு வர்ற எந்த அவமானமும் எனக்கும்தான்' என்றாள்.

மணிவாசகன் உட்கார்ந்த வாக்கில் அவளைப் பார்த்தான்.

வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

'ஃபால் - இஸ் நாட் யுவர்ஸ்... ஐ கேன் அண்டர் ஸ்டாண்ட்' என்றான்.

'தேங்க்ஸ்...!' என்றாள் இலக்கியா. ஒரு விடுபட்ட மனப்பான்மையுடன்,

'சற்றுக் கழித்து அவளே கேட்டாள்' இனி என்ன செய்யறது?' என்றாள். அவன் பெருமூச்சு விட்டான்.

'இனி என்னத்தை செய்யறது? அதான் இந்தப் பெரிய புராண விரிவுரை கேட்கறதுக்கு உங்கப்பாவுக்கு ரொம்ப இன்ட்ரஸ்ட்ன்னு சொன்னயே... வரச் சொல்லிக் கூப்பிடு... என்ன செய்யறதுன்னு பார்க்கலாம்' என்றான்.

அன்றிரவு!

இலக்கியா வெகு நேரம் உறங்கவில்லை. இனியாவுக் காகக் கணவனிடம் வாதாடிய தான் இந்தத் திருமணம் முடிந்ததற்குப் பிறகு மகிழ்ச்சிதானே அடைய வேண்டும். மாறாக கணவனின் வாடிய முகமே தன்னைத் துளைத்

தெடுக்கிறதே... ' ஏன்? அவனது அவமானத்தை ஏன் தன்னுடைய அவமானமாகவே நினைக்கிறோம்' என்று எண்ணி மாய்ந்து போனாள்.

எழுந்து மணிவாசகனின் அறையில் எட்டிப் பார்த்தாள்.

மணிவாசகனும் உறக்கம் பிடிக்காமல் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான்.

இலக்கியா உள்ளே நுழைந்தாள். அந்த நேரம் அவனைத் தன் மார்போடு சேர்த்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று மனது துடித்ததைக் கண்டு திடுக்கிட்டாள்.

'மாமா! இந்த இனியா பாத்தீங்களா! இப்படிச் செய்வான்னு நினைக்கவே இல்லை. இப்படி உங்களை அவமானப்படுத்திட்டாளே!' என்று பொரிந்தாள்.

மணிவாசகன் மனைவியை ஆழமாகப் பார்த்தான்.

'சரி... விடு... நம்மளைச் சுத்தி எல்லாரும் குழந்தைங் கன்னு நாம நினைக்கறோம். ஆனா குழந்தைங்க வளர்ந் தர்றாங்கன்னு நாம புரிஞ்சுக்கறது இல்லே. இலக்கியா... இதுக்காக நீ சங்கடப் படாதே! மதனி சொன்ன மாதிரி இஷ்டப்பட்டாங்க. கல்யாணம் செஞ்சுகிட்டாங்க... அவ்வளவுதானே... சரி செய்வோம்!' என்றான்.

இலக்கியா மெது மெதுவாகச் சமாதானம் ஆனாள்.

'தூங்குங்க... மாமா! நாளைக்கு நிறைய வேலையிருக்கு' என்று கவனம் மாற்றினாள். பிறகு அவள் அறைக்குப் போகையில்,

'இலக்கியா!' என்றான் ஒருவிதமான குரலில். அவள் நின்றாள்.

'தாங்க்ஸ்!' என்றான்.

'எதுக்கு?' என்றான்.



'உன் தங்கையோட வாழ்க்கையைக் காட்டிலும் என் னோட மான அவமானம் பெரிசுன்னு நினைச்சயே... அதுக்கு' என்றான்.

அவள் முகம் சிவந்தது. எதுவும் பேசத் தோன்றாமல் தலையை மட்டும் அசைத்து விட்டு அவள் அறையை விட்டுப் போவதை அவன் விசித்திரமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

23



இன்றைக்கு நன்றாகத் தனிமை கிடைத்தது இலக்கியாவுக்கு.

அழுது தீர்த்தாள். தங்கை தேவையில் லாமல் தன் வாழ்க்கையில் மேலும் சிக்கலை உண்டாக்கிவிட்டாள் என் றாள் தேவகியக்கா கூட அவங்களோட சேர்ந்து கொண் டாரே என்று நினைக்க நினைக்க இலக்கியாவுக்குத் தாளவில்லை.

இடையிலே அவளுக்கும், கணவனுக்கும் உறவு சீர்படக் கூடும் என்ற நிலைமை கூடத் தோன்றியிருந்தது.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளே அவளது தோழிகள் சௌம்யா, ஹேமா, லலிதா எல்லாரும் வந்து விட்டார்கள்.

பொழுது கலகலப்பாகக் கழிந்தது. கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளிரவு எல்லாரும் அடுத்த நாள் காலை விரைவில் எழுந்திருக்க வேண்டும் என்பதாலேயே என்னவோ விரைவில் உறங்கி விட்டார்கள். ஆனால், கும்பாபிஷேகத் தன்று இரவும் எல்லாரும் வற்புறுத்தவே தோழிகள் தங்கினார்கள்.

ஹேமாவுக்கும், லலிதாவுக்கும் இலக்கியாவும், தேவகி யும் ஒற்றுமையாக எல்லாக் காரியங்களையும் செய்வது குறித்து ஆச்சரியம்.

'ம்... இலக்கியா! உங்காத்துல எல்லாரும் ஒத்துமையா இருக்கறதைப் பார்த்து நேக்கும் பொறாமையா இருக்குது. எங்காத்துல எங்க ஓரகத்தி இருக்காளே அப்பப்ப திரி பத்த வச்சுடுவா. தெரியுமோ? அண்ணனையும், தம்பியையும் ஒத்துமையாவே இருக்க விடமாட்டா தெரியுமோ! என்று பத்துத் தடவையாவது சொல்லியிருப்பாள்.'

இலக்கியா யதார்த்தமாகச் சிரித்தாள்.

'எங்க வீட்டுல தேவகிக்கா பேச்சுக்கு மறு பேச்சுக் இடையாது' என்றாள்.

'அடிப்பாவி! எப்படீடி இப்படிப் பொறாமைப் படாம சொல்ல முடியுது' என்றாள் ஹேமா.

இலக்கியா ஆச்சரியமாகக் கேட்டாள். 'இதுல பொறாமைப் படறதுக்கு என்ன இருக்கு? இந்தக் குடும்பம் மேல வர்றதுக்கு அவங்களும் ஒரு காரணம். எங்க வீட்டுக் காரரையும், கொழுந்தனையும் பாத்துப் பாத்துக் கவனிப் பாங்களாம் அந்த நன்றி' என்றாள் இலக்கியா.

'கேக்கறதுக்கே... நன்னாருக்குது' என்றாள் ஹேமா.

'டீ! உங்காத்துக்காரர் காத்துகிட்டிருப்பார். போடி!' என்று அனுப்பி வைத்தார்கள்.

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் எதுவும் விளக்கம் சொல்லாமல் அறைக்கு வந்தாள்.

மணிவாசகன் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந் தவன் மூடி வைத்தான்.

'என்ன இலக்கியா? ஃப்பிரண்ட்ஸ் எல்லாம் ஒன்னாத் தங்கறதே அதிசயம். போய்ப் பேசிகிட்டிரு போ!' என்று அனுப்பி வைத்தான்.

மாடியில் இருந்த அந்தக் கூடத்தின் மறுகோடியில் இருந்த அறையில் பெண்கள் தங்கினார்கள்.



கலீர், கலீரென்று பெண்கள் சிரிக்கிற சத்தமும், அவர்கள் பேசிக் கொள்வதும் கேட்க அவள் மெல்லச் சிரித்துக் கொண்டே உறங்கினாள்.

பேராசிரியர்களைப் பற்றியும், சக மாணவர்களைப் பற்றியும் பேசிச் சிரித்தார்கள். அடுத்த நாள் காலையில் அவள் இறங்கி வருவதற்குள்ளாக அவன் இறங்கிப் போயிருந்தான்.

தோழிகள் கோயிலுக்குப் போகலாம் என்று விரும்பிய தால் போனார்கள். போய்விட்டு வரும்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டார்கள்.

வாகீசனின் மகன் ஆறு வயது சரவணனுக்கு குட்டி இரண்டு சக்கர சைக்கிள் ஓட்டச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

தங்களது வயல் வழியாகவே போய்க் கடைசியில் கோயில் ரோட்டில் இணைந்து கொள்ள முடியும் என் றாலும் தோழிகள் எல்லாம், 'இலக்ஸ்... வெதர் ரொம்ப அருமையா இருக்கு. ஃப்ரெஷ்ஷா இருக்கு. ரோடு ஃப்ரீயா இருக்கு. நடந்து போலாம்' என்றார்கள்.

சரியென்று போய்க் கொண்டிருந்தார்கள்.

லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு குழந்தை சைக்கிள் சீட்டில் அமர்ந்து கொள்ள ஹேண்டில் பாரைப் பிடித்துக் கொண்டு கூட ஓடி வந்து கொண்டிருந்தான் மணிவாசகன்.

அவர்கள் பார்க்கும்போதே ஒரு சுவாரசியமான சம்பவ மும் நடந்தது. சரவணனின் ஃப்ரண்டும் அவன் பெற் றோரும் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தவுடன்,

'சித்தப்பா... நிறுத்து... நிறுத்து!' என்றான்.

மணிவாசகனும் நிறுத்தினான்.

சரவணன் இறங்கிப் போய்த் தன் தோழனுடன் பேசிக் கொண்டிருக்கையிலேயே பெண்களும் அருகில் வந்து விட்டார்கள்.

சைக்கிளை ஸ்டேண்ட் போட்டு நிறுத்திவிட்டு இரண்டு கைகளையும் இடுப்புக்கு முட்டுக் கொடுத்து நின்று லேசாக புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான்.

'என்னங்க... மாமா!' என்றாள் இலக்கியா. அவன் சிரித்தான்.

'குட்மார்னிங்!' என்று மற்ற பெண்களைப் பார்த்து சொன்னவன் இலக்கியாவிடம் திரும்பி,

'பாரு! பெரியவரு ஃபிரண்டுகிட்டே பேசணுமாம் நிக்கறேன்' என்றான். திரும்பிப் பார்த்தார்கள்.

குழந்தைகள் இரண்டு பேரும் தீவிரமாக ஏதோ பேசியபடி வந்தார்கள். எல்லாரும் சிரித்தார்கள்.

'பை டா!' என்று கையாட்டி விட்டு சரவணன் 'சைக்கிளை நோக்கி வர அந்தக் குழந்தை மறுபடியும் இவனை நோக்கி ஓடி வந்தது.

'டேய்! சரவணா! நாளைக்குக் காலையில் என்ன பிரசாதம் டா?' என்றான்.

சரவணன் சித்தப்பாவைப் பார்த்தான்' 'என்ன பிரசாதம் சித்தப்பா?' என்றான்.

'நீ எது சொல்றியோ அது பண்ணச் சொல்லிரலாம் டா!' என்றான் மணிவாசகன் சீரியஸாய்.

சரவணன் உடனே பெருமையாகத் தோழனைப் பார்த்தான். 'நான் சொன்னேன் இல்ல! நான் சொன்னா... எங்க சித்தப்பா... கேப்பாருன்னு' என்றான்.

'ஆமா!' என்றான் அந்தப் பையன்.



மணிவாசகன் புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான்.

சரவணன் ஒரு நிமிடம் யோசித்து விட்டு, 'டேய், ராம் உனக்கு என்ன வேணும்னு சொல்லு. அதையே செய்யச் சொல்றோம்' என்றான்.

ராம் 'சரிடா... வெண்பொங்கல் போடச் சொல்லு. எங்க பாட்டிக்கு ரொம்ப இஷ்டம்' என்றான்.

'சரிடா! நாளைக்கு உனக்குக் கொஞ்சம் ஜாஸ்தியாக் குடுக்கச் சொல்லி அய்யர்கிட்டே சொல்லிடறேன்' என்றான்.

'பைடா!' என்று சைக்கிளை நோக்கி வந்தான்.

மணிவாசகன் குபீரென்று சிரித்தான். 'என் நேரம் பாத்தீங்களா வீட்ல சின்னப் பையன் பேச்சிலிருந்து என் வைஃப் பேச்சு வரைக்கும் தாளம் போட வேண்டியிருக்கு' என்றான்.

பெண்கள் சிரித்தார்கள். இலக்கியாவின் முகம் சிவந்தது.

'ஓ.கே... பை!' என்று சித்தப்பாவும் மகனும் கிளம்பி னார்கள்.

பெண்கள் சிரித்துக் கொண்டே மேலே நடந்தார்கள்.

லலிதா 'பரவால்லைடி உங்க ஆத்துக்காரர் குழந்தைங்க சைகாலஜிக்கேற்ப நடந்துக்கறார். எங்காத்துல 'உன் இஷ்டத்துக்கெல்லாம் ஆடணுமாடா ஷனியனேன்னு 'குட்டு வேண்ணா வைப்பாங்க!' என்றாள்.

'ஆனா, எங்க வீட்ல அவர் பார்த்து, 'ப்ளீஸ்... சரவணன் சார் வேண்டாம்னா விட்டுடுங்கன்னு சொன்னால் போதும். அவனும் கேட்டுக்குவான்' என்றாள் இலக்கியா.

'பரவால்லடி அண்ணன் மகனையே இவ்வளவு பிரியமா நடத்தறாரே. தனக்கே தனக்குன்னு ஒண்ணு பொறந்தா... எப்படி வச்சுப்பாரு' என்றாள் சௌம்யா.

'எப்பமா ரிலீஸ்?' என்றார்கள்.

'தெரியலடி' என்றாள் இலக்கியா.

அன்றைக்கிரவு!

தனியாக நேரம் கிடைக்கும் போது மணிவாசகன் ஒரு சிரிப்புடன் சொன்னான்.

'ஏன் இலக்கியா? ஃப்ரெண்ட்டோட ஒரு நாள் இருந்தது ரிஃப்ரெஷ்டா... இருந்திருக்கும் இல்லே' என்று.

'ஆமாங்க... ரொம்ப நல்லா இருந்தது என்று. அவளும் முகம் மலர ஒத்துக் கொண்டாள்.

அவன் திடீரென்று கலகலவென்று சிரித்துக் கொண்டான்.

'ஏன் இலக்கியா? அது யாரு பனங்கொட்டை. அப்புறம் பாம்பாட்டி யாரு' என்றான்.

இலக்கியாவின் முகம் சிவந்தது. 'ரெண்டு பேரும் எங்க கிளாஸ்மேட்ஸ். பனங்கொட்டைன்னு ஒருத்தருக்குப் பேரு. ஸ்டைல்ன்னு நினைச்சுக்கிட்டுத் தலையை எவ்வளவு அசிங்கம் பண்ணிக்க முடியுமோ அவ்வளவு பண்ணிக்கு வான். பாம்பாட்டின்னு இன்னொரு கிளாஸ்மேட் ரொம்ப ஸ்டைல்ன்னு நினைச்சுகிட்டு அஷ்ட கோணலா நெளிஞ்சு நெளிஞ்சு நடப்பான். அதான்' என்று சிரித்தவள் தங்கள் கல்லூரி நாட்களின் சிரிப்பு மிகுந்த நிகழ்ச்சிகளை அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

முகத்தில் உணர்ச்சி பாவங்கள் பொங்கப் பேசுகிற மனைவியை அவனும் ரசித்துப் பார்த்தான்.

அவன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான்.

'ஆனா, எனக்குத்தான் காலேஜ் அனுபவமே கிடைக் கலை' என்றான்.



'ஆமாங்க... நீங்க பிளஸ்டூவில வாங்கியிருந்த மார்க் குக்குக் காலேஜ் போயிருந்தீங்கன்னா ரொம்ப ஷைன் பண்ணியிருந்திருப்பீங்க' என்றாள் இலக்கியா.

'அதுசரி! அப்புறம் இந்தக் குடும்பத்தை யார் தூக்கி நிறுத்தறது? பெரிய குடும்பம்' என்றான்.

இலக்கியா கணவனின் முகத்தை அன்புடன் பார்த்தாள்.

'காலேஜ் படிப்பென்னங்க படிப்பு? நீங்க இப்ப பத்து வருஷத்துல எவ்வளவு அனுபவம் கத்துகிட்டீங்க... எப்படி சக்ஸஸ்ஃபுல்லா வந்திருக்கீங்க...' என்றாள்.

அவன் ரசனையுடன் மனைவியைப் பார்த்தான். இலக்கியா தனக்குத்தானே பேசுவது போல் தொடர்ந்தாள்.

'காலேஜ் படிப்பு வாழ்க்கையைப் பத்தின கனவுகளை வேணும்னா சொல்லிக் குடுக்கும், ஆனா அனுபவம் வாழ்க்கையோட மதிப்பை சொல்லிக் குடுக்கும்' என்றாள்.

மணிவாசகனும் ஆழ்ந்த குரலில் சொன்னான். 'ஆமா... இலக்கியா. ஏதாவது ஒண்ணை விட்டுக் கொடுத்தாதான் இன்னொன்று கிடைக்கும். நான் என் காலேஜ் அனுப வத்தை விட்டுக் கொடுத்தேன். குடும்பம் கௌரவமா நிமிர்ந்து நின்னுச்சு...' என்றான்.

இலக்கியா கணவனைப் பெருமையாகப் பார்த்தாள்.

'மாமா! நீங்க ரியலி கிரேட்!' என்றாள்.

மணிவாசகன் சிரித்தான். 'அடடா! வைஃப் கிட்டே இருந்து வந்த முதல் காம்ப்ளிமெண்ட்' என்றான்.

இலக்கியாவின் முகம் சிவந்தது.

மணிவாசகன் உணர்வுகள் குழைந்த குரலில் சொன்னான்.

'இலக்கியா, நீ இப்படி முகம் சிவந்து நிற்கும் போது ரொம்ப அழகா இருக்கே தெரியுமா?' என்றான்.

அந்தக் கணத்தில் அவன் மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும். தன் சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டும் என்றெண்ணிய இலக்கியா அதைச் செய்திருக்கலாம் செய்யவில்லை.

ஒரு நிமிடம் அவள் மௌனமாக நின்றாள்.

மணிவாசகனும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் போராடுவது புரிந்தது.

சட்டென்று திரும்பி 'நா கொஞ்சம் நடந்துட்டு வரேண்டா... இலக்கியா, நீ தூங்கு' என்று போய்விட்டான்.

இலக்கியா அன்று வெகுநேரம் மகிழ்ச்சியில் உறங்க வில்லை. அந்த நிகழ்வுக்குப் பிறகு இருவரும் இயல்பாக உரையாடத் துவங்கியிருந்தார்கள். அதற்குள் இந்த சுந்தரும், இனியாவும் இப்படி அவரை அவமானப்படுத்தி விஷயத்தைக் கெடுத்து விட்டார்களே என்று அவளுக்கு ஆற்றாமை.

வீட்டில் பின் கட்டில் இருந்த ஒரு கல்திட்டின் மேல் அமர்ந்து அழுது கொண்டிருக்கிற அவள் தலையை ஒரு கை கோதிக் கொடுத்தது.

'எதுக்கு பொண்ணே இப்படி அழறே?' என்றாள் தேவகி.

இலக்கியா சோகமான முக பாவத்துடன் நிமிர்ந்து தேவகியை பார்த்தாள்.

'அக்கா நீங்களும் சேர்ந்துகிட்டு இப்படி அவரை அவமானப்படுத்திட்டீங்களே!' என்றாள்.

'யாரை அவமானப்படுத்தினேன்?' என்றாள் தேவகி.

'வீட்டுக்காரரை!' என்றாள் இலக்கியா.

'உங்க வீட்டுக்காரரா? என்னமோ உனக்கும், அவனுக்கும் ஒத்து வர்லை? ரெண்டு பேரும் பிரிஞ்சிடுவீங் கன்னெல்லாம் சுந்தர் சொன்னானே?' என்றாள்.



'ஓ... உங்களுக்குத் தெரிஞ்சிருச்சா?' என்றாள்.

'அதை விடு. ஆனா, இப்ப என்னமோ எங்க வீட்டுக் காரர்ங்கிறே!' என்றாள்.

இலக்கியாவுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை.

'அசட்டுப் பெண்ணே? இந்தக் கல்யாணத்தை நானே முன்னாலே நடத்தினேன். எதுக்குத் தெரியுமா? அவங்க ரெண்டு பேரையும் சேத்து வைக்கறதுக்காக மட்டும் இல்லே... உங்க ரெண்டு பேரையும் சேத்து வைக்கத்தான்' என்று சிரித்தாள்.

இப்போது இலக்கியா மறுபடியும் அழுதாள்.

'அக்கா... தப்பு... அவரு மேலே இல்லை. நான்தான் அவரோட அருமையைப் புரிஞ்சுக்கலை. நிறத்தை மட்டும் பாத்தேன். மனசைப் பார்க்கலை... சுருக்குன்னு பேசிட் டேன்' என்றாள்.

'சரி... விடு! இப்ப... எப்படி இருக்கே? மனசைப் பாக்கப் பழகிட்டியா?' என்றாள்.

இலக்கியாவின் முகம் சிவந்தது. 'இப்ப... இப்ப... அவருதான், என் உயிருன்னு ஆகிப் போச்சு' என்றாள் தடுமாறியபடி.

தேவகி கலகலவென்று சிரித்தாள்.

'மக்கு!' என்று வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

இலக்கியா சகோதரியின் வயிற்றில் வெட்கத்துடன் முகம் புதைத்துக் கொண்டாள்.

'அதை வாகாகிட்டே சொல்றதுதானே?'

'எப்படிக்கா சொல்றது? முதல் நாளே நான் அவரை அவமானப்படுத்திட்டேன். பிடிக்காத பொண்ணைத்

தொடற அளவுக்கு நானும் ஒன்றும் சுயமரியாதை இல்லாதவன் இல்லேன்னு அவரும் சொல்லிட்டாரு. இப்ப இப்படிச் சொன்னா.' அவருக்கும் கௌரவம்னு ஒண்ணு இருக்குமில்லே!' என்றாள்.

'மக்கு! படிச்சிருக்கயே ஒழிய உனக்கு வாழ்க்கை புரியல்லையே. உறவுக்குள்ளே அதிலயும் கணவன், மனைவிக்குள்ளே எதுக்குக் கௌரவம்?' என்றாள்.

அன்றைக்கு தேவகி அவளிடம் வெகு நேரம் பேசினாள். அனுபவத்தின் அடிப்படையை தான் கற்றுக் கொண்ட வாழ்க்கையின் ரகசியங்களையெல்லாம் சொன்னாள்.

இலக்கியா மலைத்துப் போனாள்.

'சரி... கவலைப்படாதே பொறு! சுந்தருக்கும், இனியா வுக்கு கல்யாணம் முடியட்டும், அதுக்கப்புறம் உங்க விஷயத்தை சரி பண்ணிரலாம். அதுவரைக்கும் உன் ஹஸ்பெண்ட்கிட்டே இயல்பாயிரு!' என்றாள் தேவகி.

'சரிக்கா!' என்ற இலக்கியா ஆனாலும் இனியா மேல எனக்கு கோபம்தான்' என்றாள்.

தேவகி சிரித்தாள்.

'சரி... அந்தக் கோபத்தையும் அவங்கட்டே காட்டு. ஆனா, வெளி மனுஷர்களுக்கு விட்டுக் குடுக்காமே காட்டு' என்றாள் தேவகி.



## 24

கிட்டத்தட்ட எல்லா ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டன. அடுத்த வாரத்தில் இனியாவுக்கும், சுந்தருக்கும் திருமணம்.

இந்தத் திருமணத்தை முடிவு செய்வதற்காகக் கணவன் மெது மெதுவாகக் காய் நகர்த்திய விதம் குறித்து இலக்கியாவுக்கு ஆச்சரியம்தான்.



பெரிய புராண விரிவுரை கேட்க அப்பா ஆர்வமாக வந்தார். தினமும் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியிருந்த தால் காரில் டிராப் செய்தார்கள். அந்த வாரம் சனி, ஞாயிறு தங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவரும் தங்கினார்.

விச்ராந்தியாக அவரோடு பேசுவது போல் பேசினான். பொது விஷயங்கள் பேசினார்கள். அதற்கு முன்பாகவே தனது பெற்றோரிடம் பேசி வைத்துக் கொண்டான் போலும்.

ராஜப்பனும் வந்து சேர்ந்து கொண்டார். பொதுப்படை யாக பெரிய புராணம் பற்றி இரண்டு சம்மந்திகளும் சற்று நேரம் பேசினார்கள்.

'எனக்குப் பெரிய புராணம் ரொம்பப் பிடிச்ச புராணம்' என்றார் அப்பா.

'அப்படியா?' என்றார் இலக்கியாவின் அப்பா செந்தில்நாதன்.

'ஆமாங்க... எனக்கு, தெரிஞ்ச வேற எந்தப் புராணத்தி லேயும் இப்படி சாதாரண ஜனங்களை வச்சு ஒரு பக்தி இலக்கியம் அமைஞ்சதில்லே...' என்றார்.

'ஓ...!'

'ஆமாங்க... நீங்க பாருங்க சலவை செய்யறவர், சந்தனம் அரைக்கறவருன்னு எல்லா அடியார்களும் சமுதாயத்தோட எல்லா மட்டத்தில் இருந்தும் வந்திருப்பாங்க. இவங்களை யெல்லாம் வச்சு ஒரு இலக்கியம் படைக்கறதுங்கறது சாதாரண விஷயங்களா? அதுவும் பக்தி இலக்கியம்கறது னால எல்லாரும் ஒத்துகிட்டாங்க' என்றார்.

அப்பாவின் 'பட்டறிவு' பேசுகிறது என்பதை உணர்ந்து கொண்ட மணிவாசகன் சற்று நேரம் அவர்களைப் பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'அதனாலதான் என் குழந்தைங்களுக்கு முடிஞ்ச வரைக்கும் பெரிய புராணத்துல வர்ற பேருங்களா வச்சேன்!' என்றார்.

'அப்பா மாணிக்கவாசகன் அதுல வராதில்லப்பா?' என்றான் மணிவாசகன்.

'ஆமா... ஆனா திருவாசகத்து மேல இருந்த மதிப்புக்காக வச்சேன்னு வையேன். வாகீசன்கற பேரு திருநாவுக்கரசரோடது' என்றார்.

சம்பந்தி தொடர்ந்து 'ஆமா, வாகீசர், சுந்தரர், மங்கை, திலகவதி, எல்லாம் நல்ல பேருங்க' என்றார்.

அந்த இலக்கியப் பேச்சில் மணிவாசகன் கலந்து கொள்ளாமல் சற்றுக் கேட்டவன் மெதுவாகத் தன் கருத்தை வைத்தான்.

'மாமா! நம்ம வீட்ல ஒரு பேச்சு அடிபடுது. நம்ம சுந்தருக்கு இனியாவைப் பேசலாமா அப்படீன்னு' என்றான்.

செந்தில்நாதன் ஒரு கணம் திகைத்தார். 'ஜாதகப் பொருத்தம் பாக்க வேண்டாமா?' என்றார்.

மணிவாசகன் புன்னகைத்தான்.

'மாமா, பஞ்சாங்கத்துலயே போட்டுருப்பாங்க பாத்திருப்பீங்க? மனப்பொருத்தம் இருந்தா மற்ற பொருத்தம் பாக்கத் தேவையில்லைன்னு' என்றான்.

'ஆமா...!' இருந்தாலும்... என்று இழுத்தார். மணி வாசகன் மறுபடியும் புன்னகைத்தான்.

'ஒருவேளை ரெண்டு பேரும் இஷ்டப் பட்டுட்டாங்கன்னு வைய்ங்க' என்றான்.

செந்தில்நாதன் மெதுவான குரலில் இழுத்தார்.

'இஷ்டப்பட்டுட்டா... என்ன செய்ய முடியும்!' என்றார்.



ராஜப்பன் இடையில் புகுந்து 'சம்மந்தி, அவன் சும்மா வம்புக்குப் பேசறான். நாங்களே ஜாதகம் பாத்துட்டோம். ஏழு பொருத்தம் இருக்குது'என்றார்.

'ஓ...!' அப்ப சரி! நான் என் வைஃப்கிட்டே பேசிட்டு' என்று சொல்கையிலேயே பூங்கனியம்மாவும், பொன்மணியம்மாவும் வந்தார்கள்.

பூங்கனி ஒரே பரபரப்பாய் வந்தார். 'ஏங்க, கேட்டீங்களா? நம்ம இனியாவையும் பொண்ணு கேட்கறாங்க' என்று.

குரலின் பரபரப்பிலேயே சம்மதம் தெரிந்தது. செந்தில் நாதன் மறுபடியும் திரும்பி.

'ஏங்க... மாப்பிளே! ராதிகாவுக்குக் கல்யாணம்' என்று இழுக்க.

'இல்லே! ராதிகா மேலே படிக்கணும்னு ஆர்வப்படுது. படிக்க வைப்போம்' என்றான்.

'அப்ப சரி!' என்றார்கள்.

குடும்பத்தில் கலகலப்புப் பரவியது.

'ஐயோ, ராதிகா மேடம்! உங்க குடும்பமே எங்க குடும்பத்தை வளைச்சுப் போடறதிலே இருக்கீங்க... நல்லவேளை நான் சின்னப்பையனாய் போனேன்' என்று அலட்டிக் கொண்டான் வருண்.

எல்லாரும் சிரித்தார்கள்.

சுந்தர் இடையிலே புகுந்து 'அப்படி நினைக்காதடா... வருண்! கேவலம் பெயின்ட் அடிச்ச வீட்டுக்காக 'நான் காத்திருப்பேன்'னு சொல்ற பொண்ணுங்கள்ளாம் இருக்காங்க. 'அப்படிகிப்படி ராதிகா சொல்லிட்டான்னா... வை!' என்று சொல்ல மறுபடியும் சிரித்தார்கள்.

'யாரு! இவனுக்காகவா. இந்த வெண்கலப்பானைக் காவா! தெவர். நான் இப்பவே இலக்கியா அண்ணிகிட்டே என்ன சொல்லிகிட்டிருக்கேன் தெரியுமா? இவனுக்கு ஒரு செவிட்டுப் பொண்ணாப் பாருங்க... அப்பத்தான் இவன் லொட லொடப்புக்குப் பொறுமையா இருந்து குடும்பம் நடத்துவான்னு சொல்லிகிட்டிருக்கேன்' என்றாள் ராதிகா.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள். ஆனால் இலக்கியா மட்டும் எல்லாச் சிரிப்புக்களிலும் அளவாக இருப்பதைப் பார்த்த மணிவாசகன் அவளிடம் தனியாகச் சொன்னான்.

'இலக்கியா... நானே இதைப் பெரிய இன்சல்ட்டா எடுத்துக்கலை. நீ ஏன் இப்படி ஃபீல் பண்றே?' என்றான்.

அப்போதைக்கு இலக்கியா கேட்டுக் கொண்டாலும் தன் பிடியிலேயே நின்றாள்.

ஒரு ஃபார்மாலிட்டிக்காக பெண் வீட்டுக்கு ஒரு நடை போக வேண்டுமென்று குடும்பத்தோடு போனார்கள்.

அங்கே வைத்து எல்லாரும் இலக்கியாவிடம் 'இலக்கியா நீ பொண்ணு வீடா, மாப்பிள்ளை வீடா, என்று கலாட்டா செய்தபோது அவள் உறுதியாகச் சொன்னாள்.

'நான் மாப்பிள்ளை வீட்டுக்காரிதான்' என்று. அதையும் எல்லாரும் வேடிக்கையாகவே எடுத்துக் கொண்டார்கள். ஆனால், சுந்தரும், இனியாவும் அது உண்மையான வார்த்தை என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

இனியா அக்கா பின்கட்டில் நின்று கொண்டிருந்தபோது அவளிடம் பேசினாள்.

'அக்கா உனக்காகத்தான் நீங்க பிரிஞ்சிடக் கூடாதுன்னு தான் சுந்தர் மாமா இந்த முடிவெடுத்தாங்க...' என்று கெஞ்சுவது போலே சொன்னாள்.

'பேசாதடி நீ!' என்று சீறினாள் இலக்கியா.



'அக்கா... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்க' என்று மறுபடி கெஞ்ச இலக்கியா வெடித்தாள்.

'இத பாரு! வாசு மாமா, தயவு செய்து எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு அவரு கால்ல விழுந்திருந்தீங்கன்னா தாராளமா அவரு உங்களுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருப்பாரு. ஆனா, நீங்க அவருக்குத் தெரியாம... சே... அப்படி என்ன அவசரம்டி' என்றாள்.

இனியா தவித்துப் போய் நின்றாள்.

'சரிக்கா... அதுக்கு என்ன தண்டனை வேணும்னாலும் குடு. ஆனா, அடுத்தவங்களுக்கு விட்டுக் குடுக்காதே' என்று கேட்டாள் மறுபடியும்.

'சுந்தர் தப்பு செஞ்சிருந்தாலும் கூட ஜீரணிச்சுப்பேன். நீ... வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளைன்னு கூட நினைக்காம அவரை அவமானப்படுத்திட்டியேடி' என்று பொரிந்தாள்.

'தப்புதாங்க்கா... அதுசரி... நான் ஒன்று கேட்கறேன்... அதுக்குப் பதில் சொல்லு. அவருதான் உனக்குப் பிடிக்காத மாப்பிள்ளையாச்சே... அவருக்கு எதுக்கு இப்படி சப்போர்ட் பண்றே.'

இலக்கியா திகைப்பாய் என்றோ திணறுவாள் என்றோ எதிர்பார்த்தாள் இனியா ஏமாந்துதான் போனாள். மாறாக தெளிவாகப் பதில் சொன்னாள்.

'பாருடி! அதுதான் ஏதோ புத்தி கெட்டத் தனமா அவரைப் பத்திப் புரிஞ்சுக்காம இருந்தப்ப சொன்னது. நான்தான் அன்னைக்கே சொன்னேனே. இப்ப நிலைமையே வேறன்னு.

இனியா பாயின்டைப் பிடித்தாள். 'சொன்னயில்லே! இப்பப் புடிக்குதுன்னு சொன்னயில்லே... அதனாலதான்... இந்தக் கல்யாணத்தை நாங்க இப்படி செஞ்சுகிட்டோம்... போதுமா? இப்ப வேணும்னாலும் மேற்கொண்டு பேச்சு

வார்த்தை நடத்தாம நிறுத்து... உன் மனசு மாற்ற வரைக்கும் நாங்க காத்திருப்போம். அதுவரைக்கும் நானும் அவரும் பேசிக்காம, பாத்துக்காம காத்திருப்போம்' போதுமா?' என்றான்.

இலக்கியாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திகைத்தாள்.

'அது... அது... அவரே முன்னாடி நின்று செய்யறப்ப... எப்படி?' என்று ஊறினாள்.

'அதாங்க்கா... நீ மாமாவையும், புரிஞ்சுக்கலை, உன்னையும் புரிஞ்சுக்கலை. ஆனா, நீ மாமாவுக்காக வாதாடறியே அதுவும் நூறு சதவீதம் கரெக்ட்தான். சரி... நீதான் சொல்லிட்டியே... மாப்பிள்ளை வீட்டுக்காரின்னு அப்படியே இரு' என்று சொல்லி விட்டுப் போனாள்.

இத்தனை வாதப் பிரதி வாதங்களையும் ஒரு பக்கமாக நின்று தேவகியும், மணிவாசகனும் கேட்டார்கள் என்பதை இலக்கியாவும், இனியாவும் அறியவில்லை. ஆனால் வேறொரு பக்கமாக நின்ற சுந்தர் முழுமையாகக் கேட்டான். அதற்காகக் கவலைப்படாமல் உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

* * *

'மதனி! என்ன இலக்கியா, இந்த மாதிரிப் பண்றாப்லே' என்று கவலையானான் மணிவாசகன்.

'தம்பி! ஒரு அக்காவா அவளோட கோபம் நியாயமானது தான். விட்ரு... அது அவங்க பிரச்சினை!' என்றாள் தேவகி.

'எப்படி மதனி விடறது? இந்தப் பொண்ணு பண்ற சீரு... அது இதுன்னு இருக்கே அதெல்லாம் இவதானே முன்னாடி நின்று பெண்ணுக்கு செய்யணும்...' என்றான்.

'அதுக்கு நீ ஏன் கவலைப்படறே! நான் நின்று அதை யெல்லாம் செய்யறேன் போதுமா?' அது போக்கிலயே விடு' என்றார்.



'மதனி! இந்த லேடீஸ் சைக்காலஜியே எனக்குப் புரிய மாட்டேங்குது' என்றான் மணிவாசகன் சலிப்புடன்.

'அதென்னமோ நிஜந்தான். உனக்கு வியாபாரம் புரிஞ்ச அளவுக்கு உன் பொண்டாட்டி மனசு புரியலே.' அது மட்டுமில்லப்பா... லேடீஸ் சைக்காலஜிங்கறயே அது ஒண்ணும் பெரிய விஷயமேயில்லை. நாங்க நாயே, பேயேன்னு வேண்ணாலும் வீட்டுக்காரரைத் திட்டுவோம். ஆனா அடுத்தவங்க பேசறதுக்கு விட்டுக் கொடுப்பமா... மாட்டோமே! ரொம்ப சிம்பிள் சைக்காலஜி' என்று சிரித்தார் தேவகி.

மணிவாசகன் புரிந்தும் புரியாமலும் நின்றான். தேவகி மேலும் சற்று நேரம் கொழுந்தனிடம் பேசினாள்.

மெல்ல மெல்ல மணிவாசகனுக்கு விஷயங்கள் புரிய ஆரம்பித்தது. அதுவரையிலும் அவனுக்கு சகோதரன் மீது சற்றே வருத்தம் இருந்தது. இப்போது அது முற்றிலும் மாறிப் போய் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தது.

முடிவாகச் சொன்னான்.

'மதனி, எது எப்படியிருந்தாலும் சரி... கல்யாணத்தை நல்லாச் சிறப்பா நடத்திடுவோம்... சரியா?' என்று.

'ஆமப்பா...!' என்றாள் தேவகி.

இலக்கியா ஆனால் பிடித்த பிடியிலேயே நின்றாள்.

முற்றிலுமாக மணமகன் வீட்டு சார்பாகவே அவள் நடந்து கொண்டாள்.

இனியாவுக்கு மணமகளாக்குகிற சீருக்குக் கூட தேவகிதான் முன்னின்று செய்தாள். இலக்கியா சரியாக அந்த நேரத்திற்கு வந்து கூட்டத்தில் ஒருத்தியாக அமர்ந்து நலுங்கு மட்டும் வைத்து விட்டுக் கிளம்புவதை மணி

வாசகன் ஒரு சுவாரசியத்துடன் கவனித்துக் கொண்டான். ஆனால், வாய்விட்டு எதுவும் சொல்லவில்லை.

அவள் போக்கில் விட்டுவிட்டான்.

பூங்கனி மட்டும் 'என்னடி இலக்கியா இப்படிச் செய்யறே?' என்று வருத்தப்பட்டார். பிறகு ஏதோ சந்தேகம் வந்தவர் போல்,

'ஏண்டி, நாங்க ஏதும் மரியாதையில குறை வச்சுட்டமா?' என்றார்.

இலக்கியா சமாளித்தபடி புன்னகைத்தாள். 'அதெல்லாம்... ஒன்றுமில்லம்மா... தேவகி அக்காவுக்கு உடம்புக்கு முடியாது. அவங்க அலைய முடியாது. அதனால நான் அங்க பாத்துக்கறேன். அது மட்டுமில்லாம... இந்த சீரைப் பொறுத்தவரை தேவகியக்காவும் நம்ம வீட்டுப் பொண்ணு தான். நான் வேற அவங்க வேறயில்ல..' என்று அழகாகச் சமாதானமும் சொன்னாள்.

அம்மாவின் மனமும் குளிர்ந்தது என்பதால் இலக்கியாவுக்கு ரொம்ப சந்தோஷம். அவள் கணவரைப் பார்த்துப் பெருமையாகச் சிரித்தாள்.

அன்றைக்கே சீர் முடிந்தவுடனே தேவகியும் கணவரும் புறப்பட்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். இங்கேயும் நிறைய வேலைகள் இருந்தன.

இந்த முறை அவர்கள் மண்டபமே ஏற்பாடு செய்யவில்லை. பெரிய பந்தலாகப் போட்டுத் தங்கள் நிலத்திலேயே ஏற்பாடு செய்தார்கள்.

விருந்தாளிகள் தங்குவதற்கு, போக்குவரத்துக்கு என்ற எல்லா ஏற்பாடுகளும் சிறப்பாகச் செய்தார்கள்.

திருமணமும் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.





25

'**சா**ர் வணக்கம்! நான் சௌம்யா பேசறேன்' என்றாள் சௌம்யா அந்த முனையிலிருந்து.

'சொல்லுங்க... மேடம்!' என்று உற்சாகமானான் சுரேஷ் இந்த முனையில்.

'சார்! எங்க பேரண்ட்ஸ் ரெண்டு பேரும் உங்க வீட்டுக்கு வரணும். உங்க பேரண்ட்ஸுக்கும், உங்களுக்கும் தாங்க்ஸ் சொல்லணுங்கறாங்க' என்றாள் சௌம்யா.

'ஓ' அப்படி ஃபார்மாலிட்டீஸ் எதுவும் தேவையில்லை. ஆனா, யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்' என்றான்.

கடந்த வாரத்தில் சௌம்யாவின் கேஸ் தீர்ப்புக்கு வந்தது. மணிவாசகனும், சுரேஷும் என்ன மந்திர மாயம் செய்தார்களோ தெரியவில்லை.

கேஸ் விசாரணையும் தனிப்பட்ட முறையில் நடந்தது. நீதிபதி பெண் நீதிபதி என்பதாலோ என்னவோ சௌம்யா உருக்கமாக நடந்ததைச் சொன்னவுடன் மிகவும் கோபமாகி விட்டார். அடுத்த வாரத்திலேயே தீர்ப்பு என்று சொல்லிவிட்டார். ஆனால் தீர்ப்பு சமயம் மணிவாசகன் திருமண வேலைகளில் அலைந்து கொண்டிருந்தான். அவசியம்னா கண்டிப்பா வந்தர்றேன் என்றான். என்றாலும் சுரேஷ் முழுப்பொறுப்பு ஏற்றுக் கொண்டு துணைக்கிருந்தான்.

போனவாரத்தில் தீர்ப்பாகிவிட்டது. பாலுவுக்கு பெரிய அதிர்ச்சியே ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல வேண்டும். எப்படியிருந்தாலும் பாண்டியன் உதவி செய்வார் என்று எதிர்பார்த்தான். ஆனால், பாண்டியன் 'உன்னை நம்பி நான் செஞ்ச செலவே எனக்கு நட்டமாய் போச்சு, மாமனார் வேற விட்டா கொலையே பண்ணிடுவாரு போல இருக்கு. ஆளை விடப்பா!' என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்.

ஊரை விட்டே போய் விடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

சௌம்யா விவாகரத்துக்குப் பின்தான் நடந்த அத்தனையும் முழுமையாகப் பெற்றோரிடம் சொன்னாள். முதலில் லேசாகக் கோடி காட்டியிருந்தாள்.

'ஐயோ! எப்படிப்பட்ட பிரச்சினையிலிருந்து தப்பிச்சு வந்திருக்கடா... ராஜாத்தி!' என்று கலங்கிப் போய் விட்டார். அம்மா, அப்போதுதான் மணிவாசகனும், சுரேஷும் செய்த உதவிகளையும் சொன்னாள்.

'அவங்க ரெண்டு பேருக்கும் நாங்க நன்றி சொல்லணுமே!' என்றார்கள்.

'அம்மா! வாசு சார் இப்பக் கல்யாண வேலையிலே இருக்காரு. சுரேஷ் வீட்டுக்கும் வேணாப் போலாம்'' என்றாள்.

அதன் அடிப்படையில்தான் இந்த போன் கால்.

சுரேஷின் பெற்றோர்கள் ஐம்பதுகளின் கடைசியில் இருந்தார்கள். சௌம்யாவுடன் கதையைக் கேட்டு உருகிப் போனார்கள்.

'ஆள் அம்சமா இருக்கானேன்னு பாத்து ஏமாந்து போனோம்' என்றார்கள் சௌம்யாவின் பெற்றோர்கள்.

'அப்படிச் சொல்ல முடியாதும்மா! எங்க வீட்ல பாருங்க! நாங்களும் அழகைப் பாத்துதான் கல்யாணம் செஞ்சோம். ஆனா, பொண்ணு சரியில்லாமப் போயிட்டா... அவ்வளவு ஏன்? எத்தனையோ பேர் ஆணும், பொண்ணும் அம்சமா, அழகா இருந்து குடும்பமும் நல்லா நடத்தறதில்லையா! என்னத்தைச் சொல்றது! எல்லாம் தலையெழுத்து' என்றார்கள்.

சற்று நேரம் அளவளாவினார்கள். சுரேஷ் தனது அலுவலகம், வீடு இதையெல்லாம் சௌம்யாவுக்கு சுற்றிக் காட்டச் செய்திருக்கையில் சுரேஷின் பெற்றோர்கள்



சொன்னார்கள். 'பேசாம மறு கல்யாணம் பண்ணி வச்சிருங்க' என்று.

சௌம்யாவின் அப்பா பெருமூச்சுவிட்டார். 'செய்யணும். ஆனா, இப்ப அதைப் பத்திப் பேசக் கூடாது. இந்தக் காயம் ஆறட்டும்... அப்புறம் பேசலாம்னிருக்கோம்' என்றார்.

சுரேஷின் அம்மாவும், 'நாங்களும் அப்படித்தான்... பையன் மனசு தேறட்டும்னு இருக்கோம்' என்றார்கள்.

மேற்கொண்டு பேச்சைத் தொடர இரு சாராருக்குமே துணிவிருக்கவில்லை என்ற போதும் லேசாக ஒரு நம்பிக்கை இழையோடத் துவங்கியிருந்தது.

இனியாவுக்கும் சுந்தருக்கும் சடங்கு என்று ஏற்பாடு செய்யும்போதே சுந்தர் வந்து தேவகி மதனியிடம் ஏதோ முணுமுணுத்தான்.

தேவகி அதற்கு ஏதோ பதில் சொன்னாள். அதற்குப் பிறகு சுந்தர் ஏற்பாடுகளுக்குத் தடை சொல்லவில்லை.

தனிமை கிடைத்தவுடன் இனியாவிடம் சொன்னான்.

'இனியா, நாம இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணியிருக்கணும். ஆனா, அண்ணன் வேண்டாம்னு சொன்னவுடனே எனக்கு பயமாய் போயிடுச்சு. நாம சேர்றது ஒரு பக்கம் இருக்கட்டும். அண்ணனும், மதனியும் பிரிஞ்சிடுவாங்களோன்னு. அதனாலதான் இந்த அவசரக் கல்யாணம்' என்று அவன் விளக்கம் சொல்கையிலேயே அவன் அவள் காதைப் பிடித்துத் திருகினாள்.

'சுந்தா... மாமா! எதுக்கு நீங்க இந்த விளக்கமெல்லாம் சொல்றீங்க எனக்குத் தெரியும். நானும் அதேதான் சொல்றேன். அக்காவும், மாமாவும் ஒத்துமையாகறவரைக்கும் நானும், நீங்களும்...'

'இரு! இரு! பிரச்சினையை நீ சரியாப் புரிஞ்சுக்கலை. அண்ணனும், மதனியும் ஒத்துமையாயிட்டாங்க... ஆனா,

பூனைக்கு யார் மணி கட்டறதுன்னு யோசனை அதை நாம சரி செஞ்சா... போதும்...' என்றான்.

சற்று நேரம் கனகாரியமாகத் திட்டம் போட்டார்கள். பிறகு சுந்தர் மெதுவாக 'ஏன்... இனியா, அதுவரைக்கும் கொஞ்சம் லேசா தொட்டுக்கிட்டா...' என்று இழுத்தான்.

'ம்ஹூம்...!' என்று இழுத்தாள் இனியா... 'வேண்டாம்... மாமா! அப்புறம் இந்த வைராக்கியம் போயிடும்...!' என்றாள்.

'ஆமா... அதுவும் சரிதான்! அப்ப சரி... நம்ம நினைச்சது நடக்கற வரைக்கும் நாம ரொம்ப டீசன்டான ஃபிரண்ட்ஸ்' என்றான் சுந்தர்.

சிரித்துக் கொண்டார்கள்.

* * *

'**ம**துரைக்குப் போகணும். சுந்தர் கல்யாணம் நல்லபடியா முடிஞ்சா மதுரை வர்றேன்னு வேண்டியிருக்கேன்' என்றார் தேவகி.

'மேலிடம் சொன்னா அப்பீல் ஏது!' என்று சிரித்தார்கள் மணிவாசகனும், சுந்தரும்.

ஒரு சொகுசு பஸ் பிடித்து நெருங்கிய வட்டம் முழுவதுமாகக் கிளம்பினார்கள்.

'அண்ணா சாயங்காலம் நாலு மணிக்குக் கிளம்பினா இடையில டிபன், டிபன் சாப்பிட்டாக்கூட நைட் பத்தரை, பதினோரு மணிக்குப் போய்ச் சேர்ந்துடலாம்' என்றான் சுந்தர்.

'தங்கற ஏற்பாடு நான் பாத்துக்கறேன்' என்றான் மணிவாசகன்.

ஒரு வியாழக்கிழமை மாலை! புறப்பட்டவுடனே ஒரே ஆட்டமும், பாட்டமும் இருந்தது.



வருண் டான்ஸ் ஆடினான். குழந்தைகள் எல்லாரும் குதித்துக் கும்மாளம் போட்டார்கள். ஆனால் தொடர்ந்து அலைந்து கொண்டிருந்தனாலோ என்னவோ விரைவிலேயே களைத்துவிட்டார்கள்.

பழநியில் நிறுத்தி எல்லாருக்கும் டிபன் வாங்கிக் கொடுத்தார்கள். புறப்படும்போது அப்படி இப்படி ஐந்து மணியாகியிருந்ததால் பழநிக்கு வரும் போதே மணி எட்டாகியிருந்தது. மீண்டும் புறப்படும்போது அரைமணி நேரம் ஓடியிருந்தது. ஒன்பது மணி வாக்கில் எல்லாருடைய தலைகளும் உறக்கத்தில் சாய ஆரம்பித்துவிட்டான்.

இலக்கியாவும், தேவகியும் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். டிபன் சாப்பிட்டு விட்டு வந்தவுடன் இனியா இலக்கியாவின் இடத்தைப் பிடித்துக் கொண்டாள்.

இலக்கியா 'ஏய்! இனியா! நீ போய் சுந்தர்கிட்டே உட்காரு' என்றாள்.

'அந்தாள் தொல்லையைத்தான் ஆயுசு முழுக்க அனுபவிக்கப் போறேனே. இப்பத்திற்கு ஃப்ரீயா இருந்துக்கறேன்' என்றாள்.

'என்னது? அந்தாளா?' என்று திகைத்தாள் இலக்கியா.

'ஐயோ... நீ யெதுக்கு ஷாக்காகறே! பாரு... பின்னாடி சீட் காலி அங்க போயிடு...' என்றாள் குறும்பாகச் சிரித்தாள்.

இலக்கியா முணுமுணுத்துக் கொண்டே போய் அமர்ந்தாள்.

சற்றுக் கழித்து சுந்தரும் அதேபோல ஏதோ தில்லு முல்லு செய்து மணிவாசகனை அங்கே அனுப்பி வைத்தான்.

'பாத்தியா இலக்கியா! எல்லாரும் நம்மளைக் கடைசிக்குத் தள்ளிட்டாங்க!' என்று சுற்று முற்றும் பார்த்தான். பின்னால் இருந்த இருக்கைகளில் எல்லாம் சாமான்கள்

அவர்களுக்கு நேராக இருந்த இருக்கையில் ஒரு பத்து வயதுக் குழந்தையை படுக்க வைத்திருந்தார்கள். அது உண்ட களைப்புத் தீர உறங்கிக் கொண்டிருந்தது.

மணிவாசகனுக்கு லேசாக விஷயம் புரிகிற மாதிரி இருந்தது.

'கல்யாணம் சூப்பராப் போச்சு... இல்லே!' என்று இயல்பாக மனைவியிடம் பேச ஆரம்பித்தான்.

அதே நேரம்!

தேவகி சரவணனைக் கொண்டு வந்து, 'இலக்கியா... எனக்குக் கஷ்டமா இருக்கு... கொஞ்ச நேரம் உன்கிட்ட வச்சுக்கயேன்' என்றாள்.

சரவணன் உற்சாகமாகச் சித்தியிடம் அமர்ந்து கொண்டான்.

'நான் ஜன்னலோரம்தான் உட்காருவேன்' என்றவுடன் இலக்கியா இடம் கொடுத்தாள்.

இரண்டே பேர் அமர்கிற சீட்டில் குழந்தை அந்த ஓரத்தைப் பிடித்துக் கொள்ள இலக்கியா கணவனிடம் நெருங்கி அமர வேண்டி வந்தது.

முகம் சிவந்து அமர்ந்திருக்கிற மனைவியைப் புரிந்து கொள்ளாதவன் போல் மணிவாசகன் பொதுப்படையாகவே பேசினான்.

'சித்தப்பா... பழனியிலே முருகன் கோபிச்சுகிட்டு போயா உட்கார்ந்தார்?' என்று குழந்தை வேறு கதை கேட்டான்.

மணிவாசகன் மாம்பழக் கதை சொல்ல 'உம்' கொட்டிக் கொண்டே உறங்கிவிட்டான்.

குழந்தையை மடியில் படுக்க வைத்துக் கொண்டாள் இலக்கியா. இன்னும் சற்று நெருங்கி அமர வேண்டி வந்தது.

மேலும் முகம் சிவந்தது.



'காத்து விசு விசுன்னு வீசுது' என்று முணுமுணுத்தாள்.

'கண்ணாடிக் கதவு டைட்டா இருக்கு சாத்த முடியலே' என்றாள் மேலும்.

மணிவாசகன் எழுந்து லேசாகக் குனிந்து கதவைச் சரியாக மூடினான். அவனது வயிற்றில் அவளது முகம் படிந்திருந்தது. ஒரு நிமிடம்தான் மீண்டும் அவன் இருக்கையில் அமர்ந்த போது அவள் முகம் பார்த்தான்.

சற்றே தெளிந்து கொள்ளட்டும் என்று நினைத்தானோ என்னவோ எழுந்து போய் டிரைவரிடம் பேசிவிட்டு லேசாகத் திரும்பி பஸ்ஸை நோட்டம் விட்டான்.

எல்லாரும் உறங்கியிருந்தார்கள்.

தேவகியும், இனியாவும் அவன் லேசாகத் திரும்பும் போது 'டபக்'கென்று கண்ணை இறுக மூடிக் கொண்டதை அவன் அறியவில்லை.

அவன் மெதுவாகப் பின்நோக்கி செல்லவும்.

'அக்கா... மாமா நோட்டம் விட்டுட்டாங்க...' என்று குபீரென்று சிரித்தாள் இனியா.

'உங்கக்கா... சொதப்பாம இருந்தா... சரி' என்று தேவகியும் சிரித்தாள். இந்த முறை அமரும்போது வேண்டு மென்றே இழைந்து கொண்டு அமர்ந்தான் இலக்கியா சற்றே தவித்துப் போனாள்.

'இலக்கியா! நம்மைச் சுத்திப் பெரிய சதியே நடக்குது' என்று கிறக்கமாகச் சிரித்தான்.

அவள் குரலே எழும்பாத குரலில் 'எதுக்கு?' என்றாள்.

'எதுக்கா?' என்று மறுபடியும் சிரித்தான். மெல்ல மேலும் நெருங்கி அமர்ந்தான்.

இடக்கையால் அவள் தோள் வளைத்தான். மெல்ல அவன் கைகள் இடத்தோள் பட்டையிலிருந்து கீழாக நீவி

கொடுக்க அவள் திகைத்துப் போய்க் கிழே பார்த்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

'இப்ப இது நடக்கலேன்னு வச்சுக்க... எல்லாரும் ரொம்ப ஏமாந்து போயிடுவாங்க' என்றான்.

வலக்கையால் அவள் முகம் நிமிர்த்தினான். அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

சாவதானமாக நிமிர்ந்தான்.

கண்கள் படபடக்க, முகம் சிவந்துகிடக்க, லேசான நடுக்கத்துடன் அமர்ந்திருக்கிற மனைவியைப் பார்த்தான்.

'ரிலாக்ஸ்! ரிலாக்ஸ்!' என்று அமைதிப்படுத்தினான்.

'யாரு... ஏமாந்து போயிடுவாங்கன்னு கேக்க மாட்டியா?' என்றான் மறுபடியும் அதே கிறக்கக் குரலில்.

அவள் பேசவில்லை.

தேவகி மதனி, என் தம்பி சுந்தர், உன் தங்கை... இனியா... எல்லாரும்தான்' என்றான்.

சிரித்தான். இப்படி அவன் சிரித்துப் பார்த்திராத அவள் திகைத்துப் போனாள்.

'சரி... சரி... எதுக்கு இப்படி முழிக்கறே!' என்றான். அவள் கழுத்தில் அவன் கன்னம் இழைந்தது.

'அதுக்காக... அதுக்காக! பஸ்லயா?' என்றாள் தவிப்புடன்.

அவன் சட்டென நிமிர்ந்தான். 'அப்ப வேண்டாங்கறியா?' என்றான்.

'நான்... நான் அப்படிச் சொல்லலே!' என்று திணறினாள்.

'ஓ...! பிரைவஸி கிடைக்கிற இடமாப் பாத்துக்கலாம் கறியா... அதெல்லாம்... நம்ம ஃபிரண்டோட பங்களா... சூப்பரான இடம்!' என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள்.



'எதுக்கும்... நானும் என் ஸெல்ஃப்டியை டெஸ்ட் செஞ்சுக்க வேண்டியிருந்தது. முதல்நாளே நீ வெடிச்ச வெடிப்புல இருந்தே இன்னும் மீளலே. அதனால எதுக்கும் ஒரு ட்ரையல் பாத்துக்க வேண்டியிருந்தது' என்று கலகலவெனச் சிரித்தான். ஆனால் எச்சரிக்கையாக மெல்லிய குரலில்.

'அது சரி... இடம், பொருள், கிடையாதா?' என்றாள் வெட்கத்துடன்.

'அது உனக்குத் தெரியலியே?' என்றான். அவள் திடுக்கிட்டுப் போய் பார்த்தாள். ஆனால், அவன் கண்களில் குறும்பு கூத்தாடியது.

'பின்னே? என்கிட்ட பேச வேண்டியதையெல்லாம் போய் நீ தேவகி மதனிகிட்டே சொல்லியிருக்கே' என்றான்.

'நான்... நான்... உங்ககிட்டே.... எந்த முகத்தை வச்சுகிட்டு சொல்றது?' என்று சங்கடமாக முணுமுணுத்தாள் இலக்கியா.

'ஏன்? இந்த அழகான முகத்தை வச்சுகிட்டுத்தான்' என்று மறுபடியும் குனிய இலக்கியா 'ப்ளீஸ்!' என்று விடுவித்துக் கொண்டாள்.

'சுத்தியும் உறவுக்காரங்க! யாராவது முழிச்சுகிட்டுப் பாத்துட்டாங்கன்னா!' என்றாள் தவிப்புடன்.

'அப்ப சரி! ஆனா, ஊருக்குப் போனதும் 'ஓ.கே...வா?' என்றான்.

'ம்...!' என்றாள் அவன் முகம் பார்க்காமல்,

'வா... அதுவரைக்கும்... இப்படி சாஞ்சுகிட்டு சின்னதா ஒரு தூக்கம் போட்டு ரெஸ்ட் எடுத்துக்குவோம்' என்று சாய்ந்துக் கொண்டான்.

தன் வாழ்நாளில் அப்படியொரு நிம்மதியை உணர்ந்த இல்லை என்பது போல் அவளும் சாய்ந்து கொண்டாள்.

உள்ளத்தில் நிறைய கேள்விகள் இருந்த போதும்!

## 26



கலகலவென சிரிப்பே சூழ்ந்திருந்தது எல்லா இடத்திலும்.

அது பெரிய பங்களா.

சுற்றுப் பகுதிகள் முழுவதையும் தங்குமிடங்களாக மாற்றிவிட்டார்கள் என்பதால் அது குடியிருப்புக்கேற்ற இடமாக இனிமேலும் இருக்க இயலாது என்ற அவன் நண்பன் நினைத்தான். அதனால் லாட்ஜாக மாற்றி விடலாமா என்ற யோசனையில் இருந்தான்.

'எதுக்கும் நீ உன் ஃபாமிலியோட தங்கிப் பாத்துட்டுச் சொல்லு' என்று சொன்னான்.

குடும்பத்தோடு மதுரை போக வேண்டியிருக்கிறது என்றவுடன் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது. அதனால் இங்கே தங்கி அவனுக்கும் ஆலோசனை சொல்லி விடலாம் என்று மணிவாசகன் முடிவு செய்திருந்தானாம்.

குடும்பத்தாரிடமும் ஆலோசனை கேட்டிருந்தான். ஒரு சிறிய அளவு மாளிகை போல் வீடு மிகவும் அழகாக இருந்தது. கீழே ஹாலில் வேலைப்பாடுள்ள தூண்களும், வேலைப்பாடுள்ள கதவுகளுமாக அழகாக இருந்தது.

'சரி... சரி... எல்லாத்தையும் காலையில பாத்துக்கலாம். இப்ப ரெஸ்ட் எடுங்க' என்று அனுப்பி வைத்தார் தேவகி.

புறப்படும்போதே நண்பன் மாடியில் முக்கியமான கெஸ்ட் வந்தா தங்கறதுக்குன்னு ஒரு ரூம் இருக்கு. அது ரொம்ப அற்புதமா இருக்கும்' என்று சொல்லியிருந்தான்.

அந்த அறையில் மணிவாசகனும், இலக்கியாவும் தங்குகிற மாதிரி ஏற்பாடு செய்திருந்தார் தேவகி.

இத்தனை நடந்து கொண்டிருக்கும்போது இலக்கியா அன்றைக்கொரு நாள் தேவகியும் பேசியபோது தேவகி சொன்னது நினைவு வந்தது.

* * *



'இலக்கியா, வாசுதான் ஹெட் ஆஃப் ஃபாமிலி மாதிரி இருக்கானே. அதுல எனக்கு ரோஷமே வர்லைன்னு. எங்களுக்கு கல்யாணம் ஆன புதுசுல எங்க மதனியே என்னை உசுப்பி விடுவாப்ல. ஒரு நாள் இவருகிட்டே சொன்னேன். சிரிப்பாரு. பாரு தேவகி வாசு என்னை விட படிச்சவன். கெட்டிக்காரன். அதுமட்டுமில்லே, அப்பா கூட அவன் சொன்னாக் கேக்கறாரு. ஏன் தெரியுமா? அவன் எந்த விஷயத்தையும் குடும்பத்துக்காக யோசிக்கிறான். 'தனக்கு வேணும். தனியா அது செஞ்சுக்கணும் இது செஞ்சுக்கணும்னெல்லாம் யோசிக்கறதேயில்லை' தெரியுமா? அப்படீன்னாரு.

'அப்ப நான் சொன்னேன். அது எனக்கும் தெரியுதுங்க... வாசுவைப் பத்தி எனக்கும் தெரியுங்கன்னு' சொல்லிட்டேன். அப்ப நான் அதை அரை மனசாத்தான் சொல்றேன்னு இவரு புரிஞ்சுகிட்டாரு.

'தேவகி... என் தம்பி என்னை மதிக்கறானோ இல்லையோன்னுதானே உனக்குக் கவலை. பாரு, நான் வேண்ணா நாளைக்குக் காலையில அதை நிரூபிக்கறேன் அப்படீன்னாரு.

'எனக்கு ஒரே குறுகுறுப்பு. எப்படி நிரூபிக்கப் போறாருன்னு. நானும் காத்துகிட்டு இருந்தேன்.

'அடுத்த நாள் காலையில அது ஞாயிற்றுக்கிழமைங்கறதுனால அண்ணன் தம்பிங்க. அப்பா எல்லாரும் ஒண்ணா சாப்பிட உட்கார்ந்தாங்க... அப்ப வாசுவும் சுந்தரும் அந்த வாரம் பருப்புக் கொள்முதல் பத்திப் பேசுகிட்டிருந்தாங்க. அப்ப உங்க பெரிய மாமா திடீர்ன்னு இடையில நுழைஞ்சு 'ஏண்டா... வாசு... பருப்பு... அந்த எம்.எம். கடையிலயா கொள்முதல் செய்யறீங்க? அப்படீன்னு கேட்டாரு' என்றவள் மேலே நடந்த உரையாடலை விரிவாகக் கூறினாள்.

'ஆமா... ஏண்ணே?'

'இனிமே அங்க கொள்முதல் பண்ண வேண்டாம்!' ஏண்ணே?' என்றான் சுந்தர்.

மணிவாசகன் இடையில் புகுந்து 'சரிண்ணே! இனிமே அங்க கொள்முதல் செய்யலே. வேற நல்ல கடையா நீயே சொல்லு...' என்றான்.

'அண்ணா, ரொம்ப நாளா குடுக்கல் வாங்கல் வச்சிருந்த கடை. எப்படி திடீர்னு நிறுத்தறது?' என்றான் சுந்தர்.

'டேய்! பெரியண்ணன் வேண்டாம்னு சொல்லிட்டாரு இல்லே! அப்புறம் எதுக்குடா அதையும் இதையும் பேசிகிட்டு அவங்ககிட்டே எப்படி சொல்லணுமோ நான் சொல்லிக்கறேன்.. விடு' என்றான் மணிவாசகன்.

'பாத்தியா...!' என்பது போல் மனைவியைப் பார்த்தான் வாகீசன்.

தேவகியும் கண்ணால் தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள்.

வாகீசன் மறுபடியும் சகோதரர்களைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

'சுந்தர் சொல்றதும் சரிதான். அதென்னவோ இப்ப அங்க எதுவும் சரியில்லன்னு ரெண்டு மூணு பேரு சொன்னாளுங்க. சொல்ல முடியாது பொறாமைக்காரங்க எதையாவது கிளப்பிவிட்டாலும் விடுவாங்க. வாசு! எதுக்கும் நீ அங்க சர்வீஸ் பழைய மாதிரியே இருக்குதான்னு செக் பண்ணிப் பாத்துக்க' என்றான்.

'சரியண்ணே!' என்றான் மணிவாசகன்.

அன்றைக்குத் தனிமையில் மனைவியிடம் சொன்னான் வாகீசன் 'பாத்தியா? தேவகி! இருபது வருஷமா வியாபாரம் வச்சகிட்டிருந்த கடையில வியாபாரத்தை நிறுத்திக்க டாண்னவுடன் ஏன், என்னன்னு கேட்காம சரிண்ணான் பாத்தியா. அதுதான் நம்பிக்கை. நாங்க பரஸ்பரம் நம்பிக்கை வச்சுருக்கிறதுனாலதான். எங்க குடும்பம் இப்படி ஓடுது! புரியுதா?' என்றான்.



'புரிஞ்சுதுங்க!' என்றாள் தேவகி.

அப்போது இன்னொன்றும் சொன்னான் வாகீசன்.

'தேவி! இந்தக் குடும்பத்துக்கு நீ மூத்த மருமக மட்டுமல்ல. தாயி! ஒரு தாய் மாதிரி நீ நடந்துகிட்டின்னா அவனுகளும் உன்னைத் தெய்வமா மதிச்சு நடத்துவானுங்க' அப்பமன்னு... அன்னையிலிருந்து நான் இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை தாயாகத்தான் நடந்தக்கறேன். இந்த விஷயம் நடந்தது நாங்க வாடகை வீட்ல இருந்தப்ப. அதுக்கப்புறம் நிறைய கடை, வீடு, நிலம்னு எல்லாம் மாறுச்சு. அண்ணன் தம்பி நம்பிக்கை மட்டும் மாறவேயில்லை' என்றாள்.

அன்றைக்குப் பின்கட்டில் இலக்கியா அழுது கொண்டிருந்த போது தேவகி இதையெல்லாம் சொன்னாள். அதை சொல்லி முடித்த பின்பு மேலும் சொன்னாள்.

'அப்படித் தம்பி, சுயமரியாதை பாத்து உன்னைத் தொட மாட்டேன்னு சொல்லியிருக்காது. உனக்கு மனசுக்குப் பிடிக்கலேங்கறதுக்காக அப்படிச் சொல்லியிருக்கும்' என்றாள்.

தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறையில் போய்த் தங்கள் துணிமணிகள் இருந்த சூட்கேஸை வைத்து விட்டு குளித்துக் கொண்டிருக்கும் போது இதையெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தாள் இலக்கியா.

மணிவாசகனும், அவளும்தான் மேலே ஒன்றாக வந்தார்கள். 'அவன் குளிக்கிறேன்' என்று குளித்துவிட்டு வந்தான். அதற்குள் மேனேஜர் என்று யாரோ பார்க்க வந்தார்கள் என்று போயிருந்தான்.

எளிமையாக அலங்கரித்துக் கொண்டு அவள் டிரஸ்ஸிங் டேபிள் முன்னால் நிற்கிற நேரம் அவன் உள்ளே வந்தான்.

'இலக்கியா... இந்த மேனேஜர் நல்ல நேரம் பாத்து வந்தாரு... போ நமக்கு வசதிகள் எல்லாம் சரியா இருக்கான்னு பாக்க வந்தாராம்' என்று சிரித்தான்.

மெதுவாக கையால் மேஜைமேல் தாளமிட்டபடி சோபாவில் அமர்ந்தான்.

'வசதியெல்லாம்... நல்லாத்தான் இருக்கு...ம்...!' என்று இழுத்தான்.

'சரி... வா... உட்காரு!' என்று அருகிலே அமர்த்திக் கொண்டான்.

'ஏன்... இலக்கியா... நீ என்ன நினைக்கிறே! இவ்வளவு பெரிய அருமையான பங்களாவை சாதாரண லாட்ஜா மாத்தினா கெடுத்துப் போடுவாங்க இல்லே!' என்றான்.

'ஆமாங்க... எனக்கும் அப்படித்தான் தோணுது. வேண்ணா ஒன்று செய்யலாம். பெரிய கம்பெனிகளுக்கு கெஸ்ட் ஹவுஸா வாடகை விடலாம். வி.ஐ.பிக்கள் வந்தாத் தங்கிக்கறதுக்கு யூஸ் பண்ணிக்கலாம்...' என்றாள்.

'பார்க்கலாம்... அந்த மாதிரித்தான் ஏதாவது ஐடியா குடுக்கணும்...' என்றான்.

சற்று நேரம் பொதுப்படையாகத் திருமணம் பற்றிப் பேசினான். அன்றைக்கு அவனது இன்னொரு பக்கம் அவளுக்குப் புரிந்தது.

சரியான கிண்டல் பேர்வழியாக இருந்தான். திருமணத்தில் கலந்து கொண்ட நண்பர்கள் சிலரை அவன் கிண்டல் செய்த விதத்தைப் பார்த்து அவள் அதிசயித்தாள். முணுமுணுப்பாகச் சொன்னாள்.

'அவங்க யாராவது கேட்டா என்ன நினைப்பாங்க...' என்றாள்.



'நீ... வேற! நான் அவனுங்க கிட்டே நேர்லயும் இப்படித்தான் கிண்டல் செய்வேன். ஆனாத் தனியா இருக்கும்போது சிரிச்சுக்குவானுங்க...' என்றான்.

'நான்... நான் உங்களை ரொம்ப சீரியஸான டைப்புன்னு நினைச்சுகிட்டிருந்தேன்' என்றாள். தனக்குள் சொல்லிக் கொள்வது போல்.

அவன் சட்டென்று திரும்பினான்.

'நீ என்னென்னமோ என்னைப் பத்தி நினைச்சுக்கிட்டிருந்தா... அதுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?' என்றான்.

கோபமாகச் சொல்கிறானோ என்று பார்த்தால் சிரித்தான்...

'அதை விடத் தப்பு என்னன்னா நீ என்னைப்பத்தி நினைச்சுக்கிட்டிருந்தது சரியா தப்பான்னா நீ சரி பாத்துக்கவே முயற்சிக்கலையே?' என்றான்.

அவள் மௌனமாக அதை ஏற்றுக் கொண்டாள். அவன் பார்வை தன்னை விழுங்குவது போல் பார்ப்பதைக் கண்டவள் எழுந்து,

'நான் சூட்கேஸைப் பூட்டலை!' என்று முனகியபடி நகர்ந்தாள்.

அவன் கண்கள் சிரித்தன. கறுப்பான நிறத்துக்கு வரிசைப் பற்களும், ஒளிவிடும் கண்களின் சிரிப்பும் எடுப்பாகத் தெரிந்தன.

ஒரு நிமிடம் அவன் சிரிப்பில் கவரப்பட்டவளாக நின்றவள், நகர்ந்தாள். சூட்கேஸைப் பூட்டினாள். இரும்பவும் எடுத்து பீரோவில் வைத்தாள்.

மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் மனைவி படுகிற அவஸ்தையின் வெளிப்பாடுகள்தான் இவைகள் எல்லாம் என்று புரிந்து கொண்ட கணவன் குறுஞ்சிரிப்புடன் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் சூட்கேஸை பீரோவில் வைத்து விட்டு பீரோ கதவை மூடினாள். பிறகு மெதுவாக நகர்ந்து திரும்பி நின்றாள்.

மணிவாசகன் எழுந்து அருகில் வந்தான். 'செக் பண்ணிட்டியா?' என்றான்.

'ம்...!' என்றாள் இலக்கியா.

'பாத்ரூமில் ஏதாவது டிரஸ், கிஸ் விட்டு வச்சிருக்கப் போறே... பாத்துட்டு வந்துடு' என்றான் சிரிக்காமல்.

அவளும் உடனே கனகாரியமாக நகர அவன் கைகள் வளைத்துப் பிடித்தன.

'ஹேய்! நீ... வா... இங்கே! அப்படியே இருந்தாலும் எல்லாம் அங்கங்கயே இருக்கும். காலையில பாத்துக்கலாம். சும்மா... கண்ணாமூச்சி... காட்டிகிட்டு...!' என்று சிரித்தான்.

'ஏன்...? நீங்க இங்க இருக்க மாட்டீங்களாக்கும்' என்று அவள் ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவன் மேற்கொண்டு அவளைப் பேசவிடவில்லை.

'நோ மோர் டாக்கிங்... மேடம்...' என்று அவன் இதழ்கள் முணுமுணுத்தன.

* * *

**யா**ரோ உலுக்குவது தெரிந்து திடுக்கிட்டு விழித்தான். மணிவாசகன்.

காலை நான்கு மணியிலிருந்து ஐந்து மணிக்குள்ளாக இருக்கும்.

இரவின் நினைவுகள் அவன் மனதை ஆக்கிரமித்தன. எல்லாம் கனவுதானோ என்ற சந்தேகம் கூடத் தோன்றியது. ஆனால், இருக்குமிடம், அறை எல்லாம் நடந்தவை நிஜமே என்று உணர்த்தியது.



தனக்குள் புன்னகைத்துக் கொண்டான். புரண்டு படுத்தான்.

'ஹேய்! எதுக்கு லைட்டைப் போட்டே?' என்று சிணுங்கிக் கொண்டே கண் விழித்தான் அறையில் இலக்கியாவைக் காணாமல் விழித்தான்.

முழுமையாக சுறுசுறுப்பானான். மேஜையின் மேல் ஒரு காகிதத்தில்,

'கோவிலுக்குப் போகணும். அதிகாலையில் போனா நல்லாயிருக்கும். எழுந்திருங்க' என்று எழுதி வைத்திருந்தாள்.

எழுந்தான்.

சுற்று முற்றும் பார்த்தான். இலக்கியாவைக் காண வில்லை. 'சரி, எதுக்கும் ரெடியாயிடுவோம்' என்று எண்ணிக் கொண்டு குளித்து விட்டு வந்தான்.

வெளியே வந்தவன் மலைத்து நின்றான்.

அழகான காட்டன் புடவையில் கூந்தலைத் தழைய ரப்பர் பாண்டில் கட்டி, நெற்றியில் பளிச்சென்று குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு ஒரு டிரேயில் இரண்டு கோப்பைகளில் காபியை ஊற்றிக் கொண்டிருந்தாள்.

'ஹேய்! காபி ஸ்மெல் சூப்பரா இருக்கு!' என்று சிரித்தான். 'எப்படி ஏற்பாடு செஞ்சே!' என்றான்.

'பங்களா வாட்ச்மேன்கிட்டே சொன்னேன். உடனே பக்கத்துல ஒரு நல்ல ஹோட்டல் இருக்கு. வாங்கிட்டு வர்றேன்னு ஃப்ளாஸ்க்ல வாங்கிட்டு வந்துட்டாரு' என்று சிரித்தாள்... ஆனால், அவன் பார்வை பார்த்து சட்டென்று முகம் திருப்பிக் கொண்டாள்.

'அதுசரி! நீ அங்கே நின்னுகிட்டா எப்படி? பக்கத்துல வா!' என்றான்.

வந்தாள். ஆனால், 'சீக்கிரமே கோயிலுக்குப் போனா அம்மனைத் தரிசிக்கலாம். கூட்டமில்லாம இருக்கும்' என்றாள்.

அவன் சிம்பிளாக 'சரி! போலாம்! வைஃப் கேக்கற முதல் கோரிக்கை!' என்றான்.

சுருக்கலில் நடப்பது சுகமாக இருந்தது. லேசான குளிர் காற்று வர அமைதியாக நடந்து வந்தார்கள்.

பிரகாரம் சுற்றித் தரிசனம் முடிக்கவும் பொழுது விடியவும் சரியாக இருந்தது. மீண்டும் வெளிப்பிரகாரம் வந்தார்கள்.

மணிவாசகன் நிமிர்ந்து பார்த்தான். நான்கு கோபுரங் களும், நிர்மலமான நீலவானத்தின் பின்னணியில் பிரம் மாண்டமாக எழுந்து நின்றன.

சற்று நேரம் மலைத்துப் போனாற்போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வை பார்த்த இலக்கியாவும் அவனைத் தொல்லை செய்யாமல் அமைதியாக நின்றாள்.

ரசனை மிகுந்த குரலில் சொன்னான். 'இலக்கியா, இப்ப இத்தனை வசதி இருக்கிற காலத்துல நம்ம தொட்டிக் கட்டுவீட்டுல கொஞ்சம் வேலை செய்து மாடர்னாச் செஞ்சவுடனே என்னமோ உலகத்தையே நிமித்திட்ட மாதிரி ரொம்பப் பெருமையா இருந்தது. ஆனா, எந்த வசதிகளும் இல்லாத அந்தக் காலத்துல எத்தனை ஆட்களை வச்சு, எத்தனை நாளைக்கு இப்படி வேலை செஞ்சு இதையெல்லாம் கட்டியிருக்காங்க? என்ன கலவை யூஸ் பண்ணியிருப்பாங்க?'' இதெல்லாம் தெரிஞ்சுக்கணும் இலக்கியா!' என்றான்.

'ஆமா! நம்ம வேர்கள் என்ன? நம்மளோட பாரம்பரிய பெருமைகள் என்னென்னல்லாம் கண்டிப்பாய்த் தெரிஞ்சுக்கணும்' என்றாள் அவனோடு இணைந்து.

'நாங்க சின்னப்பசங்களா இருக்கறப்போ மதுரைல எங்க பெரியப்பா வீட்டுக்கு லீவுக்கு வருவோம். அப்ப கோபுரத்து



மேலே ஏறிப் பார்த்திருக்கோம். அப்ப எனக்குத் தோணும். பல ஐடியாவோட தான் இந்தக் கோயிலைக் கட்டி யிருக்காங்க. கோபுரத்திலே உள்ளே மேல் மண்டபத்துல நின்னு பாத்தா வெகு தொலைவில வர்ற வேற்று நாட்டு படைகள் கூடத் தெரிஞ்சுடும். அப்புறம், மழை வெள்ளம் புயல் மாதிரி சமயங்களில் கோயில் மண்டபங்களிலே தங்கிக்கலாம். எல்லாத்தைக் காட்டிலும் வேலை வாய்ப்பு, கலை, புகழ் எல்லாத்தையும் கலந்து கட்டிட்டாங்க... இல்லே!' என்றான்.

'ஆமாங்க!' என்றாள் லயித்து போய் அவளும் மேலும் சொன்னாள்.

'அந்தக் காலத்துல வாழ்க்கையை ரசிக்க வாழ்ந்திருக் காங்க... இல்லே!' என்றாள்.

அவன் சட்டென்று நிலவுலகத்துக்கு வந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். நடமாட்டம் இருக்கவில்லை. மெல்ல நெருங்கி நின்று.

'என்னது ஏதோ பாட்டி மாதிரி அந்தக் காலம்னு பேச ஆரம்பிச்சுட்டே!' என்று கேலி செய்தான்.

அவள் உடனே லேசாக முறுக்கிக் கொண்டாற் போல் 'நீங்கதானே ஆரம்பிச்சீங்க?' என்றாள்.

அவன் கண்களில் குறும்பு மின்ன, 'எதை?' என்றான்.

'சே! இது கோவில்!' என்றாள் அவள்.

'அப்புறம்... எதுக்கு சிலையெல்லாம் விவகாரமா இருக்கு சில இடங்கள்ல' என்றான்.

'இப்ப நீங்கதான் விவகாரமாப் பேசறீங்க. இது வரைக்கும் பேசினீங்களே. அது விவரமான பேச்சு. இப்பப் பேசறீங்களே இது விவகாரம்' என்று சிரித்தாள், என்றவள் 'சரி... மத்ததெல்லாம் அப்புறம் பேசலாம். மதுரையைப்

பத்தி நிறையத் தெரிஞ்சு வச்சிருக்கிங்க போல இருக்கே? சொல்லுங்க' என்றாள்.

'சொல்றேன்... நாம எப்படியும் ரெண்டு மூணு நாள் தங்கத்தானே போறோம். அப்ப சொல்றேன்' என்றான்.

'ஓஹ்! தங்கப் போறமா?' என்றாள் இலக்கியா.

'ஆமா... எல்லாரையும் ஒரங்கட்டி ஊருக்கு அனுப்பி விட்டு மதுரையில ஒரு ரெண்டுநாள், அப்புறம் கொடைக் கானல் ஒரு ரெண்டு நாள்ன்னு ஒரு சுத்து சுத்திட்டு...'

'ஓ... அப்ப சரி! நிறையப் பேசலாம்' என்றாள்.

'புாக்கலாம்... இடையிடையே டைம் கிடைச்சா... பேசலாம்' என்றான்.

அவள் அதன் பொருள் புரிந்து முகம் சிவக்க நடந்தாள்.

கோவிலை விட்டு வெளியே வந்தார்கள். 'நான் என்ன சொன்னேன்னு இப்படி முகம் சிவந்து போச்சு. இதுக்குப் பேருதான் 'ரீடிப் பிட்வீன் லைன்ஸ்' என்றான் மணி வாசகன்.

சிரித்தான்.

குரலிலேயே வித்தியாசம் காட்டி அடிக்குரலிலே சிரிக் கிற கணவனுக்கு அதே பாணியில் பதிலளிக்கத் துணி வில்லாமல் தன் வெட்கத்தாலேயே அவள் பதிலளிக்க அவனும் ரசித்தபடி கூட நடந்து வந்தான்.



## 27

மெல்லக் காலார நடந்து கொண் டிருந்தார்கள்.

நிறைய பேர் வந்திருந்ததனாலோ என்னவோ யாரும் யாரையும் கண்டு கொள்ளவில்லை.



பதினோரு மணி வெயில் கூட உறைக்கவில்லை. இதமாக இருந்தது.

'போட்டிங்... போகலாமா?' என்றான் மணிவாசகன்.

'வேண்டாம். எங்கயாவது அமர்ந்து தண்ணீரைப் பார்க்கக் கூடிய இடமாக அமர்ந்து கொள்ளலாம்' என்று யோசனை தெரிவித்தாள் இலக்கியா.

அமர்ந்து கொண்டார்கள்.

இலக்கியாவின் நினைவு பின்னோக்கி ஓடியது. அன்றைக்கு அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்ட மறுநாள் காலை தேவகியும், இனியாவும் ஜாடை மாடையாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவளும் ஜாடையாகவே பதில் சொன்னாள். இனியா வுக்கு அளவு கடந்த சந்தோஷம்.

அன்றைக்கு சுந்தரிடம் இனியா தனியாகப் பேசிக் கொண்டிருப்பதை இலக்கியா கேட்க நேர்ந்தது.

'சுந்தர்... மாமா! உங்கள் வைராக்கியம், விரதம் எல் லாத்தையும் முடிச்சுக்கலாம்' என்று அவனிடம் அவள் சொல்ல சுந்தர் அவனிடம் திரும்பிச் சொன்னான்.

'இனியா, அது ரொம்ப சந்தோஷமான விஷயம்தான். ஆனா, என்ன சொன்னாலும் அண்ணன் இல்லாம நாம ரெஜிஸ்டர் மேரேஜ் செஞ்சது தப்புத்தான். அந்த உறுத்தல் எனக்கு இருந்துகிட்டேதான் இருக்கு. அதுவுமில்லாமல் நியாயப்படி இன்னும் ஒரு ரெண்டு வருஷம் பொறுத் திருந்து ராதிகாவுக்கும் மேரேஜ் செஞ்சு வச்சுட்டுத்தான் நான் மேரேஜ் பண்ணிக்கணும்னு இருந்தேன். ஆனா அண்ணனோட வாழ்க்கை சீராகணுங்கறதுக்காக நான் இந்த முடிவை எடுக்க வேண்டியதாய் போச்சு. அதனால இனியா, நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்க. எனக்கு

இப்ப வயசு இருபத்தைஞ்சுதான் ஆகுது. அதனால, இன்னும் இரண்டு வருஷத்துக்கு மேலதான் நமக்குக் குழந்தை. அதுவும் அண்ணனுக்குன்னு ஒன்று பொறந்ததுக்கப்புறம்தான். சரியா?' என்றான்.

இனியா பேச்சில்லாமல் அவனைப் பார்த்தாள். சுந்தரின் முகத்தில் கலவரம் தோன்றியது. 'இனியா! கோபமா?' என்றான்.

இனியா புன்னகைத்தாள். 'புரியுது மாமா நீங்க சொல்ற தோட நியாயம் புரியுது' என்றாள்.

அதை இப்போது கணவனிடம் சொன்னாள். மணி வாசகன் அந்தப் பசும்புல் தரையில் தலைக்கு அணையாகக் கைகளைக் கொடுத்து வானம் பார்த்து படுத்துக் கொண்டான். பிறகு மெல்லிய குரலில் சொன்னான்.

'சுந்தரும் பொறுப்பானவன் தான். சூழ்நிலை அப்படி அமைஞ்சு போச்சு' என்றான். பிறகு திரும்பி மனைவியைப் பார்த்தான்.

'உனக்குக் கோபம் தீந்துச்சா... இல்லையா?' என்றான்.

அவள் தரையைப் பாத்துக் கொண்டு, 'தீந்துச்சு...' என்றாள். ஆனால் தொடர்ந்து 'நீங்க இந்த விஷயம் தெரிஞ்சவுடனே பயங்கரமா வெடிப்பீங்கன்னு நெனச்சேன். ஆனா நீங்க எந்த விதமான ரியாக்ஷனும் காட்டாம கல்யாணம் பண்ணி வச்சுட்டீங்க' என்றாள்.

'இப்ப உண்மையைச் சொல்லட்டா. அப்படி பிடிவாதமா நின்னது எனக்குப் பிடிச்சது. ஏன் தெரியுமா? அவன் பிடிவாதமா இல்லேன்னா, அம்மிணி ஒருவேளை பிரிஞ்சு போவீங்களோன்னு பயம்' என்றான்.

'பிரியறதா? எப்ப புரிஞ்சுக்குவீங்கன்னு ஏங்கிகிட்டிருந் தேன்' என்றாள்.



'அதை என்கிட்ட வந்து சொல்ல வேண்டியதுதானே. அவருதான் உயிருன்னு தேவகி மதனிகிட்டே போய் சொல்லி, தேவகி மதனிக்கு ஒரே சிரிப்பு' என்றான் மணிவாசகன்.

'நானா ஒன்றும் சொல்லலே.'

... ... ...!?

'நான் தனியா உட்கார்ந்து அழுதுகிட்டிருந்தேன். அப்ப தேவகியக்கா வந்து என்னைக் குடைஞ்சு குடைஞ்சு கேள்வி கேட்டுப் பின்னியெடுத்துட்டாங்க. அப்புறம் இன் னொன்றும் சொன்னாங்க. சிம்பிளா முடிய வேண்டிய விஷயத்தை ரெண்டு பேரும் பெரிசு பண்ணிகிட்டிருக் கீங்கன்னு' என்றாள்.

'இலக்கியா, நீ என்ன சொன்னாலும் சரி... உங்கம்மா செஞ்சது பெரிய தப்பு தெரியுமா? கல்யாணம்கறது வாழ்க்கை. அதுல பிடிக்காத ஒரு விஷயத்தைத் திணிக்கக் கூடாதுங்கறது என்னோட எண்ணம். நானும் நாலு சகோதரிகளோடு பொறந்திருக்கேன். உன்னை மாதிரி நிலைமையில அவங்க யாராவது இருந்திருந்தா என் மனசு எப்படி சங்கடப்பட்டிருக்குமோங்கற நிலைமையிலதான் என் மனசு உன் பக்கமா நின்று யோசிச்சது.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். அவன் அதைக் கவனிக்காமல் தனக்குள் பேசுவது போல் பேசிக் கொண்டிருந்தான். அவள் சட்டென்று சொன்னாள் சோகமாக.

'சே! இது ஓபன் பிளேஸா போச்சே?' என்று.

'ஏன்?' என்பது போல் அவன் பார்க்க 'பின்னே? எவ் வளவு பெரிய விஷயத்தை இங்கவச்சு சொல்றீங்களே? உங்களுக்குக் கிடைக்க வேண்டிய போனஸ் உடனடியாக் கிடைக்காமப் போகுதில்லே?' என்றாள் அதேபோல மறுபடியும் சோகமாக.

அவன் முகம் மலரச் சிரித்தான்.

'ஹேய்! நீயும் சரியான வாலுதான்...' என்றான்.

'ஆமா, ஜாடிக்கேத்த மூடி!' என்றாள். 'நீங்க மட்டும் உங்க ஃபிரண்டலை எப்படிக் கிண்டல் செய்யறீங்க?' என்றாள்.

'லக்ஸு! வாழ்க்கையில கொஞ்சம் நகைச்சுவை உணர்வும் இருக்கணும். இல்லேன்னா ரொம்பத் திகட்டிப் போகும்' என்றான்.

'ஆமா!' என்றவள் சீரியஸாக 'ஏம் மாமா' என்னோட பாயிண்ட்ல இருந்து எனக்காகவே யோசிச்சிருக்கீங்களே! உங்களோட ஆங்கிள்ல இருந்து யோசிக்கவே இல்லையா?' என்றாள்.

'இரு... இரு... முழுசும் சொல்லிடறேன்... எங்கம்மா ஒரு நாள் வந்து சொன்னாங்க... தம்பி இலக்கியாவை உனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்தா மத்த ரெண்டு கல்யாணமும் என் பொறுப்புன்னு சம்மந்தியம்மாவுக்கு வாக்குக் கொடுத் திருக்கேன்னு. எனக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு. அம்மா இப்படிப் பண்ணிட்டாங்களே. அந்த ஆஃபர்ல தான் உங்கம்மா துணிஞ்சு உன்னைக் கேட்காம இந்தக் கல்யாணத்தை ஃபிக்ஸ் பண்ணிட்டாங்களோன்னு... ரொம்ப வருத்தம். அப்ப எல்லாருமா சேர்ந்து உனக்கெதிரா சதி பண்ணிட்டாங்கன்னு எனக்கு கோபம். அதனால நான் உன் பக்கத்துல நிக்கணும்னு முடிவு செஞ்சேன்' என்றான்.

இலக்கியா கணவனை அன்பு பொங்கப் பார்த்தாள்.

'ஆமா! எல்லாரும் எனக்கெதிரா சதி செஞ்சதென்னவோ உண்மைதான். ஆனா, அழகான சதி!' என்றாள்.

'அப்படியில்லே! இலக்கியா' இப்ப நீ உன் மனசைத் தெளிவாக்கிக்கிட்டே சரி. இல்லைன்னா ஒன்னு விருப்ப



மில்லாத வாழ்க்கை வாழணும் அப்படியில்லேன்னா, டைவர்ஸ். டிவர்ஸ்ன்னு போகணும். இன்னமும் நம்ம ஊர்ல டைவர்ஸ் ரொம்ப சாதாரணமா எடுத்துக்கப் படறதில்லே... தெரியுமா?' என்றான்.

'ஐயோ... போதும். எனக்காக கவலைப்பட்டது. ஆனா, இந்தக் கேள்விக்கு உண்மையா எனக்கு பதில் சொல்லுங்க... நீங்க கறுப்புன்னு உங்களுக்கு வருத்தமில்லயா? அல்லது நீங்க கறுப்பு, உங்களைப் பிடிக்கலேன்னு சொன்னதுல உங்களுக்கு வருத்தமில்லையா?' என்றாள்.

அவன் மென்மையாகச் சிரித்தான்.

'இல்லை!' என்றான்.

ஒரு நிமிட சிந்தனைக்குப் பிறகு சொன்னான். 'நீ சிவப்புங்கறக்காக நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலை. உன்னைப் பிடிச்சது. செஞ்சேன். அவ்வளவுதான். அதே மாதிரி நிறங்களைப் பத்தின விஷயங்கள்லே நான் தெளிவா இருந்தேன். சிவப்புங்கறது நிறம். அதேபோல கறுப்புங்கறதும் ஒரு நிறம். அதுல இந்த நிறந்தான் அழகு. அந்த நிறம் இல்லேங்கறது எல்லாம் நமக்குக் காலம், காலமா போதிக்கப்பட்டிருக்கிற விஷயங்கள். அழகு எல்லா நிறத்திலயும்தான் இருக்கு. அதனால எனக்கு எந்த விதமான காம்ப்ளெக்ஸ் இருக்கலே' என்றான்.

இலக்கியா கணவனை வியப்புடன் பார்த்தாள். 'இந்த ஆளுமை, தன்னம்பிக்கைத்தான் தன் கணவனை இவ்வளவு தூரம் உயர்த்தியிருக்கிறது' என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

மெல்லிய குரலில், சொன்னாள் 'ஆமாங்க காலேஜ்ல பெரும்பாலும் என்னோட படிச்ச ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஏதோ ஒரு டிகிரி முடிச்சாப் போதும்கற மாதிரியான பேக் கிரவுண்டில இருந்து வந்தவங்க. வாழ்க்கையின் ஒரு பக்கம்

மட்டுமே அப்பப் புரிஞ்சுகிட்டிருந்தது. அதுவும் ஒரு காரணம்' என்றாள்.

அவன் சட்டென்று சிரித்தான்.

'சரி... சரி... இப்ப இந்த விளக்கமெல்லாம் எதுக்கு. அம்மாவுக்கு ஐயாவைப் பிடிச்சுப் போச்சுன்னு நேத்தே எனக்குத் தெரிஞ்சிருச்சு' என்றான்.

அவள் அழகாக வெட்கப்பட்டாள்.

அவன் ரசித்துப் பார்த்தான். பிறகு சொன்னான். 'இலக்கியா! எனக்கு எப்படியிருந்தாலும் உன் மனசு மாறும்னு நம்பிக்கையிருந்தது. எப்படித் தெரியுமா? வந்த மறு நாளே எங்க குடும்பத்தோட ஒட்டிகிட்டே! வித்தியாசம் காட்டாமல் பழகினே. லேசா ஒரு ஓரத்திலே என் நிறம் பற்றி ஒரு கலக்கம் இருந்தாலும் எந்தவித வெறுப்பும் உன் மனசுல இருக்கல. அது பெரிய விஷயம். அதனால எனக்கு ஓரத்துல ஒரு நம்பிக்கையும் இருந்தது' என்றான்.

'அப்புறம்... ஏன்? சுந்தரும், இலக்கியாவும் கல்யாணம் செஞ்சுக்கறேன்னு கேட்டப்ப மாட்டேன்னு சொன்னீங்க?' என்றாள்.

அவன் சிரித்தான்.

'அது சும்மா... நடிப்பு' என்றான்.

'ரியலி!'

'ரியலி! எனக்குத் தெரியும். சுந்தர் நான் சொன்னேன்ங்கறதுக்காக ஒத்துக்க மாட்டான்னு. கண்டிப்பா எதுத்துப் போராடுவான்னு தெரியும். அப்படிப் போராடினா அந்தப் பிரியம் நெஜம்மான்னு தெரிஞ்சுக்கலாம். இல்லேன்னா பணிஞ்சு போயிட்டான்னா அஃபெக்ஷன் ஸ்ட்ராங்கா இல்லேன்னு தெரிஞ்சுக்கலாம்னு நினைச்சேன். அது ஒரு காரணம்' என்றான்.



'ஓ!'

'ஆமா... அப்புறம் இந்த விஷயத்துல நீ என்ன ஸ்டெப்ஸ் எடுக்கறேங்கறதைப் பொறுத்து உன் மனசைப் புரிஞ்சுக்கலாம்னு ஒரு எண்ணம்' என்றான்.

அவள் மௌனமாகப் பார்த்தபடி ஆனால் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டாள்.

'அப்படி ஒரு வேலை செய்யப் போய் என் மனசு குளிர்ந்து போற மாதிரி நிறைய விஷயங்கள் நடந்துச்சு தெரியுமா?

'என்ன?' என்றாள்.

அவன் எழுந்து அமர்ந்தான். சுற்று முற்றும் பார்த்தான். ஆள் நடமாட்டம் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டான். அருகில் இழுத்துக் கொண்டான்.

'இனியா கிட்டே போய் பெரிய தப்பு செஞ்சேன்னு அழுதிருக்கே. அவருதான் என்னோட உயிருன்னு தேவகி மதனிகிட்டே சொல்லியிருக்கே. காதுக்குக் குளிர்ச்சியா இந்த செய்திகள் எல்லாம் வரவும் நான் சூழ்நிலையை ரொம்ப ரசிக்க ஆரம்பிச்சுட்டேன்' என்றான்.

'ஓஹோ!' என்னோட வேதனை உங்களுக்கு ரசிக்கற மாதிரி இருந்துச்சா?' என்று சிணுங்கினாள்.

'ஹேய்! ஒரு விஷயம் சொல்லட்டா! இந்த பிரியம் இதெல்லாம் ஒரு மனசுல வந்துட்டா அது ஒரு விதமான வேதனைதான்... அதே சமயத்துல சங்கடமும்தான். கூடவே ஒரு வித சுகமும்தான். என் மனசை உறுதிப்படுத்திக் கொள்ள உன்னோட ரியாக்ஷன் எப்படிங்கறதைத் தெரிஞ்சுக்க வேண்டியது ரொம்ப அவசியமாப் போச்சு. தெரியுமா?' என்றான்.

'ஆமா! இப்ப எனக்குப் புரியுது. என்னென்னவோ ஆசைகளோட இருந்திருப்பீங்க' முதல் நாளே நா

உங்களை அப்படி அவமானப்படுத்தினனே... எப்படி ஃபீல் பண்ணியிருப்பீங்க...!' என்றாள் அவள் ஆழ்ந்த வருத்தத்துடன்...

'அதெல்லாம்... முடிஞ்சு போனகதை! இப்ப நான் அதையெல்லாம்... நான் நினைச்சுப் பாக்கக்கூடத் தயாரில்லை, இப்போதைக்கு உன்னோட மனசும் நீயும் எனக்கு சொந்தம்கிற ஒரே விஷயம் போதும்!' என்றான் மணிவாசகன்.

இலக்கியா தன் கணவனைத் தன் மார்போடு சேர்த்துக் கொண்டு தன் அன்பை வாரிக் கொடுத்தாள். அவனும் ஒருவிதக் குறும்புடன் சிரிப்புடன் ரசித்துக் கொண்டான்.

சற்றுக் கழித்து விலகினார்கள். மணிவாசகன் ஆழ்ந்த குரலில் சொன்னான். 'இனியாவும் சுந்தரும் ரெஜிஸ்டர் மேரேஜ் செஞ்சப்ப என்னை அவமானப்படுத்திட்டாங்கன்னு எனக்காக சண்டை போட்டாயே. ரொம்ப சுகமா இருந்துச்சு'' என்றான்.

'என்னாலே இப்ப நினைச்சாக் கூட அதைத் தாங்க முடியலே'' என்று பொருமினாள் இலக்கியா.

'மை டியர் ஸ்வீட் ஹார்ட்' என்று இழுத்துக் கொண்டான்.

'ஒரு ரகசியம் சொல்லட்டா? தேவகி மதனிகிட்டே ஐடியா குடுத்து ரெஜிஸ்டர் மேரேஜ் செய்யச் சொன்னதே நான்தான்' என்றான்.

இலக்கியா திகைத்துப் போனாள் பிறகு கோபம் கொண்டவளாய் எழுந்தாள்.

'அப்ப... அப்ப...' கோபக் குரலில் சொன்னாள். 'அப்ப என் ஃபீலிங்ஸோட விளையாடி இருக்கீங்க' என்றாள்.

'விளையாடலே! நான் எப்படி நேரடியா சம்மதம் குடுக்க முடியும். ஆனா, ஒருத்தர் மேலே பிரியம் வச்சிட்டுப் பிரிஞ்சிருக்கிறது எவ்வளவு பெரிய வேதனைன்னு



எனக்குத் தெரியும். அந்த வேதனை அவங்க ரெண்டு பேரும் பட வேண்டாம்னு நெனச்சேன். அதுல என்ன தப்பு!' என்றான் கெஞ்சலாக.

பிறகு மனைவியிடம் நெருங்கி நின்றான். 'ஹேய்! ஐ ம் சாரி! சரி அதுக்குக் கோபம்ன்னா என்ன தண்டனை வேணும்னாலும் குடு இனிமே. கோபம் மட்டும் காட்டாதே! தேவைக்கு மேலேயே நாம பிரிஞ்சு இருந்தாச்சு, புரியுதா. என்று கெஞ்சவும் அவள் வெகு நேரம் நடிக்க முடியாமல் சிரித்தாள்.

'சரி... சரி... போதும்... கெஞ்சாதீங்க. அப்புறம் நான் ரொம்ப உருகிடுவேன்' என்று கிளுகிளுவென்று சிரித்தாள்.

இரவு மெல்லக் கவிந்தது.

'சரி... வா! ரூமுக்குப் போலாம்!' என்றான். போனார்கள்.

உலகத்துக் கதையெல்லாம் பேசினார்கள். பிறகு உலகம் மறந்தாற்போல் உறவில் கரைந்தார்கள். நிம்மதியும் மகிழ்ச்சியும் நெஞ்சம் நிறைய உறங்கினார்கள்.

அதிகாலையில் செல்போன் ஒலித்தது.

'பார்றா... இது மனுஷனை நிம்மதியா இருக்கவிடாமே' என்று முணுமுணுத்துக் கொண்டே போன் ஆன் செய்தான்.

அந்தப் புறம் சுந்தரின் குரல் பரபரப்பாக ஒலித்து.

இலக்கியாவும் விழித்தாள்.

'என்னங்க!' என்றாள்.

மணிவாசகன் முகம் இறுகியிருந்தது.

'இலக்கியா, நாம உடனே கிளம்ப வேண்டியிருக்கும். மத்ததெல்லாம் வழியில பேசிக்கலாம்' என்றான். ஆனால், பொள்ளாச்சிக்கு வந்து பேசும்வரை யார் யாருக்கோ செல்போனில் மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டே வந்தான்.

அவன் பேசுகிற விஷயம் மெல்ல மெல்ல இலக்கியாவுக்குப் புரிய அவள் முகம் பீதியால் வெளுத்தது.

## 28



**த**னியார் மருத்துவமனை!

அந்தத் தனியார் மருத்துவமனையின் ஐ.சி.யூனிட்டின் முன்பாகக் கவலை தோய்ந்த முகத்துடன் ஒரு சிறிய கூட்டமே நின்றிருந்தார்கள்.

சுந்தர், இனியா, சுரேஷ், இலக்கியா, மணிவாசகன், சுரேஷின் பெற்றோர்கள். லலிதா, ஹேமா, அவர்களின் பெற்றோர்கள், சௌம்யாவின் பெற்றோர்கள் எல்லாரும் அங்கே கலக்கமான முகத்துடன் நின்றிருந்தார்கள்.

உள்ளே சௌம்யா அட்மிட் ஆகி இருந்தாள்.

கண்களில் கண்ணீர் வழிய நிற்கிற மனைவியைத் தேற்றினான் மணிவாசகன்.

'ஏங்க... சௌம்யாவைக் கடவுள் இப்படித் தொடர்ந்து சோதிக்கறாரு. பாவங்க!' என்று கேவிக் கேவி அழுதாள் இலக்கியா.

'இத பாரு! நீ இப்படி அழுதீன்னா அவங்க அம்மா, அப்பா ரொம்பப் பயந்து போயிடுவாங்க. ப்ளீஸ்! அழாதே! சௌம்யாவுக்கு பயப்படற அளவுக்கு ஒண்ணும் இல்லே! எல்லாம் சரி பண்ணிக்கலாம்... என்ன?' என்றான் மணிவாசகன்.

இலக்கியா மெல்ல மெல்லத் தேம்புவதை நிறுத்தினாள்.

ஹேமாவும், லலிதாவும் கவலையோடு 'என்னதான் இலக்கியா நடந்துச்சு!' என்று கேட்டார்கள்.

இலக்கியா சொல்லத் தொடங்கினாள்.



**சௌ**ம்யாவின் வழக்கில் தீர்ப்புச் சொன்ன நீதிபதி மிகக் கடுமையான வாசகங்களால் பாலுவைச் சாடியிருந்தார்.

வீடு சௌம்யாவுக்கே சொந்தம் என்றும் சௌம்யா விருப்பப்பட்டால், பாலுவின் மீது புகார் கொடுத்து மேல் நடவடிக்கைக்கும் போகலாம் என்றும் சொல்லியிருந்தார்.

'திருமணம் என்பதைக் கவசமாக வைத்துக் கொண்டு இல்லறத்தைக் கேவலப்படுத்துகின்ற பாலுவைப் போன்றவர்கள் சமுதாயத்தின் புல்லுருவிகள். இவர்கள் சமுதாயத்தின் ஒழுக்கத்தை மெல்ல மெல்லச் சிதைக்கிறவர்கள். சௌம்யா நல்ல முறையில் தப்பித்தது அவள் செய்த புண்ணியம். இன்னும் எத்தனை பெண்கள் இப்படி வெளியே வராமல் குடும்பம் வருத்தப்படக்கூடாதே. வெளியில பேர் கெட்டுவிடக்கூடாதே என்ற அச்சத்தில் சூழ்நிலைக் கைதிகளாக இந்த மாதிரி வாழ்க்கைச் சகதியில் சிக்கிக் கொண்டு தவிக்கிறார்களோ என்று நினைக்கும் போதே 'பகீர்' என்கிறது' என்று தன்னுடைய ஆவேசத்தையெல்லாம் அந்தத் தீர்ப்பில் கொட்டித் தீர்த்துவிட்டார்.

பாலுவிற்கு ரொம்பவும் மானக்கேடாய்ப் போய் விட்டது. அதுமட்டுமல்லாமல் சௌம்யா பார்த்து எப்போது வேண்டுமானாலும் தன் மேல் புகார் கொடுக்கலாம் என்ற அச்சமும் இருந்தது. அதனால் சுரேஷ் முன்னால் நின்று வீட்டை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்ட போதும் அதை ஒரு கம்பெனிக்கு வாடகைக்கு விட்ட போதும், இரண்டு பேர் பெயரிலும் இந்த வீட்டை முழுக்க அவள் பெயரிலேயே மாற்றுவதற்கும் முழுமையாக ஒத்துழைத்தான். ஆனால், உள்ளுக்குள்ளே விஷம் கனன்று கொண்டேயிருந்ததை அவர்கள் யாரும் புரிந்து கொள்ளவில்லை.

* * *

அன்றைக்கு சௌம்யாவின் அப்பாவும், அம்மாவும் பக்கத்திலே கோவிலுக்குப் போகிறேன் என்று போயிருந் தார்கள்.

பக்கத்து பங்களாவின் கூர்க்காவிடம் சொல்லிவிட்டுப் போனார்கள். அவனும் இந்த வீட்டின் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது!

டெலிபோன் மணி ஒலித்தது!

'ஹலோ!' என்ற பழக்கமான குரல் கேட்டு சௌம்யா விதிர் விதிர்த்துப் போனாள்.

அந்தப்புறம் பாலு பேசினான். டக்கென்று போனை வைத்துவிட்டாள்.

மறுபடியும் ஒலித்தது.

'சௌமி! போனை வச்சுராதே!' என்று கெஞ்சலாகச் சொன்னான்.

சௌமியா மௌனமாக ரிசீவரைக் காதில் வைத்துக் கொண்டு நின்றாள்.

'சௌமி! நான் உனக்கு எத்தனை கொடுமை செஞ்சுட் டேன்னு இப்பப் புரியுது. என்மேல எங்க கேஸ் குடுத்துடு வியோன்னு செத்துப் பொழச்சகிட்டிருக்கேன். ஊர், ஊரா அலைஞ்சுகிட்டிருக்கேன். என் மேல கேஸ் எதுவும் குடுத்துராதே... ப்ளீஸ்!' என்றான்.

'ஆமா! என் வாழ்க்கை பாழாய் போனது போயாச்சு. இனிமே உங்க மேலே கேஸ் குடுத்து எனக்கு என்ன ஆகப் போகுது. தயவு செய்து இனிமே காண்டாக்ட் பண்ணா தீங்க!' என்றாள்.

'ப்ளீஸ்! ப்ளீஸ்! வச்சிராதே! நான்தான் சொல்றேனே. ரொம்ப வருத்தப்படறேன்னு...



கூடப்பிறந்த சிஸ்டர்ஸ் இருந்திருந்தாங்கன்னா பெண் களோட அருமை புரிஞ்சிருக்குமோ என்னவோ. அதுலயும், இப்ப என்பேரு கொஞ்சம் கெட்டுப் போச்சு' என்றான்.

'நல்லா வேணும்!' என்று நினைத்துக் கொண்டாள் சௌம்யா.

அந்தப் பாண்டியனோட மாமனார் பெரிய இடத்து நண்பர்களுக்கெல்லாம் எச்சரிக்கை பண்ணி வச்சுட்டார் போல. எங்கயும் இன்டீரியர் டெகரேஷன் ஆர்டரும் கிடைக்கமாட்டேங்குது' என்றான்.

'ஆமா, வீட்டுக்குள்ளே புகுந்து வைஃப்க்கே வேட்டு வச்சா... எப்படி விடுவாங்க' என்று எண்ணிக் கொண்டாள் சௌம்யா. ஆனால் வாய் விட்டுச் சொல்லவில்லை மாறாக...

'பாருங்க... பாலு! இதெல்லாம் எனக்குத் தேவையில் லாத விஷயங்கள். உங்களோட பிரச்சினைகள். இப்பத் தான் நான் ஏதோ கொஞ்சம் நிம்மதியாயிருக்கேன். இனிமே என்னைக் காண்டாக்ட் பண்ணாதீங்க... நீங்க எங்கயோ நல்லா இருங்க... நானும் என் பாட்டுக்கு என் வேலையை பாத்துக்கறேன்' என்றாள்.

'டொக்' என்று வைத்தாள். ஆனால் அந்தப்புறம் போனை வைத்த பாலு குரூரமாகச் சிரித்துக் கொண்டதை அவள் அறியவில்லை. மாறாக பாவம்! ரொம்பக் கஷ்டப் படறார் போலருக்கு!' என்று எண்ணிக் கொண்டாள். அது எவ்வளவு பெரிய தவறு என்பதைப் புரிந்து கொள்ளாமல்.

இரண்டு மாதங்கள் வரையில் சௌம்யாவுக்கு எல்லாம் இயல்பாகப் போய்க் கொண்டிருந்தது.

இடையிலே அந்தக் கும்பாபிஷேகம் வந்தது. இனியா, சுந்தரின் திருமணம் வந்தது. மெது மெதுவாக மனம் தேறிக் கொண்டிருந்தாள்.

இலக்கியாவும், மணிவாசகனும் தங்களுடைய நட்பைக் கொடுத்தார்கள். சுரேஷும் எல்லா விதத்திலும் உதவிகள் செய்தான்.

தனது மணவாழ்க்கையின் காயத்தை மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கினான்.

மறுபடியும் ஒரு நாள்! அழைத்தான்.

'சௌம்யா! நாம திரும்ப சேர்ந்து வாழணும்ங்கிற மாதிரியெல்லாம் நினைச்சு உன்கிட்டே பேசலை. நான் நிறைய தப்பு செஞ்சுட்டேன். நீ கோபிச்சுக்காம ரெண்டு வார்த்தை பேசினா எனக்கு மனசிலயிருக்கற குற்ற மனப்பான்மை தீரும்' என்கிற பாணியில் பேசினான்.

சௌம்யா அவனது எண்ணம் புரியாதவளாய், 'சரி... சரி போனதை எதுக்குப் பேசிகிட்டு! எனக்கு யார் மேலயும் எந்தக் கோபமும் இல்லை. நீங்க எதுக்கு என்னைக் காண்டாக்ட் பண்றீங்க. வேண்டாம் விட்டுடுங்க' நல்லவிதமாகவே சொல்லி வைத்து விட்டாள்.

'ம்...! அடுத்த ஸ்டெப் போயாச்சு!' என்று எண்ணிக் கொண்டு சிரித்துக் கொண்டதை அவள் அறியவில்லை.

* * *

மறுபடியும் ஒரு பத்து நாள் போயிருக்கும்!

அழைத்தான்.

'சௌமி! நான் ஒன்ஸ் அண்ட் ஃபார் ஆல் ஊரை விட்டுப் போறேன். ஒரே ஒருதடவை உன்னை நேர்ல பாத்து மன்னிப்புக் கேட்டுட்டுப் போகணும்னு நினைக்கிறேன்..' என்றான் கெஞ்சலான குரலில்.

சௌம்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

'இல்லல்லே... அதெல்லாம் சரிப்படாது' என்றாள்.

'ப்ளீஸ் சௌம்யா! நான் உன்னை எங்கயும் தனியா வரச் சொல்லிக் கூப்பிடலே. கடைவீதியில அந்த ஜவுளிக்கடை



முன்னால மரம் இருக்குமே அங்க நில்லு. நான் வரேன். ரெண்டே நிமிஷம் பேசிட்டுப் போயிடறேன். இனிமே உன் கண்ணு முன்னாலயே வரமாட்டேன்' என்றான்.

'பாவம்... ரொம்பவும் அடிபட்டுட்டான் போல இருக்கு!' என்று எண்ணிக் கொண்டாள்.

'சரி... ரெண்டே நிமிஷம்தான். அப்புறம் கிளம்பிடுவேன்!' என்றாள் தயக்கத்துடன்.

'சரி! ரொம்பத் தாங்க்ஸ்... சௌமியா?' என்றான் மிகவும் மகிழ்ச்சியான குரலில்.

சௌம்யா அம்மாவிடம் 'அம்மா அந்த ஜவுளிக் கடையில ஒரு பிளவுஸ் பிட் எடுக்கணும். எடுத்துட்டு வந்தர்றேன்' என்று கிளம்பினாள்.

'தனியாவா போறே?' என்று கவலையான அம்மாவிடம்,

'என்னம்மா பயம்! இந்தப் பட்டப் பகல்ல யாரு என்னை என்ன செய்யப் போறாங்க' என்றாள்.

அது எவ்வளவு தவறான வார்த்தை என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

* * *

'ஹலோ!' என்றான் சுரேஷ்.

யாரோ அந்தப் பக்கம் இடிஇடியென்று சிரித்தார்கள்.

பத்து நாட்களுக்கு முன்பு இப்படித்தான் யாரோ சிரித்தார்கள் என்று ஐ.டி. காலர் ஒன்று வாங்கி வைத்திருந்தான்.

மறுபடியும் ஒருமுறை அழைத்தபோது உடனே அந்த எண்ணுக்குப் போட்டான். 'டெலிபோன் பூத்' என்றார்கள்.

சுரேஷ் 'எஸ்.எஸ். ஸ்டீல் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் ஒரு நிறுவனம் வைத்திருந்தான். முறுக்குக் கம்பிகள் முதல் ஸ்டீல் பைப்கள் வரை ஏஜென்சி நடத்தி வந்தான். ஏ.சி. அலுவலகம். அதில்லாமலும் வேறு தொழில்களும் கை வசம் இருந்தது.

மறுபடியும் போன் ஒலித்தது. எடுத்தான்.

'என்ன சார்?' கண்டுபிடிக்க முடியலியா? நான் சொல்ற விஷயத்தைக் கேட்டுக்க... நீ ஒரு டைவர்ஸான ஆளு. அந்த அம்மா... அதான்யா... சௌம்யா... அதுவும் டைவர்ஸான ஆளுன்னு தானே கணக்குப் பண்ணிடலாம்னு பாத்தே. ஆனா அந்தம்மா உங்கிட்டே ஏகப்பட்ட சோக நாடகம் ஆடுச்சில்லே. இப்பப் பாரு... அந்தப் பழைய கணவரை சந்திக்கப் போயிட்டிருக்கு. அதுவும் தனியா சந்திச்சாத் தெரிஞ்சு போயிரும்னு, ஜவுளிக்கடை முன்னால பெரிய ஆலமரம் இருக்கு. அங்க சந்திப்பு நடக்கப் போகுது. போ... பக்கத்துல ஏதாவது பூந்தோட்டம் இருந்தா நல்ல பெரிய பூவாய் பறிச்சு காதுல வச்சுக்க' என்று கட் செய்து விட்டான்.

சுரேஷ் குறுக்கிடாமல் முழுமையும் கேட்டான். பிறகு சிந்தனையில் ஆழ்ந்தான்.

'எங்கேயோ ஏதோ தவறு நடக்கிறது. சௌம்யா ஏதோ சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறாள்' என்று உள்மனது எச்சரித்தது.

அப்போதுகூட சௌம்யாவின் மீது ஏன் தனக்கு சந்தேகம் வரவில்லை என்ற எண்ணமும் தோன்றியது.

புன்னகைத்துக் கொண்டான். ஆனால் சற்றும் தாமதம் செய்யாமல் புறப்பட்டான்.

* * *

சௌம்யா இரண்டு மனதாகவே புறப்பட்டுப் போனாள்.

தன் வாழ்க்கையையே சிதைத்தவன் அவன் ஏதோ திருந்தி விட்டவன் போல் அழைக்கிறான் என்றால் கிளம்பி விடுவதா? இது பைத்தியக்காரத்தனம் இல்லையா? 'உன் நன்றி சொல்லும் வைபவத்தையெல்லாம் போனிலேயே முடித்துக் கொள்ளப்பா சாமி. உன்னை நான் சந்திப்ப தாகவே இல்லை என்று வெடுக்கென்று சொல்லி முடித்திருக்க வேண்டுமல்லவா?' ஏன் கிளம்பிப் போகிறோம்?



என்ன இருந்தாலும் ஒரு காலத்தில். அவனது அழுக்கு மனம் புரியும்வரை உண்மையாக நேசித்தாளே. இப்போது மறுபடியும் ஏதாவது சேர்ந்து வாழலாமா என்று கேட்டால் என்ன செய்வது? ஐயோ அந்த வேலையே கூடாது. இனி என்னதான் சேர்ந்து வாழ நினைத்தாலும் பழைய விஷயங்களே மனத்தை உறுத்திக் கொண்டிருக்கும். சரி வராது என்று சொல்லிவிட வேண்டியதுதான் என்று முடிவு கட்டிக் கொண்டாள். மனம் தெளிவாகியது.

கடைவீதிக்குப் போய்ச் சேர்ந்தாள். அந்த ஜவுளிக் கடைக்கு முன்பாக ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. வெகு கால மாக இருந்தது என்பதால் அதை விட்டு வைத்திருந்தார்கள்.

தூரத்திலிருந்தே பார்க்கும்போதே பாலு நிற்பது தெரிந்தது.

நெருங்கும் போதே என்ன பேசப்போகிறான் என்று குழப்பமாக இருந்தது. நல்லவேளையாக அவனே புன்னகைத்தான்.

'தேங்க்ஸ் சௌம்யா வந்ததுக்கு ரொம்ப நன்றி!' என்றான். அவள் புன்னகைக்காமல் பதில் சொன்னாள் 'பாலு! என்ன பேசணும் சீக்கிரம் சொல்லுங்க!' என்றாள் அவசரமாக.

'ம்!' என்று பெருமூச்சு விட்டவன் 'ஒரு காலத்துல சேர்ந்து இருந்தோம். இப்ப நின்னு பேசறதுக்கு யோசிக் கறே!' என்றான்.

சௌம்யா ஒன்றும் பேசவில்லை. அவனே பேசினான். 'நான் இந்த ஊரைவிட்டே போகப் போறேன் சௌமி. சென்னை மதுரைன்னு எங்காவது போயிடலாமான்னு பார்க்கறேன். இனிமே என்னால உனக்குத் தொல்லை இருக்காது' என்றான்.

சௌம்யா மறுபடியும் மௌனமாக நின்றாள்.

'ப்ளீஸ் இனிமேயாவது எங்கயாவது நல்லாயிருங்கன்னு சொல்ல மாட்டியா?' என்றான்.

'நான்தான் நேத்திக்கே நீங்க எங்கயோ நல்லாயிருங்கன்னு சொல்லிட்டேனே?' பாலு மெதுவாக விஷயத்துக்கு வந்தான்.

'அப்புறம். சௌம்யா. நான் சொல்றேனேன்னு தப்பா நினைக்காதே! இந்த சுரேஷை நம்பாதே! அவன் நல்லவன் இல்லே!' என்றான்.

சௌம்யா பாலுவை வெறித்துப் பார்த்தாள். பிறகு 'நான் இப்ப நொந்து போயிருக்கேன். யாரு நல்லவங்கன்னு பாக்கற நிலைமையில நான் இல்லே' 'இல்ல. சௌம்யா கொஞ்சம் கொஞ்சமா உன் மனசு மாறலாம் இல்லையா? அவன் உன்னை ஆள் வச்சு வேவு பாக்கறான். பாரு. இப்பக் கூட இங்கே வந்தாலும் வருவான். அதோ பாரு. வர்றான்' என்று சொல்லும்போதே சுரேஷ் வந்து கொண்டிருந்தான்.

அப்போது அவள் உள்மனது சொன்னது. 'இந்த பாலு ஏதோ தில்லு முல்லு செய்கிறான் என்று. சே! இவனை நம்பி வந்திருக்கக் கூடாது' என்று அவள் நினைக்கையிலேயே அந்த விபரீதம் நிகழ்ந்தது.



29

சுரேஷ் தன் காரை ஓரமாக நிறுத்தி விட்டு நிதான நடையில் வந்து கொண்டிருந்தான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வந்தான்.

சௌம்யா நிற்பதைப் பார்த்தவுடன் நடை வேகப்பட்டது. கால்களை எட்டிப் போட்டான்.

அதே நேரம் சௌம்யா திரும்பி பாலுவைப் பார்த்தாள்.

'பாலு! சுரேஷ் அப்படிப் பட்டவர் இல்லே. நீங்க மறுபடியும் ஏதோ தில்லுமுல்லு செய்யறீங்க! உங்களை நம்பி வந்திருக்கக் கூடாது' என்றாள்.



'ஆமாடி! நீ என்னை நம்பி வந்திருக்கக் கூடாது. தெரிஞ்சும் எதுக்கு வந்தே? இன்னைக்கு வைக்கறண்டி வேட்டு. எனக்குப் பயன்படாத உன்னோட அழகு இனி எவனுக்குமே பயன்படக்கூடாதுடி' என்றவன் யாரையோ பார்த்துக் கண்ணைக் காட்ட யாரோ அவர்கள் திசை நோக்கி வந்தார்கள்.

சௌம்யா என்ன நடக்கிறது என்று உணர்வதற்கு முன்பாகவே இடதுபுறமாக இருந்து ஒரு குழந்தை ஓடி வந்தது. சௌம்யாவின் மேல் விழ வந்த குழந்தையை அவள் குனிந்து தாங்கும் போதே எதிரே பாலு கண்ணைக் காட்டியவுடன் வந்த ஆள் கையிலிருந்த குப்பியிலிருந்து எதையோ வீசினான்.

ஆசிட்!

நின்றிருக்கிற நிலைமையில் இருந்தால் சௌம்யாவின் முகத்தில் விழுந்திருக்க வேண்டிய ஆசிட் கீழே கொட்டி விட இரண்டு.மூன்று துளிகள் அவள் கைகளில் பட்டு விழ ஒரே ஒரு துளி மட்டும் அவள் முகத்தில் பட்டது. கன்னத்தின் மீது தெறித்து விழுந்தது.

வலியில் அலறினாள் சௌம்யா. அந்த வலியும் வேதனையும் நிறைந்த நேரத்தில் கூட அவள் குழந்தையை பலமாகப் பிடித்து அந்தப்புறம் தள்ளிவிட்டாள்.

குழந்தை குரலெடுத்து அழுதது. அதற்குள் அருகில் வந்த சுரேஷ் சட்டென்று இருகைகளாலும் தாங்கிக் கொண்டான்.

சூழல் பரபரப்பாகியது.

பாலு பஞ்சாய்ப் பறந்திருந்தான்.

சுரேஷ். பாலுவைத் தேட முற்படவேயில்லை. சௌம்யாவை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு காரை நோக்கி வேகமாக ஓடினான்.

'டிரைவர் காரை எடுங்க' என்றபடி சௌம்யாவைக் காருக்குள் திணித்தான். சௌம்யா அதிர்ச்சியில் மயக்க

மாகிவிட்டாள். மயங்குகிற போதே 'என்ன சௌம்யா, இவன் கூப்பிட்டதைக் கேட்டு வந்திருக்கறே. அப்பவும் என் உள் மனசு சொல்லுச்சு, ஏதோ நடக்கப் போகுதுன்னு. அதான் ஓடி வந்தேன்!' என்று முணுமுணுத்தான்.

அது எங்கேயோ கிணற்றுக்குள் கேட்கிறாற் போல் ஒலித்தது.

* * *

**எ**ப்போதும் கலாட்டாவாக இருக்கிற சுந்தர் கூட அன்றைக்கு மிக சீரியஸாக அலைந்து கொண்டிருந்தான். சுந்தர், சுரேஷ், மணிவாசகன் மூவரும் கூடிக் கூடிப் பேசி ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

சௌம்யாவின் அப்பாவுக்கு வேண்டிய டாக்டர் ஒருவர் அந்த தனியார் ஆஸ்பத்திரியில் இருந்தார். அவரே நேரில் வந்து உடனிருந்து வைத்தியத்தை மேற்பார்வை செய்தார். 'ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. அதிர்ச்சியில் ஏற்பட்ட மயக்கம்தான். ஆனா இடது முழங்கைக்கு கீழே இரண்டு இடத்தில் சோடா மூடி சைஸுக்கு இரண்டு புள்ளிகள் பட்டிருக்கு. கன்னத்தில் ஒரே ஒரு புள்ளிதான். பிளாஸ்டிக் சர்ஜரி மாதிரி ஏதாவது செஞ்சுக்கலாம். ரெண்டு நாளைக்குத் தூக்கமும் மயக்கமுமாத்தான் இருப்பாங்க. மருந்து குடுத்திருக்கு. பயப்பட வேண்டாம்' டாக்டரின் இந்த வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான் எல்லாருக்கும் தெளிவு வந்தது.

சற்றே மனம் நிம்மதியானது.

'சரி. நாங்க கூட இருக்கோம், நீங்க போங்க' என்றார்கள் பெற்றோர்கள். அதன் பிறகுதான் கிளம்பினார்கள்.

''இலக்கியா. நாம வேண்ணா சௌம்யா ரெடியாகற வரைக்கும் கோயமுத்தூர்ல இருக்கலாம்'' என்றான் மணிவாசகன். இலக்கியா மகிழ்ச்சியாக ஒத்துக் கொண்டாள்.



திருமணமானதற்குப் பிறகு முதல் முறையாக மாமனார் வீட்டில் தங்கினான். மாற்றி மாற்றி யாராவது சௌம்யாவின் பக்கத்தில் இருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டார்கள்.

சுந்தரும் இனியாவும் கூட வெகு நேரம் இருந்து விட்டுப் போனார்கள். பேச்சு வாக்கில் சுந்தரிடம் மணிவாசகன் சொன்னான்.

'பாவம்டா. சுந்தர் சுரேஷ். ரொம்ப அப்செட்டா யிட்டான். என்கிட்டே கேட்கறான். ஏன் மணி இந்தப் பொண்ணு அழகாப் பொறந்தது இதோட தப்பா? பெரிய பேக் கிரவுண்ட் இல்லாத குடும்பத்தில் பொறந்ததுதான் அதோட தப்பா? இப்படி ஒரு கேடிக்கு வைஃபா ஆக வேண்டிய சூழ்நிலை ஆகிப் போச்சே. இதுக்கெல்லாம் என்ன காரணம்? யார் பொறுப்பு? அப்படீங்கறான். அப்புறம் சொல்றான். நான் என் வைஃபை அவ்வளவு நல்லா வச்சுக்கணும்னு நெனச்சேன். அவ எனக்குப் பட்டை நாமம் சாத்திட்டுப் போனா. இந்தப் பொண்ணு ஒழுங்கா இருக்கணும்னு நெனைக்குது. இதுக்கு இப்படி ஒரு கொலைகாரப் புருஷன். என்னப்பா நியாயம் இதுன்னு ஒரே புலம்பல்' என்றான்.

சுந்தர் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

'ஆமா... சில நேரங்கள்லே சில கேள்விகளுக்குப் பதிலே கிடைக்கறதில்லை. அண்ணா நானும் அதைப் பத்தி யோசிச்சுட்டுத்தான் இருக்கேன். ஏதாவது செய்யணும்' என்றான்.

இருவருக்குமே ஒருவரின் கருத்து மற்றவருக்கு புரிந்துதான் இருந்தது. ஆனால், அதைப் பேசுவதற்கு நேரம் இதுவல்ல என்று தெரிந்துதான் இருந்தது.

அன்றிரவு!

கண்கள் கலங்கத் தன் தோழியைப் பற்றியே புலம்பிக் கொண்டிருந்த மனைவியின் நெற்றியில் இதழ் பதித்து விட்டுத் தன் கைகளுக்குள் அடக்கிக் கொண்டான்.

'சரி... சரி புலம்பாதே! இனிமே உன் ஃபிரண்ட் சௌம்யா சந்தோஷமா இருக்கறதுக்கு எல்லா ஏற்பாடும் செஞ்சர்லாம். சரியா? தூங்கு' என்று உறங்கச் செய்தான்.

* * *

'என்ன சௌம்யா. இப்படிப் பண்ணிட்டீங்க! அவனைப் பத்தித் தெரிஞ்சிருந்தும் அவன் போன் பண்ணிட்டான்னு நீங்க போயிருக்கீங்களே?' என்றான் சுரேஷ் வருத்தத்துடன்.

'சார்! ரொம்ப உருக்கமாப் பேசினாப்பல. நான் இந்த ஊரை விட்டே போகப் போறேன். போறதுக்கு முன்னாலே ஒரே ஒரு தடவை மன்னிப்பு கேட்டுக்கறேன்னு கெஞ்சி னாப்ல. அதுதான் ஏமாந்துட்டேன்' என்றாள் வருத்தத்துடன்.

'ஸ்கௌண்ட்ரல்' என்று எரிச்சலானான்.

'அது சரி. நீங்க எப்படி அந்த நேரத்துக்கு சரியா வந்தீங்க?' என்றாள் சௌம்யா.

'அவன்தான் எனக்கும் போன் செய்தான். என்கிட்ட வேற மாதிரி சொன்னான். நான் அதை நம்பல. அப்பவே என் உள் மனசு சொல்லுச்சு. சௌம்யா ஏதோ ஒரு சிக்கல்ல மாட்டிக்கப் போறாப்லன்னு. அதான் ஓடி வந்தேன்' என்றான்.

'சார். என்னோட துரதிர்ஷ்டத்துக்கு நடுவிலயும் ஏதோ அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன் போல' என்றாள் வருத்தத்துடன்.

சுரேஷ் சிந்தனையுடன் சொன்னான்.

'இன்னமும் பிரச்சினை முடிஞ்சிடலை. சௌம்யா. பாலு இன்னமும் கிடைக்கலை. போலீஸ் தேடிட்டிருக் காங்க' என்றான் சுரேஷ்.

அவள் உச்சுக் கொட்டினாள்.



'இனி அந்த ஆள் என்ன ஆனா எனக்கென்னங்க?' என்றாள் சௌம்யா.

'அதில்லை... சௌம்யா அவனாலே உங்களுக்குத் தொந்தரவு வரக் கூடாதில்லே' என்றான்.

சௌம்யாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'சௌம்யா. பேசாம நான் சொல்றதைக் கேளுங்க. என் பங்களாவிலயே பின்னால ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. அங்க குடி வந்துருங்களேன்' என்றான்.

'யோசிக்கலாம். சார்!' என்றாள். பிறகு சுரேஷைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள்.

'ரொம்ப தேங்க்ஸ் சார் உங்களோட மாரல் சப்போர்ட் மட்டும் இல்லேன்னா நான் என்னவா ஆகியிருப்பேன்னு தெரியாது' என்றாள்.

'இருக்கட்டும் மேடம்!' என்று புன்னகைத்தான்.

* * *

ஒரு மாதம் விளையாட்டாய் ஓடிவிட்டது.

சௌம்யா மெது மெதுவாகத் தேறியிருந்தாள்.

இப்போது அவர்கள் குடியிருந்த பங்களாவுக்கு ஒரு கூர்க்காவைப் போட்டு விட்டார்கள். சென்ற வாரத்தில் பாலு பிடிபட்டு விட்டதாக செய்தி வந்தது.

ஓரளவுக்கு நிம்மதியானார்கள்.

வழக்கு விசாரணைக்காக சௌம்யாவை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள். அங்கேதான் சௌம்யா அந்தக் காரியத்தைச் செய்தாள்.

'இன்ஸ்பெக்டர் சார்! அந்த ஆள்கிட்டே பேசுங்க. இனிமே என் வாழ்க்கையில குறுக்கிடாம இருக்கறதா இருந்தா நான் புகாரை வாபஸ் வாங்கிக்கிறேன். காம்ப்ரமைஸ் பண்ணி விடுங்க' என்றாள்.

பாலு நடந்து போன விஷயங்களில் போலீஸ் காவலில் இருந்த அனுபவத்தில் மிரண்டு போயிருந்தான். எந்தப் பணக்காரத் தோழியும் அவன் உதவிக்கு வரவில்லை என்பதும் தெரிய அதிர்ந்து போனான்.

முதன் முறையாக காவலில் தன்னைக் குற்றவாளியாய் நடத்திய போதுதான் விபரீதம் புரிந்தது. இப்போது சௌம்யா கொடுத்த வாய்ப்பு தன் வாழ்க்கையின் பொன்னான வாய்ப்பு என்பதைப் புரிந்து கொண்டான்.

'சௌம்யா! எனக்கு மட்டும் அப்படி ஒரு மன்னிப்புக் குடுத்தேன்னா, நீ இருக்கற பக்கமே நான் திரும்பிப் பாக்கமாட்டேன். சென்னை போயிடுவேன்' என்று கதறினான்.

இலக்கியாவும், மணிவாசகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சுரேஷ் முகம் இறுக நின்று கொண்டிருந்தான்.

சுந்தர்தான் பேசினான். 'மிஸ்டர்! அண்ணனுக்கும், சுரேஷ் அண்ணாவுக்கும் எவ்வளவு இன்ஃப்ளுயன்ஸ் இருக்குன்னு உனக்குத் தெரியாது. வேண்டாம். விட்ருங் கன்னு சௌம்யா மேடம் கேட்டுக்கிட்டதனாலே நீ இப்ப முழுசா நிக்கறே. இல்லே துணியாட்டமா துவைச்சுப் போட்டிருப்பாங்க உன்னை' என்றான்.

சௌம்யா புகாரை வாபஸ் வாங்கிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு அவனைப் பற்றிக் கவலைப்படாமல் 'நாம போலாம் இலக்கியா' என்றாள்.

அவர்கள் வெளியே வரும்போதுதான் கவனித்தார்கள். சுரேஷ் எல்லாருக்கும் முன்னால் கோபமாகப் போய் தன் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்பதை.

மணிவாசகன் சுந்தரைப் பார்த்தான்.

'அண்ணா! நான் பாத்துக்கறேன் விடு!' என்றான். மகிழ்ச்சியாகச் சிரித்தான்.



மணிவாசகன் புரியாதவனாய் நின்றான்.

* * *

'என்னடா, வாழ்க்கையிது! ஆனிட், போலீஸ் ஸ்டேஷன்னு சே...சே...சே!' என்று போலியாய் அலுத்துக் கொண்டான் சுந்தர்.

இனியா சிரித்தாள்.

'அப்புறம்... எதுக்கு... ஓடியாடி சௌம்யா அக்காவுக் காக பொதுச் சேவை செஞ்சீங்க!' என்றாள்.

'விஷயம்... இல்லாமயா செய்வேன்? டபுள் ஸ்ட்ராங்... ம... மாதிரி, டபுள் ஸ்டராங் பலன் கிடைக்குமே!' என்றான்.

கட்டிலின் மேல் கால் நீட்டி அமர்ந்து கொண்டான்.

இனியாவை அருகில் இழுத்துக் கொண்டான்.

'இப்ப... சௌம்யா மேடத்துக்கு ஹெல்ப் பண்ணி னேன்னு வச்சுக்க. இலக்கியா... மதனி... ஹேப்பி ஆயிடு வாங்க... அவங்க ஹேப்பியானா நம்ம மேடம் ஹேப்பியா ஆயிடுவாங்க!' என்றான்.

'அதாவது... பேரரசர் ஹேப்பியானா இளவரசர் ஹேப்பியாயிடுவாரு!' என்றாள் இனியா.

'சிம்பிள் லாஜிக்... புரிஞ்சுதா?' என்றான் சுந்தர்.

'ஐயோ... இது ஒண்ணும் சிம்பிள் லாஜிக் இல்லே... மிஸ்டர் சுந்தர். இதுக்கு பேரு சுத்தி வளைச்சு மூக்கைத் தொடறது' என்று சிரித்தாள்.

'யு மீன் பீட்டிங் அபவுட் த புஷ்' என்றான் பந்தாவாக.

இனியா சிரித்தாள்.

'சரி. இப்ப ஒரு முடிவுக்கு வருவோம்... வாழ்க்கை இப்படியே சீரியஸா ஓடினா நல்லா இல்லைங்களே மேடம்!' என்றான்.

இனியா மென்மையாகப் புன்னகைத்தபடி அவன் முகத்தைக் கைகளில் ஏந்தியபடி கேட்டாள்.

'இப்ப... எதுக்கு இந்தப் பீடிகை, இப்ப அய்யாவுக்கு என்ன வேணும்?' என்றான்.

'என்ன கேட்டாலும் கிடைக்குமா?' என்றான்.

'ம்..!' என்றாள்.

'அப்ப.. சரி!' என்றவன். கொஞ்சம் சீரியஸான குரலில் சொன்னான்.

'ஏன், இனியா! அண்ணன் இருபத்தேழு வயசிலதான் கல்யாணம் செஞ்சாங்க.. ஆனா, நான் சூழ்நிலைக்காக இருபத்தைஞ்சு வயசுலேயே கல்யாணம் செய்ய வேண்டியதாய்ப் போச்சு. தப்பு இல்லையா?'

'நீங்கதான்... சூழ்நிலைக்காகன்னு சொன்னீங்களே! எல்லோருக்கும் வாழ்க்கை ஒரே மாதிரியாவா அமையும்! பெரிய மாமாவுக்கும் பொறுப்புகள் இருந்தது. ஆனா இப்ப நீங்க எந்தப் பொறுப்பில் இருந்தும் நழுவி வந்த கல்யாணத்தைப் பண்ணிக்கலையே. அதனால ரொம்ப வருத்தப்படாதீங்க. ஆனா குழந்தை மட்டும் இப்ப வேண்டாம். ராதுவுக்கு கல்யாணம் ஆகட்டும். இலக்கியா அக்காவுக்கும் ஒரு குழந்தை பிறக்கட்டும்' என்றாள் இனியா.

'தட்ஸ் குட்!' என்றான். கூடவே இன்னொன்றும் சொன்னான்.

'ஆனா.. என்ன சொல்லு! ஒரு மனசு அங்கே சங்கடத்தில் இருக்கறப்ப.. நாம மட்டும் எப்படி சந்தோஷமா இருக்கறதுன்னு உறுத்தலா இருக்கு' என்றான்.

'யாரைச் சொல்றீங்க? சௌம்யா அக்காவையா!' என்றாள் இனியா.

'ஆமா!' என்றான் சோகம் போல.

இனியா குறும்பாகச் சிரித்தாள்.

'புரியுது... புரியுது.. சௌம்யா அக்காவையும் எங்கயோ சிக்க வக்கறதுன்னு முடிவு பண்ணிட்டீங்க' என்றாள்.



'இதெல்லாம் ஃபாஸ்ட்டா புரிஞ்சுக்குவியே' என்றான். மெல்ல அவள் முகம் நோக்கி குனிந்தான்.

அதே நேரத்தில்!

மணிவாசகனும் தன் மனைவியிடத்தில் கிட்டத்தட்ட அதே பாணியில் பேசிக் கொண்டிருந்தான்.

இலக்கியாவும் இனியாவைப் போல குறும்பாகச் சிரித்தபடி இடம் கொடுத்தாள்.

## 30



அதே படகுத்துறையில் ஒரு காலை நீட்டி ஒரு காலை உயரத் தூக்கினாற் போல் மடக்கி சாவதானமாக வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தான் மணிவாசகன். அருகில் இலக்கியா.

'விட்டதைப் பிடிக்கறதுன்னு கேள்விப் பட்டிருக்கியா? அதுதான் இது' என்று சிரித்தான்.

கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு இதே இடத்தில் நான்கைந்து நாட்கள் கழிக்க வேண்டுமென்று வந்து அவசரமாகப் புறப்பட்டுப் போனார்களாம். அதனால் மீண்டும் அங்கேயே கொடைக்கானலில் நான்கைந்து நாட்கள் கழிக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தானாம் மணிவாசகன். அதை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று வந்திருந்தார்கள் கணவனும், மனைவியும்.

போன வாரத்தில் ஒரு நாள்!

சுரேஷுக்கும், சௌம்யாவுக்கும் பதிவுத் திருமணம் நடத்தி வைத்தார்கள்.

சுரேஷ் தெளிவான மனத்துடன் ஒத்துக் கொண்டான். ஆனால், சௌம்யா சற்றே தயக்கத்தில் இருந்தாள்.

சுந்தர்தான் முதலில் இந்தப் பேச்சை ஆரம்பித்தான். சௌம்யாவையும் அவன் மதனி என்றே அழைத்தான்.

'சௌம்யா... மதனி..! நல்லா யோசிங்க.. எத்தனை நாளைக்கு சுரேஷ் சார் உங்க பாதுகாப்புக்காக உங்க பின்னாடி அலைவாரு. பேசாம அவரையே கல்யாணம் செஞ்சுக்குங்க' என்றான்.

சௌம்யாவின் பெற்றோரும் ஆதரித்தார்கள். சௌம்யா விடம் சுரேஷ் தனியாகப் பேசினான்.

'சௌம்யா! நான் உன்னை எந்த விதத்திலும் தொல்லைப் படுத்த மாட்டேன். எந்த உறவையும் எதிர்பார்க்கமாட்டேன். ஒரு பாதுகாப்புக்காகத்தான் இந்தக் கல்யாணம்' என்றான்.

இலக்கியா கணவனிடம் கவலையைப் பகிர்ந்து கொண்டாள்.

'ஏங்க.. ஒரு வேளை சௌம்யா மனசு மாறாமலே போனா?' என்றாள்.

'சுரேஷ் அதுக்கும் தயாராத்தான் இருக்கான்!' என்றான்.

பெரியவர்களே பேசித் திருமணம் நடத்தினார்கள். சட்டப் பாதுகாப்புக்காக திருமணத்தைப் பதிவும் செய்தார்கள்.

இனி சௌம்யாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்ற நிம்மதி நண்பர்களுக்கு ஏற்பட்டது.

அப்போதுதான் மணிவாசகன் இலக்கியாவிடம் 'நாம மீண்டும் கொடைக்கானல் போறோம்' என்றான்.

வந்து விட்டார்கள்.

எப்போதும் வேலை, திட்டங்கள் என்றே ஓடிக் கொண்டிருந்ததால் தங்களைப் பற்றி பெரிதாகப் பேசிக் கொள்ளக் கூட நேரம் இருக்கவில்லை.

'எப்போதும் ஓட்டமாக ஓடிக் கொண்டிருக்கிறோம். கொஞ்ச நேரம் இளைப்பாற வேண்டும்.

இல்லாவிட்டால் சரி வராது' என்று இருவருமே எண்ணிக் கொண்டார்கள்.



இலக்கியா கணவன் இடக்கையை நீட்டித் தன்னருகில் அழைப்பதைப் பார்த்துப் புன்னகைத்தபடி நெருங்கி அமர்ந்தாள்.

'ஏங்க... சுரேஷ் அண்ணாவும், சௌம்யாவும் சேர்ந்துக்குவாங்கதானே..!' என்றாள்.

மணிவாசகன் அவள் முகம் பார்த்துப் புன்னகைத்தான்.

'எனக்கு நம்பிக்கையிருக்கு இலக்கியா, எப்படின்னா சௌம்யா சுரேஷ் கூட இருக்கும்போது ரொம்ப கம்பர்ட்டபிளா இருக்காப்ல. நட்புக்கும், காதலுக்கும் அது முதல்படி. நாம இருக்கிற வளாகத்துல அவங்களும் இருக்காங்க அப்படிங்கும்போதே ஒரு நிறைவான உணர்வு. அது இருந்தாபோதும்.. மத்தபடி ஜெயிச்சர்லாம்' என்றான்.

'நம்ம விஷயத்துல... அப்படி ஒண்ணும் நடக்கலையே..!' என்றாள் இலக்கியா.

'யார் சொன்னா? நாம முதல் முதலா உங்க அம்மா வீட்டுக்குப் போனமே ஞாபகம் இருக்கா! அப்ப சுந்தர் அடிச்ச ஜோக்குக்கெல்லாம் கலகலன்னு சிரிச்சுட்டு வந்தியே. அப்பவே எனக்குத் தெரியும். உனக்கு என்னோட கம்பெனி பிடிச்சுத்தான் இருந்ததுன்னு. இடையிடையிலே என்னைப் பார்த்து இயல்பான, அழகான சிரிப்பு வேற. ரெஸிஸ்ட் பண்றதுக்குள்ளே அன்னைக்கு நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்' என்றான்.

இலக்கியா வெட்கத்துடன் கலகலவெனச் சிரித்தாள்.

மணிவாசகன் அதைப் பார்த்துப் புன்னகைத்தபடியே தொடர்ந்தான்.

'அது ஸ்டார்ட்டிங் பாயிண்ட். இனியாவும், சுந்தரும் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிகிட்டு வந்தப்ப எனக்கு அவமானம்னு துடிச்சுப் போனியே. அது உச்சகட்டம். அப்பவே எனக்குத் தெரியும் மேடம் முழுசா நேசிக்க ஆரம்பிச்சுட்டாங்கன்னு! ஆனா, நீ இன்னும் தெளிவா முடிவுக்கு வரணும்னு நெனச்சேன்' என்று சிரித்தான்.

இலக்கியா அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவன் முழங்காலைக் முட்டுக் கொடுத்தபடி அமர்ந்தான்.

'அதுஸ்டார்ட்டிங்.. இதுக்கிடையில பாயிண்ட்' அப்படீன்னா இடையிலே நிறைய விஷயங்கள் இருந்துதோ' என்று.

'பின்னே? நிறைய.. வேலையை பத்திக் கவலைப்படாம நம்ம குடும்பத்துல எத்தனை வேலை செய்வே. 'சென்ஸ் ஆஃப் பிலாங்கிங்னெஸ் அப்படீன்னு ஆங்கிலத்திலே சொல்வாங்க.. இது நம்ம வீடுன்னு ஒரு உணர்வு வந்தாத் தான் வேலை இனிமையாத் தெரியும். உழைப்பு எளிமையாத் தெரியும். அப்படி உணர்வு உனக்கு இருந்தது' என்றான்.

இலக்கியா கலகலவென சிரித்தாள். 'ஐயோ! வாக... நீ பயங்கரமான ஆளு. உப்பு, புளி தரம் பார்த்து சரக்கு எடுக்கிற மாதிரி என்னையும் தரம் பாத்திருக்கே.. இல்லே' என்று செல்லமாக அவன் தலைமுடியைக் கலைத்து விட்டாள்.

அவன் இடிஇடியென்று சிரித்தான்.

'நம்ம தனியான நேரங்கள்ல நீ பேசற இந்த லொள்ளு எனக்கு ரொம்பப் பிடிக்குது. பொண்ணே!' என்றான். ஆனால் தொடர்ந்தான்.

'அப்புறம்.. தேவகி மதனியை கேர் எடுத்துப் பாத்து கிட்டியே.. அது.. அதுவும். அந்த நேரத்திலே நாம டிபார்ட் மென்டல் ஸ்டோர்ஸை மாடர்னைஸ் பண்ணனும்னு ரொம்ப ஆர்வமா இருந்தோம். இருந்தாலும் தேவகி மதனிக்கு நேரம் ஒதுக்கிக் கொடுத்துப் பாத்துகிட்டது. சரியான நேரத்தில் மதனியைக் கொண்டு போய் ஹாஸ்பிட்டல்ல சேத்தது. அவங்க சோகத்துக்கு ஆறுதலா.. இருந்தது. இதெல்லாம் ரொம்ப அற்புதமான விஷயங்கள்' என்றான்.

அந்த நேரம் அவள் முகம் வாடியது.

'என்னடா...?!' என்றான்.



'இல்லே! ஆஸ்பத்திரியில இருந்தப்ப.. தேவகியக்கா.. அழகா ஒரு பொண்ணு பெத்துக் குடுக்கணும்னு கேட்டாங்க.. அப்ப.. நீங்க.. லாவகமா நழுவிட்டீங்க.. எனக்கு அது ரொம்ப மனசுக்குக் கஷ்டமா இருந்துச்சு.. தெரியுமா?' என்றாள்.

'ஆமா...! பின்னே என்ன செய்யச் சொல்றே? உனக்கும், எனக்கும் இடையே உறவு நல்லா இருந்திருந்தா. ஒன்று என்னங்க மதனி, மூணு நாலு வேண்ணாலும் சரி.. ஒரு கை பாத் தர்லாம்னு உறுதி மொழி குடுத்திருப்பேன்... இப்ப.. என்ன? சொல்லாமலேயே நடத்திக் குடுப்போம்.. என்ன?' என்றான்.

'ம்..' என்றாள். இருவரும் சிரித்தார்கள்.

'அப்புறம்.. ரொம்ப சர்ப்ரைஸ் என்னன்னா கார் ஓட்ட கத்துகிட்டது. அதை ஒரு சஸ்பென்ஸா வச்சிருந்து ஓட்டி காட்டியது. இதெல்லாமே மெல்ல அம்மிணி மனசு நம் கிட்டே சாஞ்சதுக்கு ஒரு அடையாளம் தான்..' என்றான்

'ஆமா... வெறும் பத்து வருஷத்துலே இந்தக் குடு பத்தை இவ்வளவு தூரம் முன்னேத்தியிருக்கீங்கன் எனக்கு ஒரே பெருமை. அதனால, முடிஞ்ச வரைக்கு நிறைய விஷயங்கள் நாம தெரிஞ்சுக்கணும்' ஹெல் பண்ணனும்னு ஆசை' என்றாள்.

'அதனாலதான்.. டிபார்ட்மென்டல் ஸ்டோர் விரி பண்ண ஆசை இல்லே?' என்றான்.

'ஆமா! ஆனா, முதல்லே முடியாதுன்னு சொன்ன நீங்க அப்புறம் ஒத்துகிட்டீங்க இல்லே?' என்றாள் இலக்கியா.

அவன் ஆழ்ந்த சிந்தனையுடன் பேசினான். 'இலக்கி முன்னேயெல்லாம் சரக்கோட தரம் பாப்பாங்க... இ வடிவம், அழகு, பாக்கிங், விக்கிற இடத்தோட தன் எல்லாம்தான் பாக்கறாங்க.. உன்னோட ஐடியா கரெ தான். எதுவும் நல்லதா இருந்தா ஒத்துக்க வேண்டி

தானே. ஆனா, இப்பவும் சொல்றேன்.. வெறும் வெளி வேஷத்துனாலயே ஒரு பொருளை வித்துர முடியாது. கொஞ்ச நாளைக்கு நடக்கும். ஆனா, மார்க்கெட் முழுமையா இருக்கனும்னா காலத்துக்கும் வியாபாரம் நடக்கனும்னா குவாலிட்டி ரொம்ப முக்கியம்.. தெரியுதா? என்றான் மணிவாசகன்.

இலக்கியா அவனை உத்துப் பார்த்தாள்.

'வியாபாரத்துக்கு மட்டும் இல்லைங்க... வாழ்க்கைக்கும் இந்த உண்மை பொருந்தும்.. தெரியும்மா?' என்றாள்.

'எப்படி?' என்றான்.

'இப்ப.. நம்ம வாழ்க்கை ஜெயிப்பதுக்கு காரணம் அந்த உள்ளழகுதான். தரம்தான். சௌம்யா, பாலுவோட வாழ்க்கை தோத்ததுக்குக் காரணம் அந்தக் குவாலிட்டி தரம், உள்ளழகு இல்லாமப் போனதுதான்.. என்றாள்.

முகம் பாத்து வாடிப் போகச் சொன்னாள்.

'நம்ம கல்யாணத்து சமயத்துல உங்க நிறம் மட்டுன்னு சுத்திக் காமிச்சு என் மனத்தைக் குழப்பியதே சௌம்யா தான். ஆனா, கடைசியில அவளோட வாழ்க்கையில கடவுள் இவ்வளவு பெரிய சோதனையைக் குடுத்திருக்க வேண்டாம்.. தெரியுமா?' என்றாள் வேதனையுடன்.

'விடு.. போனதெல்லாம் விடு. அதிலயும் கெட்டதெல்லாம் மறந்தாகனும். இனிமே நல்லதையே ஞாபகம் வச்சுக்கனும்' என்றான்.

மெதுவாக எழுந்து நடந்தார்கள். அந்தக் குளிரில் நெருக்கமாக இழைந்து கொண்டு நடக்கிற சுகத்தோடு தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

'அப்புறம்.. மல்லிகா கல்யாணத்துக்கு முன்னாடி நின்று எல்லாம் செஞ்சயே.. அப்ப உன்னோட கெட்டிக்காரத் தனம். ஒவ்வொரு [illegible]



அந்த சடங்கு செய்யனும், இந்தச் சடங்கு செய்யனும்னு கருத்து வேறுபாடு வருமே அப்பவெல்லாம். அக்கா.. ப்ளீஸ்.. யாராவது ஒருத்தர் விட்டுக் குடுங்கன்னு ரிக்வெஸ்ட் பண்ணியே காரியம் சாதிப்பியே.. அதைப் பார்த்து எங்கம்மாவுக்கும், அப்பாவுக்கும் ரொம்ப சந்தோஷம். ரொம்பப் பெருமை.. 'பரவாயில்லை உன் வைஃப்புன்னு' என் சிஸ்டர்ஸ் கூட பாராட்டினாங்கன்னா.. பாத்துக்கயேன்' என்றான்.

'அப்ப நீங்க எப்பவும் பாராட்டலியோ!' என்றாள் வெட்கக் குரலில். அது மட்டுமில்ல... விருப்பமில்லாத பொண்ணைத் தொடறதுக்கு நான் என்ன சுயமரியாதை இல்லாதவனான்னு கேட்டீங்களே..' என்றாள்.

'ஆமா! நானே, உன் மனசு தெளிவாகாத வரைக்கும் உன் பார்வைக்கும் பேச்சுக்கும் ஏங்கிப் போய் கிடக்கறேன்னு தம்பட்டம் அடிக்கவா முடியும்? அதுலயும் ஒவ்வொரு விசேஷத்துலயும் அழகா நடமாடுவியே அப்பல்லாம் வீட்டுக்கு லேட்டா வருவேன் தெரியுமா?' என்றான்.

'ஆமா, வேலை நடுவில கெட்டுப் போச்சு. கணக்கு வழக்குப் பாக்கனும்னு லேட்டாய் போச்சும்பீங்க!' என்றாள்.

'வேற என்ன சொல்ல! நேரத்துலயே வந்து ஏதாவது ஏடாகூடமாய் போச்சுன்னா.. அதான்' என்றான்.

ரொம்பக் கஷ்டப்பட்டுட்டீங்க இல்லே! இல்லல்லே! நான் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்.. இல்ல!' என்றாள் இலக்கியா ஆதங்கத்துடன்.

அறைக்குள் நுழைந்திருந்தார்கள். எதிர்பாராத விதமாய் அருகில் இழுத்தாள். பரிசுகளை வாரியிறைத்தான்.

'இனிமே எந்தக் குறையும் இல்லாம கவனிச்சுக்கறேன்... என்ன?' என்றாள்.

'ஆமா! இல்லாட்டா அதுக்கும் தண்டனை கிடைக்கும்' என்றான். சிரித்தாள்.

மெல்லக் குனிந்து நெற்றியில் இதழ் பதித்து நிமிர்ந்தான். பிறகு சொன்னான்.

'இலக்கியா.. ஒன்று சொல்லட்டா? எத்தனையோ நாள் எவ்வளவோ அலங்காரம் செஞ்சுகிட்டு என் முன்னாடி நின்னது உண்டு. ஆனா, எல்லா நாளைக் காட்டிலும் என் மனசு ரொம்ப சலனமானது எப்பத் தெரியுமா?' என்றான்.

இலக்கியா ஆர்வமாகக் கணவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'வேர்த்துப் பூத்து இடுப்புப் புடவையை எடுத்துச் செருகிகிட்டு எனக்காக காளான் பிரியாணி பண்றேன்னு கையில கரண்டியை வச்சுகிட்டு நின்னயே.. அந்தக் கரிசனம், உழைப்பின் அழகு அது என்னை ரொம்ப பாதிச்ச விஷயம்... தெரியுமா?' என்றான்.

'ஓ!' என்று அவள் சற்றே திகைத்துத்தான் போனாள்.

'ஆமா.. இலக்கியா, உழைப்புக்குன்னு ஒரு அழகு இருக்கு.. தெரியுமா?' என்றான். அன்றொரு நாள் சொன்னது போலவே.

அப்போது இலக்கியாவுக்குத் தங்கையின் நினைவு வந்தது. எவ்வளவு தெளிவாக முடிவெடுத்தாள். அதிலும் 'குணம்தான் முக்கியம்' என்று தெளிவாக அறிவித்தாள். கணவனிடம் பகிர்ந்து கொண்டாள். அவனும் அதை ஏற்றுக் கொண்டான். பிறகு,

'இலக்ஸ் மேடம்.. பசிக்குது சாப்பிடுவோம்.. அப்புறம் பேசலாமே?' என்றான்.

'ஆமா.. எனக்கும் சொல்றதுக்கு நிறைய இருக்கு..' என்றாள் இலக்கியா.

'ஓ..கே.. அதுவரைக்கும்.. ஒரு பிரேக்.. ஓ..கே.. வா?' என்றான்.

'ம்!' என்று சிரித்தாள்.



## 31



கணவனுக்குப் பரிமாறிவிட்டுத் தானும் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்த இலக்கியா குபீரென்று சிரித்தாள்.

'மாமா! உலகத்துலயே இப்படிச் சொன்ன ஆள் நீங்களாத்தான் இருக்கும்' என்றாள்.

அவன் விசித்திரமாய் பார்த்தான்.

'கரண்டியைக் கையில வச்சு நின்னப்ப புடிச்சதுன்னு சொன்னீங்களே! அதுதான்!' என்றாள்.

மணிவாசகன் புன்னகைத்தான்.

'இலக்கியா இந்த இளம் வயசுக் காதல்கள்ல எல்லாம் எப்பவும் அழகா இருக்கறப்ப பாத்துக்குவாங்க... அப்புறம். வீட்ல ஒட்டடை அடிக்கறப்ப அழுக்கா நிற்கிற மனைவியைப் பார்த்தா அதிர்ச்சியா இருக்கும். ஆனா நான் அப்படியில்லே தெரியுமா! நம்ம கல்யாணம் ஃபிக்ஸ் ஆனப்ப இலக்கியா சமைக்கும் போது எப்படி இருப்பா வேலை செய்யும்போது எப்படி இருப்பா?' என்று அப்புறம் என்று குறும்பாகச் சிரித்து விட்டு நிறுத்தினான்.

'சரி.. சரி.. போதும்!' என்று வெட்கத்தால் முகம் சிவந்தா

'பாத்தியா! இப்படி இயற்கையா முகம் சிவந்து போற அதுவும்.. ரொம்ப அழகுதான்' என்றான்.

'எனக்கு நீங்க அந்தக் குழந்தைகள் இல்லத்துக்கு உத செஞ்சது ரொம்பப் பிடிச்சது' என்றாள். 'அப்புறம்.. இனி கல்யாணத்தை இயல்பாக எடுத்துகிட்டது ரொம பிடிச்சது' என்றாள்.

ஆர்வமாகக் கேட்டுக் கொண்டான். 'அப்புறம்... அப்பு பஸ்ல வச்சு டிரையல் பாத்தீங்களே.. அது ரொம்ப' என்ற

சற்றுக் கழித்து அவன் கைப்பிடியில் அடங்கிய நிலை கேட்டான்.

'ஹேய்! இந்த இனியா தன்னோட செல்லில் 'கறுப்புத் தான் எனக்குப் பிடிச்ச கலரு'ன்னு ரிங் டோன் போட்டு வச்சிருக்கா, சுந்தர் பய 'இனியவளே! என்று பாடி வந்தேன்' என்ற பாட்டு வச்சிருக்கான். உனக்குன்னு ஒரு 'செல்' வாங்கிக் குடுத்தா என்ன ட்யூன் போடுவேன்னு ஒரு க்யூரியாசிட்டி' என்றான் மணிவாசகன்.

'நான் டிஸைட் பண்ணி வச்சிருக்கேன்.. சொல்லட்டுமா?' என்றாள்.

'ம்...!' என்றான் ஆர்வமாக.

''கண்ணிலே அன்பிருந்தால்'ன்னு ஒரு பாட்டு கேட்ருக்கிங்களா அதுதான் போடுவேன்' என்றாள்.

மணிவாசகன் நெகிழ்ந்தவனாய் 'தேங்க்ஸ்... தேங்க்ஸ்...' என்று குழைந்தான்.

அவள் இழைந்தாள். பேச்சு அங்கே பேச்சற்றுப் போனது.

* * *

'டேய்! எதிர்வரிசைக்கு எதிர்வரிசையில பாயசம் கேக்கறாங்க.. ஊத்துங்கப்பா!' என்றான் பந்தியில் அமர்ந்திருந்த சுந்தர்.

'எதிர் வரிசைக்கு எதிர் வரிசையா! எனக்கு வேணும்னு கேளுடா!' என்று கேலி செய்தான் சுரேஷ்.

'அப்பாடா! புரிஞ்சிருச்சா!' என்றான்.

இலக்கியாவும், மணிவாசகனும் பந்தியில் அமர்ந்திருந்தார்கள். மணிவாசகன் வீட்டில் அடிக்கடி ஏதாவது விசேஷம் இருக்கும். கண்டிப்பாக சுரேஷும், சௌம்யாவும் அந்த விசேஷத்தில் இருப்பார்கள்.

ராதிகாவுக்கு நிச்சயதார்த்தம். மாப்பிள்ளை தங்கள் வீட்டுக்குப் போனதற்குப் பிறகும் படிக்க வைக்கிறேன் என்று சொல்லிவிட்டார்.



இலக்கியாவுக்கும், மணிவாசகனுக்கும் திருமணம் முடித்து ஒன்றரை ஆண்டுகள் ஓடியிருந்தது. இனியாவும், சுந்தரும் மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான் குழந்தை என்று தெளிவாக முடிவெடுத்தாற்போல் இணைப்புக்குப் பிறகு. இலக்கியாவும், மணிவாசகனும் ஓராண்டுக்குப் பிறகு குழந்தை என்று முடிவு செய்திருந்தார்கள்.

'எப்படியோ, அடிக்கடி உங்க வீட்டுல விசேஷம் வச்சர்றீங்கப்பா' என்று சிரித்த சுரேஷ்,

'அடுத்த விசேஷம் என்னப்பா?' என்றான்.

'அடுத்த விசேஷம் என்ன? இலக்கியா மதனி வளை காப்புதான்' என்றான் சுந்தர்.

எல்லாரும் அதை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டு சிரித்தார்கள்.

சற்றுக் கழித்து சௌம்யாவிடம் இலக்கியா 'மூன்று மாதம்' என்ற உண்மையைப் பகிர்ந்து கொண்டாள். அது மட்டுமல்லாமல் சுரேஷ் போன்ற ஒரு நல்லவரை சௌம்யாவும் மகிழ்வாக வைத்துக் கொள்ள வேண்டுமாம் அறிவுரை சொன்னாள்.

சௌம்யா தலையாட்டிக் கொண்டாள்.

* * *

அன்றைக்குத் தனிமையின் போது!

சுரேஷிடம் சொன்னாள் சௌம்யா 'சுரேஷ்... பாவ இலக்கியா உங்களுக்காக ரொம்ப ரெகமண்ட் செஞ்சாப் என்று.

'ஏன்! அப்புறம் இன்னும் என்ன தயக்கம்?' என் நெருங்கி நின்றான் சுரேஷ்.

இந்த இடைப்பட்ட காலத்தில் பாலு சென்ன போய்விட்டான் என்ற செய்தி வந்தது. பிறகு ஒரு நாள் ஒ கடிதம். அதில் ஒரு பெரிய குடும்பத்துப் பெண்ணிடம் தா

தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதை அறிந்த அந்தப் பெண்ணின் சகோதரர்கள் தன் காலை வெட்டி விட்டதாகவும் மிகவும் கஷ்டத்தில் இருப்பதாகவும் சுரேஷுக்கு கடிதம்.

சுரேஷ் தன் நண்பர்கள் மூலமாக அவன் இருப்பதற்கு ஒரு இடமும், கொஞ்சம் வாடகை வருகிற மாதிரியும் ஏற்பாடு செய்து கொடுத்தான்.

பிறகு கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் ஒரு கடிதம். ஒரு ஏழைப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு நிம்மதியாக இருப்பதாக.

இப்போது சுரேஷ் தானே நேரில் போய் ஒரு ஜெராக்ஸ் மெஷின் வாங்கிக் கொடுத்து தொழில் ஏற்படுத்திக் கொடுத்து விட்டு வந்தான்.

அதை மனைவியிடம் சொன்னான் சுரேஷ்.

'நீங்க எதுக்கு அந்த ஆளோட தொடர்பு வச்சுக்கறீங்க?' என்றாள் சௌம்யா.

'உதவிக்காக மட்டுமில்லே.. உனக்கு அவனால எந்தத் தொல்லையும் வராம இருக்கறதுக்காகவும் அவன் மேல் ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கு' என்றான்.

சௌம்யா அதற்குப் பிறகு மனம் தெளிந்தவளானாள்.

சுரேஷ் வீட்டில் அவள் இயல்பாகவும், விளையாட்டாகவும் இருந்தாள். ஒரு நாள் சுரேஷ் வீட்டில் டைவர்ஸ் ஆகிப் போன அவன் மனைவி போனில் பேசினாள். பிறகு கடிதமும் எழுதினாள்.

'சௌம்யா... சுரேஷ் மாதிரி ஒரு நல்லவருக்கு உன்னை மாதிரிப் பெண் கிடைப்பதுதான் நியாயம். கடவுள் எனக்குக் குழந்தை பாக்கியம் இல்லாமல் செஞ்சுட்டார். கடைசிக் காலத்தில் நான் இந்தியாவுக்குத்தான் வருவேன். உன்னுடைய குழந்தையைப் பார்த்து சந்தோஷப்படுவேன்' என்று உருக்கமான கடிதம் எழுதியிருந்தாள்.



சுரேஷ் சௌம்யாவிடம் சொன்னான். 'அது முடிஞ்சு போன கதை.. சௌம்யா' என்று.

மெது மெதுவாக இருவருக்குமிடையே நட்பு மலர்ந்தது. ஆனால் தயக்கம் இருந்து கொண்டே இருந்தது.

இன்றைக்கு இலக்கியா தானும் தன் கணவனும் வாழ்கிற அன்பு வாழ்க்கையைப் பற்றி விவரமாகச் சொன்னதாலோ என்னவோ சௌம்யாவுக்கு தான் சுரேஷுக்கு நியாயம் செய்யவில்லை என்ற எண்ணம் தோன்றியது.

அதனால்தான் தானே பேச்சை ஆரம்பித்தாள். 'சுரேஷ்! நான் உங்களுக்காக எதுவும் செய்யணும்தான் நினைக்கிறேனே. ஆனா, என் வாழ்க்கையில் நான் பட்ட அடி..' என்று தயங்கு முன்னே அவன் அவள் வாயைப் பொத்தினான்.

'வேண்டாம், சௌம்யா.. எதுவும் உன்னைக் கஷ்டப் படுத்தற மாதிரி இருக்கக் கூடாது' என்று தேற்றினான்.

'இல்லே... சுரேஷ் இன்னைக்கு இலக்கியா ஒரு கேள்வி கேட்டா, தகுதியில்லாத இரண்டு பேருக்காக.. நீங்க ஏன் உங்களோட வாழ்க்கையை வீணடிச்சுக்கறீங்கன்னு.. உண்மைதானே.. அது?' என்றாள்.

சுரேஷுக்கு சௌம்யாவின் மனம் மாறியிருப்பதும், அதை வெளியிடத் தெரியாமல் அவள் தடுமாறுவதும் புரிந்தது. அவனே நெருங்கினான். மென்மையாகவும், அன்பாகவும் அவளை நடத்தினான்.

அவசரத்தில் முறிந்து போன உறவைப் போல் அல்லாமல் நிதானமாக இங்கே அன்பு நிலை கொண்டு உறவா வடிவெடுத்தது.

* * *

'**எ**னக்கு சாப்பிடப் பிடிக்கலே!' என்று சிணுங்கி, இலக்கியாவைச் சுற்றி நாலைந்து பேர் அமர்ந் கொண்டிருந்தார்கள்.

'உனக்கு என்ன வாய்க்குப் பிடிக்குதோ.. சொல்லு.. செஞ்சு தர்றேன்' என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள் தேவகி.

மணிவாசகன் இதையெல்லாம் ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

'சரி விடுங்கப்பா.. அவ ரெஸ்ட் எடுக்கட்டுகம்' என்றார் பொன்மணி.

அறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

'என்னம்மா.. செய்யுது' என்று உருகுகிற கணவனைப் பார்த்து அவள் மென்மையாகச் சிரித்தாள்.

'ஒன்றுமில்லை.. மாமா! மசக்கைன்னா இதெல்லாம்.. இயற்கைதான்' என்றாள்.

'சரி.. ஒரு நல்ல நியூஸ் சொன்னா சாப்பிடுவியா?'

'ம்..!'

'சுரேஷுக்கும், சௌம்யாவுக்கும் இணக்கம் ஆயாச்சு' என்றான்.

'நியவி!'

'ஆமா! வா.. இந்த சந்தோஷத்தோட கொஞ்சமாவது சாப்பிடுவியாம்' என்று அழைத்துக் கொண்டு வந்தான்.

காரமா வடுமாங்காய் ஊறுகாயோடு தயிர்சாதம் சாப்பிடக் கேட்டாள். சுந்தர் அங்கே அமர்ந்து கொண்டு கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

மணிவாசகனிடம் 'அண்ணா! நல்லா சாப்பிடற மாதிரிப் பொண்ணா உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத் தாங்க.. என்னண்ணா மிரட்டினே! இப்படி சாப்பிடவே பயப்படறாங்க' என்றான் சுந்தர்.

'நீ இனியாவை மிரட்டுர அதே மிரட்டல்தான்' என்று மணிவாசகன் அலட்டிக் கொள்ளாமல் சொல்லவும் எல்லாரும் சிரித்தார்கள்.